# TNPSC


tnpscthervupettagam.com

# தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2024







SHANKAR IAS ACADEMY™

Best Academy for Civil Services Exam Coaching

SINCE 2004

shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ....... 11

தமிழ்நாடு செய்திகள் ....... 27

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ....... 27
தமிழ்நாடு மாநில நாய் வளர்ப்பு கொள்கை, 2024 ....... 28
இரண்டு பறவைகள் சரணாலயங்களுக்கு ராம்சர் குறியீடு ....... 28
மாநிலத்தில் தொழிற்சாலை வேலைவாய்ப்பு ....... 29
அமைச்சர்களின் பதவி நிலை ....... 30
வெப்ப அலைத் தாக்கத்தின் தணிப்பு நடவடிக்கைகளுக்கான செயல் திட்டம் ....... 31
கலைச்செம்மல் விருதுகள் 2024 ....... 32
2024 ஆம் ஆண்டில் வண்ணத்துப் பூச்சிகளின் இடம் பெயர்வு ....... 32
'குறவன்' என்ற சொல் குறித்த பரிந்துரை ....... 33
ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு – MTR ....... 33
பேறுகால தாய்மார்கள் இறப்பு வீதத்தினைக் குறைக்க புதிய செயற்குழு ....... 34
பன்றி வளர்ப்புக் கொள்கை 2024 ....... 34
CyStar முன்னெடுப்பு ....... 35
சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகள் ....... 36
தமிழகத்தில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நிலை - 2024 ....... 36
புதிய புவிசார் குறியீடுகளுக்கான விண்ணப்பங்கள் - 2024 ....... 37
2024-25 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவான மின் தேவை ....... 37
வனவிலங்கு தடயவியல் நிபுணத்துவ அமைப்பு ....... 38
நீண்ட அலகு கொண்ட கழுகுகளின் கூடுகள் 2024 ....... 39
அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள இனங்களின் வளம் 2024 ....... 39
தமிழக அரசின் எண்ணெய் கசிவு எதிர் நடவடிக்கைத் திட்டம் 2024 ....... 40
விஜயநகரப் பேரரசு கால செப்புத் தகடுகள் ....... 41
மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 2023-24 ....... 42
'அமுதம் பிளஸ்' மளிகைப் பொருட்கள் தொகுப்பு ....... 43
சென்னையில் உயிரொளிர்வு அலைகள் ....... 43
வடக்குப்பட்டு அகழாய்வு குறித்த அறிக்கை ....... 44
இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்கள் ....... 44
தனியார் துறையினால் இயக்கப்படும் ரேடியோ FM ஊடகங்கள் ....... 45
விண்டர்ஜி இந்தியா 2024 ....... 45
40 மலையேற்றப் பாதைகள் ....... 46
முதலமைச்சர் கோப்பை போட்டிகள் 2024 ....... 46
விவசாயிகள் நலனுக்கான நடவடிக்கைகள் – தமிழ்நாடு ....... 47

தேசியச் செய்திகள் ....... 48

இந்திய வனங்களின் நிலை குறித்த அறிக்கை (ISFR) ....... 48

வனவிலங்கு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் 2024 ....49
PARAM ருத்ரா மீத்திறன் கணினி ....50
புலம்பெயர் நபர்களின் நண்பர்களுக்கான இலவச நுழைவு இசைவுச் சீட்டு ....50
பர்யாதன் மித்ரா & பரியாதன் தீதி ....51
ONOE நடைமுறைக்கான அரசியலமைப்பு திருத்த மசோதாக்கள் ....52
தகவலின் உண்மைத் தன்மை சோதனைப் பிரிவு....53
SBI ERD அறிக்கை 2024 ....54
மனிதக் கழிவகற்றல் பணியாளர் குறித்த கணக்கெடுப்பு ....55
EMPS 2024....56
தர்தி ஆபா ஜன்ஜாதியா கிராம் உட்கர்ஷ் அபியான் ....56
தேசிய சுகாதாரச் செலவின மதிப்பீடுகள் ....57
ஜல் ஹாய் AMRIT திட்டம் ....58
இந்தியாவில் எச்.ஐ.வி பாதிப்பு....58
புதிய செம்மொழிகள்....59
இந்தியாவில் சமய சுதந்திரம் ....59
பிரதான் மந்திரி உள்ளிருப்புப் பயிற்சி திட்டம்....60
ANNA DARPAN முன்னெடுப்பு ....61
பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா ....61
தேசிய சமையல் எண்ணெய்கள் திட்டம் ....62
SARTHIE 1.0 ....63
மாற்றியமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் குறியிடல் திட்டம் ....63
தேசிய வேளாண் விதிகள்....63
நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து மற்றும் இந்தியா ....64
சிறையில் நிலவும் சாதிவெறி குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ....65
காசநோயாளிகளுக்கான நி-க்சய் போஷன் யோஜனா ....66
தேசிய அனுபவ் விருதுகள் திட்டம் - 2025....66
கருவிழித் தொற்றுப் பாதிப்பு இல்லாத இந்தியா....67
தேசியக் கடல்சார் பாரம்பரியங்களுக்கான வளாக மேம்பாடு ....67
ஹம்சஃபர் கொள்கை ....68
செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத் திட்டத்தின் நீட்டிப்பு ....68
இந்தியாவில் வாய் புற்றுநோய்ப் பாதிப்பு....69
இந்தியாவின் தடுப்பூசி ஒழுங்குமுறை அமைப்பு ....70
இந்திய-ASEAN இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான 10 அம்ச திட்டம் ....70
e-Migrate இணைய தளம் v2.0....71
500 GW உற்பத்தி இலக்கினை அடைவதற்கான தேசிய மின்சாரத் திட்டம்....71
ShakthiSAT திட்டம் 2024....72
பசுமை கண்துடைப்பு வழிகாட்டுதல்கள் ....72
குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு 2025-26....73
நிலுவையில் உள்ள வழக்குகள் கோட்பாடு - உச்ச நீதிமன்றம்....74
2045 ஆம் ஆண்டில் புற்றுநோய்ப் பாதிப்புகள்....75

இந்தியா – அமெரிக்கப் பாதுகாப்பு துறை ஒப்பந்தம் 2024 ....76
இந்தியாவின் அடுத்த தலைமை நீதிபதி ....76
சமர்த் திட்டம் நீட்டிப்பு 2024 ....76
UDAN திட்டத்தின் 8 ஆம் ஆண்டு நிறைவு ....77
புதிய மருந்துகள் மற்றும் மருத்துவ சோதனை (NDCT) விதிகள், 2019 ....77
e-Shram – ஒற்றைத் தீர்வு அமைப்பு ....78
1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 6A ....79
புதிய எறிகணை சோதனை தளம் - நாகயலங்கா ....80
SARTHI அமைப்பு ....80
கர்தார்பூர் வழித்தட ஒப்பந்தம் ....81
பாரத் கடலைப் பருப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ....81
மாற்றுத் திறனாளி நபர்களின் உரிமைகள் தொடர்பான விதிகள் 2024 (திருத்தம்) ....82
Bhu - ஆதார் ....83
முதலாவது பணியிடை பயிற்சித் திட்டம் ....84
PM-YASASVI திட்டம் ....84
வட்டார வானிலை முன்னறிவிப்பு ....85
கருணைக் கொலையைப் பற்றிய புதிய வரைவு வழிகாட்டுதல்கள் ....85
சர்வதேசச் செய்திகள் ....87
தன்பாலினத் திருமணம் – தாய்லாந்து ....87
எதிர்காலத்திற்கான ஒப்பந்தம் ....87
கனிமப் பாதுகாப்பு நிதியளிப்பு வலையமைப்பு ....88
GlobE Network அமைப்பிற்கான வழிநடத்தல் குழு ....88
L.69 மற்றும் C-10 குழுக்களின் கூட்டு அமைச்சர் கூட்டம் ....89
DF-41 எறிகணை ....89
தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப்பெருக்க வளங்கள் ....89
அமெரிக்க நாட்டின் புலம்பெயர்ந்தோருக்கான முன்னணி மூலங்கள் ....90
எரெபஸ் மலை ....90
நார்தர்ன் ஆரோஸ் நடவடிக்கை ....91
சாகோஸ் தீவுப் பகுதி ஒப்படைப்பு ....91
சர்வதேச மருத்துவச் சாதன ஒழுங்குமுறை மன்றம் ....92
அல்பைன் எல்லைகள் மறு வரையறை ....93
குரங்கம்மையினைக் கண்டறியும் முதல் சோதனை ....93
மார்பர்க் வைரஸ் – ருவாண்டா ....94
குதிரைப் பந்தயத்திற்கு பிரியா விடை - சிங்கப்பூர் ....95
இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (BIT) 2024 ....95
சீனாவின் ‘அனகோண்டா உத்தி’ ....95
உலக சுகாதார அமைப்பின் 2025-2028 ஆம் ஆண்டிற்கான முக்கியத் திட்டம் ....96
உலகளாவிய எண்ணிம ஒப்பந்தம் ....97
மனித உரிமைகள் சபையின் உறுப்பினர்கள் ....97
குடியரசுத் தலைவர் முர்முவின் ஆப்பிரிக்கப் பயணம் ....98

44வது மற்றும் 45வது ஆசியான் உச்சி மாநாடுகள் ....99
பாலினத்திற்கு ஏற்றப் பருவநிலைக் கொள்கைகள் ....99
இந்தியா – கனடா இடையேயான அரசுமுறை நெருக்கடி ....100
2023 ஆம் ஆண்டில் உலகின் அதிகபட்ச சூரிய சக்தி உற்பத்தி ....101
வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப வழங்கீட்டு நாடுகள் ....101
ஐக்கியப் பேரரசின் நாகா மண்டை ஓடு ஏலம் தொடர்பான சர்ச்சை ....102
நைல் நதிப் படுகை கூட்டுறவு கட்டமைப்பு ஒப்பந்தம் ....102
SCO உச்சி மாநாடு 2024 – பாகிஸ்தான் ....103
மௌண்ட் ஆடம்ஸ் எரிமலை வெடிப்பு – அமெரிக்கா ....104
உக்ரைனில் மேற்கு நைல் வைரஸ் பாதிப்பு ....105
FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியல் விதிகள் ....106
“ரத்து செய்ய சொடுக்குக” வசதி ....106
உலகின் சுதந்திரமானப் பொருளாதாரம் 2024 ....107
ரோம் பிரகடனம் ....107
16வது BRICS உச்சி மாநாடு ....108
LAC தொடர்பான இந்தியா மற்றும் சீனா ஒப்பந்தம் ....109
Hand-in-Hand முன்னெடுப்பு ....110
கசான் பிரகடனம் ....110
மரபணுத் தகவல் பயன்பாடு குறித்த உலகளாவிய ஒப்பந்தம் ....111
**பொருளாதாரச் செய்திகள் ....112**
தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் ....112
7வது வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) ....113
சீன அதிர்ச்சி 2.0 ....114
சரக்கு மற்றும் சேவை இழப்பீட்டு வீதவரி ....115
இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ....116
2,000 ரூபாய் பணத் தாள்களை திரும்பப் பெறல் ....117
700 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அந்நிய செலாவணி கையிருப்பு ....117
2022-23 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர தொழில்துறைக் கணக்கெடுப்பு ....118
இந்தியாவின் வேலைவாய்ப்பு வளர்ச்சி (2016-2023) ....119
இந்தியாவின் முதல் கடல் சார் திட்டங்களுக்கான கடன் ....120
UPI 123 & UPI Lite ஆகியவற்றில் வரம்புகள் ....120
அகில இந்திய கிராமப்புற நிதி உள்ளடக்க கணக்கெடுப்பு 2021-22 ....121
வருடாந்திர மாதிரிக் கணக்கெடுப்பு ....122
தொழில்துறை உற்பத்தி வீழ்ச்சி ....123
2025 ஆம் ஆண்டில் சம்பள உயர்வு ....124
FTSE ரஸ்ஸல் EMGB குறியீடு ....124
இந்தியாவின் நேர்முக வரி வசூல் – 2023/24 ஆம் நிதியாண்டு ....125
இந்திய ரூபாய் மதிப்பிலான வரம்பு நிர்ணயிக்கப்பட்ட கடன் வசதி ....126
கடற்பாசி இறக்குமதிக்கான வழிகாட்டுதல்கள் ....127

அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 127
IISc - நியூரோமார்பிக் கம்ப்யூட்டிங் ........ 127
ஷாஹத்-136B ஆளில்லா விமானம் ........ 128
வெள்ளிக் கோளிற்கான இந்தியாவின் முதல் பயணம் ........ 128
புதிய மருந்து விநியோக முறை ........ 129
சுருள் வடிவ அண்டம் - கால்டுவெல் 45 ........ 130
MAPCIS பள்ளம் ........ 130
நியூட்ரினோ மூடுதிரள் ........ 131
உயிரணுக்களில் புரதத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான புதிய வழிமுறை ........ 132
பூமியின் எதிர்காலம் ........ 132
புதிய FAST தொகுப்பு ஆய்வகம் ........ 133
வளைய சூரிய கிரகணம் 2024 ........ 134
C/2023 A3 (சுச்சின்ஷன்–அட்லஸ்) ........ 134
சூரியனின் சுழற்சி வரைபடம் ........ 135
'சரோன்' துணைக் கோளில் CO2 மற்றும் H2O2 ........ 136
புவியின் கவச அடுக்கில் மறைந்து காணப்படும் ஆறாவது பெருங்கடல் ........ 136
கையடக்கமான ஊடு கதிர் பாதுகாப்பு தடையமைப்பு ........ 137
மேம்படுத்தப் பட்ட PAP பேனா ........ 137
ஒலி அலைகள் மூலம் புற்றுநோய் கண்டறிதல் ........ 138
உள்ளக மதிப்பீட்டுக் கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் அமைப்பு ........ 138
PSLV-37 ஏவூர்தியின் மறு நுழைவு ........ 139
நிலவின் துருவ ஆய்வுக் கலம் ........ 140
MACE திட்டம் ........ 140
ஆர்க்டிக் கடலை 'மீண்டும் உறையச் செய்தல்' ........ 141
மலையாக்க குவார்ட்ஸ் இழைகளில் தங்கக் கட்டிகள் ........ 141
மூளையின் முதல் முழுமையான வரைபடம் ........ 142
ஆர்ட்டிமிஸ் திட்டம் 2035 ........ 142
TDP1 நொதிகள் ........ 143
டிராகன் ஆளில்லா வான்வழி விமானங்கள் ........ 144
THAAD எறிகணை பாதுகாப்பு அமைப்பு ........ 145
மர்மமான பழுப்பு நிறக் குறு விண்மீன்கள் ........ 145
மூன்லைட் திட்டம் ........ 146
புதிய ஒளிவழி வேதிவினையூக்கி ........ 147
வயநாட்டில் X-அலைவரிசை ரேடார் ........ 148
SPADEX இணைப்புத் திட்டம் ........ 148
அதிகபட்ச சூரியச் செயல்பாட்டு நிலை 2024 ........ 149
நீரிழிவு நோய்க்கான திறன் மிகு இன்சுலின் ........ 150
அல்கேன்கள் - கைரல் ப்ரான்ஸ்டெட் அமிலங்கள் ........ 150
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 151
தட்டைப்புழுவின் புதிய அயலக இனங்கள் ........ 151

தெத்சி ஈ ....151
புதிய பேய் சுறா இனம் ....152
மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பறவை இனம் ....152
இந்தியக் காட்டு கழுதை - குர் ....153
பொன்னிறக் குள்ளநரி இனங்களில் எரித்ரிசம் ....154
பிரஸ்பா ஏரி ....154
இந்தியாவில் தேன்வளைக்கரடி ....155
NBSAP கண்காணிப்பு அமைப்பு ....155
இந்தியாவில் யானைகளின் நிலை 2022-23 ....156
நீக்ரோ நதி நீர்மட்டம் ....157
என்விஸ்டாட்ஸ் இந்தியா 2024: சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் ....157
ஒடிசாவில் அரிய வகை கருஞ்சிறுத்தை ....158
புதிய குயவக் குளவி இனங்கள் ....158
காட்டுக் கழுதை கணக்கெடுப்பு 2024 ....159
சஹாரா பாலைவனத்தில் பெருமழை ....160
இந்தியாவில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை நிலவரம் ....160
610 பறவை இனங்களின் அழிவு ....161
டார்வின் பறவையினங்கள் ....161
ஹேபர்-போஷ் செயல்முறை ....162
செம்பழுப்பு நிற வால் கொண்ட பாறை பூங்குருவி ....163
கள்ளக் கடல் அலைகள் ....163
நான்காவது உலகளாவிய பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு ....164
கடல் வெப்ப அலைகள் ....165
முக்கியப் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளில் வெப்பநிலை உயர்வு ....166
கோவாலா - அழியும் நிலையினை எட்டும் ஆபத்து ....166
இந்தியாவின் இரண்டாவது பன்மய வண்ணத்துப் பூச்சி மையம் ....167
நீலகிரி வரி வண்ணத்துப்பூச்சி ....168
உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கையின் 16வது பங்குதாரர்கள் மாநாடு ....168
கானமயில் - செயற்கை கருவூட்டல் ....169
கார்பன் பிடிப்பிற்கு சுரங்கத் துகள் பயன்பாடு ....170
புவி வெப்பமடைதலுக்கு வைரத் துகள்கள் பயன்பாடு ....170
பூஞ்சை வளங்காப்பிற்கான உறுதிப்பாடு ....171
குறைந்த ஒளியில் உள்ள பவளப்பாறை சுற்றுச்சூழல் அமைப்புகள் ....172
இராட்சத சால்மன் கெண்டை மீன்- மெகாங் நதி ....172
ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய் ....173
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....173
உலக திறமைகள் தரவரிசை 2024 ....173
ஹுருன் இந்தியா அமைப்பின் 35 வயதுக்குட்பட்ட தொழில்முனைவோர் பட்டியல் 2024 ....174
உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு 2024 ....175
உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2024-26 ....175

ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான துணை அறிக்கை ....176
சிந்திப்பதற்கான உரிமை 2024 - வருடாந்திர அறிக்கை ....177
உலகளாவிய நீர்வள அறிக்கை 2023 ....178
லிவிங் பிளானட் அறிக்கை 2024 ....178
உலகப் பட்டினிக் குறியீடு 2024 ....179
ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் அறிக்கை 2024 ....180
உலகளாவியப் பல்பரிமாண வறுமைக் குறியீடு 2024 ....181
உலக ஆற்றல் கண்ணோட்ட அறிக்கை 2024 ....182
ஒழுங்கற்றப் பருவநிலை அறிக்கை 2024 ....183
உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவர அறிக்கை 2024 - WTO ....184
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2024 ....184
சமத்துவமின்மை குறியீட்டைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு 2024 ....185
உலக நாடுகளின் பொருளாதாரச் சுதந்திரம் 2024 ....186
உமிழ்வு இடைவெளி அறிக்கை 2024 ....187
வறுமை, செழிப்பு மற்றும் கோள் அறிக்கை 2024 ....187
உலகளாவிய இயற்கை வளங்காப்புக் குறியீடு (NCI) 2024 ....188
மாநிலச் செய்திகள் ....189
அருணாச்சலப் பிரதேசத்தில் ஏறப்படாத சிகரம் ....189
கஸ்தூரிரங்கன் குழு அறிக்கை – கர்நாடகா ....190
இந்தியாவில் நகர்ப்புற ஆளுமைக் குறியீடு ....190
சரிபார்க்கப்பட்ட சுகாதார மையங்கள் ....191
அசாமின் பாரம்பரியத் தயாரிப்புகள் – புவிசார் குறியீடு ....192
25வது இருவாச்சி திருவிழா ....193
இணை மாவட்டம் – அசாம் ....193
மனாஸ் தேசியப் பூங்காவில் பிக்மி பன்றிகள் ....193
பீகாரின் குடியா பறவை ....194
பஞ்சாரா விராசத் அருங்காட்சியகம் - மகாராஷ்டிரா ....194
உத்தரப் பிரதேசத்தின் கிராமப்புற மகளிர் இயக்கம் ....194
ஹரியானா மற்றும் ஜம்மு & காஷ்மீர் தேர்தல் ....195
வட துருவ மின்னொளி - லே ....195
ஜம்மு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீக்கம் ....196
உயிரி பலபடிச் சேர்மங்களுக்கான செயல்விளக்க வசதி ....196
உத்தரகாண்டின் ரூப்குண்ட் ஏரி ....197
தலித் உள் ஒதுக்கீடு முறை – அரியானா ....197
மாற்றுத் திறனாளிகளுக்கான 24வது தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி ....198
பீகார் - முதல் உலர் துறைமுகம் ....198
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....199
சிறந்தச் சுற்றுலா கிராமங்கள் போட்டி - 2024 ....199
அமெரிக்க சமயப் பரப்பாளர் ஆலிஸ் பிரெளர் ....199
MIDORI பரிசு 2024 ....199

மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2024 ....................200
இயற்பியலுக்கான நோபல் பரிசு 2024....................200
ரத்தன் டாடா....................201
வேதியியலுக்கான நோபல் பரிசு 2024 ....................201
WAZA விருதுகள் 2024 ....................202
இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2024 ....................203
அமைதிக்கான நோபல் பரிசு 2024....................203
பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 2024....................204
ஐந்தாவது தேசிய நீர் விருதுகள் 2023....................205
இந்தியக் கைபேசி மாநாடு 2024 ....................205
வணிகத்தில் மிகவும் அதிகாரம் வாய்ந்த 100 பெண்களின் பட்டியல் 2024 ....................206
UNHCR நான்சென் அகதி விருது 2024 ....................207
அர்ஜுன் எரிகைசி....................207
இராணி சென்னமாவின் 200வது பிறந்தநாள்....................207
**விளையாட்டுச் செய்திகள் ....................208**
ரஃபேல் நடால் ஓய்வு....................208
**முக்கிய தினங்கள் ....................209**
சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01....................209
சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02....................210
உலக விலங்குகள் நல தினம் - அக்டோபர் 04....................211
உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 04/10....................211
உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05....................211
92வது இந்திய விமானப்படை தினம் - அக்டோபர் 05 ....................212
உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 09....................212
உலக பெருமூளை வாத நோய் தினம் - அக்டோபர் 06....................212
உலக வாழ்விட தினம் - அக்டோபர் 06 ....................213
நீலகிரி வரையாடு தினம் - அக்டோபர் 07 ....................213
உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07 ....................214
தேசிய அஞ்சல் வாரம் - அக்டோபர் 09 முதல் 15 வரை ....................214
உலக மனநல தினம் - அக்டோபர் 10....................215
சர்வதேசப் பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11....................215
பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சர்வதேச தினம் - அக்டோபர் 13 ....................216
உலக வலசை போகும் பறவைகள் தினம் - அக்டோபர் 12 ....................217
உலக நல்வாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு பராமரிப்பு தினம் - அக்டோபர் 12....................217
மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் - அக்டோபர் 01 முதல் 31 வரை....................218
உலக முட்டை தினம் - அக்டோபர் 11 ....................218
உலகத் தரநிலை தினம் - அக்டோபர் 14 ....................219
சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15....................219
கருச்சிதைவு மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பு நினைவு தினம் - அக்டோபர் 15....................219
உலகளாவிய கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15....................220

உலகப் பார்வையற்றோர் கைத்தடி (வெண்பிரம்பு) தினம் - அக்டோபர் 15 ....... 221
உலக உணவு தினம் - அக்டோபர் 16 ....... 221
உலக மயக்க மருந்து தினம் - அக்டோபர் 16 ....... 222
உலக முதுகெலும்பு தினம் - அக்டோபர் 16 ....... 222
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் - அக்டோபர் 17 ....... 223
காவல்துறை நினைவு தினம் - அக்டோபர் 21 ....... 223
மோல் தினம் - அக்டோபர் 23 ....... 224
ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24 ....... 224
மரணத் தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10 ....... 225
உலக எலும்புப் புரை தினம் - அக்டோபர் 20 ....... 226
உலக அயோடின் குறைபாடு தினம் - அக்டோபர் 21 ....... 226
உலக கண் பார்வை தினம் 2024 - அக்டோபர் 10 ....... 227
உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு வாரம் - அக்டோபர் 24 முதல் 31 வரை ....... 228
ஆயுதக் குறைப்பு வாரம் - அக்டோபர் 24 முதல் 30 வரை ....... 228
சர்வதேசப் பனிச் சிறுத்தை தினம் - அக்டோபர் 23 ....... 229
உலக மேம்பாட்டுத் தகவல் தினம் - அக்டோபர் 24 ....... 230
சர்வதேச அரசுமுறை அதிகாரிகள் தினம் - அக்டோபர் 24 ....... 230
உலக போலியோ தினம் - அக்டோபர் 24 ....... 231
இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையின் 63வது ஸ்தாபன தினம் - அக்டோபர் 24 ....... 231
சர்வதேச கிப்பன் குரங்கு தினம் - அக்டோபர் 24 ....... 232
சர்வதேச குள்ளத்தன்மை விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 25 ....... 232
கேட்பொலி காட்சிப் பதிவுப் பாரம்பரியத்திற்கான உலக தினம் - அக்டோபர் 27 ....... 232
உலக அதிர்ச்சி தினம் - அக்டோபர் 17 ....... 232
இந்திய ராணுவ காலாட்படை தினம் - அக்டோபர் 27 ....... 233
சர்வதேச அசைவூட்டப் படத்திற்கான தினம் - அக்டோபர் 28 ....... 233
சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம் - அக்டோபர் 29 ....... 234
தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 29 ....... 234
உலகச் சிக்கனத் தினம் - அக்டோபர் 30 ....... 235
தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 31 ....... 235
உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31 ....... 235
**இதரச் செய்திகள் ....... 236**
மத்தியப் பட்டு வாரியத்தின் 75வது ஆண்டு நிறைவு விழா ....... 236
ஷாங்க் ஏர் ....... 236
நாஸ்கா வரைகோடுகள் – பெரு ....... 236
விசாகப்பட்டினத்தில் கவசமிடப்பட்ட ஆயுத ஏவல் பெட்டக அமைப்பு ....... 237
250 ஆண்டுகள் பழமையான நினைவு கல் சிற்பம் ....... 237
IVC மற்றும் திராவிடம் இடையிலான தொடர்புகள் ....... 238
நீதிபதியின் சொத்து குறித்த தகவல் வெளிப்பாடு ....... 239
விழித்திரை சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை ....... 239
களைக்கொல்லி தாங்கு திறன் கொண்ட BT பருத்தி ....... 240

தொட்டலத்தூர் பெருங்கற்காலத் தளம் – கர்நாடகா....241
வாழ்நாள் எதிர்பார்ப்புப் போக்குகள்....241
மெகாசில்லா....242
வாலோங் போர்....243
சால்மன் மீன் வளர்ப்பு....243
நீதி தேவதையின் சிலை....244
இணையவெளி மோசடி வழக்குகள்....245

# TNPSC துளிகள்

- நீதிக்கட்சியின் தலைவரும், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வருமான P.T. இராஜன் அவர்களின் 50வது நினைவு தினத்தை முன்னிட்டு, 'தமிழ்வேள் P.T. இராஜன் நினைவுகளில் 50' என்ற எண்ணிம வழியிலான நினைவேந்தலை தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.
- கீழடியானது பாரம்பரியப் பகுதி என்ற பிரிவின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்றுலா கிராமமாக ஒன்றிய சுற்றுலா அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.
- தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழகத்தின் துணை முதல்வராக பதவியேற்றுள்ளார்.
- மன்கிடியா என்ற ஒரு பழங்குடிச் சமூகம் ஆனது ஒடிசாவில் வனங்களின் மீதான வாழ்விட உரிமைகளைப் பெற்ற 6வது மிகவும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய ஒரு பழங்குடியினர் குழு ஆகும்.
- மகாராஷ்டிரா அரசானது 17ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஒரு துறவியினைக் கௌரவிக்கும் வகையில் புனே விமான நிலையத்தின் பெயரினை 'ஜகத்குரு சந்த் துக்காராம் மஹாராஜ் புனே சர்வதேச விமான நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 10வது காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் (CPA) இந்திய மண்டல மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது, எண்ணிமப் பொது உள்கட்டமைப்பை (DPI) செயல்படுத்துவது குறித்த தேசிய மாநாட்டை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- பாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர் வினோத் பச்சன், இந்தியத் திரையுலகில் ஆற்றிய குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காக ஐக்கியப் பேரரசின் ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸில் (பேரவையில்) மதிப்புமிக்க உலகளாவிய மேன்மைத்துவ விருதைப் பெற்றுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு SASTRA இராமானுஜன் பரிசு ஆனது, அமெரிக்காவின் ஜார்ஜியா தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினைச் சேர்ந்த அலெக்சாண்டர் டன் என்பவருக்கு வழங்கப்பட உள்ளது.
- இந்தியா, கணினி பாதுகாப்பு சார்ந்த சிக்கல்களுக்கான எதிர் நடவடிக்கை குழு-மின்னாற்றல் துறையினை (CSIRT- POWER) புது டெல்லியில் தொடங்கியது.
    - இந்தியாவில் மின்னாற்றல் துறை எதிர்கொள்ளும் குறிப்பிட்ட இணையப் பாதுகாப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதை இந்த மையம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பத்ம விருது பெற்றவரும் இயற்கை முறை விவசாயியுமான 109 வயது பாப்பம்மாள் கோவை மாவட்டம் தேக்கம்பட்டியில் காலமானார்.
- எதிர்காலத்திற்கான உச்சி மாநாடு ஆனது நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் "சிறந்த எதிர்காலத்திற்கான பலதரப்பு தீர்வுகள்" என்ற கருத்துருவில் நடைபெற்றது.
- மத்திய அரசானது, புது டெல்லியில் உள்ள வடக்குப் பிராந்திய மின்னாற்றல் குழுவில் இணையப் பாதுகாப்பு நிகழ்வுகளுக்கான எதிர் நடவடிக்கைக்கான குழு – மின்னாற்றல் துறையானது (CSIRT-POWER) தொடங்கப்பட்டது.

- இந்தியக் கடலோரக் காவல்படையின் (ICG) 41வது படைப் பிரிவினர் மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் ஆனது, VisioNxt மற்றும் AI வகை பிரித்தல் இணையப் புத்தகத்தின் இருமொழி இணைய தளமான "பரிதி 24x25" என்ற இந்தியாவிற்கான ஆடை வடிவமைப்புப் போக்கு புத்தகத்தினை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- சர்வதேச நாணய முகமையானது, பாகிஸ்தான் நாட்டின் மிகவும் மோசமான பொருளாதார நிலையினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு சுமார் 1 பில்லியன் டாலர் மதிப்பிலான முதல் தவணையுடன் தொடங்கும் 7 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆனது, சமீபத்தில் பாலின முக்கியத்துவத்தினை மையமாகக் கொண்ட ஒரு தேசிய அளவிலான மாநாட்டை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
  - இந்த நிகழ்வானது, IWWAGE (பெண்கள் மற்றும் சிறுமிகளை பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்கான முன்னெடுப்பு) உடன் இணைந்து நடத்தப்பட்டது.
- டாடா மோட்டார்ஸ்-JLR திட்டத்துடன் இணைந்து தமிழ்நாட்டின் 50வது SIPCOT தொழிற்பேட்டையானது பனப்பாக்கத்தில் திறக்கப்பட உள்ளது.
  - அடுத்த ஆண்டில் பதினேழு தொழில் பூங்காக்கள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் சுமார் 15 நாடுகளின் பங்கேற்புடன் "Ocean-24" என்ற பெரிய அளவிலான கடற்படைப் பயிற்சியை ஜப்பான் கடலில் மேற்கொண்டுள்ளன.
- உலகளாவிய காபி தொழில் துறையினை அங்கீகரித்து மேம்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 01 ஆம் தேதியன்று சர்வதேச காபி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சைவத்தின் நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக்களைக் குறைப்பதில் அது வகிக்கும் முக்கியப் பங்கு பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காக என்று ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 01 ஆம் தேதியன்று உலக சைவ உணவு தினம் கொண்டாடப்படுகிறது.
- தமிழக முதல்வர் இராணிப்பேட்டையில் 9,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) மற்றும் டாடா மோட்டார் நிறுவன கார் உற்பத்தி ஆலையினை நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டினார்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது ஐக்கியப் பேரரசு - இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்புடன் இணைந்து, விண்வெளியில் பெண்களின் தலைமைத்துவத் திட்டத்தினை (WiSLP) அறிமுகப்படுத்தியுள்ளது.
- உஸ்பெகிஸ்தான் நாட்டின் சமர்கண்ட் நகரில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) ஆளுநர்கள் குழுவின் ஒன்பதாவது வருடாந்திரக் கூட்டமானது நடைபெற்றது.
- இந்திய அரசானது உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்தல் கூட்டத்தை (WTSA) புது டெல்லியில் நடத்த உள்ளது.
- நாசா விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் 2வது முறையாக சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ISS) தலைமைப் பொறுப்பை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

- மூத்த பாலிவுட் நடிகர் மிதுன் சக்ரவர்த்தி, தாதாசாகேப் பால்கே விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளார்.
- ஏர் மார்ஷல் அமர் பிரசாத் சிங், விஆர் சவுதாரியை அடுத்து புதிய விமானப்படைத் தளபதியாகப் பதவியேற்றுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு வருடாந்திர சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி (AICE) நிகழ்வின் 10வது பதிப்பானது இத்தாலியின் பாரி நகருக்குப் பதிலாக ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்வானது உலக FZO 10வது உலக மாநாடு என்ற ஒரு புதிய பெயரில் துபாயில் நடைபெற்றது.
- FIFA உலகக் கோப்பை 2026 & FIFA மகளிர் உலகக் கோப்பை 2027 போட்டியின் அதிகாரப் பூர்வ நிதியளிப்பு நிறுவனமாக லேஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.
- 8 ஹெக்டேர் பரப்பளவில் சுமார் 8,000க்கும் மேற்பட்ட பல்வேறு தாவர இனங்களைக் கொண்ட, ஆக்ஸிஜன் உருவாக்கத்திற்கான அம்சங்கள் கொண்ட இந்தியாவின் முதல் பறவை பூங்காவானது மகாராஸ்டிரா மாநிலத்தில் நாக்பூர் நகருக்கு மிகவும் அருகில் அமைக்கப் பட்டுள்ளது.
- முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஷிகெரு இஷிபா ஜப்பானின் 102வது பிரதமராக பதவியேற்றுள்ளார்.
- உலகின் வானூர்தி தளவாட விநியோகச் சங்கிலிக்கான முதன்மை மன்றமான ஏழாவது உலக வானூர்தி தளவாடங்கள் உச்சி மாநாடானது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது.
- தமிழ்நாடு மாநில பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கான ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான திரு எஸ். தமிழ்வாணனை தமிழக அரசு பரிந்துரைத்துள்ளது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சென்னை சமூக சேவை நிறுவனம் ஆகியவை இணைந்து 'தமிழ்நாட்டின் பழங்குடியினர் கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் அளவிலான தேசிய 'தொல்குடி' மாநாட்டினை நடத்தின.
- நிகழ்நேர வானிலை முன்னறிவிப்பு, மழைப்பொழிவு குறித்த தரவு, பல்வேறு எச்சரிக்கைகள் மற்றும் நீர்த்தேக்க நிலைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக, தமிழ்நாடு அரசானது TN-Alert என்ற இருமொழியிலும் செயல்படும் கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுகள் ஆனது 70 சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- ஜப்பான் நாட்டில் நிகாட்டா என்னுமிடத்தில் நடைபெற்ற உலக தடகள கான்டினென்டல் டூர் போட்டியில் இந்தியாவின் குல்வீர் சிங், ஆடவருக்கான 5000 மீட்டர் ஓட்டப் போட்டியினை 13:11.82 வினாடிகளில் நிறைவு செய்து தனது தேசிய சாதனையை முறியடித்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- மகாராஷ்டிர மாநில அரசானது வேத காலத்திலிருந்துத் திகழ்ந்து வரும் அவற்றின் முக்கியத்துவம் போன்ற பல காரணிகளைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு இன பசுக்களை 'இராஜ்யமாதா-கோமாதா' என்று அறிவித்துள்ளது.

- ❖ இந்திய சர்க்கரை மற்றும் உயிரி ஆற்றல் உற்பத்தியாளர்கள் சங்கமானது (ISMA) இந்திய சர்க்கரை மற்றும் உயிரி ஆற்றல் மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- ❖ உலகின் மூன்றாவது பெரிய எத்தனால் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ❖ இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமானமான (LCA) தேஜாஸ் போர் விமானத்தை இயக்கிய முதல் பெண் போர் விமானி என்ற பெருமையை படைப்பிரிவுத் தலைவர் மோகனா சிங் பெற்றுள்ளார்.
- ❖ மத்திய அரசானது, சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்த வகையிலான வாழ்க்கை முறைகள் தொடர்பான பல்வேறு நடத்தை மாற்றங்களைத் தூண்டுவதற்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான கருத்தாக்கங்களைப் பெறச் செய்வதற்காக Ideas4LiFE என்ற ஒரு இணைய தளத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- ❖ மத்திய அரசானது, இந்தியாவில் 2029 ஆம் ஆண்டிற்குள் கப்பல் பயணச் சுற்றுலாவை சுமார் 1 மில்லியன் பயணிகள் என்ற ஒரு எண்ணிக்கையில் அதிகரிப்பதற்காகவும், சுமார் 400,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கச் செய்வதற்காகவும், 5 ஆண்டு கால பாரத் கப்பல் சுற்றுப்பயண திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ மிகவும் ஆக்கப்பூர்வமிக்க ஒரு செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினை பல்வேறு இந்திய மொழிகளில் குடிமக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான, உலகில் முதல் முறையாக அரசினால் நிதியுதவி அளிக்கப்படும் ஒரு முன்னெடுப்பான பாரத்ஜென் திட்டத்தினை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- ❖ ஜெர்மனி, பிரான்ஸ், சுவீடன் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில்களை இயக்கும் ஐந்தாவது நாடாக இந்தியா விரைவில் மாற உள்ளது.
- ❖ விராட் கோலி சர்வதேச போட்டிகளில் 27000 ரன்களை எடுத்து, அந்த மைல்கல்லை மிக விரைவில் எட்டிய கிரிக்கெட் வீரர் என்ற மாபெரும் சாதனையைப் படைத்து சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.
- ❖ இங்கிலாந்தில் நடந்த ப்ரோ சர்க்யூட் ஸ்னூக்கர் போட்டியில், நான்கு முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மார்க் செல்பியை வீழ்த்தி அந்தப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பினை இஷ்ப்ரீத் சிங் சதா பெற்றுள்ளார்.
- ❖ இந்தியா-கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையிலான எட்டாவது KAZIND-2024 எனப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியானது உத்தரகாண்டில் தொடங்கியது.
- ❖ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் துருக்கியில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய நகரத்தின் பல்வேறு இடிபாடுகளில் இருந்து பழமையான கண்மையினை கண்டுபிடித்து உள்ளனர் என்பதன் மூலம் சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மனிதர்கள் ஒப்பனை பொருட்களைப் பயன்படுத்தினர் என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.
- ❖ பயோஎன்டெக் என்ற நிறுவனமானது, சிறு உயிரணு சாராத நுரையீரல் புற்றுநோய்க்கு (NSCLC) சிகிச்சையளிப்பதை நோக்கமாகக் கொண்ட mRNA தடுப்பூசியான BNT116 மருந்திற்கான சர்வதேச மருத்துவப் பரிசோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- ❖ வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM) ஆனது வானிலை மற்றும் பருவநிலை ஆராய்ச்சிக்காக 'Arka' மற்றும் 'Arunika' எனப்படும் 'அதிக செயல்திறன் கொண்ட கணினி' அல்லது HPC அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- கேரளாவின் அம்ரித் என்ற நடவடிக்கை மூலம் (ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கான நுண்ணுயிர் எதிர்ப்புத் திட்டம்) அம்மாநிலத்தில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் மிகவும் கட்டுப்பாடற்ற பயன்பாட்டில் அதிகபட்ச அளவில் சரிவு பதிவாகியுள்ளது.
  - இந்த ஆண்டு ஜனவரி மாத தொடக்கத்தில், மருந்துச் சீட்டு இல்லாமல் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் விற்பனையைத் தடை செய்த நாட்டின் முதல் மாநிலமாக கேரளா மாறியது.
- 1990 ஆம் ஆண்டு ஜெர்மன் நாடானது மீண்டும் ஒன்றிணைந்ததன் நினைவாக அங்கு அக்டோபர் 03 ஆம் தேதியன்று ஜெர்மனி ஒற்றுமை தினம் கொண்டாடப்பட்டது.
- மெட்டா நிறுவனமானது, புகைப்பட மற்றும் உரை செயல்முறையாக்க திறன்களுடன் கூடிய லாமா 3.2 எனப்படுகின்ற அதன் முதல் இலவச மென்பொருள் மாதிரியினை வெளியிட்டுள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பின் மகளிர் தொழில்முனைவோர் தளத்தின் (WEP) ஒரு பிரத்யேக பிரிவினைப் பெற்ற இந்தியாவின் முதல் மாநிலமாக தெலுங்கானா மாறியுள்ளது.
- இந்திய விமானப்படையானது, அதன் 92வது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் ஒரு மாபெரும் வான்வழி சாகச கண்காட்சியை சென்னையில் நடத்தியது.
- உலகப் பசுமைப் பொருளாதார மன்றமானது, "உலகளாவிய நடவடிக்கைகளை நன்கு மேம்படுத்துதல்: வாய்ப்புகளை உருவாக்கி, முன்னேற்றத்தினை ஏற்படுத்துதல்" என்ற தலைப்பில் துபாயில் நடத்தப் பட்டது.
- இந்திய இராணுவ செவிலியர் சேவை (MNS) படையானது, 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று அதன் 99வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தியாவானது முதன்முறையாக 2025 ஆம் ஆண்டில் கோ கோ உலகக் கோப்பைப் போட்டியினை நடத்தவுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, ஏடிஸ் கொசுக்கள் மூலம் பரவும் ஆர்போவைரஸ் மூலமான டெங்கு மற்றும் பிற நோய்களின் பாதிப்பு மீதான அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்காக உலகளாவிய உத்தித் தயார்நிலை, ஆயத்த நிலை மற்றும் எதிர் நடவடிக்கைக்கான செயல்திட்டம் அல்லது SPRP என்ற செயல் திட்டத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இடகுஞ்சி மகாகணபதி யக்ச கானா மண்டலி கெரமானே என்பது, தொட்டுணர முடியாத மகத்தான கலாச்சார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான யுனெஸ்கோ உடன்படிக்கையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது (யக்ச கானா என்ற நடனத்தின் முன்னேற்றத்திற்காக).
- க்ராத்தான் என்ற ஒரு சூறாவளியானது தைவானின் முக்கியத் துறைமுக நகரமான கயோசியுங்கில் கரையைக் கடந்தது.
- சென்னை மெட்ரோ இரயில் சேவைக்கான 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டாம் கட்ட பணிகளை மேற்கொள்வதற்கு என்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து ள்ளது.
  - இது 128 இரயில் நிலையங்களுடன் 118.9 கிலோ மீட்டர் தூரத்திற்கான பகுதிகளில் சேவை வழங்க உள்ளது என்பதோடு இது 21 இடங்களில் பல்மாதிரிப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு அமைப்புகளையும் கொண்டிருக்கும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியானது சமீபத்தில் சென்னையில் தொடங்கப்பட்டது என்பதோடு இதில் 38 மாவட்டங்களில் இருந்து 33,000 பங்கேற்பாளர்கள் ஐந்து பிரிவுகளில் போட்டியிடுகின்றனர்.

- புது டெல்லியில் உள்ள ஜமைக்கா தூதரக ஆணைய அலுவலகத்திற்கு முன்னால் உள்ள சாலைக்கு 'ஜமைக்கா மார்க்கம்' என அதிகாரப்பூர்வமாக மறுபெயரிடப்பட்டுள்ளது.
- பல்லுயிரியலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் மனிதர்கள் மற்றும் வன விலங்குகளின் சகவாழ்வை ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தைச் சமூகத்திற்கு உணர்த்துவதற்காக 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 02 முதல் 08 ஆம் தேதி வரை தேசிய வனவிலங்கு வாரம் ஆனது அனுசரிக்கப்படுகிறது.
- மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் உள்ள உயிரி-அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) ஆலையுடன் கூடிய 'லால் திபரா கௌஷாலா'-கோசாலையினை - பிரதமர் திறந்து வைத்துள்ளார்.
- இந்தியா, நேபாளம் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் ஆனது, இந்தியாவின் மின்சார வழங்கீட்டு கட்டமைப்பு வழியாக நேபாளத்தில் இருந்து வங்காளதேசத்திற்கு 40 மெகாவாட் மின்சாரத்தினை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி, நாடு முழுவதும் மொத்தம் 13,822 ஜன் ஔஷாதி கேந்திராக்கள் (கடைகள்) நிறுவப்பட்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்கும் நோக்கில், சீனா தனது சிறப்பு வகை 'இலகு ரக' சந்திர விண்வெளி உடையின் மீதான வடிவமைப்பை வெளியிட்டுள்ளது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது, அடுத்த ஆண்டு ரஷ்ய எல்லைக்கு அருகில் ஃபின்லாந்தில் புதிய நிலக் கட்டுப்பாட்டுப் பிரிவினை அமைக்க உள்ளது.
- 26வது நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சி (WETEX-2024) ஆனது துபாயில் நடைபெற்றது.
- கண்ணூரில் உள்ள கல்லியசேரியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மீ மின் தேக்கி உற்பத்தி ஆலையை கேரள மாநில அரசு திறந்து வைத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஆயுஷ் மருத்துவ மதிப்பு சார் பயண உச்சி மாநாடு ஆனது, 'ஆயுஷ் துறையில் உலகளாவிய ஒருங்கிணைப்பு: மருத்துவ மதிப்பு சார்ந்த பயணத்தின் மூலம் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மாற்றியமைத்தல்' என்ற கருத்துருவுடன் மும்பையில் நடத்தப் பட்டது.
- ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி நகரில் அமைக்கப்பட்டுள்ள GAIL நிறுவனத்தின் முதல் CBG (அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு) ஆலையைப் பிரதமர் திறந்து வைத்தார்.
  - இது நாள் ஒன்றுக்கு 5,000 கிலோ உயிரி-CNG மற்றும் 25 டன் நொதிக்கப்பட்ட உயிரி உரம் தயாரிப்பதற்கு சுமார் 150 டன் நகராட்சி திடக்கழிவுகளை செயல்முறைக்கு உட்படுத்தும்.
- யுரோநேவல் 2024 எனப்படும் உலகின் மிகப்பெரிய கடற்படைப் பாதுகாப்பு வர்த்தக கண்காட்சியானது நவம்பர் மாதம் பாரீஸில் நடைபெற உள்ளது.
- பள்ளி/கல்லூரி நேரத்திற்குப் பிறகு கலை, அறிவியல், விளையாட்டு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆளுமை திறன்கள் மற்றும் பணித் திறன் ஆகியவற்றில் முழுமையான திறன்களை வளர்த்துக் கொள்ள, மாணவர்களுக்கு உதவும் வகையில், கல்லூரியில் "நல்லோசை" மற்றும் பள்ளிகளில் "கற்றல் இனிது" ஆகிய முன்னெடுப்புகளை தமிழக மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணுமின் நிலையத்தின் 2 ஆம் அலகு ஆனது அதன் ஓராண்டு காலத் தொடர் செயல்பாடுகளை சமீபத்தில் நிறைவு செய்துள்ளது.
- மும்பையில் வரைகலை, மெருகுக் காட்சிகள், விளையாட்டுச் செயலிகள், கேலிச் சித்திரங்கள் நுட்பம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட (மெய் மற்றும் மிகை மெய்த் தோற்றங்களின் கலவை) மெய்த் தோற்றங்கள் (AVGC-XR) ஆகியவற்றுக்கான தேசிய சிறப்பு நுட்ப மையத்தினை (NCoE) நிறுவுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியக் கடற்படையின் வருடாந்திர உச்ச நிலையிலான சர்வதேச மாநாடான 2024 ஆம் ஆண்டு இந்திய-பசிபிக் பிராந்திய பேச்சுவார்த்தை ஆனது (IPRD) புது டெல்லியில் நடைபெற்றது.
- மும்பை கிரிக்கெட் அணியானது 27 ஆண்டுகளுக்குப் பிறகு 15வது முறையாக இரானி கோப்பையை வென்றுள்ளது.
- சென்னை கதீட்ரல் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- 63,246 கோடி ரூபாய் மொத்த திட்ட மதிப்பீட்டில் 65% மத்திய அரசின் நிதியுதவியுடன், சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டம் ஆனது 'மத்திய அரசின் நிதியுதவிப் பெறும்' திட்டமாக மேற்கொள்ளப்பட உள்ளது.
- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி ஆகியவை இணைந்து நடத்திய கடல்சார் கார்பன் நீக்கம் குறித்த மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது 4வது தலைமுறை தொழில் நுட்பம் சார்ந்த தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட சிறிய அளவிலான மிகக் குறுகிய தூர செயல்பாட்டு வரம்புடைய வான் வழிப் பாதுகாப்பு அமைப்பின் (VSHORADS) வான் வழி சோதனைகளை பொக்ரானில் வெற்றிகரமாக நடத்தியது.
- ப்ளூம்பெர்க் பில்லியனர் குறியீட்டின்படி, அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸை விஞ்சி எலோன் மஸ்க்கிற்கு அடுத்த படியாக உலகின் இரண்டாவது மிகவும் பெரிய பணக்காரர் ஆக மார்க் ஜுக்கர்பெர்க் மாறியுள்ளார்.
- தைவான் அரசானது அமெரிக்காவிடமிருந்து 100 நிலச் செயல்பாடு சார்ந்த ஹார்பூன் ரக கப்பல் எதிர்ப்பு எறிகணை அமைப்புகளின் முதல் ஏற்றுமதி தொகுதியினைப் பெற்றுள்ளது.
- ஆசிய மனிதவள மேம்பாட்டு வாழ்நாள் சாதனையாளர் விருது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையானது 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற அதன் முதன்மைத் திட்டத்திற்கு சுகாதார அமைச்சகத்தின் பிரிவின் கீழ் 'ஐக்கிய நாடுகள் சபையின் 2024 ஆம் ஆண்டு இடை முகமை பணிக் குழு ((UNIATF - Interagency Task Force) விருதுகளை பெற்றுள்ளது.
- ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா பங்கேற்கும் மலபார் 2024 எனப்படும் கடல்சார் பயிற்சியானது விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.
- சத்தீஸ்கர் மாநில முதல்வர், தம்தாரி மாவட்டத்தில் உள்ள கங்க்ரெல் அணையில் உள்ள இரவிசங்கர் நீர்த்தேக்கத்தில் ஜல்-ஜாகர் மஹோத்சவத்தினைத் தொடங்கி வைத்தார்.

- இந்திய மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள் இரு நாடுகளுக்கு இடையே தடையற்ற எல்லை கடந்த பரிவர்த்தனைகளை மேற்கொள்ளச் செய்வதை எளிதாக்குவதற்காக வேண்டி இந்தியாவின் UPI மற்றும் UAE நாட்டின் AANI ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
- மாலத்தீவுகளுக்கு 400 மில்லியன் டாலர்கள் நிதி உதவி மற்றும் 3,000 கோடி ரூபாய் இருதரப்புப் பண மதிப்பு பரிமாற்றத்தை இந்தியா வழங்கியுள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது, பல்வேறு அனுமதி அளிக்கப் பட்ட தொடர் சங்கிலி தொழில்நுட்பம் அடிப்படையிலான செயலிகளுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்குவதற்காக விஸ்வஸ்யா - தொடர் சங்கிலித் தொழில் நுட்பக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய அரசானது, சர்வதேசத் தொலை தொடர்பு ஒன்றியத்தின் உலக தொலை தொடர்பு தரநிலைப்படுத்தல் கூட்டத்தை (WTSA) புது டெல்லியில் நடத்த உள்ளது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர், உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் 77வது கூட்டத் தொடரின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ஜெர்மனி நாட்டில் டிரெஸ்டன் என்ற நகரில் நடைபெற்ற சிறப்பு உணவுமுறைப் பயன்பாடுகளுக்கான ஊட்டச்சத்து மற்றும் உணவுகளுக்கான கோடெக்ஸ் குழுவின் (CCNFSDU) 44வது அமர்வில் இந்தியா பங்கேற்றது.
- கட்டுமானங்களில் எஞ்சும் குப்பைகள், கழிவுநீர் மற்றும் கழிவுகளை பொது இடங்கள் மற்றும் நீர்நிலைகளில் சட்ட விரோதமாகக் கொட்டும் நிகழ்வுகள் குறித்து புகார் அளிப்பதற்காக சென்னை மாநகராட்சிக் கழகம் ஆனது 1913 எனப்படும் 24 மணி நேர உதவி எண் சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நான்கு ஆய்வுக் கப்பல்களின் வரிசையில் உருவாக்கப்பட்ட இரண்டாவது கப்பலான (பெரியது) ஐஎன்எஸ் நிர்தேஷாக் இந்திய கடற்படையிடம் வழங்கப்பட்டுள்ளது.
- வால்மீகி புலிகள் வளங்காப்பகம் அதன் முழு விலங்குகள் எண்ணிக்கையினை எட்ட இருப்பதால் கைமூர் வனவிலங்கு சரணாலயத்தை அதன் இரண்டாவது புலிகள் வளங் காப்பகமாக பீகார் அரசு மேம்படுத்த உள்ளது.
- மில்டன் புயலானது ஃப்ளோரிடா மாகாணத்தின் (அமெரிக்கா) மேற்கு கடற்கரையில் கரையைக் கடந்தது.
- இம்மானுவேல் சேகரனின் 100வது பிறந்தநாள் (அக்டோபர் 9) சமீபத்தில் அனுசரிக்கப் பட்டது.
    - தனது 18 வயதில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் மூலம் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற அவர் 1957 ஆம் ஆண்டில் அவரது 33 வயதில் கொலை செய்யப் பட்டார்.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குக் காரணமான மெத்தனால் கலந்த அரக்கு குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி B.கோகுல்தாஸ் தலைமையிலான ஒரு நபர் ஆணையம் ஆனது, சம்பவம் குறித்து பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது கண்ணோட்டங்கள், கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.
- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் மற்றும் டாடா IIS ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் மூலம் மும்பையின் இந்திய திறன்கள் கல்வி நிறுவனம் (IIS) ஆனது நிறுவப்பட்டுள்ளது.

- தேசிய மின் ஆளுகைப் பிரிவு (NeGD) ஆனது, சமீபத்தில் UMANG என்ற செயலியை இந்தியாவின் எண்ணிம ஆவணக் காப்புச் செயலியான டிஜி லாக்கர் செயலியுடன் ஒருங்கிணைப்பதாக அறிவித்துள்ளது.
- 31 MQ-9B அதிக உயரத்தில் அதிக நேரச் செயல்பாட்டு திறன் (HALE) கொண்ட ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAV) அமெரிக்காவிடமிருந்து வாங்கச் செய்வதற்கான ஒப்பந்தங்களுக்கு அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, ஒளியிழை மற்றும் ஒளியியல் நுட்பத்தினைப் பயன்படுத்தி மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டு அறிவதற்கான கருவியை மலிவு விலையில் உருவாக்கியுள்ளது.
- இந்தியாவின் ஜவுளித் துறையானது வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 350 பில்லியன் டாலர்களாக வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் அடுத்த ஆண்டு ஜனவரி 28 முதல் பிப்ரவரி 14 ஆம் தேதி வரை உத்தரகாண்டில் நடைபெறவுள்ளது.
- ஷார்ஜாவில் (ஐக்கிய அரபு அமீரக நாட்டில்) நடைபெற உள்ள 20வது சர்வதேச கல்விக் கண்காட்சியில், சர்வதேச மாணவர்களை தனது பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்கும் நோக்கில் இந்தியா தனது 'இந்தியாவில் கல்வி பயில்வோம்' பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.
- நேபாள நாட்டினைச் சேர்ந்த மலையேறும் வீரரான நிமா ரிஞ்சி ஷெர்பா (18), உலகின் 8,000 மீட்டர் (26,246-அடி) உயரம் கொண்ட 14 சிகரங்களையும் ஏறிய இளம் நபர் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளார்.
  - உலகின் மிகவும் உயரமான 14 சிகரங்களையும் எட்டியவர் என்ற முந்தைய ஒரு சாதனையை மிங்மா கியாபு "டேவிட்" ஷெர்பா (30) என்பவர் வைத்திருந்தார்.
- தென்னாப்பிரிக்காவில் (சிமோன் நகரம்) நடைபெறும் IBSAMAR எனப்படும் இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளின் எட்டாவது கூட்டு பன்னாட்டு கடல்சார் பயிற்சியில் INS தல்வார் பங்கேற்கிறது.
- இந்திய உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் (ICFA) மற்றும் ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் வேளாண்மை மற்றும் நீர் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான தொழில்நுட்பப் புத்தாக்க மையம் (TIF – AwaDH) ஆகியவை இணைந்து நடத்திய 2024 ஆம் ஆண்டு இந்திய எண்ணிம வேளாண்மை மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- லாவோவின் வியன்டியானே நகரில் நடைபெற்ற 19வது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் (EAS) இந்தியா பங்கேற்றது.
- மத்திய அரசானது, இந்துஸ்தான் விமானவியல் லிமிடெட் (HAL) நிறுவனத்தினை 14வது மகாரத்னா அந்தஸ்து பெற்ற மத்தியப் பொதுத்துறை நிறுவனமாக (CPSE) மேம்படுத்தி உள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் தலைமை இயக்குநர், மொராக்கோவின் ரபாத் நகரினை 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் புத்தகத் தலைநகராக அறிவித்துள்ளார்.
- தமிழ்நாடு அரசானது, நோயாளிகளுக்கான வழிகாட்டுதல், செயல்பாட்டுத் திறன் மற்றும் நோயாளியின் சேவை திருப்தியை மேம்படுத்துவதற்காக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் (PHC) உதவி மையங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஆகஸ்ட் மாதத்தில் 1.31% ஆக இருந்த இந்தியாவின் மொத்த விலை பணவீக்கம் ஆனது செப்டம்பர் மாதத்தில் 1.84% ஆக அதிகரித்துள்ளது.
    - காய்கறிகளின் விலையானது, கடந்த ஆண்டை விட ஏறக்குறைய சுமார் 49% அளவு அதிகரித்ததால், ஆகஸ்ட் மாதத்தில் 3.3% ஆக இருந்த உணவுப் பொருட்களின் விலையானது 10 மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.5% அதிகரித்ததே இதற்கு ஒரு காரணமாகும்.
- நாகாலாந்தில் உள்ள ஃபெக் மாவட்டத்தின் காவல் ஆய்வாளரான பிரித்பால் கௌர், அமெரிக்காவில் உள்ள மதிப்புமிக்க சர்வதேச காவல்துறைத் தலைவர்கள் சங்கத்தின் (IACP) ‘2024 ஆம் ஆண்டு IACP 40 Under 40’ விருதினைப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவில் நடைபெற்ற, பாராளுமன்றக் குழுக்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் (IPU) 149வது கூட்டத்திற்கான பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவிற்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமை தாங்கினார்.
- டாடா அறக்கட்டளையின் புதிய தலைவராக நோயல் டாடா நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க-இந்திய உத்தி சார் கூட்டாண்மை மன்றமானது (USISPF) தனது வருடாந்திர ‘2024 ஆம் ஆண்டு இந்தியத் தலைமைத்துவ உச்சி மாநாட்டினை’ புது டெல்லியில் நடத்தியது.
- 2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற முதல் இந்தியப் பெண் ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான தீபா கர்மாகர், தொழில்முறை போட்டிகளில் இருந்து அதிகாரப்பூர்வமாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இந்தியக் கடற்படையானது சமர்த்தக் எனப்படும் தனது முதல் உள்நாட்டுப் பல்நோக்கு கப்பலினை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது.
- மகாராஷ்டிரா மாநிலத் திறன் மேம்பாட்டுப் பல்கலைக்கழகத்தை ரத்தன் டாடா மகாராஷ்டிரா மாநிலத் திறன் மேம்பாட்டுப் பல்கலைக்கழகம் என்று மறு பெயரிடச் செய்வதற்கு அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது புதிய வந்தே பாரத் இரயில் சேவையை அறிமுகப் படுத்தியுள்ளதோடு டெல்லியில் இருந்து பாட்னா வரை 994 கிலோமீட்டர் தொலைவு வரை இயக்கப்பட உள்ள இந்த இரயில் சேவையானது நாட்டின் மிக நீண்ட வந்தே பாரத் இரயில் பயணத்தைக் குறிக்கிறது.
- 19வது சர்வதேச மருந்து ஒழுங்குமுறை ஆணையங்களின் மாநாடு ஆனது இந்தியாவில் முதன்முறையாக புது டெல்லியில் நடைபெற்றது.
- இஸ்ரோ தலைவர் S. சோமநாத், சந்திரயான்-3 விண்கலத்தின் பெரும் குறிப்பிடத்தக்க சாதனைக்காக சர்வதேச விண்வெளிக் கூட்டமைப்பின் (IAF) மிகவும் மதிப்புமிக்க உலக விண்வெளி விருதைப் பெற்றுள்ளார்.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் பீகாருக்கு அடுத்தபடியாக விரிவான குடும்ப சாதிவாரிக் கணக்கெடுப்பினை மேற்கொள்ளும் மூன்றாவது மாநிலமாக தெலுங்கானா மாற உள்ளது.
- குஜராத் மாநிலதில் உள்ள ஜாம்நகர் என்று அழைக்கப்படும் நவநகரின் பழைய சமஸ்தானத்தின் மகாராஜா, தனது மருமகனும் (உடன் பிறந்தார் மகன்), முன்னாள் கிரிக்கெட் வீரருமான அஜய் ஜடேஜாவை அந்தப் பதவிக்கான தனது அடுத்த வாரிசாக அறிவித்துள்ளார்.
- நிதித் தொழில்நுட்ப நிறுவனமான நாவி, ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக செயலியில் (UPI) தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்தியாவின் ஐந்தாவது பெரிய பண வழங்கீட்டு சூழல் அமைப்பாக மாறியுள்ளது.

- மலையேறு வீரரான அர்ஜுன் வாஜ்பாய் (மகாராஷ்டிரா), ஷிஷாபங்மா (சீனா) மலை உச்சியை அடைந்து, அந்த சிகரத்தில் ஏறிய முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- சர்வதேசத் துப்பாக்கி சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பு (ISSF) ஆனது 2025 ஆம் ஆண்டில் ISSF இளையோர் உலகக் கோப்பைப் போட்டியினை இந்தியா நடத்தும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.
- 'இந்தியாவிலேயே தயாரிக்கப்படும்' அதிவிரைவு இரயில்களைத் தயாரிப்பதற்கான 866.87 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தத்தினை BEML எனும் அரசு நிறுவனம் பெற்று உள்ளது.
- நல்லமலை வனப்பகுதியில் உள்ள நாகார்ஜுன சாகர்-ஸ்ரீசைலம் புலிகள் வளங் காப்பகம் (NSTR), அப்பகுதியில் காணப்படும் சிறுத்தைகளின் எண்ணிக்கையினைக் கொண்டு மதிப்பிடப்பட்ட இந்தியாவின் 55 புலிகள் வளங்காப்பகங்களில் சுமார் 360 சிறுத்தைகளுடன் முதலிடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஜம்மு காஷ்மீர் முதல்வராக தேசிய மாநாட்டுக் கட்சியின் (NC) துணைத் தலைவர் உமர் அப்துல்லா பதவியேற்றுள்ளார்.
- இந்தியப் பெண் அறிவியலாளர் சுபா டோலே, சர்வதேச மூளை ஆராய்ச்சி அமைப்பின் (IBRO) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கேரள சட்டப்பேரவையானது ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, 2024 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவினைத் திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்தி உள்ளது.
- இந்திய ராணுவமானது, அதன் செயல்பாட்டுத் (நடவடிக்கைப் பயன்பாட்டு) தயார் நிலையை மேலும் மேம்படுத்தும் விதமாக தனது முதல் புதுப்பிக்கப்பட்ட T-90 பீஷ்மா பீரங்கியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- UNICEF அமைப்பின் கூற்றுப்படி, உலகளவில் உள்ள குழந்தைகளுக்கான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்களை வழங்கும் மூன்றாவது பெரிய நிறுவனமாக இந்திய நிறுவனங்கள் உள்ளன.
- குளோபல் SWF என்ற இணைய தளமானது, அதன் இறையாண்மை மிக்க செல்வ வள நிதிகளின் அடிப்படையில், உலகின் பணக்கார நாடாக அபுதாபியை அறிவித்துள்ளது.
- இந்தியாவில் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை இணையவெளிப் பாதுகாப்பு தொடர்பான வேலைவாய்ப்புகள் சுமார் 14% அதிகரித்துள்ளதாக புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.
  - இதில் 10 சதவீத உயர்வுடன் பெங்களூரு முதலிடத்தில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து டெல்லியின் தேசியத் தலைநகரப் பகுதி (4%), வீட்டிலிருந்தே செய்யும் பணிகள் (2.2%), மற்றும் ஐதராபாத் (2%) ஆகியவை உள்ளன என்பதோடு மும்பை 2 சதவீதத்துடன் இதில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் ஆனது, அமைச்சகத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இயங்கலை வழிக் கற்றல் வசதியினை வழங்குவதற்காக iGOT ஆய்வகத்தினை அமைக்க உள்ளது.
- நயாப் சிங் சைனி, ஹரியானா மாநிலத்தின் புதிய முதலமைச்சராக இரண்டாவது முறையாகப் பதவியேற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த நிகிதா போர்வால் 2024 ஆம் ஆண்டு ஃபெமினா இந்திய அழகிப் போட்டியில் மகுடம் வென்றுள்ளார் என்ற நிலையில் ஒன்றியப் பிரதேசங்கள் சார்பாக இந்தப் போட்டியில் பங்கேற்ற ரேகா பாண்டே இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

- பாரத் 6G அலையன்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்த சர்வதேச 6G கருத்தரங்கம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- சத்தீஸ்கரில் உள்ள சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் (SECL) நிறுவனமானது, நாட்டின் 216வது AMRIT (மலிவு விலையிலான மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான நம்பகமான உள்வைப்பு சாதனங்கள்) மருந்தகத்தினைத் திறந்து வைத்துள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது இரண்டாவது சர்வதேச மெத்தனால் கருத்தரங்கம் மற்றும் 2024 ஆம் ஆண்டு கண்காட்சி ஆகியவற்றை புது டெல்லியில் நடத்தியது.
- புது டெல்லியில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ISSF உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆடவர்களுக்கான 3 நிலைகளிலான 50 மீட்டர் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவின் அகில் ஷியோரன் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- அரசு ஊழியர்களின் மிகவும் தனிப்பட்ட மற்றும் நிறுவனத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ‘கர்மயோகி சப்தா’ என்ற தேசிய கற்றல் வாரத்தைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்திய இராணுவத்தின் சுதர்சன் சக்ரா படைப்பிரிவானது, உத்தரப் பிரதேசத்தின் ஜான்சிக்கு அருகில் “ஸ்வாவ்லம்பன் சக்தி பயிற்சி” என்ற முக்கியப் பயிற்சியை நடத்தி வருகிறது.
- இந்தோனேசியாவின் 8வது அதிபராக பிரபோவோ சுபியாண்டோ பதவியேற்றுள்ளார்
- அடுத்த ஆண்டு ஜனவரி 08 முதல் 10 ஆம் தேதி வரை 18வது பிரவாசி பாரதிய திவாஸ் நிகழ்வினை ஒடிசா அரசானது, புவனேஸ்வர் நகரில் நடத்தவுள்ளது.
- பவன சித்ரா என்றழைக்கப்படும் "உலகின் முதல் தானியங்கு உட்புற காற்றுத் தரக் கண்காணிப்பு" அமைப்பினைப் பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையமாக திருவனந்தபுரம் விமான நிலையம் மாறியுள்ளது.
- இந்தியக் கடற்படை மற்றும் ஓமன் கடற்படை ஆகியவையானது சமீபத்தில் 'நசீம் அல் பஹ்ர்' என்ற இருதரப்பு கடற்படைப் பயிற்சியை கோவா கடற்கரையில் மேற் கொண்டன.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, குஜராத் மற்றும் ஒன்றியப் பிரதேசமான டாமன் & டையூ பகுதிகளில் ‘சாகர் கவாச்’ என்ற கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியினை வெற்றிகரமாக நடத்தின.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ICC T20 உலகக் கோப்பைப் போட்டியில், முதல் முறையாக நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி ஆனது தென்னாப்பிரிக்க அணியினை வீழ்த்தி 23 ஆண்டுகளுக்கு பிறகு கோப்பையினைக் கைப்பற்றியது.
- பேரிடர் அபாயக் குறைப்பு (APMCDRR) தொடர்பான 2024 ஆம் ஆண்டு ஆசிய-பசிபிக் அமைச்சர்கள் மாநாடு ஆனது பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் நடைபெற்றது.
- இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் நிறுவனர் நாராயண மூர்த்திக்கு, 2024 ஆம் ஆண்டு பேட்ரிக் J. மெக்கவர்ன் என்ற விருதுகளின் ஒரு பகுதியாக இந்திய வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- புகழ்பெற்ற மனிதாபிமானச் சேவையாளரும் மற்றும் ஆன்மீகத் தலைவரான மோகன்ஜிக்கு, தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் 2024 ஆம் ஆண்டு கான்சியஸ் கம்பெனி விருதுகளில் மனிதாபிமான விருதானது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

- ❖ பிரபலத் திரைப்படத் தயாரிப்பாளர் ராஜ்குமார் ஹிரானிக்கு மத்தியப் பிரதேச மாநிலம் கந்த்வாவில் தேசிய கிஷோர் குமார் விருது வழங்கப்பட்டது.
- ❖ சென்னை மெட்ரோ இரயில் சேவையின் இரண்டாம் கட்டத் திட்டத்தில் அறிமுகப் படுத்தப் பட உள்ள ஓட்டுநரின்றி இயங்கும் முதல் இரயிலின் முதல் சோதனை ஓட்டம் ஆனது அக்டோபர் 26 ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட உள்ளது.
- ❖ பொது மக்களிடையே பருவநிலை பற்றிய விழிப்புணர்வை வெகுவாக அதிகரிக்கவும், பெண்களுக்கான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் ‘பருவநிலைப் போராளிகள்’ எனும் சுயஉதவி குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு, மின்சாரத்தில் இயங்கும் 100 மூன்று சக்கர வாகனங்களை தமிழக அரசு வழங்க உள்ளது.
- ❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றிற்கான தனது முதல் சர்வதேச முதன்மை மையத்தினை 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் துபாயில் தொடங்க உள்ளது.
- ❖ இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுள்ள தனிநபர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட தடை விதித்த இரு குழந்தைக் கொள்கையை நீக்க ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ பாகிஸ்தானின் தலைமை நீதிபதியின் பதவிக் காலத்தினை மூன்றாண்டுகளாக குறைத்து வரம்பு நிர்ணயிக்கும் சர்ச்சைக்குரிய 26வது அரசியலமைப்புத் திருத்த மசோதாவை பாகிஸ்தானின் மேலவை நிறைவேற்றியுள்ளது.
- ❖ எகிப்து நாடானது உலக சுகாதார அமைப்பினால் மலேரியா இல்லாத ஒரு நாடாக அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் கபோ வெர்டே நாட்டிற்கு அடுத்தபடியாக 2024 ஆம் ஆண்டில் இந்த நிலையை அடைந்த உலகின் இரண்டாவது நாடாக இது திகழ்கிறது.
- ❖ கார்கில் போரின் போது உயிரிழந்த படைத் தலைவர் அமித் பரத்வாஜின் உயிர் தியாகத்தைக் கௌரவிக்கும் வகையில் லடாக்கிலுள்ள கார்கில் மாவட்டத்தில் கக்சர் என்ற பாலத்திற்கு கேப்டன் அமித் பரத்வாஜ் சேது என பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் முன்னணி தனியார் துறை வங்கியான HDFC வங்கியானது, சிங்கப்பூரில் தனது வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக தனது முதல் கிளையைத் தொடங்கி உள்ளது.
- ❖ சர்வதேச சூரிய சக்தி கூட்டணியின் 6வது கூட்டமானது புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- ❖ இந்திய இரயில்வே நிர்வாகமானது, 120 நாட்களாக இருந்த பயணச்சீட்டு முன்பதிவு காலத்தை 60 நாட்களாக குறைத்துள்ளது என்பதோடு இது நவம்பர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- ❖ பாப்பனம்கோடு என்னுமிடத்தில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) தேசியப் பல்துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவன (NIIST) வளாகத்தில் ஆயுர்வேத ஆராய்ச்சிக்கான சிறப்பு மையம் நிறுவப்பட உள்ளது.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று நடைபெறும் 14வது ஏரிகள் மாநாடு ஆனது கர்நாடகாவின் மூட்பித்ரி என்னுமிடத்தில் ‘Lake 2024 – wetlands for human wellbeing’ என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- ❖ ஆஸ்கர் சூறாவளியானது கிழக்கு கியூபாவில் உள்ள பராகோவா நகருக்கு அருகே வெப்பமண்டலப் புயலாகக் கரையைக் கடந்தது.

- ஒடிசா மற்றும் மேற்கு வங்காளத்தில் மிகக் கனமழையை ஏற்படுத்திய டாணா புயல் ஆனது சமீபத்தில் ஒடிசா கடற்கரையில் கரையைக் கடந்தது.
  - இதற்கு கத்தார் நாட்டால் பெயரானது முன்மொழியப் பட்டது.
- இந்தியா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகள் ஆனது, இரு நாடுகளைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்களும் திரைப்படத் தயாரிப்பின் பல்வேறு அம்சங்களில் கூட்டுறவினை மேற்கொள்ள உதவும் வகையிலான ஒலி-ஒளி இணைத் தயாரிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்திய விமானப் படை (IAF) மற்றும் சிங்கப்பூர் விமானப் படை ஆகியவை மேற்கு வங்கத்தில் கலைக்குண்டா விமானப் படை மையத்தில் 12வது கூட்டு இராணுவப் பயிற்சியில் (JMT) பங்கேற்கின்றன.
  - இந்தியாவானது தனது இராணுவப் பயிற்சி வசதிகளை வழங்குகின்ற ஒரே நாடு சிங்கப்பூர் மட்டுமே ஆகும்.
- தமிழக அரசானது, மத்திய அரசின் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், 42 நகரங்களுக்கான நீண்டகால மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும் பணியை நான்கு ஆலோசனை வழங்கீட்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.
- வேலூர் மாவட்ட நிர்வாகமானது, அரக்கோணத்தில் உள்ள இராஜாளி எனும் இந்தியக் கடற்படை நிலையத்திலிருந்து (INS) பறவைகள் தாக்கப்படுவதைத் தடுப்பதற்காக என்று அதனைச் சுற்றி குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆறு கிராமப் பஞ்சாயத்துகளில் இருந்து உருவாகும் கழிவுகளை கையாளுவதற்காக வேண்டி, நவீன உரக்கூடம் அமைக்க உள்ளது.
- ஒப்பந்த ஊழியர்களும் மகப்பேறு கால சலுகைகளைப் பெறுவதற்கு என்று உரிமை உடையவர்கள் என்றும், இந்த சலுகைகள் எதுவும் மறுக்கப்பட்டால் அல்லது குறைந்த அளவில் சாதகமானப் பலன்கள் வழங்கப் பட்டால், ஒப்பந்த விதிகளுக்கு எதிராக 1961 ஆம் ஆண்டின் மகப்பேறுச் சட்டத்தின் விதிகள் பொருந்தும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மத்திய நிலக்கரி அமைச்சகம் நடத்திய மதிப்பாய்வில் 2022-23 ஆம் ஆண்டிற்கான நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனத்தின் லிக்னைட் மற்றும் நிலக்கரிச் சுரங்க நிறுவனம் அதிக மதிப்பெண்கள் மற்றும் ஐந்து நட்சத்திர மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன.
- மகாராஷ்டிர மாநில மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் விஜய ரஹத்கர் தேசிய மகளிர் ஆணையத்தின் (NCW) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாகிஸ்தானில் உள்ள சிறப்பு நாடாளுமன்றக் குழுவானது, வழக்கமான பதவி நிலைக் கொள்கையைத் தவிர்த்து, அதன் அடுத்தத் தலைமை நீதிபதியாக நீதிபதி யாஹ்யா அப்ரிடியை நியமித்துள்ளது.
- கால்பந்து வீராங்கனையான மணிப்பூரின் பாலா தேவி, சர்வதேசப் போட்டிகளில் 50 கோல்களை அடித்த முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- காமராஜர் துறைமுகம் இந்தியாவின் 12வது முக்கியத் துறைமுகமாக அறிவிக்கப்பட்ட 25 ஆண்டுகளுக்குப் பிறகு, கிரேட் நிக்கோபார் தீவின் கலாத்தியா விரிகுடாவில் உள்ள மாபெரும் சர்வதேசக் கொள்கலன் கப்பல் போக்குவரத்துத் துறைமுகம் (ICTP) ஆனது 13வது முக்கியத் துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- S4* என குறிப்பிடப்படுகின்ற, அணுசக்தியால் இயங்கும் இந்தியாவின் நான்காவது உந்து விசை எறிகணை கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் ஆனது விசாகப் பட்டினத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சத்தீஸ்கரின் சர்குஜா, மத்தியப் பிரதேசத்தின் ரேவா மற்றும் உத்தரப் பிரதேசத்தின் சஹாரன்பூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய விமான நிலையங்கள் திறக்கப் பட்டு உள்ளன.
- இந்திய அரசாங்கம் ஆனது, சர்தார் படேல் அவர்களின் 150வது பிறந்தநாளை 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான இரண்டு ஆண்டு கால நாடு தழுவிய அளவில் கொண்டாட உள்ளது.
- போபால் நகருக்கு அருகில் உள்ள மத்தியப் பிரதேசத்தின் இரத்தபானி வனவிலங்கு சரணாலயம் ஆனது மாநிலத்தின் எட்டாவது புலிகள் வளங்காப்பகமாக அறிவிக்கப் பட உள்ளது.
- மெக்சிகோவின் ட்லாக்ஸ்காலா என்னுமிடத்தில் நடத்தப் பட்ட 2024 ஆம் ஆண்டு வில் வித்தை உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், மகளிருக்கான ரீகர்வ் (பின்னோக்கி வளைந்த வில்) போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி வெள்ளிப் பதக்கம் வென்று உள்ளார்.
- நேபாளத்தைச் சேர்ந்த ஊர்மிளா சௌத்ரி 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய இன வெறி எதிர்ப்பு சாம்பியன்ஷிப் விருதை வென்றுள்ளார்.
- இஸ்ரேல் நாடானது ஆசிய மேம்பாட்டு வங்கியில் (ADB) அதன் 69வது உறுப்பினராகவும் 20வது பிராந்தியம் சாராத உறுப்பினராகவும் அதிகாரப்பூர்வமாக இணைந்தது.
- கூகுள் நிறுவனமானது, தனது மூத்த துணைத் தலைவரும் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் முன்னாள் மாணவருமான பிரபாகர் ராகவனை தனது புதியத் தலைமை தொழில்நுட்ப வல்லுநராக நியமித்துள்ளது.
- பிரவாசி பரிஷை எனப்படும் 2024 ஆம் ஆண்டு தூதரகத்தின் முதன்மையான புலம் பெயர் மக்களின் ஈடுபாட்டு நிகழ்வானது, ரியாத் நகரில் உள்ள தூதரக அரங்கத்தில் தொடங்கப்பட்டது.
  - "இந்தியாவின் செம்மொழிகள்" என்ற தலைப்பிலான இந்த ஒரு வார காலத்தியக் கலாச்சாரக் கொண்டாட்டம் ஆனது நாட்டின் மிக வளமான மொழியியல் பன்முகத் தன்மையை வெளிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசு நடத்திய 2024 ஆம் ஆண்டு அமராவதி ஆளில்லா விமானங்கள் உச்சி மாநாடு ஆனது, 11,000 பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அமைந்தது.
- இந்திய இராணுவத்தின் முதன்மையான சர்வதேச கருத்தரங்கான இரண்டாவது சாணக்கியா பாதுகாப்புப் பேச்சுவார்த்தையானது புது டெல்லியில் நடைபெற்றது.
- 14வது அகில இந்தியக் குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படையினர் மாநாடு ஆனது குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெற்றது.
- மத்திய அரசானது, கால்நடை எண்ணிக்கை குறித்த பல்வேறு தரவுகளை மேம்படுத்தச் செய்வதற்கான 21வது கால்நடை கணக்கெடுப்பினைத் தொடங்கியது.
- ஐரோப்பிய ஒன்றியம் சாகரோவ் பரிசு எனப்படும் அதன் மனித உரிமைகளுக்கான உயர்மட்டப் பரிசினை, வெனிசுலா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்களான மரியா கொரினா மச்சாடோ மற்றும் எட்மண்டோ கோன்சலஸ் உருட்டியா ஆகியோருக்கு வழங்கியுள்ளது.

- உலகளாவியத் தொழில் துறை அமைப்பான சர்வதேச தாமிர சங்கம் (ICA) ஆனது, ஆதித்யா பிர்லா குழும நிறுவனமான ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தினை அதன் புதிய உறுப்பினராக தேர்ந்தெடுத்துள்ளது.
- சிங்கப்பூர்-இந்தியா இடையிலான 31வது கடல்சார் இருதரப்பு பயிற்சியானது (SIMBEX) விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.
- கோவாவில் உள்ள மர்மகோவா துறைமுக ஆணையம் ஆனது, அதன் ஹரித் ஷ்ரே திட்டத்திற்காக சுற்றுச்சூழல் கப்பல் குறியீட்டு (ESI) தளத்தில் பட்டியலிடப்பட்ட முதல் இந்தியத் துறைமுகம் ஆனது.
- இந்தியாவின் தலைசிறந்த மகளிர் மல்யுத்த வீராங்கனையான சாக்சி மாலிக் 'Witness' என்ற தலைப்பில் தனது நினைவுக் குறிப்பை எழுதியுள்ளார்.
- மகாராஷ்டிரா மாநில அரசானது, உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்துடன் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த மாநில அளவிலான இணையவெளிக் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை தொடங்கியுள்ளது.
- எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளைப் பெருமளவு உருவாக்கத் தேவையான அமைதியான மற்றும் மிக ஆக்கப் பூர்வமான சூழலைக் கொண்டுள்ளதால், டேஹ்ராடூனுக்கு அருகிலுள்ள தானோ கிராமம் ஆனது, 'எழுத்தாளர்களின் கிராமம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாAI மற்றும் மெட்டா ஆகியவை ராஜஸ்தானின் ஜோத்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் ஸ்ரீஜன் எனப்படுகின்ற ஆக்கப் பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு மையத்தினை நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளன.
- புது டெல்லியில் உள்ள தேசிய அறிவியல் மையத்தில் இந்தியாவின் முதல் நிலக்கரிக் கலைக் கூடம் திறக்கப்பட்டுள்ளது.
- பணியில் இருக்கும் போது உயிரிழந்த இராணுவ உளவுத்துறை வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் புனேவில் சதார்க் பூங்கா என்ற ஒரு புதிய நினைவகம் திறக்கப்பட்டுள்ளது.
- கூகுள் நிறுவனமானது அதன் செயற்கை நுண்ணறிவுத் தரவு மையங்களுக்கு ஆற்றலை வழங்குவதற்குத் தேவையான மிக அதிக அளவிலான ஆற்றலை உருவாக்குவதற்காக சிறிய அணு உலைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ராட்க்ளிஃப்-ஆன்-சோர் எனுமிடத்தில் உள்ள 1967 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த ராட்கிளிஃப்-ஆன்-சோர் எனப்படுகின்ற ஐக்கியப் பேரரசின் கடைசி நிலக்கரி மின் நிலையமானது சமீபத்தில் தனது செயல்பாடுகளை நிறைவு செய்துள்ளது.
- சுமார் 3.53 டிரில்லியன் டாலர் மதிப்புடன் ஆப்பிள் நிறுவனத்தினை முந்தி என்விடியா நிறுவனம் ஆனது உலகின் மிக மதிப்புமிக்க நிறுவனமாக மாறி உள்ளது.
- டாடா எஃகு நிறுவனத்தின் தலைமை இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான T.V. நரேந்திரன் உலக எஃகுச் சங்கத்தின் (வேர்ல்ட் ஸ்டீல்) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்திய எஃகு ஆணைய லிமிடெட் (SAIL) நிறுவனம் ஆனது 'உள்ளடக்கம், சமபங்கு & பன்முகத் தன்மை' பிரிவிலும், 'நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் வளங்களை மேலாண்மை செய்வதில் சிறந்து விளங்குதல்' ஆகிய பிரிவிலும் SHRM – மனித வள மேம்பாட்டுத் துறையின் (HR) சிறப்பு விருதுகளைப் பெற்று உள்ளது.

- நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல் மாதம் – செப்டம்பர் மாதம்) இந்தியாவின் கற்கரி இறக்குமதியானது, 6 ஆண்டுகளில் இல்லாத ஒரு அளவிற்கு 29.6 மில்லியன் டன்களாக (மெட்ரிக் டன்) பதிவாகியது.
  - ரஷ்யாவிலிருந்து வரும் இறக்குமதிகள் ஆனது இந்த காலக்கட்டத்தில் 200 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சகமானது 55வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கான (IFFI) "கவன ஈர்ப்பு நாடாக" ஆஸ்திரேலியாவை அறிவித்துள்ளது.
- மேகாலயாவின் தலைநகரான ஷில்லாங் ஆனது, 2025 ஆம் ஆண்டில் இந்தியர்களால் பயணம் மேற்கொள்ள அதிகம் விரும்பப்படும் இடமாக மாறியுள்ளது.
- நடிகர் தாராசிங் குரானா, மனநலப் பிரச்சனைகள் குறித்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக 'Commonwealth Year of Youth Champion' என்னும் மகாத்மா காந்தி தலைமைத்துவ விருதைப் பெற்றுள்ளார்.
- 11வது ஆசிய தூய்மை ஆற்றல் உச்சி மாநாடு (ACES) ஆனது சமீபத்தில் சிங்கப்பூரில் நடைபெற்றது.
- இந்திய இராணுவத் தளவாட ஏற்றுமதிக்கான முதல் மூன்று வாடிக்கையாளர்களாக அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகள் உருவெடுத்துள்ளன.
- உலகளாவியச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் வரைபடம் எனப்படுகின்ற ஒரு புதிய வளங்காப்பு முன்னெடுப்பானது, பல உலகளாவியச் சுற்றுச்சூழல் அமைப்புகளை வரைபடமாக்குவதற்கும் அவற்றைக் கண்காணிப்பதற்குமான ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த வளத்தை வழங்குவதற்கான முன்னெடுப்பாகத் தொடங்கப் பட்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் பரஸ்பர நிதியின் மொத்த முதலீட்டாளர் எண்ணிக்கையானது 50.1 மில்லியனாக உயர்ந்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி

- சென்னை உயர்நீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதியாகப் பதவியேற்ற நீதிபதி ஸ்ரீராமுக்கு தமிழக ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- சென்னை உயர் நீதிமன்றத்தில் 43 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு தமிழ் மொழி பேசும் தலைமை நீதிபதி பதவியேற்றுள்ளார்.
- இதற்கு முன்னதாக இப்பதவி வகித்த தமிழ் பேசும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி M.M. இஸ்மாயில் 1981 ஆம் ஆண்டு ஜூலை 09 ஆம் தேதியன்று இராஜினாமா செய்தார்.

## தமிழ்நாடு மாநில நாய் வளர்ப்பு கொள்கை, 2024

- தமிழ்நாடு மாநில நாய் வளர்ப்புக் கொள்கை, 2024 ஆனது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்தியத் தட்பவெப்ப நிலையைத் தாங்க முடியாத நாய் இனங்களை வளர்ப்பதை இந்தக் கொள்கை தடை செய்கிறது.
- இது ஆரோக்கியம் மற்றும் நலன் கருதி இனப்பெருக்கம் தடை செய்யப்பட வேண்டிய குளிர் பருவநிலையில் வளரும் நாய்களின் பட்டியலில் பக் மற்றும் சோவ் சோவ் ஆகிய இனங்களையும் சேர்த்துள்ளது.
- இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட வரைவுக் கொள்கையானது, இந்த ஒன்பது நாய் இனங்களை மட்டுமே பட்டியலிட்டிருந்தாலும், இறுதி வரைவில் மேலும் இரண்டு இனங்கள் (பக் மற்றும் சோவ் சோவ்) சேர்க்கப்பட்டுள்ளன.
- இறுதிக் கொள்கையில் இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை, கன்னி ஆகியவை தமிழ்நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இனங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- கட்டை, இராமநாதபுரம் மண்டை, மலைப்பட்டி, செங்கோட்டை ஆகிய நாட்டு நாய்கள் அழிந்து விடாமல் தடுப்பதற்காக, அவை தரப்படுத்தப்பட்டு, அங்கீகாரம் பெற்று, பதிவு செய்யப்பட வேண்டும்.
- இந்த மையங்களில் நாட்டு இனங்களின் இனப்பெருக்கத்தை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று இந்த கொள்கை கூறுகிறது.
- குறைந்த அளவே இடனம் உள்ள வீட்டில் நாட்டு நாய்களை வளர்க்க பரிந்துரைக்கப் பட மாட்டாது.




## இரண்டு பறவைகள் சரணாலயங்களுக்கு ராம்சர் குறியீடு

- இராமநாதபுரத்தில் மேலும் இரண்டு பறவைகள் சரணாலயங்களுக்கு ராம்சர் அந்தஸ்து பெற தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்க அமைப்பு முயன்று வருகிறது.
- இராமநாதபுரத்தில் தேர்த்தங்கல், சக்கரக்கோட்டை, மேலசெல்வனூர்-கீழசெல்வனூர், கஞ்சிரங்குளம், சித்திரங்குடி ஆகிய ஐந்து பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.
- அவற்றில், சித்திரங்குடி மற்றும் கஞ்சிரங்குளம் சரணாலயங்கள் ஆகியவை முறையே 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ராம்சர் அந்தஸ்தைப் பெற்றன.
- தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது 18 ராம்சர் தளங்கள் உள்ளது என்ற நிலையில் இது இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையாகும்.

- தமிழகத்தில் உள்ள ஈரநிலங்கள் அதன் மொத்த புவியியல் பரப்பில் 6.92% ஆகும் என்ற நிலையில் இது 4.86% என்ற தேசிய சராசரியினை விட அதிகமாகும்.
- கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் ஆனது, 2002 ஆம் ஆண்டில் ராம்சார் குறியீட்டினைப் பெற்ற முதல் இடமாகும்.

**GREEN AND GOOD**


**List of 13 wetlands identified as potential wetlands of international significance and proposed to be designated as Ramsar sites**

| WETLAND | DISTRICT |
|---|---|
| Koonthakulam bird sanctuary | Tirunelveli |
| Chitrangudi bird sanctuary | Ramanathapuram |
| Vembanur | Kanyakumari |
| Suchuindrram-Theroor wetland complex | Kanyakumari |
| Vaduvur bird sanctuary | Tiruvarur |
| Udayamarthandapuram bird sanctuary | Tiruvarur |
| Vellode bird sanctuary | Erode |
| Pallikaranai marsh | Chennai |
| Gulf of Mannar Marine Biosphere reserve | Ramanathapuram |
| Kanjirankulam bird sanctuary | Ramanathapuram |
| Pichavaram mangrove | Cuddalore |
| Vedanthangal bird sanctuary | Chengalpattu |
| Karikili bird sanctuary | Chengalpattu |

## மாநிலத்தில் தொழிற்சாலை வேலைவாய்ப்பு

- 2022-23 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரத் தொழில்துறைக் கணக்கெடுப்பு (ASI) ஆனது, மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- உற்பத்தித் துறையில் அதிக நபர்களை வேலைக்கு அமர்த்தும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- இந்தியா முழுவதும் 1,84,94,962 நபர்கள் தொழிற்சாலைகளில் வேலையில் ஈடுபட்டு உள்ளனர் என்ற நிலையில் இதில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கு 15% ஆக உள்ளது.
- மொத்தமுள்ள 2,53,334 தொழிற்சாலைகளில் 15.66% தொழிற்சாலைகளைக் கொண்டு தமிழ்நாடு மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத், உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியன உற்பத்தித் துறையில் அதிக எண்ணிக்கையிலான நபர்களை வேலைக்கு அமர்த்தும் முதல் ஐந்து மாநிலங்கள் ஆகும்.

- இந்த 5 மாநிலங்கள் ஆனது மொத்த உற்பத்தி சார்ந்த வேலைவாய்ப்பில் சுமார் 55% பங்கினைக் கொண்டுள்ளன.
- பெரிய மாநிலங்களில், மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) அடிப்படையில், 2022-23 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.




## அமைச்சர்களின் பதவி நிலை

- தமிழக அரசின் அமைச்சர்களின் பதவி நிலையில் தமிழக மாநிலத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மூன்றாவது இடத்தில் உள்ளார்.
- அவர் விளையாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக, பதவி நிலையில் 10வது இடத்தில் இருந்தார்.
- இவரது பதவி நிலையானது முதல்வர், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோருக்கு அடுத்த நிலையில் உள்ளது.
- செப்டம்பர் 28 ஆம் தேதியன்று, ஆளுநர் அவர்கள் அரசியலமைப்பின் 164 வது சரத்தின் கீழ் அமைச்சர் உதயநிதியை துணை முதல்வராக நியமித்தார்.
- அவர் தமிழக அரசின் வரலாற்றில் மூன்றாவதாக துணை முதல்வர் பதவியைப் பெற்று உள்ளார்.
- 2009 ஆம் ஆண்டு முதல், தமிழகத்தில் 2 துணை முதல்வர்கள் இருந்தனர், எனினும் அவர்களில் எவரும் தனது முழு பதவிக் காலத்தினை நிறைவு செய்யவில்லை.
- முதலாவது துணை முதல்வரானவர் தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் மூன்றாவது மகன் மு.க.ஸ்டாலின் (2009-2011) ஆவார்.
- 2017-2021 ஆம் ஆண்டு எடப்பாடி K.பழனிசாமியின் ஆட்சியில் ஓ.பன்னீர்செல்வம் இரண்டாவது துணை முதல்வராகப் பதவியேற்றார்.
- துணைப் பிரதமர் அல்லது துணை முதல்வர் பதவிக்கு என இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த விதிகளும் இல்லை.




## வெப்ப அலைத் தாக்கத்தின் தணிப்பு நடவடிக்கைகளுக்கான செயல் திட்டம்

- வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக, இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% வரை இழக்க நேரிடும் என்று உலகளாவிய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.
- மிகவும் வெப்பமான வெப்பமண்டல வானிலையுடன் கூடிய தமிழ்நாடு, வெப்பத்தால் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத் திட்ட ஆணையமானது, 'வெப்பத்தின் தாக்கத்தினைத் தணித்தல் - தமிழ்நாடு வெப்பத் தணிப்பு உத்தி' என்ற அறிக்கையை வெளியிட்டது.
- மனிதர்கள் வாழக்கூடிய வெப்பநிலை வரம்பு ஆனது 60% ஈரப்பதத்துடன் கூடிய 25 டிகிரி செல்சியஸ் முதல் 30 டிகிரி செல்சியஸ் வரையாகும்.
- இருப்பினும், தமிழகத்தின் பல பகுதிகளில் இந்த வரம்பு தொடர்ந்து விஞ்சப்படுகிறது.
- தற்போது, மாநிலத்தின் மக்கள்தொகையில் சுமார் 74% பேர் 35 டிகிரி செல்சியசுக்கும் அதிகமான வெப்பநிலை உள்ள காற்று சூழலில் உள்ளனர்.
- தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆனது 2019 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் வெப்ப அலை தாக்கத் தணிப்பு செயல் திட்டத்தைத் தயார் செய்தது.

**WHAT MAKES FOR A HEATWAVE?**

| Places with normal maximum temperature | Heatwave if temperature higher by | Severe heatwave if temperature higher by |
|---|---|---|
| 40 degree Celsius or less | 5-6 degree Celsius | 7 degree Celsius |
| More than 40 degree Celsius | 3-4 degree Celsius | More than 5 degree Celsius |
| For any place | Maximum temperature remains above 45 degree Celsius for two consecutive days | |

*These criteria have to be met in at least two stations of a meteorological sub-division for at least two consecutive days. Source: Parliament question and IMD*

## கலைச்செம்மல் விருதுகள் 2024




- பாரம்பரிய மற்றும் சமகால ஓவியம் மற்றும் சிற்பக்கலைக்குப் பங்காற்றிய மூன்று ஓவியர்கள் மற்றும் மூன்று சிற்பிகளுக்கு தமிழக அரசு கலைச்செம்மல் விருதுகளை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த விருதுகள் ஆனது கலை மற்றும் சிற்பத் துறையினால் வழங்கப்படுகின்றன.
- பாரம்பரிய கலைப் பிரிவில் விருது வழங்கப்படுவதற்காக மணிவேலு தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- பாரம்பரிய சிற்பப் பிரிவில் விருது வழங்கப்படுவதற்காக L. பாலச்சந்திரன் மற்றும் K. கன்னியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- நவீன கலைப் பிரிவில் விருது வழங்கப் படுவதற்காக K. முரளிதரன் மற்றும் A. செல்வ ராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் R. ராகவன் நவீனச் சிற்பங்கள் பிரிவில் விருது பெற உள்ளார்.

## 2024 ஆம் ஆண்டில் வண்ணத்துப் பூச்சிகளின் இடம் பெயர்வு

- தமிழ்நாடு மாநிலத்தில், செப்டம்பர் மாதத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் சமவெளிகளில் இருந்து மேற்குத் தொடர்ச்சி மலையை நோக்கி டானைனே துணைக் குடும்பத்தைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகள் பெரிய அளவில் இடம் பெயர்ந்துள்ளன.
- வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன், கிழக்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் சமவெளிகளில் இருந்து மேற்கு தொடர்ச்சி மலையின் அருகில் உள்ள பல்வேறு மலைத் தொடர்களை நோக்கி அவை இடம் பெயர்கின்றன.
- ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், பொதுவாக ‘வரியன் மற்றும் கருப்பன்' என்று அழைக்கப் படும் இந்த வண்ணத்துப்பூச்சிகள் மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர்களில் இருந்து கிழக்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் தமிழகத்தின் சமவெளிகளை நோக்கி இடம் பெயர்கின்றன.
- இந்த இடம் பெயர்வு ஆனது தென்மேற்குப் பருவமழை தொடங்கும் முன் நிகழும்.



## 'குறவன்' என்ற சொல் குறித்த பரிந்துரை

- கலாச்சார விழாக்களில் 'குறவன்/குறத்தி ஆட்டம்' என்ற சொல்லைப் பயன்படுத்தச் செய்வதற்கு எதிராக தமிழ்நாடு மாநிலத்தின் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் (SC & ST) ஆணையம் ஓர் பரிந்துரை அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 'குற' என்பதை முன்னொட்டு அல்லது பின்னொட்டாகப் பயன்படுத்துவதையும், 'குறவன்/குறத்தி ஆட்டம்', என்ற சொல் பழங்குடியினர் சமூகங்களை அவமரியாதை செய்யப் பயன்படுத்தப்படுவதையும் எதிர்க்கும் விதமாக ஆணையம் பரிந்துரைத்து உள்ளது.
- 'குறவன்' என்ற பிரிவு தமிழ்நாட்டில் உள்ள பட்டியலிடப்பட்ட சாதியினரின் ஒரு பகுதியினர் ஆவர் என்பதோடு மேலும் 'குறவர்' மற்றும் 'மலைக்குறவர்' என்ற பிரிவு பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் ஆவர்.
- 'குறவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் பாடல்களையும் தடை செய்ய தமிழக அரசுக்கு ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.


## ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு – MTR

- முதுமலை புலிகள் காப்பகத்தின் (MTR) தாங்கல் பகுதி காடுகளில் சமீபத்தில் மேற் கொள்ளப் பட்ட ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பில் புதிய இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- 33 ஊர்வன இனங்கள் மற்றும் 36 நீர்நில வாழ் இனங்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளன.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது நான்கு சாத்தியமான புதிய இனங்களை வெளிப்படுத்தி உள்ளது:
  - இரண்டு மரப் பல்லிகள் (ஒன்று சினிமாஸ்பிஸ் இனத்தைச் சேர்ந்தது, மற்றும் மற்றொன்று ஹெமிடாக்டைலஸ் இனத்தைச் சேர்ந்தது)
  - ஓர் அரணை மற்றும்
  - ஸ்பாரியோதேகா இனத்தைச் சேர்ந்த ஒரு தவளை.
- அடையாளம் காணப்பட்ட இனங்களின் மொத்த எண்ணிக்கை தற்போது 55 ஊர்வன இனங்கள் மற்றும் 39 நீர் நில வாழ் இனங்கள் ஆக உள்ளன என்ற நிலையில் இதில் தோராயமாக 40% இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளைச் சேர்ந்தவை.
- IUCN அமைப்பின் படி, இவற்றில் சுமார் 16 இனங்கள் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள

இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு இதில் மேலும் மூன்று இனங்கள் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாகக் கருதப் படுகிறது.




## பேறுகால தாய்மார்கள் இறப்பு வீதத்தினைக் குறைக்க புதிய செயற்குழு




- தமிழ்நாடு அரசானது, பேறுகால தாய்மார்கள் இறப்புகளைக் குறைப்பதற்காக மாநில அளவிலான செயற்குழுவை அமைத்துள்ளது.
- மேலும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தை (MMR) ஒரு லட்சத்துக்கு 10க்கும் குறைவாகக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- தற்போது MMR ஆனது ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 45.5 ஆக உள்ளது.
- இந்த செயற்குழுவானது நிபுணர்கள் மற்றும் இந்திய மருத்துவ சங்கம், உலக சுகாதார அமைப்பு மற்றும் UNICEF ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கும்.

## பன்றி வளர்ப்புக் கொள்கை 2024

- ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இம்மாநிலத்தில் பன்றி வளர்ப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'பன்றி வளர்ப்பு கொள்கை'யை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- இந்தக் கொள்கையில் பின்வரும் உள்கட்டமைப்பு மேம்பாடுகள் அடங்கும்:

- பன்றி இறைச்சி பதனிடல் தொழிற்சாலையை நிறுவுதல்,
- வளர்ப்பாளர்களின் அதிக இலாபத்திற்காக பன்றி இறைச்சி பொருட்களின் மதிப்பு கூட்டலை ஊக்குவித்தல்,
- கூட்டுறவு சார்ந்த சந்தைச் சங்கிலியின் உருவாக்கம், மற்றும்
- இறக்குமதி செய்யப்பட்ட விலங்குகளுக்கு தனிமைப்படுத்தல் வசதிகளை மிக நன்கு நடைமுறைப் படுத்துதல்.

❖ பன்றி வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்காக வேண்டி அரசு மானியங்கள், வரி குறைப்புகள் மற்றும் நிதி உதவிகளை வழங்கும்.

❖ 'விலங்கு உற்பத்தி மற்றும் ஆரோக்கியத்திற்கான தகவல் வலையமைப்பில் (INAPH)' பதிவு செய்து, மத்திய அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட 12 இலக்க UID கொண்ட காதில் பொருத்தப்படும் குறியீடுகளைப் பயன்படுத்தி விலங்குகளை அடையாளம் காணும் முறையான ஒரு செயல்முறையை மிக நன்கு பின்பற்றவும் இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது.




## CyStar முன்னெடுப்பு




❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, இந்தியாவின் இணைய வெளிப் பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக இணையவெளிப் பாதுகாப்பு, நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்கான மையத்தினை (CyStar) நிறுவி உள்ளது.

- இது நிதி, சுகாதாரம், வாகனம் மற்றும் மின்னணுவியல் போன்ற முக்கியத் துறைகளில் அதிகரித்து வரும் இணைய வெளிப் பாதுகாப்புத் தேவைகளை நிவர்த்தி செய்யும் அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தும்.
- செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் கணினி உருவாக்கத்திற்கு முந்தையச் சகாப்தத்தால் ஏற்பட்ட அதிகரித்து வரும் இணைய வெளிப் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்ள ஒரு விரிவான, பன்முக உத்தியை CyStar உருவாக்கும்.

## சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகள்



- தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சிலையைக் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- தென்காசி மாவட்டத்தில் வெண்ணி காலடி சிலை திறக்கப்பட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டத்தில் மற்றொரு தியாகி குயிலியின் சிலை திறக்கப்பட்டுள்ளது.
- திருப்பூர் மாவட்டத்தில் தளி பாளையகர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் சிலையும், நினைவு மண்டபமும் திறக்கப் பட்டுள்ளது.

## தமிழகத்தில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நிலை - 2024





- தமிழகத்தில் எச்ஜவி/எய்ட்ஸ் பாதிப்பு 0.16% ஆக உள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 16,80,083 பேர் எச்ஜவி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

- தமிழ்நாட்டில் மொத்தம் 1,32,383 பேர் எச்ஐவி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- 2010 ஆம் ஆண்டில் கர்ப்பிணிப் பெண்களிடையே 0.38% ஆக இருந்த எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்பு ஆனது, பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் ஆதரவின் காரணமாக 0.16% ஆகக் குறைந்துள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் 15 முதல் 49 வயதிற்குட்பட்டவர்களுக்கிடையே 0.35% ஆக இருந்த எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்பு ஆனது 2023 ஆம் ஆண்டில் 0.20% ஆகக் குறைந்துள்ளது.

## புதிய புவிசார் குறியீடுகளுக்கான விண்ணப்பங்கள் - 2024

- தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) ஆனது பின்வரும் மூன்று உணவுப் பொருட்களுக்கு புவி சார் குறியீட்டினைப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளது.
  - இராமநாதபுரம் பனங்கற்கண்டு,
  - கோவில்பட்டி சீவல், மற்றும்
  - இராமநாதபுரம் பட்டறை கருவாடு.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (நபார்டு) மதுரை வேளாண் காப்பு மன்றம் (MABIF) ஆனது இதற்கு ஆதரவு தெரிவித்தது.
- இராமநாதபுரம் பனங்கற்கண்டு (படிக வடிவ பனை சர்க்கரை) ஆனது இப்பகுதியில் 300 ஆண்டுகளுக்கும் மேலாக உற்பத்தி செய்யப்படுகிறது.
- பட்டறை கருவாடு (உலர்ந்த மீன்) என்பது ஒரு பாரம்பரிய உலர் மீன் தயாரிப்பு முறையாகும் என்பதோடு இது மீன்களில் மஞ்சள் தூள் தடவி சேற்றில் புதைத்து உலர வைக்கும் செயல்முறையினை உள்ளடக்கியது.
- கோவில்பட்டி சீவல் ஆனது அதன் மிருதுவான அமைப்பு மற்றும் மிகத் தனித்துவமான சுவைக்காக நன்கு அறியப்பட்ட ஒரு பாரம்பரிய நன்கு வறுத்த சிற்றுண்டியாகும்.

## 2024-25 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவான மின் தேவை




- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் தமிழ்நாட்டின் மின் தேவையானது 6.2% அதிகரித்து 68,967 மில்லியன் அலகுகளாக (MU) உள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலத்தில் இந்த மின் தேவையானது 64,958 MU ஆக இருந்தது.


- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-செப்டம்பர் மாத காலத்தில், மாநிலத்தின் உச்சபட்ச மின் தேவையானது 20,784 மெகாவாட்டாக இருந்தது என்ற நிலையில் இது கடந்த ஆண்டில் இதன் ஒப்பிடக் கூடிய காலகட்டத்தில் 19,045 மெகாவாட்டாக இருந்தது.
- இந்தியாவில் உள்ள மொத்தத் தொழிற்சாலைகளில், 15.66 சதவீதப் பங்குடன் (2,53,334) தமிழகம் அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டின் கோடைப் பருவத்தில், மே 02 ஆம் தேதியன்று 20,830 மெகாவாட் என்ற எப்போதும் இல்லாத அளவினை எட்டிய மாநிலத்தின் மின் தேவையானது ஒரு புதிய சாதனை அளவினை எட்டியது.
- ஏப்ரல் 30 ஆம் தேதியன்று தினசரி நுகர்வு அளவானது 454.32 MU என்ற புதிய உச்சத்தை எட்டியது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டின் மொத்த நிறுவப் பட்ட மின் உற்பத்தி திறன் 41,126.68 மெகாவாட் ஆகும்.

## வனவிலங்கு தடயவியல் நிபுணத்துவ அமைப்பு




- வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு வளங்காப்பு நிறுவனம் (AIWC) ஆனது தென் இந்தியாவில் இருந்து அதிகாரப்பூர்வமாக அரசு அறிவியல் நிபுணராக அங்கீகரிக்கப் பட்ட முதல் நிறுவனமாக மாறியுள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது தமிழ்நாடு வனத்துறையால் 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த அங்கீகாரத்தின் மூலம், இந்த நிறுவனம் ஆனது தமிழ்நாடு வனத் துறைக்கு தடயவியல் சார்ந்த சேவைகளுக்கு ஆதரவளித்து, அண்டை மாநிலங்களின் வனம் மற்றும் வனவிலங்குத் துறைகளுக்கு தடயவியல் பகுப்பாய்வு சார்ந்த உதவிகளை வழங்கி, இப்பிராந்தியத்தில் வனவிலங்கு சட்ட அமலாக்கத்தை மேம்படுத்துகிறது.
- இதுவரையில், இந்தியாவில் நான்கு நிறுவனங்கள் மட்டுமே உயிரியல் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளன:
    - இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII),
    - இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பு,
    - இந்திய தாவரவியல் ஆய்வு அமைப்பு மற்றும்
    - இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி சபை.

## நீண்ட அலகு கொண்ட கழுகுகளின் கூடுகள் 2024





- 2015 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மிக அருகிய நிலையில் உள்ள நீண்ட அலகு கொண்ட கழுகுகளின் (ஜிப்ஸ் இண்டிகஸ்) எண்ணிக்கையில் நிலையான அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் (MTR) இந்த இனங்களின் 74% இனப்பெருக்க வெற்றி விகிதம் பதிவாகியுள்ளது.
- அதே காலக் கட்டத்திற்கு இடையில் பதிவு செய்யப்பட்ட 31 இணை கழுகுகளில், 23 வெற்றிகரமாக குஞ்சு பொரிக்கப்பட்டுள்ளன.
- நீண்ட அலகு கொண்ட கழுகு ஆனது இந்தியக் கழுகு என்றும் அழைக்கப்படுகிறது.
- இது 2016 ஆம் ஆண்டில் 13 கழுகுகள் பதிவு செய்யப்பட்டது என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் சுமார் 28 ஆக அதிகரித்துள்ளது.
- இது ஐந்தாண்டுகளில் சுமார் 115% அதிகரிப்பினைக் குறிக்கிறது.

## அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள இனங்களின் வளம் 2024

- 'மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள விலங்கினங்களின் கிராம அளவிலான பரவல் வரைபடம்' என்ற ஆய்விற்காக சுமார் 512 வகையான விலங்கினங்களின் புவியிடத் தகவல் முறைமை அடிப்படையிலான தரவுத்தளத்தினை உயிரியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- சுமார் 98 இனங்களுடன், தமிழ்நாட்டின் வால்பாறை பகுதியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் செழுமையின் அடிப்படையில் தரநிலைப் படுத்தப்பட்டுள்ள 7,630 கிராமங்களின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.


- இந்தப் பட்டியலில் 133 வகையான மீன்கள், 81 வகையான பறவைகள், 91 வகையான ஊர்வன, 79 வகையான நீர் நில வாழ்விகள், 47 வகையான பூச்சிகள், 37 வகையான பாலூட்டிகள் மற்றும் பல இடம் பெற்றுள்ளன.
- 512 இனங்களில், 27 இனங்கள் மிக அருகி வரும் நிலையில் உள்ளன, 131 அருகி வரும் நிலையில் உள்ளன என்பதோடு 117 எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலும், மற்றும் 88 அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாகவும், மற்றும் மீதமுள்ள இனங்கள் தீ வாய்ப்புக் கவலை குறைந்த இனமாகவும், தரவுக் குறைபாடு கொண்ட இனமாகவும் அல்லது மதிப்பீடு செய்யப்படாத இனமாகவும் உள்ளன.
- கோவை மாவட்டத்தில் உள்ள மலை வாழிடமான வால்பாறை 98 இனங்களுடன் முதல் இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து கேரளாவில் உள்ள கண்ணன் தேவன் மலைகள் (83), மும்பை (69), குட்டம்புழா (64), பரியாரம் (61), மற்றும் கேரளாவில் உள்ள குமிளி (57) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- மாநில வாரியாக, சுமார் 354 வகையான அருகி வரும் விலங்கினங்களுடன் கேரளா முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு (274), கர்நாடகா (237), மகாராஷ்டிரா (171), கோவா (104), மற்றும் குஜராத் (37) ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.




## தமிழக அரசின் எண்ணெய் கசிவு எதிர் நடவடிக்கைத் திட்டம் 2024

- தமிழக அரசானது, இத்தகைய பேரிடர்களைத் தணிப்பதற்காக வேண்டி ஓர் எதிர் நடவடிக்கைத் திட்டத்தினை இறுதி செய்துள்ளது.
- நான்கு கடலோர மாவட்டங்கள் ஆனது எண்ணெய் கசிவு நிகழ்வினால் 'மிக அதிக அளவில்' பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மீதான எந்தவிதமான பெரும் பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்தாமல், எண்ணெய்க் கசிவினால் மாசுபட்ட வாழ்விடத்தை அல்லது கரையோரப் பகுதிகளை அதன் முந்தைய நிலைக்கு என்று மீட்டு கொண்டு வருவதற்குத் தேவையானப் படிநிலைகள் மற்றும் நடைமுறைகளை இந்தத் திட்டம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

- இது மாநிலத்தின் கடற்கரையிலிருந்து 12 கடல் மைல்கள் (24 கிலோ மீட்டர்) தொலைவு வரையிலான கடல் பரப்பில் ஏற்படும் எந்த வகையான கடல் எண்ணெய்ப் பெரும் கசிவுகளுக்குமான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- இது 40 கிலோ மீட்டர் நிலப்பரப்பு அல்லது அலை ஓதத்தின் தாக்கங்கள் காணப்படக் கூடிய இடம், இவற்றுள் எது அதிகமான தூரமோ அது வரை நீண்டு அமைந்திருக்கும் நதி நீர் அமைப்புகளையும் உள்ளடக்கியது.
- இதன்படியாக, மன்னார் வளைகுடா, எண்ணூர் மற்றும் பிச்சாவரம் சதுப்புநிலங்கள் உள்ளிட்ட கடலோரச் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.




## விஜயநகரப் பேரரசு கால செப்புத் தகடுகள்

- திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு கிராமத்தில் உள்ள ஸ்ரீ சிங்கீஸ்வரர் கோயிலில் இரண்டு பிரசுரங்கள் கொண்ட செப்புத் தகடு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.
- இது கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.




- இந்தக் கல்வெட்டு ஆனது சமஸ்கிருதம் மற்றும் நந்திநாகரி எழுத்து வடிவில் எழுதப் பட்டதாகும்.
- இது 1513 ஆம் ஆண்டில் மன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் பொறிக்கப்பட்டது.

- ❖ பல பிராமணர்களுக்கு அரசரால் கிருஷ்ணராயபுரா என மறுபெயரிடப்பட்ட வாசலப் பட்டகா கிராமம் பரிசாக வழங்கப்பட்டுள்ள ஒரு தகவலானது இந்தத் தகடுகளில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

## மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 2023-24

- ❖ தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஆனது, நிலையான (அடிப்படை ஆண்டின் விலையில்) விலையில் 2022-23 ஆம் ஆண்டில் 8.13% ஆகவும் மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் 8.23% ஆகவும் வளர்ச்சியடைந்தது.
- ❖ நடப்பாண்டு விலையிலான வளர்ச்சி விகிதங்கள் ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 15.48% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 13.71% ஆகவும் இருந்தது.
- ❖ அகில இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் நிலையான விலையில் 6.99% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 8.15% ஆகவும் இருந்தது.
- ❖ நடப்பாண்டு விலையில், இந்த விகிதம் 2022-23 ஆம் ஆண்டில் 14.21% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 9.60% ஆகவும் இருந்தது.
- ❖ மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் நடப்பாண்டு விலையில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ 2022-23 ஆம் ஆண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் நிலையான விலையில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தை விஞ்சி, தமிழ்நாடு மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ❖ தமிழ்நாட்டின் பணவீக்க வீதமானது 2022-23 ஆம் ஆண்டில் 5.97% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 5.37% ஆகவும் இருந்தது.
- ❖ அகில இந்தியப் பணவீக்க விகிதம் ஆனது இந்த காலக் கட்டங்களில் முறையே 6.65% மற்றும் 5.38% ஆக இருந்தது.
- ❖ தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 1,66,590 ரூபாயாகவும், 2023-24 ஆம் ஆண்டில் 1,79,732 ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் தனிநபர் வருமானம் ஆனது நிலையான விலையில் 2022-23 ஆம் ஆண்டில் 99,404 ரூபாயாகவும் மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் 1,06,744 ரூபாயாகவும் இருந்தது.
- ❖ தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ஆனது இரண்டு ஆண்டுகளிலும் தேசிய தனிநபர் வருமானத்தை விட 1.68 மடங்கு அதிகமாக இருந்தது.



## 'அமுதம் பிளஸ்' மளிகைப் பொருட்கள் தொகுப்பு




- தமிழக அரசானது, 'அமுதம் பிளஸ்' பல சரக்குத் தொகுதி அங்காடியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 15 பொருட்கள் அடங்கிய தொகுதியானது ஓர் அலகிற்கு 499 ரூபாய் விலையில் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்கப்படும்.
- தமிழ்நாடு பொது விநியோக கழகத்தின் தொகுப்பானது ஒரு குடும்பத்தின் ஒரு மாதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'அமுதம் பிளஸ்' தொகுப்பானது குடிமக்களுக்கு, குறிப்பாகத் தீபாவளி பண்டிகைக் காலத்தில் நன்மை பயக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னையில் உயிரொளிர்வு அலைகள்

- சென்னையின் கிழக்குக் கடற்கரைச் சாலை கடற்கரையானது சமீபத்தில் ஒரு அரிய உயிரொளிர்வு அலைகளால் மின்னியது.
- உயிரொளிர்வு என்பது சில கடல் உயிரினங்களால், முதன்மையாக டைனோ ஃப்ளா ஜெல்லட்டுகள் எனப்படுகின்ற ஒரு நுண்ணிய பிளாங்க்டன் போன்றவற்றால் உற்பத்தி செய்யப் படும் இயற்கையான ஒளிர்வு நிகழ்வு ஆகும்.
- இந்தச் சிறிய உயிரினங்கள் ஆனவை அலை இயக்கம் அல்லது தண்ணீரில் உள்ள மற்ற இடையூறுகள் மூலம் தூண்டுவிக்கப் படும் போது தங்கள் உடலில் ஓர் இரசாயன எதிர் வினை மூலம் ஒளியை உமிழ்கின்றன.
- இதன் விளைவாக அலைகள் நீல-பச்சை நிறங்களில் ஒளிர்கின்றன.
- கடல்வாழ் உயிரினங்கள் என்பவை வேட்டையாடும் உயர் உயிரினங்களுக்கு எதிரான பாதுகாப்பு, இரையை ஈர்ப்பது மற்றும் தகவல் தொடர்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக உயிரொளிர்வு நிகழ்வினைப் பயன்படுத்துகின்றன.

## வடக்குப்பட்டு அகழாய்வு குறித்த அறிக்கை




- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வடக்குப்பட்டு என்ற கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கட்ட அகழ்வாராய்ச்சிகள் பற்றிய 700 பக்க விரிவான இறுதி அறிக்கையானது இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) தலைமை இயக்குனரிடம் சமர்ப்பிக்கப் பட்டு உள்ளது.
- கீழை பாலாற்றின் பள்ளத்தாக்கு என்ற ஒரு பழங்கற்காலப் பகுதியின் முழுமையான வரலாறு மற்றும் தகவல்களை அறிவதே இதன் நோக்கமாக இருந்தது.
- முதல் கட்ட அகழாய்வு ஆனது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கியது என்ற நிலையில் அதில் ஒன்பது அகழிகள் தோண்டப் பட்டன.
- 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில், ASI ஆனது மேலும் 12 இடங்களில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது.
- அகழ்வாராய்ச்சியில் கண்டறியப்பட்டப் பொருட்கள், இந்தத் தளம் இடைக் கற்கால யுகத்தைச் சேர்ந்தது என்றும், வரலாற்றுக்கு முந்தைய மற்றும் வரலாற்று (பல்லவர்) காலங்களில் செழித்து வளர்ந்தது என்றும் தெரிய வந்துள்ளது.
- அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க பழங்காலப் பொருட்களில் ஒன்று 'மட்டி' எனப்படுகின்ற தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் ஆகும்.

## இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்கள்



- சென்னையில் பெண்களுக்காகப் பெண்களால் இயக்கப்படும் 'பிங்க் ஆட்டோரிக்சா - இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்களை' வாங்குவதற்கு தமிழக அரசு பகுதி அளவு நிதியுதவி அளித்துள்ளது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சென்னையில் வசிக்கும் 250 பெண்களுக்கு CNG/கலப்பு வகை எரிபொருளில் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களை வாங்குவதற்கு தலா 1 லட்சம் ரூபாய் மானியமாக அரசு வழங்கும்.
- 25 முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்கள் இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்ற நிலையில் விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப் படும்.
- இதன்படி விண்ணப்பதாரர்கள் சென்னையில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும், என்பதோடு SSLC (இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ்) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

## தனியார் துறையினால் இயக்கப்படும் ரேடியோ FM ஊடகங்கள்

- தமிழ்நாட்டில் உள்ள பதினொரு நகரங்கள் தலா மூன்று தனியார் ரேடியோ FM அலை வரிசைகளை நிறுவ உள்ளன.
- இந்திய அரசு (GoI) ஆனது, இதுவரை வானொலிச் சேவை வழங்கப்படாத இடங்களுக்கு நிலையங்களை நிறுவுவதற்கான இணைய வழி ஏலத்திற்குத் தயாராகி வருகிறது.
- குன்னூர், திண்டுக்கல், காரைக்குடி, கரூர், நாகர்கோவில், நெய்வேலி, புதுக்கோட்டை, இராஜபாளையம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, வாணியம்பாடி ஆகிய 234 நகரங்கள் இந்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளன.
- மூன்றாம் கட்ட FM வானொலி நிலையங்களின் மீதான மூன்றாவது செயல்பாட்டுத் தொகுப்பின் கீழ், சேவை வழங்கப்படாத 234 இடங்களில் 730 நிலையங்களை நிறுவ 'ஏற்ற முறை இணைய வழி ஏலங்களை' நடத்த இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

## விண்டர்ஜி இந்தியா 2024

- 'விண்டர்ஜி இந்தியா 2024' மாநாடு ஆனது சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது.
- அடுத்த ஆறு ஆண்டுகளில் 30 ஜிகாவாட் (GW) அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை உற்பத்தி செய்வதற்கு மாநிலம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தமிழக மாநிலத்தின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 24 GW ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து 50% ஆற்றல் நுகர்வினைப் பெறுவதை மாநில அரசு இலக்காக நிர்ணயித்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது, சுமார் 10.5 ஜிகாவாட் அளவிலான நிறுவப்பட்ட காற்றாலை திறனைக் கொண்டு, காற்றாலை ஆற்றலில் முன்னோடியாக உள்ளது.

## 40 மலையேற்றப் பாதைகள்

- தமிழ்நாடு வனத்துறையானது 40 வழித்தடங்கள் அடங்கிய ஒரு விரிவான பட்டியலை உருவாக்கியுள்ளது.
- இது 'ட்ரெக் தமிழ்நாடு' திட்டத்தின் கீழ் 40 மலைப்பாதைகளுக்கானப் பதிவுகளைக் கொண்ட ஒரு இணைய தளத்தினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- www.trektamilnadu.com என்ற இந்த இணைய தளமானது இயங்கலை வழியிலான முன் பதிவுகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.
- 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் மலையேற்றத்திற்கு வேண்டி முன்பதிவு செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்.
- 18 வயதுக்குட்பட்ட அனைவரும் பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்புதல் கடிதத்துடன் மலையேற்றம் செய்யலாம்.
- 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு என்று மட்டும் (எளிதான மலையேற்றங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் துணை தேவை.
- நீலகிரி, கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி போன்ற பிரபலமான இடங்கள் உட்பட தமிழ்நாடு முழுவதும் 14 மாவட்டங்களில் இந்த 40 தேர்ந்தெடுக்கப்பட்டப் பாதைகள் அமைந்துள்ளன.
- மலையேற்றங்கள் ஆனது 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன மற்றும் வனவிலங்குகள் (மலையேற்றம் ஒழுங்குமுறை) விதிகளுக்கு இணங்க உள்ளன.




## முதலமைச்சர் கோப்பை போட்டிகள் 2024

- சென்னை மாவட்ட அணியானது 105 தங்கம், 80 வெள்ளி மற்றும் 69 தங்கம் வென்று முதலிடம் பெற்றது.
- 26 வெள்ளி, 36 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் 31 தங்கப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் செங்கல்பட்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

- கோவை 23 தங்கம், 40 வெள்ளி, 39 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- 2023 ஆம் ஆண்டில் 19வது இடத்திலிருந்த சேலம் ஆனது 21 தங்கம், 12 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்களை வென்று இதில் நான்காவது இடத்திற்கு முன்னேறியதால், கடந்த ஆண்டு பதக்கப் பட்டியலில் இருந்து அதிகளவு இடங்களுக்கு முன்னேறிய ஒரு மாவட்டமாக திகழ்கிறது.
- 2024 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைப் போட்டி என்பது நாட்டின் மிகப்பெரிய அடிமட்ட முன்னெடுப்புகளில் ஒன்றாகும் என்பதோடு இதில் 38 மாவட்டங்களில் இருந்து 33,000 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.
- நீலகிரி மாவட்டமானது கடைசி இடத்தைப் பிடித்ததுடன் பங்கேற்ற 38 மாவட்டங்களும் பதக்கப் பட்டியலில் இடம் பெற்றது இதுவே முதல் முறையாகும்.


தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை
மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 2024
MEDAL TALLY
AS ON : 24.10.24

| RANK | DISTRICT | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | Chennai | 105 | 80 | 69 | 254 |
| 2 | Chengalpattu | 31 | 26 | 36 | 93 |
| 3 | Coimbatore | 23 | 40 | 39 | 102 |
| 4 | Salem | 21 | 12 | 23 | 56 |
| 5 | Erode | 17 | 13 | 16 | 46 |

## விவசாயிகள் நலனுக்கான நடவடிக்கைகள் – தமிழ்நாடு

- 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட வடகிழக்குப் பருவமழை முதல் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களை எதிர்கொண்ட சுமார் 1.19 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ஒரு இழப்பீட்டுத் தொகையாக வழங்குவதற்காக மொத்தம் 91.07 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு முதல் 29.34 லட்சம் விவசாயிகளின் 5,148 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர் இழப்பீட்டிற்கான காப்பீட்டுக் கோரல்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் இலாபகரமான விலை மற்றும் சிறப்பு ஊக்கத் தொகையாக மொத்தம் 624.04 கோடி ரூபாய் மதிப்பிலான நிதியினை அரசு அறிவித்துள்ளது.
- கரும்பு சாகுபடியானது சுமார் 95,000 ஹெக்டேரில் இருந்து 1.54 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- சர்க்கரை ஆலைகளுக்கு 600 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண் பயன்பாட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு சுமார் 335 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ மொத்தம் 14 புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ 25 உழவர் சந்தைகளில் மொத்தமாக சுமார் 2.75 கோடி ரூபாய் செலவில் கழிவுகளை உரமாக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.





# தேசியச் செய்திகள்

## இந்திய வனங்களின் நிலை குறித்த அறிக்கை (ISFR)

- ❖ 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட வேண்டிய இந்திய வனங்களின் நிலை குறித்த அறிக்கை (ISFR), ஒரு வருடத்திற்கும் மேலாக தாமதமாகியும் இன்னும் வெளியிடப் பட வில்லை
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் இந்த அறிக்கையானது இந்திய வனக் கணக்கெடுப்பு (FSI) அமைப்பினால் தயாரிக்கப்படுகிறது.
- ❖ 1991 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகின்ற இந்த அறிக்கையானது இந்திய வனங்களின் நிலை பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.
- ❖ தாமதமாகியுள்ள இந்த அறிக்கையானது, அரசாங்கம் அறிக்கை வெளியிடும் காலக் கெடுவைத் தவற விட்ட இரண்டாவது சூழலைக் குறிக்கிறது என்பதோடு, கடைசியாக இதே போன்று 2007 ஆம் ஆண்டில் காலக்கெடு தவறியது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இதற்கு முந்தைய அறிக்கையில், நாட்டின் மொத்த வனங்களின் பரப்பளவு 713,789 சதுர கிலோமீட்டர் அல்லது 21.71 சதவீதமாக உள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டு ISFR அறிக்கையில் குறிப்பிடப்பட்டத் தரவினை ஒப்பிடும்போது இது 1,540 சதுர கிலோமீட்டர்கள் அதிகமாகும்.
- ❖ 2013 முதல் 2023 ஆம் ஆண்டு வரையில், 95 சதவீதக் காடழிப்பு ஆனது இயற்கையான காடுகளில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் (MoEFCC) படி, மேம்பாட்டுப் பணிகளுக்காக இந்தியா 173,396 ஹெக்டேர் (1,733 சதுர கிலோமீட்டர்) காடுகளை அழித்துள்ளது.
- 2013 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 21,761 சதுர கிலோமீட்டர் பரப்பிலான காடு இழப்பினை ஈடு செய்யும் வகையிலான காடு வளர்ப்பு முறையினை மீட்டெடுத்துள்ளதாகவும் அறிக்கை கூறியுள்ளது.
- ஒடிசாவில், 1999 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் வகைப்படுத்தப்படாத காடுகள் 17 சதுர கிலோமீட்டரிலிருந்து 16,282 சதுர கிலோமீட்டராக அதிகரித்தன.
- ஆனால் 2017 ஆம் ஆண்டு அறிக்கையில் இது 22 சதுர கிலோமீட்டராகக் குறைந்தது.





## வனவிலங்கு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் 2024

- 15வது நிதி ஆணையத்தின் சுழற்சியில் ஒட்டு மொத்தமாக 2,602.98 கோடி ரூபாய் மதிப்பிலான வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டத்தில் புலிகள் வளங்காப்பு திட்டம், யானைகள் வளங்காப்பு திட்டம் மற்றும் வனவிலங்கு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல முக்கியமான கூறுகள் இடம் பெற்றுள்ளன.
- புலிகள் மற்றும் வனவிலங்குகளைக் கொண்டுள்ள காடுகளில் நடப்பு மற்றும் அடுத்த நிதியாண்டில் வெவ்வேறு முக்கிய அம்சங்களில் தொழில்நுட்பத் திட்டங்களை அதிகரிக்க இது திட்டமிடுகிறது.

| S. No. | Name of Scheme | Central Share | State Share | Total |
|---|---|---|---|---|
| 1 | Project Tiger | 1575.00 | 955.00 | 2530.00 |
| 2 | Project Elephant | 182.58 | 54.00 | 236.58 |
| 3 | Development of Wildlife Habitat | 845.4 | 273.02 | 1118.42 |
| *All figures in Rs. Crores | Total: | 2602.98 | 1282.02 | 3885.00 |

## PARAM ருத்ரா மீத்திறன் கணினி

- தேசிய மீத்திறன் கணினி திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மூன்று PARAM ருத்ரா மீத்திறன் கணினிகள் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இதனுடன், வானிலை மற்றும் பருவநிலை ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட 850 கோடி ரூபாய் மதிப்பிலான உயர் செயல்திறன் கணினி (HPC) அமைப்பும் இந்த நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மூன்று மீத்திறன் கணினிகளும் 130 கோடி ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட்டு புனே, டெல்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் இயக்கப்பட்டுள்ளன.
- அவை வானியல், மருத்துவம் மற்றும் உயர் ஆற்றல் இயற்பியல் போன்ற துறைகளில் அறிவியல் ஆராய்ச்சிக்கு உதவும்.
- இவற்றில் மிகவும் ஆற்றல் வாய்ந்தது டெல்லியில் நிறுவப்பட்ட 3 பெட்டாஃப்ளாப் திறன் கொண்ட மீத்திறன் கணினியாகும்.
- புனேவில் ஒரு பெட்டாஃப்ளாப் மீத்திறன் கணினி நிறுவப்பட்டுள்ளது. கொல்கத்தாவில் நிறுவப்பட்டுள்ள ஒரு மீத்திறன் கணினி 838 டெர்ராஃப்ளாப்ஸ் திறன் கொண்டது.
- இந்த திறன் வரம்பில் உள்ள மற்ற மீத்திறன் கணினிகள், PARAM 8000, PARAM சித்தி AI மற்றும் PARAM Utkarsh ஆகியவையாகும்.


SUPER PERFORMER

- New supercomputer at SNBNCBS | 830 teraFLOPS
- Supercomputer at IISc, Bengaluru | 3.3 petaFLOPS
- Argonne National Laboratory, US | 585 petaFLOPS
- Oakridge National Laboratory, US | 1,194 petaFLOPS

(1 petaFLOP = 1,000 teraFLOP)

The PARAM Rudra Supercomputer

## புலம்பெயர் நபர்களின் நண்பர்களுக்கான இலவச நுழைவு இசைவுச் சீட்டு

- முதன்முறையாக, இந்தியா புலம்பெயர் நபர்களின் "நண்பர்கள்" இலவச நுழைவு இசைவுச் சீட்டினைப் பெற அனுமதிக்க உள்ளது.
- சிறப்பு இணையதளத்தில் OCI (வெளிநாடு வாழ் இந்தியர்) அட்டைதாரர்களால் பரிந்துரைக்கப் பட்ட ஐந்து வெளிநாட்டினர் இலவச நுழைவு இசைவுச் சீட்டினைப் பெற தகுதி பெறுவர்.
- இந்த முன்னெடுப்பானது, "சலோ இந்தியா" பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தொடங்கப் பட உள்ளது.
- OCI அட்டைதாரர்கள் சில வாரங்களில் செயல்பாட்டிற்கு வர உள்ள சிறப்பு இணைய தளத்தில் பதிவு செய்து, அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நண்பர்களின் விவரங்களை உள்ளிட வேண்டும்.

- அதன் சரிபார்ப்பிற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட குறியீடு ஒதுக்கப்படும்.
- இதில் பரிந்துரைக்கப்பட்ட நண்பர்கள் இலவச நுழைவு இசைவுச் சீட்டினைப் பெற இந்தச் சிறப்புக் குறியீட்டைப் பயன்படுத்தலாம்.
- அரசாங்கப் பதிவுகளின்படி, சுமார் நான்கு மில்லியன் OCI அட்டைதாரர்கள் உள்ளனர்.
- அவர்கள் முடிந்தவரை பல நண்பர்களை அழைத்துக் கொள்ளலாம் மற்றும் அவர்கள் மிகவும் வெற்றிகரமாக இந்தியாவிற்குள் வரவழைக்கும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பார்வையாளருக்கும் அதற்கேற்ற வெகுமதிப் புள்ளிகளைப் பெறுவர்.




### பர்யாதன் மித்ரா & பரியாதன் தீதி





- சுற்றுலாத் துறை அமைச்சகம் ஆனது, பரியாதன் மித்ரா மற்றும் பர்யாதன் தீதி என்ற தேசியப் பொறுப்பு மிகு சுற்றுலா முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களின் சுற்றுப்பயண இடங்களில் தூதர்களாகவும் கதை சொல்லிகளாகவும் இருக்கும் 'சுற்றுலாவிற்கு உகந்த' நபர்களைச் சந்திப்பதன் மூலம்,

சுற்றுலாப் பயணிகளின் ஒட்டு மொத்த அனுபவத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ சோதனை முறையில், சுற்றுலாப் பயணிகளுக்கு மிக நேர்மறையான அனுபவத்தை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்து 6 இடங்களில் சுமார் 3,000 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.


## ONOE நடைமுறைக்கான அரசியலமைப்பு திருத்த மசோதாக்கள்




- ❖ நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான (ஒரே நாடு ஒரே தேர்தல்) திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக என்று, அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான இரண்டு மசோதாக்கள் உட்பட மூன்று மசோதாக்களை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ முன்மொழியப்பட உள்ள இந்த மசோதாவானது, 'நியமிக்கப்பட்ட தேதி' தொடர்பான (1)வது உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் 82A என்ற சரத்தினைத் திருத்த முற்படும்.
- ❖ மக்களவை மற்றும் மாநிலச் சட்டசபைகளை ஒன்றாக நிறைவு செய்வது தொடர்பான 82Aவது சரத்தில் (2)வது உட்பிரிவினைச் சேர்க்க முயல்கிறது.
- ❖ 83(2)வது சரத்தினைத் திருத்தவும், மக்களவையின் பணிக் காலம் மற்றும் கலைப்பு தொடர்பான (3) மற்றும் (4)வது புதிய உட்பிரிவுகள் ஆகியவற்றைச் சேர்ப்பதற்கும் இந்த மசோதா முன்மொழியும்.
- ❖ சட்டப் பேரவைகளைக் கலைப்பது மற்றும் 'ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துதல்' என்ற சொல்லைச் சேர்ப்பதற்கு 327வது சரத்தினைத் திருத்துவது தொடர்பான விதிகளும் இதில் இருக்கும்.
- ❖ இரண்டாவது மசோதாவானது 324A என்ற புதிய சரத்தினைச் சேர்ப்பதன் மூலம் மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல்களுடன், நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்து அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சில விதிமுறைகளை உருவாக்கும்.
- ❖ இந்த மசோதாவுக்கு குறைந்தபட்சம் 50% மாநிலங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

- புதுச்சேரி, டெல்லி மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகிய சட்டப் பேரவைகளைக் கொண்ட ஒன்றியப் பிரதேசங்களைக் கையாளும் மூன்று சட்டங்களில் உள்ள சில விதிகளைத் திருத்துவதற்கான மூன்றாவது மசோதாவானது ஒரு சாதாரண சட்டத் திருத்த மசோதாவாக முன் வைக்கப்படும்.
- முதல் அரசியலமைப்புத் திருத்த மசோதாவில் முன்மொழியப்பட்ட படி இந்த அவைகளின் விதிமுறைகளை மற்ற சட்டமன்றங்கள் மற்றும் மக்களவையுடன் ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டிருக்கும்.
- டெல்லியின் தேசியத் தலைநகரப் பிரதேச அரசு சட்டம்-1991, ஒன்றியப் பிரதேச அரசு சட்டம்-1963 மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம்-2019 ஆகிய சட்டங்களை திருத்துவதற்கு இந்த மசோதா முன்மொழியும்.
- அரசியலமைப்பு திருத்த மசோதாக்களை நிறைவேற்ற, அவையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத சிறப்பு பெரும்பான்மை தேவைப்படும்.
- எனவே, அரசுக்கு 362 உறுப்பினர்களின் ஆதரவு தேவை, ஆனால் மக்கள் அவையில் ஆளுங்கட்சிக்கு 292 உறுப்பினர்களே உள்ளனர்.

## தகவலின் உண்மைத் தன்மை சோதனைப் பிரிவு


**FCU AN ARBITER IN ITS OWN CAUSE: JUDGE**

➤ Rules introduced by amending IT Act permits **Fact Check Unit (FCU) to flag as 'false, fake, or misleading' content on social media/online about business of govt**

➤ In this case, as **central govt itself is aggrieved by 'fake, false and misleading' news,** FCU will be an arbiter in govt's own cause, judge observes

**Timeline** Apr 10, 2023 | Standup comic Kunal Kamra files petition challenging FCU

Jan 31, 2024 | **Split verdict** by Bombay HC 2-judge bench. **Justice Gautam Patel strikes it down, Justice Neela Gokhale upholds it**

Feb | **Justice A S Chandurkar** listed as **third judge**. Declines to stay FCU rule

Mar 21 | SC stays FCU rule

Sept 20 | HC holds **FCU rule to be unconstitutional and against fundamental rights of freedom of speech, equality, and trade**

" Since the amended Rule attempts to identify 'information' (on) business of the central govt as fake or false or misleading by the FCU, it is necessary the said expressions are either defined or explained to give an idea of what could be termed to be fake or false or misleading

- மும்பை உயர்நீதிமன்றம் ஆனது திருத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிகளை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளது.
- சமூக ஊடகங்களில் பரவும் அரசாங்கம் மற்றும் அதன் ஸ்தாபனங்கள் பற்றிய போலியான, தவறான மற்றும் தேவையற்றத் தகவல்களைக் கண்டறிய, தகவல்களின் உண்மைத் தன்மையின் சரிபார்ப்புப் பிரிவை (FCU) அமைக்க இந்தத் திருத்தம் மத்திய அரசிற்கு வழி வகுத்தது.
- நீதிமன்றத்தின்படி, இந்தத் திருத்த விதிகள், 2023 ஆனது, "அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 14 (சமத்துவத்திற்கான உரிமை), 19 (பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம்) மற்றும் 19(1)(g) (சுதந்திரம் மற்றும் தொழில் உரிமை) ஆகியவற்றை மீறுவதாக உள்ளது.

## SBI ERD அறிக்கை 2024

| Age-wise Distribution | | | | |
|---|---|---|---|---|
| | 1991 | 2001 | 2011 | 2024 P |
| Population by broad age- group (in crore) | | | | |
| 18 years and above | 44.7 | 56.5 | 76.3 | 99.0 |
| 0-14 | 31.2 | 36.4 | 37.4 | 34.0 |
| 15-59 | 46.5 | 58.6 | 73.5 | 91.0 |
| 60+ | 6.1 | 7.9 | 10.2 | 15.0 |
| Share (in %) | | | | |
| 0-14 | 37.2 | 35.3 | 30.9 | 24.3 |
| 15-59 | 55.4 | 56.9 | 60.7 | 65.0 |
| 60+ | 7.3 | 7.7 | 8.4 | 10.7 |
| Median age (years) | 24.3 | 28.2 | 24.9 | 29.0 |
| Source: SBI Research,Census reports, NHP | | | | |

- பாரத் ஸ்டேட் வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் துறையானது (ERD) "2024 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கான முன்னோடி அறிக்கை: வேகமாக மாறிவரும் தேசத்தின் நுணுக்கங்கள்" என்ற ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்தியாவின் சராசரி வருடாந்திர அதிவேக வளர்ச்சியானது 1971 ஆம் ஆண்டில் இருந்த 2.20 சதவீதம் என்ற அளவிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 1 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தேசிய மக்கள்தொகையானது 2024 ஆம் ஆண்டில் 138-142 கோடி என்ற வரம்பில் இருக்கும்.
- 2021 ஆம் ஆண்டில் 24 வயதாக இருந்த இந்தியாவின் சராசரி வயது ஆனது 2023/24 ஆம் ஆண்டில் 28-29 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உழைக்கும் வயதில் இருக்கும் (தொழிலாளர் வளம்) மக்கள் தொகையானது (15-59) 2031 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 65.2 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.
- 2011-2024 ஆம் ஆண்டுகளில் 4.6 கோடி வளர்ச்சியுடன் முதியோர்களின் எண்ணிக்கை என்பது 15 கோடியைத் தாண்டும் (பெண்கள்: 7.7 கோடி; ஆண்கள்: 7.3 கோடி).
- தென் மாநிலங்கள், முக்கியமாக தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியவற்றில் அதிகரித்து வரும் மக்கள்தொகை வளர்ச்சிப் போக்கில் சரிவு ஏற்படும் (2011ஆம் ஆண்டினை விட).
- உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் முன்னணி இடம் பெற்றதுடன் வட மாநிலங்கள் (மக்கள் தொகை அதிகரிப்பு வளர்ச்சிப் போக்கில் 33 சதவீத பங்கைக் கொண்டுள்ளன) மக்கள் தொகை வளர்ச்சியை அதிகரிக்கின்றன.
- வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்கள் மொத்த மக்கள்தொகையில் 52 சதவீதப் பங்கைக் கொண்டிருக்கும் (2011 ஆம் ஆண்டில் 51 சதவீதம்).
- ஒன்றியப் பிரதேசங்களைத் தவிர, கோவா மற்றும் கேரளா ஆகியவை அதிக அளவில் நகர மயமாக்கப் பட்டுள்ளன.
- பெரிய மாநிலங்களில், 54 சதவீத மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்வதுடன் தமிழ்நாடு அதிகளவில் நகரமயமாக்கப்பட்ட ஒரு மாநிலமாகத் தொடர்கிறது, அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (48.8 சதவீதம்) உள்ளது.

- இமாச்சலப் பிரதேசம் (10.3 சதவீதம்), அதைத் தொடர்ந்து பீகார் (12.4 சதவீதம்), அஸ்ஸாம் (15.7 சதவீதம்), மற்றும் ஒரிசா (19.0%) ஆகியவை இந்தத் தரவரிசையில் கீழ் மட்டங்களில் உள்ளன.

## மனிதக் கழிவகற்றல் பணியாளர் குறித்த கணக்கெடுப்பு

- இதுவரை பதிவு செய்யப்பட்ட 38,000 மனிதக் கழிவகற்றல் பணியாளர்களில் 91.9% பேர் பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அல்லது இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC) சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.
- பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில், 68.9% பேர் SC, 14.7% பேர் OBC, 8.3% பேர் ST மற்றும் 8% பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- 2019 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், நாடு முழுவதும் குறைந்தது 377 பேர் சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளை மிகவும் அபாயகரமான முறையில் (பாதுகாப்பு அம்சங்கள் இன்றி) சுத்தம் செய்யும் பணியின் போது உயிரிழந்துள்ளனர்.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது, அதன் நமஸ்தே திட்டத்தின் ஒரு பகுதியாக சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் விவரக்குறிப்பு (SSWs) பதிவினை மேற்கொள்கிறது.
- இந்தத் திட்டமானது அனைத்து சாக்கடை சுத்திகரிப்புப் பணிகளையும் இயந்திரமயம் ஆக்குவது மற்றும் அபாயகரமான துப்புரவுப் பணிகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில், மனிதக் கழிவகற்றல் பணி செய்பவர்களின் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு (SRMS) மாற்றாக இந்தத் திட்டம் கொண்டு வரப் பட்டது.
- பன்னிரண்டு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் விவரக்குறிப்பு பதிவினை நிறைவு செய்துள்ள அதே நேரத்தில் 17 மாநிலங்களில் இந்த செயல்முறை நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு மற்றும் ஒடிசா ஆகியவை இந்த SSW பணியாளர்களுக்காக தங்கள் சொந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன என்பதோடு அவை இந்தத் திட்டத்தின் கீழ் தகவல்களை மத்திய அரசிற்கு தெரிவிக்காமல் உள்ளன.
- அடையாளம் காணப்பட்ட 43,797 மனிதக் கழிவகற்றல் பணியாளர்களில் 97.2% பேர் SC சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இதில் ST, OBC மற்றும் இதரப் பிரிவினரின் பங்கு தலா 1% ஆக உள்ளது.



## EMPS 2024

- PM E-DRIVE என்ற திட்டமானது மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை (EVs) நன்கு ஊக்குவிப்பதற்காகவும், மின்னேற்ற உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தித் திறன்களை மேம்படுத்துவதற்காகவும் தொடங்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 01 முதல் மார்ச் 31 ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் இந்தத் திட்டம் ஆனது நாட்டின் மின்சார வாகனப் போக்குவரத்தினை நோக்கிய மாற்றத்தினை துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PM E-DRIVE திட்டமானது, திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் வாகன இலக்குகளை புதிய கட்டமைப்பில் இணைத்து, நடப்பில் உள்ள 2024 ஆம் ஆண்டு மின்சார வாகனப் போக்குவரத்து ஊக்குவிப்புத் திட்டத்துடன் (EMPS) ஒருங்கிணைக்கப்பட உள்ளது.




## தர்தி ஆபா ஜன்ஜாதியா கிராம் உட்கர்ஷ் அபியான்




- மத்திய அரசானது, தர்தி ஆபா ஜன்ஜாதியா கிராம் உட்கர்ஷ் அபியான் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 30 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 549 மாவட்டங்கள் மற்றும் 2,740 தொகுதிகளில் உள்ள 5 கோடிக்கும் அதிகமான பழங்குடியின மக்கள் பயன் பெறும் வகையில், சுமார் 63,000 கிராமங்களின் சமூக-பொருளாதார கட்டமைப்பினை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 17 வெவ்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளால் செயல்படுத்தப்பட்ட சுமார் 25 திட்டங்கள் மூலம் சமூக உள்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றில் உள்ள சில முக்கியமான இடைவெளிகளை நிறைவு செய்வதில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.

## தேசிய சுகாதாரச் செலவின மதிப்பீடுகள்

| Indicator | 2021-22 | 2020-21 | 2019-20 | 2018-19 | 2017-18 |
|---|---|---|---|---|---|
| Total health expenditure (THE) as percentage of GDP | 3.8 | 3.7 | 3.3 | 3.2 | 3.3 |
| Government health expenditure as proportion of THE | 48 | 42.8 | 41.4 | 40.6 | 40.8 |
| Govt health expenditure as proportion of GDP | 1.84 | 1.6 | 1.35 | 1.28 | 1.35 |
| Out-of-pocket expenditure as proportion of THE | 39.4 | 44.4 | 47.1 | 48.2 | 48.8 |
| Out of pocket expenditure as proportion of GDP | 1.51 | 1.66 | 1.54 | 1.52 | 1.62 |
| Private health insurance expenditure as percentage of THE | 7.4 | 7.3 | 7 | 6.6 | 5.8 |


- சுகாதார துறை அமைச்சகமானது, இந்தியா 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான தேசிய சுகாதாரச் செலவின மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் 64.2% ஆக இருந்த இந்தியாவின் மொத்த சுகாதாரச் செலவினம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 39.4% ஆக குறைந்துள்ளது.
- நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் சுகாதாரச் செலவினங்களின் பங்கு 1.13 சதவீதத்தில் இருந்து (2014-15) 1.84% (2021-22) ஆக அதிகரித்துள்ளது.
- மேலும், மொத்த சுகாதாரச் செலவினத்தில் அரசாங்க செலவினத்தின் பங்கு சுமார் 29.0 சதவீதத்தில் இருந்து (2014-15) 48.0% (2021-22) ஆக அதிகரித்துள்ளது.
- மொத்த சுகாதாரச் செலவினத்தில் 2014-15 ஆம் ஆண்டில் 5.7% ஆக இருந்த சமூகப் பாதுகாப்புச் செலவினத்தின் பங்கானது 2021-22 ஆம் ஆண்டில் 8.7% ஆக அதிகரித்து உள்ளது.

## ஜல் ஹாய் AMRIT திட்டம்




- மிகத் திறம் மிக்க நீர் மேலாண்மையை மேம்படுத்துவதற்காக அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 'ஜல் ஹி AMRIT' திட்டம் தொடங்கப்படுகிறது.
- நல்ல தரமான, மறுசுழற்சி செய்யக் கூடிய சுத்திகரிக்கப்பட்ட நீரின் உற்பத்தியை உறுதி செய்யும் வகையிலான, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைத் திறம் மிக்க முறையில் மேலாண்மை செய்வதற்காக வேண்டி, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை இந்த முன்னெடுப்பு ஊக்குவிக்கிறது.
- அம்ருத் 2.0 முன்னெடுப்பு ஆனது 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்பதோடு இது அனைத்து நகரங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் செயல்பாட்டு நிலையில் உள்ள குழாய் வழி குடிநீர் வசதியை வழங்குவதற்கான பொது வழங்கீட்டு திட்டமாகும்.

## இந்தியாவில் எச்.ஐ.வி பாதிப்பு



- இந்தியாவின் வருடாந்திரப் புதிய எச்.ஐ.வி தொற்றுகள் ஆனது 2010 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 44% குறைந்துள்ளது என்ற நிலையில் இது உலக சராசரியை விட சிறப்பாக உள்ளது.
- 2010 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் எய்ட்ஸ் காரணமான வருடாந்திர உயிரிழப்புகளை சுமார் 80% குறைப்பதில் இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.
- கடந்த ஆண்டு, இந்தியாவில் 68,000 புதிய தொற்றுகள் பதிவாகின, அதாவது ஒவ்வொரு நாளும் சுமார் 185 பேர் எய்ட்ஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய செம்மொழிகள்



**Criteria for Classical Language Status**

- The language must have texts or recorded history over 1500-2000 years.
- It should have ancient literature valued across generations.
- The literary tradition must be original.
- The classical form should be distinct from modern variants.

**Benefits**

- National awards, University Chairs, and Promotion Centers for Classical Languages.
- Employment in academics, research, archiving, and digitization of ancient texts.
- Opportunities in translation, publishing, and digital media for preserving classical heritage.


- மராட்டியம், வங்காளம், பாலி, பிராகிருதம் மற்றும் அசாமியம் ஆகிய புதிய ஐந்து மொழிகளுக்கும் 'செம்மொழி' அந்தஸ்து வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவையின் இந்த முடிவால், இந்த அந்தஸ்து பெற்ற மொழிகளின் எண்ணிக்கையானது ஆறில் இருந்து 11 ஆக (இரு மடங்காக) உயரும்.
- இதற்கு முன்னதாக தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய மொழிகள் இந்த அந்தஸ்தினைப் பெற்றுள்ளன.
- 2004 ஆம் ஆண்டில் தமிழுக்கு தான் முதன்முதலில் செம்மொழி அந்தஸ்து வழங்கப் பட்ட நிலையில் 2014 ஆம் ஆண்டில் ஒடியா மொழிக்குத் தான் கடைசியாக செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது.
- புதியதாக செம்மொழி அந்தஸ்து பெறும் இந்த மொழிகளுக்கென தேசிய விருதுகள், பல்கலைக் கழகங்களில் சிறப்புப் பிரிவுகள் (இருக்கைகள்) மற்றும் மேம்பாட்டு மையங்கள் ஆகியவை உரிய காலத்தில் அமைக்கப்படும்.

## இந்தியாவில் சமய சுதந்திரம்

- சர்வதேசச் சமய சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் (USCIRF) ஆனது சமீபத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- USCIRF ஆனது, முறைசார், நடப்பில் உள்ள மற்றும் தீவிரமான சமய சுதந்திர மீறல்களில் ஈடுபடுவதற்காக இந்தியாவை "குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள்" என்று நியமிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை பரிந்துரைத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு முழுவதும், தனி நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர், தாக்கப் பட்டு உள்ளனர் மற்றும் கண்காணிப்புக் குழுக்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதோடு சமயத் தலைவர்கள் கொடுங்கோன்மையான முறையில் கைது செய்யப் பட்டுள்ளனர் என்ற நிலையில் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டு உள்ளன.

## பிரதான் மந்திரி உள்ளிருப்புப் பயிற்சி திட்டம்




- பிரதான் மந்திரி உள்ளிருப்புப் பயிற்சி திட்டம் ஆனது, அக்டோபர் 03 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டம் ஆனது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 500 முன்னணி நிறுவனங்களில் ஒரு கோடி இளையோர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு ள்ளது.
- இது நடப்புலக வணிகச் சூழல் குறித்த புரிதலை வழங்குவதன் மூலம் இந்தியாவில் இளையோர்களுக்கு வேலைவாய்ப்பை மேம்படுத்தும்.
- இத்திட்டம் ஆனது இந்தியாவில் திறன் இடைவெளியைக் குறைப்பதற்கும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குமான ஒரு மாறுதல் மிக்க வாய்ப்பை பிரதிபலிக்கிறது.
- இது இளையோர்களுக்கு வேலையில் பயிற்சி அளிப்பது மற்றும் நடப்புலக வேலைச் சூழலை வெளிப்படுத்துவதற்கான திட்டம் ஆகும்.
- DBT (நேரடிப் பயன் பரிமாற்றம்) மூலம் மத்திய அரசிடமிருந்துப் பயிற்சியாளர்களுக்கு நிறுவனத்தின் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியினால் வழங்கப்படும் கூடுதல் 500 ரூபாய் ஈட்டுத் தொகையுடன், மாதாந்திர உதவித் தொகையாக 4,500 ரூபாய் வழங்கப்படும்.
- முழுநேர வேலையில் ஈடுபடாத 21 முதல் 24 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த ஓராண்டு காலப் பயிற்சித் திட்டத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.


## ANNA DARPAN முன்னெடுப்பு




- ❖ இந்திய உணவுக் கழகம் (FCI) ஆனது எண்ணிம மாற்றத் திட்டத்துடன் கூடிய பெரிய மாற்றங்களைச் செய்து வருகிறது.
- ❖ இந்தத் திட்டம் ஆனது ANNA DARPAN (அன்ன தர்பன்) எனப்படும் புதிய அமைப்பினைக் கொண்டு விநியோகச் சங்கிலியை நிர்வகிக்கும் முறையை மேம்படுத்துவதில் FCI கவனம் செலுத்துகிறது.
- ❖ அன்ன தர்பன் என்பது FCI கழகத்தின் பழைய அமைப்பான இயங்கலை வழியிலான பண்டக சாலை அமைப்பினை மாற்றுவதற்கான புதிய எண்ணிம வழி தளமாகும்.
- ❖ உணவு விநியோகச் சங்கிலிகளை (மண்டிகள், ஆலைகள் மற்றும் கிடங்குகள் போன்ற) நிர்வகிப்பதற்காக இது மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

## பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா

- ❖ வேளாண் துறையில் உள்ள அனைத்து மத்தியத் திட்டங்களையும் பின்வரும் இரண்டு புதிய திட்டங்களாக ஒன்றிணைப்பதற்கு மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
  - ○ பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (PM-RKVY) மற்றும்
  - ○ கிருஷோன்னதி யோஜனா (KY).
- ❖ இந்தத் திட்டங்களுக்கான மத்திய அரசின் பங்கு 69,088.98 கோடி ரூபாய் ஆகும். மாநில அரசுகள் மீதமுள்ள 32,232.63 கோடி ரூபாய் பங்கினை அளிக்க வேண்டும்.
- ❖ PM-RKVY நிலையான வேளாண் முறையினை மேம்படுத்துவதை முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ KY திட்டம் ஆனது உணவுப் பாதுகாப்பு மற்றும் வேளாண் துறையில் தன்னிறைவைக் குறிக்கும்.
- ❖ இத்திட்டங்கள் ஆனது மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தப்படும்.




## தேசிய சமையல் எண்ணெய்கள் திட்டம்




- மத்திய அமைச்சரவை தேசிய சமையல் எண்ணெய் - எண்ணெய் வித்துக்கள் (NMEO-Oilseeds) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது உள்நாட்டு எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை (சுயசார்பு) அடைவதை முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் ஆனது 2024-25 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரையிலான ஏழு ஆண்டு காலப் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ளது.

- புதிதாக அங்கீகரிக்கப்பட்ட NMEO-எண்ணெய் வித்துக்கள் திட்டம் ஆனது, ராப்சீட்-கடுகு, நிலக்கடலை, சோயா அவரை, சூரியகாந்தி மற்றும் எள் போன்ற முக்கிய பிரதான எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை மேம்படுத்துவதில் பெரும் கவனம் செலுத்தும்.
- 2030-31 ஆம் ஆண்டிற்குள் பிரதான எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை சுமார் 39 மில்லியன் டன்னிலிருந்து (2022-23) சுமார் 69.7 மில்லியன் டன்னாக உயர்த்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## SARTHIE 1.0

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை மற்றும் தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) ஆனது SARTHIE 1.0 என்ற தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது சமூக நலத் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, விழிப்புணர்வில் உள்ள இடைவெளியைக் குறைத்து சட்ட உதவிகளை வழங்கும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், முதியோர்கள், திருநர்கள், குடிப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய நலிவடைந்த சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1987 ஆம் ஆண்டின் சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் NALSA உருவாக்கப் பட்டது.
- நலிவடைந்த குழுக்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்கும் சட்டம் குறித்த தகவல்களை பரப்புவதற்காகவும் இது பணிக்கப் பட்டுள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் குறியிடல் திட்டம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது சமீபத்தில் சுற்றுச்சூழல் குறியிடுதல் (சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலான தயாரிப்புகள்) விதிகளை அறிவித்துள்ளது.
- இது 1991 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் குறியிடுதல் திட்டத்தினை மாற்றுகிறது.
- இந்தத் திட்டம் ஆனது சுற்றுச்சூழலுக்கு மிக உகந்த முறையிலான பொருட்களுக்கான தேவையை ஊக்குவித்து, குறைந்த ஆற்றல் நுகர்வு, வளங்களின் செயல்திறன் மற்றும் சுழற்சி முறை பொருளாதாரத்தினை ஊக்குவிக்கும்.

## தேசிய வேளாண் விதிகள்



- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) தேசிய வேளாண் விதிகளை (NAC) உருவாக்கும் செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- இது ஏற்கனவே நடைமுறையில் உள்ள தேசியக் கட்டிட விதிகள் மற்றும் தேசிய மின் விதிகள் ஆகியவற்றினைப் போன்றது.
- வேளாண்மையில், இயந்திரங்கள் (இழுவை இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள்) மற்றும் பல்வேறு உள்ளீடுகள் (உரங்கள், பூச்சிக்கொல்லிகள்) ஆகியவற்றிற்கான தர நிலைகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- ஆனால் வயல்களைப் பயிரிடத் தயார் செய்தல், சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் நீர்ப் பயன்பாடு போன்ற வேளாண் நடைமுறைகளுக்கு எந்த தர நிலைகளும் இல்லை.
- சாகுபடிக்கான பயிர்களை தேர்வு செய்தல், நிலத்தினை தயார் செய்தல், விதைத்தல் / நாற்று நடுதல், நீர்ப்பாசனம்/வடிகால், மண் வள மேலாண்மை, தாவரங்களின் ஆரோக்கியத்தினைப் பேணுதல், அறுவடை/கதிரடித்தல், முதல்நிலை பதப்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய நடைமுறைகள், நிலைத்தன்மை மற்றும் பதிவுகளைக் கையாளுதல் போன்ற அனைத்து வேளாண் செயல்முறைகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகளுக்கான விதிகளை இந்தப் புதிய NAC கொண்டிருக்கும்.
- இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாடு போன்ற உள்ளீடு மேலாண்மைக்கான தரநிலைகளும், பயிர்களின் சேமிப்பு மற்றும் விநியோகச் சங்கிலியின் கண்காணிப்பு அமைப்புகளுக்குமான தரநிலைகளும் இதில் அடங்கும்.

## நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து மற்றும் இந்தியா

**MOST COMMON PATHOGENS FOUND IN INDIA**

| Type of facility | Most commonly isolated pathogen | What the pathogen does | Resistance |
|---|---|---|---|
| ICU | *Acinobacter baumannii* | It can cause pneumonia, infections of the blood, urinary tract, and on wounds. It is becoming an important hospital-derived infection. | Continues to have 88% resistance to third-line, strong antibiotics like carbapenem |
| Wards & OPD | *E. coli* | May cause diarrhoea, UTI, pneumonia, and sepsis | Continues to show increased resistance to most classes of antibiotics, including carbapenem for which it went up from 18.6% in 2017 to 37.3% in 2023 |

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் (ICMR) நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு வலையமைப்பு ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான அதன் ஆண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 55% நுண்ணுயிர் எதிர்ப்பிகள் நோய்த்தொற்றுக்கான சிகிச்சைக்காக பரிந்துரைக்கப் படவில்லை, மாறாக அவற்றைத் தடுப்பதற்காகப் பரிந்துரைக்கப்படுகின்றன.

- 2019 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 1.27 மில்லியன் உலகளாவிய உயிரிழப்புகளுக்கு பாக்டீரிய AMR தான் நேரடி காரணம் என்றும் 4.95 மில்லியன் உயிரிழப்புகளுக்கு வழி வகுத்தது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- AMR திறன் கொண்ட நோய்க்கிருமிகள் 2050 ஆம் ஆண்டிற்குள் 39 மில்லியன் மக்களின் உயிரை பறிக்கக்கூடும் என்று லான்செட் அறிக்கை எச்சரிக்கிறது.

## சிறையில் நிலவும் சாதிவெறி குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பு





- சிறைகளில் நிலவும் சாதி அடிப்படையிலான தொழிலாளர் பிரிப்பு முறை என்பது "அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது" என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஒடிசா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் உள்ள சிறைக் கையேடுகளில் உள்ள சாதி ஏற்றத் தாழ்வுகளை சட்டப்பூர்வமாக்கும் விதிகள் காணப்படுவதையும் இது சுட்டிக்காட்டியது.
- இராஜஸ்தான் சிறைச்சாலை விதிகள் 1951 ஆனது, பட்டியலினச் சமூகமான "மேத்தர்" சாதியினருக்கு கழிப்பறை சார்ந்த பணிகளையும் மற்றும் பிராமணர்கள் அல்லது "உயர் சாதி சார்ந்த" இந்து கைதிகளுக்கு சமையலறை பணிகளையும் ஒதுக்கியுள்ளது.
- சாதியின் அடிப்படையில் கைதிகளைப் பிரிப்பது சாதி வேறுபாடுகள் அல்லது சாதி குரோதத்தை வலுப்படுத்தும் என்பதால் அது முதலில் தடுக்கப்பட வேண்டும் என கூறி உள்ளது.
- "பழக்கம்," "வழக்கம்," "உயர்ந்த வாழ்க்கை முறை" மற்றும் "சிறையில் இருந்து தப்பிக்கும் இயற்கையான மனப் போக்கு" ஆகியவற்றின் அடிப்படையில் கைதிகளை வேறுபடுத்துவது, சமத்துவத்தின் கொள்கைகளை சிதைக்கிறது.
- அனைத்து மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் இத்தகையப் பாகுபாடு மிக்க நடைமுறைகளை ஒழிப்பதற்காக மூன்று மாதங்களுக்குள் சிறை கையேடுகள் மற்றும் விதிகளை திருத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- சிறைகளில் வைக்கப் பட்டிருக்கும் விசாரணைக் கைதிகள் மற்றும் குற்றவாளிகளின் பதிவேட்டில் உள்ள "சாதி குறித்த பத்தி" மற்றும் சாதி பற்றிய எந்த குறிப்புகளையும் நீக்க என்று நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டு கையேடு மற்றும் 2023 ஆம் ஆண்டு சட்டம் ஆகிய இரண்டிலும் தேவையான சீர்திருத்தங்களை மூன்று மாதங்களுக்குள் செயல்படுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## காசநோயாளிகளுக்கான நி-க்சய் போஷன் யோஜனா

- மத்திய அரசானது, காசநோயாளிகளுக்கான நி-க்சய் போஷன் யோஜனா (NPY) என்ற திட்டத்தின் கீழ், சிகிச்சை பெறும் காசநோயாளிகளுக்கான மாதாந்திர ஊட்டச்சத்து உதவியை 500 ரூபாயில் இருந்து 1,000 ரூபாய் ஆக இரட்டிப்பாக்கியுள்ளது.
- மேலும், காசநோயாளிகளின் அனைத்து தேவைகளும் பிரதான் மந்திரி காசநோய் முக்த் பாரத் அபியான் (PMTBMBA) திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.
- அனைத்து காசநோயாளிகளும் NPY திட்டத்தின் கீழ் 3,000 முதல் 6,000 ரூபாய் மதிப்பு வரையிலான ஊட்டச்சத்து ஆதரவைப் பெறுவார்கள்.
- காசநோய் ஒழிப்பு என்பது 2030 ஆம் ஆண்டில் உலக நாடுகளால் எட்டப்பட வேண்டிய நிலையான மேம்பாடு இலக்குகளில் ஒன்றாகும் என்ற நிலையில் இந்தியா 2025 ஆம் ஆண்டினை இதற்கான இலக்காக நிர்ணயித்துள்ளது.




## தேசிய அனுபவ் விருதுகள் திட்டம் - 2025




- தனது அனுபவங்களை எழுத்துப் படைப்பாகச் சமர்ப்பிப்பதை தூண்டுவதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் என்று 2015 ஆம் ஆண்டில் ஒரு வருடாந்திர விருதுகள் திட்டம் உருவாக்கப் பட்டது.

- இன்று வரையில், 10,886 பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இதில் 78 சிறந்த பதிவுகளுக்கு 59 அனுபவ் விருதுகள் மற்றும் 19 தேர்வாளர் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.
- முதன்முறையாக, இதில் மத்திய அரசு ஊழியர்களைத் தவிர, மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்களும் 2025 ஆம் ஆண்டிற்கான எழுத்துப் பதிவுகளைச் சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## கருவிழித் தொற்றுப் பாதிப்பு இல்லாத இந்தியா

- இந்தியாவானது கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒரு பொது சுகாதாரப் பிரச்சனை என்பதில்லிருந்து நீக்கியதன் மூலம், தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் இந்த மைல்கல்லை எட்டிய மூன்றாவது நாடாக மாறியுள்ளது.
- கருவிழித் தொற்றுப் பாதிப்பு (ட்ரக்கோமா) என்பது க்ளமிடியா ட்ரக்கோமாடிஸ் என்ற பாக்டீரியாவினால் ஏற்படும் அதிகத் தொற்றுத்திறன் மிக்க பாக்டீரியக் கண் தொற்று ஆகும்.
- இது ஒரு காலத்தில் இந்தியாவில், குறிப்பாக மோசமான சுற்றுச்சூழல் நிலைமைகளில் வாழும் பின்தங்கியச் சமூகங்களில் ஏற்பட்ட பார்வை இழப்பிற்கு ஒரு மிக முக்கியக் காரணமாக இருந்தது.
- ட்ரக்கோமாவினை ஒழிப்பதற்கான இந்தியாவின் பணிகள் ஆனது 1963 ஆம் ஆண்டில் தேசியக் கருவிழித் தொற்றுப் பாதிப்பு கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தொடக்கத்துடன் தொடங்கியது.
- 1971 ஆம் ஆண்டில், கருவிழித் தொற்றுப் பாதிப்பினால் ஏற்பட்ட பார்வை இழப்பு 5% ஆக இருந்தது, ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை 1 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, உலகளவில் சுமார் 150 மில்லியன் மக்கள் கருவிழித் தொற்றுப் பாதிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தேசியக் கடல்சார் பாரம்பரியங்களுக்கான வளாக மேம்பாடு

- குஜராத்தில் உள்ள லோத்தல் நகரில் தேசியக் கடல்சார் பாரம்பரியங்கள் வளாகத்தினை (NMHC) உருவாக்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்தத் திட்டத்தின் 1B மற்றும் 2 ஆம் கட்டங்களுக்கு அமைச்சரவை கொள்கை சார் ஒப்புதலையும் வழங்கியுள்ளது.
- NMHC அருங்காட்சியகத்தின் 1A கட்டமானது ஆறு காட்சியகங்களைக் கொண்டு இருக்கும் என்பதோடு இதில் இந்தியாவின் மிகப்பெரியதாக அமைய உள்ள இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையின் காட்சியகமும் இடம் பெற்றிருக்கும்.
- NMHC அருங்காட்சியகத்தின் 1B கட்டம் ஆனது மேலும் எட்டு காட்சியகங்களையும் உலகின் மிகவும் உயரமானதாக அமையக் கூடிய வகையிலான கலங்கரை விளக்க அருங்காட்சியகத்தினையும் கொண்டிருக்கும்.

## ஹம்சஃபர் கொள்கை





- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஹம்சஃபர் கொள்கையை வெளியிட்டார்.
- இது இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளில் காணப்படும் ஒட்டு மொத்த உள் கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய முன்னெடுப்பு ஆகும்.
- இந்தக் கொள்கையானது, பல்வேறு அத்தியாவசிய வசதிகளை வழங்கச் செய்வதிலும், பயணிகளுக்கான பயண அனுபவத்தை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது.
- நெடுஞ்சாலைகள் பயனர்களுக்கு ஏற்றதாகவும், அனைவரும் அணுகக் கூடியதாகவும் இருப்பதையும் இது உறுதி செய்கிறது.
- ஹம்சஃபர் கொள்கையின் கீழ், தேசிய நெடுஞ்சாலைகளில் அத்தியாவசிய வசதிகள் அறிமுகப்படுத்தப்படும் அல்லது மேம்படுத்தப்படும்.

## செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத் திட்டத்தின் நீட்டிப்பு

- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை செறிவூட்டப்பட்ட அரிசியினை இலவசமாக வழங்கும் திட்டத்தினை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் நோக்கம் "இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வது" ஆகும்.
- செறிவூட்டல் என்பது "உணவின் மீதான ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்துவதற்கும், ஆரோக்கியத்திற்கு ஏற்படும் ஆபத்தைக் குறைப்பதுடன் கூடிய பொது சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் ஒரு உணவில் உள்ள அத்தியாவசிய நுண்ணூட்டச் சத்துக்களின் உள்ளடக்கத்தை வேண்டுமென்றே அதிகரிப்பது" என வரையறுக்கப் படுகிறது.

- ஒரு கிலோகிராம் செறிவூட்டப்பட்ட அரிசியில் இரும்புச்சத்து (28 மைக்ரோகிராம்-42.5 மைக்ரோ கிராம்), ஃபோலிக் அமிலம் (75-125 மைக்ரோகிராம்) மற்றும் வைட்டமின் B-12 (0.75-1.25 மைக்ரோகிராம்) இருக்கும்.




## இந்தியாவில் வாய் புற்றுநோய்ப் பாதிப்பு

**INDIA HAS THE HIGHEST NUMBER OF ORAL CANCER CASES IN SOUTH ASIA**

**IT's DUE TO INCREASED USE OF SMOKELESS TOBACCO PRODUCTS (GUTKA, TOBACCO KHAINI, ETC)**


**INDIA REPORTED 83,400 OF THE TOTAL 1,20,200 ORAL CANCER CASES GLOBALLY IN 2022**

- தெற்காசியாவில் புகையற்ற புகையிலை (மெல்லுதல், உறிஞ்சுதல் அல்லது முகர்தல்) மற்றும் பாக்கு (வெற்றிலைப் பாக்கு என்றும் அழைக்கப்படுகிறது) ஆகியவற்றினால் ஏற்படும் வாய்வழிப் புற்றுநோய்களின் எண்ணிக்கையில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 1,20,200 பாதிப்புகளில் சுமார் 83,400 பாதிப்புகளைக் கொண்டுள்ளது.
- உலகளவில் உள்ள அனைத்து வாய் வழிப் புற்றுநோய்களில் சுமார் 30 சதவீதத்திற்கும் அதிகமான பாதிப்புகள் புகையில்லா புகையிலைகளின் காரணமாக ஏற்படுகின்றன.
- இந்தப் பாதிப்புகளில் மிக அதிகப் பங்கினை கொண்டுள்ள பகுதியான தென்-மத்திய ஆசியாவில் (மொத்தம் 105,500 பாதிப்புகள்) இந்தியாவில் 83,400 பாதிப்புகள், வங்காள தேசத்தில் 9,700 பாதிப்புகள், பாகிஸ்தானில் 8,900 பாதிப்புகள் மற்றும் இலங்கையில் 1,300 பாதிப்புகள் உள்ளன.

- அதைத் தொடர்ந்து தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மொத்தம் 3,900 பாதிப்புகளில், மியான்மரில் 1,600 பாதிப்புகள், இந்தோனேசியாவில் சுமார் 990 பாதிப்புகள் மற்றும் தாய்லாந்தில் 785 பாதிப்புகள் உள்ளன.
- கிழக்கு ஆசியாவில் உள்ள மொத்தம் 3,300 பாதிப்புகளில் சீனாவில் மட்டும் சுமார் 3,200 பாதிப்புகள் உள்ளன.

## இந்தியாவின் தடுப்பூசி ஒழுங்குமுறை அமைப்பு

- இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பான மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) மற்றும் இந்தியத் தேசிய ஒழுங்குமுறை ஆணையம் ஆகியவை செயல்பாட்டுத் தடுப்பூசி ஒழுங்குமுறை அமைப்பிற்காக உலக சுகாதார அமைப்பினால் அமைக்கப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்துள்ளன.
- பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் தரம் ஆகியவை தடுப்பூசிகளின் மதிப்பீட்டிற்கான மூன்று அடிப்படை அளவுருக்களாகும்.
- உலக சுகாதார தர நிர்ணய முறைமையின் VIவது பதிப்பின் அனைத்து முக்கிய ஒழுங்குமுறை செயல்பாடுகளுக்கும் இணங்கும் வகையில் உள்ளதாக இந்தியாவின் 'செயல்பாட்டு நிலை' அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு ஆனது தடுப்பூசியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான உலகளாவிய தரநிலைகள் மற்றும் வரையறைகளை நிறுவியுள்ளது.
    - முறைமைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் உருவாக்கம்,
    - தேசிய ஒழுங்குமுறை ஆணையங்களின் (NRA) தரவரிசை மற்றும்
    - தடுப்பூசிகளுக்கு முன் தகுதி பெறலுக்கான திட்டம்




## இந்திய-ASEAN இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான 10 அம்ச திட்டம்

- 21வது ASEAN-இந்தியா உச்சி மாநாடு ஆனது லாவோஸ் நாட்டின் வியன்டியானே என்ற நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, 'இணைப்பு மற்றும் நெகிழ் திறனை மேம்படுத்துதல் - Enhancing Connectivity and Resilience' என்பதாகும்.

- ❖ இந்த நிகழ்வின் போது இந்தியாவின் கிழக்கு நாடுகளுடனான உறவு மேம்பாடு சார்ந்த கொள்கையின் பத்தாண்டுகள் கால நிறைவினைக் குறிக்கும் வகையில் ஒரு 10 அம்சத் திட்டத்தை இந்தியா அறிவித்துள்ளது.




## e-Migrate இணைய தளம் v2.0

- ❖ இந்தியாவானது புதுப்பிக்கப்பட்ட e-Migrate இணைய தளம் மற்றும் கைபேசிச் செயலி v2.0 ஆகியவற்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது வெளிநாடு செல்லும் இந்தியத் தொழிலாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பான, மிக வெளிப்படையான மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய வகையிலான தொழிலாளர் இடம் பெயர்வினை நோக்கிய ஒரு படிநிலையைக் குறிக்கிறது.
- ❖ இது ஒழுங்குப்படுத்தப்பட்ட மற்றும் பொறுப்பான இடம்பெயர்வுகளைப் பெருமளவில் ஊக்குவிக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் 10வது நிலையான மேம்பாட்டு இலக்கு உடன் ஒருங்கிணைகிறது.

## 500 GW உற்பத்தி இலக்கினை அடைவதற்கான தேசிய மின்சாரத் திட்டம்

- ❖ இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனையும், 2032 ஆம் ஆண்டிற்குள் 600 ஜிகாவாட்டிற்கும் மேலான உற்பத்தியினையும் அடையும் நோக்கத்துடன் தனது தேசிய மின்சாரத் திட்டத்தினை (மின் பகிர்மானம்) வெளியிட்டு உள்ளது.
- ❖ தேசிய மின்சாரத் திட்டம் ஆனது, 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் நிகரச் சுழிய அளவிலான உமிழ்வு என்ற ஒரு இலக்கை ஆதரிக்க முயல்கிறது.
- ❖ இது அடுத்த பத்தாண்டுகளில் 1,91,000 மின் சுற்று கிலோமீட்டர்கள் (ckm) மின் பகிர்மான கம்பி வடங்கள் மற்றும் 1,270 GVA மின்சாரத்தைப் பரிமாற்றும் திறனை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் ஒழுங்கற்றத் தன்மையை மேலாண்மை செய்வதற்கு மிக அவசியமான 47 ஜிகாவாட் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் மற்றும் 31 ஜிகாவாட் நீரேற்றுப் புனல் மின்னாற்றல் சேமிப்பு ஆலைகளை ஒருங்கிணைப்பதற்கானப் பல ஏற்பாடுகளும் இதில் அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தைய நிலவரப்படி, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார்ந்த மின்சார உற்பத்தி திறன் 201.45 ஜிகாவாட்டாக உள்ளது.
- இது நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறனில் 46.3 சதவீதம் ஆகும்.




## ShakthiSAT திட்டம் 2024

- விண்வெளி சார் புத்தொழில் நிறுவனமான ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா "ShakthiSAT" என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 108 நாடுகளில் சுமார் 12,000 சிறுமிகளுக்கு விண்வெளித் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளிப்பதற்கான உலகளாவியத் திட்டமாகும்.
- இது இஸ்ரோவின் சந்திரயான்-4 என்ற திட்டத்தின் கீழ் செயற்கைக்கோள் ஏவுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு (14 முதல் 18 வயது வரை) 120 மணி நேர இயங்கலை வழி பயிற்சி வழங்குவதை உள்ளடக்கியுள்ளது.
- இது விண்வெளித் தொழில்நுட்பம், விண்கல கருவிப் பொருட்கள் உருவாக்கம் மற்றும் விண்கல அமைப்புகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கும்.

## பசுமை கண்துடைப்பு வழிகாட்டுதல்கள்

- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமானது (CCPA), பசுமை கண்துடைப்பு அல்லது தவறான சுற்றுச்சூழல் காப்பு கோரல்களைத் தடுப்பதற்கும் அவற்றை ஒழுங்குமுறைப் படுத்துவதற்குமான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- அதன் வழிகாட்டுதல்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கான விளம்பரங்களில் பசுமை கண்துடைப்பு செய்யப்பட்டுவதைத் தடுக்கும்.

- 2022 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட, பல்வேறு தவறான தகவல்களை அளிக்கும் விளம்பரங்களைத் தடுப்பதற்கும், தவறான விளம்பரங்களுக்கு ஒப்புதல் அளிப்பதைத் தடுப்பதற்காகவும் தற்போதுள்ள வழிகாட்டுதல்களை இந்தப் புதிய விதிமுறைகள் நன்கு பூர்த்தி செய்யும்.
- பசுமை கண்துடைப்பு என்பது நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது நாடுகள் தனது செயல்பாடுகள், தயாரிப்புகள் அல்லது சேவைகள் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகவோ அல்லது பருவநிலைக்கு நன்கு ஏற்றதாகவோ இருப்பதாக நம்பமுடியாத அல்லது சரி பார்க்கப் படாத உரிமைகோரல்களை உருவாக்கும் போக்கைக் குறிக்கிறது.
- "தூய்மையானது", "பசுமை முறையில் தயாரிக்கப்பட்டது", "சுற்றுச்சூழலுக்கு உகந்தது", "புவிக்கு தீங்கற்றது", "விலங்குகள் மீது பரிசோதிக்கப்படாதது", "கார்பன் நடுநிலைத் தன்மை கொண்டது", "இயற்கையானது", "கரிமமற்றது", "சுற்றுச் சூழலுக்கு தீங்கற்றது" அல்லது இது போன்ற பொதுவான சொற்கள், அந்த நிறுவனத்தினால் அந்தக் கோரல்களை பெரும் ஆதாரத்துடன் நிரூபிக்க முடிந்தால் மட்டுமே ஒரு தயாரிப்புக்கான விளக்க விவரங்களில் பதிவிட அனுமதிக்கப்படும்.

| |
|---|
| **Clear Definitions:** This provide clear definitions of terms related to greenwashing and environmental claims, ensuring that both businesses and consumers have a common understanding. |
| **Transparency Requirements:** Manufacturers and service providers are required to substantiate their environmental claims with credible evidence. This includes providing detailed information on the methodology and data used to support such claims. |
| **Prohibition of Misleading Terms:** The use of vague or misleading terms such as "eco-friendly," "green," and "sustainable" without proper substantiation is sought to be prohibited. |
| **Third-Party Certifications:** Third-Party Certifications are also accepted in substantiation of environmental claims. |
| **Adequate Disclosures:** The companies are required to provide clear and accessible disclosures of material information. |

## குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு 2025-26

- 2025-26 ஆம் ஆண்டின் ராபி பயிர்ப்பருவத்தின் சந்தைப்படுத்தல் பருவத்தில் (RMS) ஆறு வகை ராபி பருவப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியாவில் அதிகளவில் பயிரிடப்படும் இரண்டாவது வகைப் பயிரான கோதுமைப் பயிரின் புதிய MSP ஆனது தற்போதைய MSP விலையை விட குவிண்டாலுக்கு சுமார் 150 அல்லது 6.59 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான இந்தப் புதிய MSP விலைகள் ஆனது கோதுமைப் பயிருக்கு குவிண்டால் ஒன்றுக்கு 2,425 ரூபாயாகவும், பார்லிக்கு 1,980 ரூபாயாகவும், உளுந்துக்கு 5,650 ரூபாயாகவும், பருப்பு வகைகளுக்கு 6,700 ரூபாயாகவும், காட்டுக் கடுகு (ராப்சீட்) மற்றும்

கடுகுக்கு 5,950 ரூபாயாகவும், மற்றும் குங்குமப்பூவிற்கு 5,940 ரூபாயாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

The Cabinet increased the minimum support prices for rabi crops

| Crop | MSP for rabi 2025-26* | MSP for rabi 2024-25* | Increase in MSP |
|---|---|---|---|
| Wheat | ₹2,425 | ₹2,275 | ₹150 |
| Barley | ₹1,980 | ₹1,850 | ₹130 |
| Gram | ₹5,650 | ₹5,440 | ₹210 |
| Lentil (masoor) | ₹6,700 | ₹6,425 | ₹275 |
| Rapeseed & mustard | ₹5,950 | ₹5,650 | ₹300 |
| Safflower | ₹5,940 | ₹5,800 | ₹140 |

(*per quintal)

## நிலுவையில் உள்ள வழக்குகள் கோட்பாடு - உச்ச நீதிமன்றம்

- நிலுவையில் உள்ள வழக்குகள் (லிஸ் பெண்டன்ஸ்) கோட்பாட்டிற்கு ஒரு பரிமாற்றச் செயல்முறை பாதிக்கப்படுவது உடனே கண்டறியப் பட்டவுடன் ஒரு சான்றளிக்கப் பட்ட வாங்குபவர் மற்றும் விற்பனை ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பு இல்லாமை போன்றப் பாதுகாப்பு கிடைக்கப் பெறாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ஒரு பொதுவான பேச்சு வழக்கில் லிஸ் பெண்டன்ஸ் என்றால் "நிலுவையில் உள்ள சட்ட நடவடிக்கை" என்று பொருள்படும்.
- சொத்து பரிமாற்றச் சட்டத்தின் 52வது சட்டப் பிரிவில் லிஸ் பெண்டன்ஸ் கோட்பாடு இடம் பெற்றுள்ளது.
- அசையாச் சொத்தின் பரிமாற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் நிலுவையில் இருந்தால், அது அசையாச் சொத்து தொடர்பான பங்குதாரர்களின் உரிமைகளைப் பாதிக்காது என்று குறிப்பிடுகிறது.
- ஆனால், வழக்கு நிலுவையில் உள்ள போது சொத்தை வாங்கிய நபர், அந்த வழக்கில் வழங்கப் படும் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்.

**DOCTRINE OF LIS PENDENS**

'Lis' means action or Litigation (suit) and 'Pendens' means pending. Lis Pendens means 'pending litigation' or 'during the pendency of a suit'.

Section 52 of Transfer of Property Act, 1882 is based on the doctrine of Lis Pendens

This doctrine is based upon the maxim "ut lite pendente nihil innovator", means during the "pendency of litigation, nothing new should be introduced"

## 2045 ஆம் ஆண்டில் புற்றுநோய்ப் பாதிப்புகள்

| | Rank | Cancer site | No of deaths | % |
|---|---|---|---|---|
| Brazil | 1 | Lung | 38,292 | 12.5 |
| | 2 | Colorectum | 28,884 | 9.2 |
| | 3 | Breast | 22,189 | 13.9 |
| | 4 | Prostate | 19,958 | 13.5 |
| | 5 | Stomach | 18,138 | 5.9 |
| Russian Federation | 1 | Lung | 51,887 | 18.6 |
| | 2 | Colorectum | 41,447 | 13.3 |
| | 3 | Stomach | 27,306 | 9.2 |
| | 4 | Breast | 22,259 | 13.7 |
| | 5 | Pancreas | 20,672 | 7.2 |
| India | 1 | Breast | 98,337 | 13.7 |
| | 2 | Lip, oral cavity | 79,979 | 5.6 |
| | 3 | Cervix uteri | 79,906 | 11.2 |
| | 4 | Lung | 75,031 | 5.3 |
| | 5 | Oesophagus | 66,410 | 4.7 |

- இந்தியாவில் 2022 மற்றும் 2045 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் புற்றுநோய் பாதிப்புகள் மற்றும் இறப்புகள் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2020 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் புற்றுநோய் பாதிப்பு 12.8% அதிகரித்துள்ளதோடு மேலும் அந்த புற்றுநோய் பாதிப்பானது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
- இந்தியாவில் ஆண்கள் மத்தியில், வாய்ப் புற்றுநோய், குறிப்பாக உதடு மற்றும் தொண்டைப் புற்றுநோய்கள் பொதுவாகப் பரவக் கூடிய புற்றுநோய்களாகும்.
- பெண்கள் மத்தியில் மார்பகப் புற்றுநோய் ஆனது முதன்மையாகப் பரவக்கூடிய புற்று நோயாக உள்ளதோடு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயும் ஒரு முக்கிய அபாயமாக உள்ளது.
- இதற்கிடையில், சீனாவில் பெண்கள் மத்தியில் நுரையீரல் புற்றுநோய் அதிகளவில் பரவக் கூடிய ஒன்றாக உள்ளது.
- உலகளாவிய புற்றுநோய் தொடர்பான உயிரிழப்புகளில் BRICS நாடுகள் 42% பங்கினை கொண்டுள்ளது.
- 28 பில்லியன் டாலர் மதிப்பிலான அதிகபட்ச மொத்த உற்பத்தி இழப்பைச் சீனா எதிர் கொண்டுள்ளது.
- தென்னாப்பிரிக்காவானது ஒரு புற்றுநோய் உயிரிழப்பிற்கு என அதிகபட்சமாக 101,000 டாலர் செலவினத்தினை எதிர்கொள்கிறது.

## இந்தியா – அமெரிக்கப் பாதுகாப்பு துறை ஒப்பந்தம் 2024

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது ஆயுதங்கள் பொருத்தப்பட்ட உயர் மட்ட பகுதிகளில் இயங்கக்கூடிய நீண்ட நேரம் செயல்படக்கூடிய (HALE) தொலை தூரத்தில் இருந்து இயக்கும் வகையிலான MQ-9B எனப்படும் 31 விமான அமைப்புகளை (RPAS) கொள்முதல் செய்வதற்கான 3.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தத்தில் 170 AGM-114R ஹெல்ஃபயர் எறிகணைகளும்; 16 M36E9 ரக கட்டுப் படுத்தப் பட்ட ஹெல்ஃபயர் வான் பயிற்சி எறிகணைகளும்; 310 GBU-39B/B ரக சீரொளிக் கற்றை அடிப்படையிலான சிறிய விட்டம் கொண்ட குண்டுகளும் (SDB) உள்ளடக்கிய வகையில் பலவற்றின் கொள்முதலும் அடங்கும்.
- ஹெல்ஃபயர் எறிகணை என்பது மிகவும் பிரபலமான மற்றும் குறுகிய தூர வரம்பு உடைய வானிலிருந்து நிலப் பரப்பினை நோக்கி ஏவக்கூடிய (சில நேரங்களில் வானில் இருந்த படியே ஏவக் கூடிய) சீரொளிக் கற்றையின் மூலம் மிக நன்கு வழிகாட்டப்பட்ட, குறையொலி சார்ந்த உத்திசார் எறிகணைகளில் ஒன்றாகும்.
- AGM-114R ரக பல பயன்பாட்டு எறிகணையானது, ஹெல்ஃபைர் II ரக எறிகணையின் வரம்பிலான (7-11 கிலோ மீட்டர்) சமீபத்திய எறிகணையாகும்.
- MQ-9B எனப்படும் 'ஹன்டர்-கில்லர்' ஆளில்லா விமானங்கள் அதிக உயரத்தில் நீண்ட நேரம் இயங்கக்கூடிய ஆளில்லா விமானங்கள் ஆகும்.
- இவை 35 மணி நேரத்திற்கும் மேலாக பறக்கும் திறன் கொண்டவை மற்றும் நான்கு ஹெல்ஃபயர் எறிகணைகள் மற்றும் சுமார் 450 கிலோ குண்டுகளைச் சுமந்து செல்லும் திறன் கொண்டவை ஆகும்.

## இந்தியாவின் அடுத்த தலைமை நீதிபதி

- இந்தியத் தலைமை நீதிபதியான D.Y. சந்திரசூட் அவர்கள், நீதிபதி சஞ்சீவ் கண்ணாவை இந்தியாவின் 51வது தலைமை நீதிபதியாக நியமிக்குமாறு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.
- தற்போதையத் தலைமை நீதிபதி நவம்பர் 10 ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார்.
- நீதிபதி கண்ணா 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக எந்தவொரு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றவில்லை.
- அவர் 2025 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதியன்று ஓய்வு பெற உள்ளார்.

## சமர்த் திட்டம் நீட்டிப்பு 2024

- இந்திய அரசாங்கம் "சமர்த்" (ஜவுளித் துறையின் திறன் மேம்பாட்டிற்கான திட்டம்) திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்க உள்ளது.
- இது நூற்பு மற்றும் நெசவு துறைகளைத் தவிர்த்து, ஒழுங்கமைக்கப்பட்ட ஜவுளித் தொழில்துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டம் ஆனது, தற்போதுள்ள தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதை வலியுறுத்துவதோடு, பாரம்பரிய ஜவுளித் துறைகளான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களுக்கும் ஆதரவு அளிக்கிறது.

## UDAN திட்டத்தின் 8 ஆம் ஆண்டு நிறைவு





- ❖ UDAN திட்டம் ஆனது 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் தேதியன்று அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ UDAN (உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்) என்பது பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதையும், விமானச் சேவையினை மலிவு விலையிலானதாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ் 601 வழித்தடங்களும் 71 விமான நிலையங்களும் செயல் பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.
- ❖ 71 விமான நிலையங்கள், 13 ஹெலிபோர்ட்கள் (ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள்) மற்றும் 2 நீர் வழி இயங்கும் விமானங்கள் என மொத்தம் 86 விமான நிலையங்கள் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.
- ❖ இந்தியாவில் 2014 ஆம் ஆண்டில் சுமார் 74 ஆக இருந்த செயல்பாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 157 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது.

## புதிய மருந்துகள் மற்றும் மருத்துவ சோதனை (NDCT) விதிகள், 2019


- ❖ 2019 ஆம் ஆண்டு புதிய மருந்துகள் மற்றும் மருத்துவச் சோதனை (NDCT) விதிகளில் புதிய மருந்துகளின் வரையறையில் அனைத்து நுண்ணுயிர் எதிர்ப்பிகளையும் சேர்க்க மருந்து தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் (DTAB) பரிந்துரைத்துள்ளது.
- ❖ தற்போது உலகளவில் பொது சுகாதார அச்சுறுத்தலாக அங்கீகரிக்கப்பட்டுள்ள வளர்ந்து வரும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் எதிர்ப்புத் திறனை மிகவும் நன்கு கட்டுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 1945 ஆம் ஆண்டு மருந்து விதிகளின் கீழான முத்திரையிடல் நிபந்தனைகளை திருத்தி அமைப்பது மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பி தயாரிப்புகளுக்கு நீல நிறப் பட்டை அல்லது குறியீட்டினை வழங்குவதும் குறித்து வாரியம் கருத்தில் கொண்டுள்ளது.

- ❖ தேவையான உரிமம் பெறாத மருந்து உற்பத்தி சாராத தொழிற்சாலைகளுக்கு எந்த நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளையும் வர்த்தகர்கள் விற்கக் கூடாது என்று பரிந்து உரைக்கப் பட்டுள்ளது.
- ❖ DTAB என்பது நாட்டில் மருந்துகள் தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப விவகாரங்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் உயர்மட்டச் சட்டப்பூர்வ அமைப்பாகும்.





## e-Shram – ஒற்றைத் தீர்வு அமைப்பு

- ❖ மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ஆனது புது டெல்லியில் e-Shram எனப்படும் ஒற்றைத் தேர்வு அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ அமைப்புசாராத தொழிலாளர்களுக்கான பதிவுச் செயல்முறையை எளிதாக்குவதும், அவர்கள் அரசின் நலத்திட்டங்களைப் பெறுவதற்கு ஏதுவான சில வசதிகளை செய்து தருவதும் இந்த இணைய தளத்தின் முதன்மை நோக்கமாகும்.
- ❖ இது eShram தளத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்புசாராத தொழிலாளர்களுக்குப் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் தடையற்ற அணுகலை வழங்கும்.



## 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 6A



ASSAM ACCORD CLAUSE 5 & CITIZENSHIP

IN 1979, All Assam Students Union (AASU) began an agitation demanding the identification and deportation of "illegal foreigners", predominantly from Bangladesh. The agitation went on for six years, culminating with the historic Assam Accord between the Central and state governments, and the leaders of the Assam Movement.

CLAUSE 5 of the Accord, which discussed the "Foreigners Issue", set January 1, 1966 as the "base date and year" for the "purposes of detection and deletion [from electoral rolls] of foreigners". Those who arrived after this date but up to March 24, 1971, would "have their names deleted from electoral rolls" for 10 years, after which their names would be restored.


IN 1985, in order to give effect to the Assam Accord, Section 6A was introduced in The Citizenship Act, 1955. The petitioners argued that this section was arbitrary and discriminatory, as it applied only to Assam.

THE CAA, 2019, introduced another group-specific section, Section 6B, in The Citizenship Act, which set December 31, 2014 as the cutoff date for Hindu, Christian, Sikh, Parsi, Buddhist, and Jain migrants from the Muslim majority countries of Pakistan, Bangladesh, Afghanistan.

- உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வானது, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் 6A பிரிவின் அரசியலமைப்பு சார்பு தன்மையை உறுதி செய்துள்ளது.
- வங்காளதேசத்தில் இருந்து புலம் பெயர்ந்து அசாம் மாநிலத்தில் குடியேறுபவர்கள் இந்தியக் குடியுரிமையைப் பெற இது அனுமதிக்கிறது.
- சகோதரத்துவக் கொள்கையை அசாமில் வாழும் ஒரு பிரிவினருக்கு மட்டுமென்று குறிப்பிட்டுப் பயன்படுத்தி விட்டு, அங்குள்ள மற்றொரு பிரிவினரை "சட்டவிரோதமாக குடியேறியவர்கள்" என்று குறிப்பிடப்பட முடியாது என நீதிமன்றம் கூறியுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதியன்று அல்லது அதற்கு பிறகு அசாம் மாநிலத்தில் நுழைந்த புலம்பெயர்ந்தோர் கண்டறியப்பட்டு, கைது செய்யப்பட்டு திரும்ப அனுப்பப் படுவர்.
- 6A பிரிவின் தோற்றுருவானது, 1985 ஆம் ஆண்டு அசாம் ஒப்பந்தம் என்ற ஒரு அரசியல் தீர்வின் மூலமாகும்.
- இது 1966 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதிக்கு முன்னதாக வங்காளதேசத்தில் இருந்து அசாம் மாநிலத்திற்குள் புலம்பெயர்ந்த மக்கள் இந்தியக் குடிமக்களாகக் கருதப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
- 1966 ஆம் ஆண்டு ஜனவரி 01 மற்றும் 1971 ஆம் ஆண்டு மார்ச் 25 என்ற காலகட்டத்திற்கு இடையில் மாநிலத்திற்குள் அசாம் மாநிலத்தில் நுழைந்தவர்களுக்கு சில குறிப்பிட்ட செயல்முறைகள் மற்றும் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்படும்.
- எவ்வாறாயினும், இந்தப் பிரிவானது 1971 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதிக்குப் பிறகு அசாம் மாநிலத்தில் நுழைந்தவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதை தடை செய்து உள்ளது.
- 1971 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதியன்று, பாகிஸ்தான் இராணுவம் ஆனது கிழக்கு பாகிஸ்தானில் எழுந்த வங்காள தேசியவாத இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சர்ச்லைட் நடவடிக்கையைத் தொடங்கியது.

## புதிய எறிகணை சோதனை தளம் - நாகயலங்கா

- ஆந்திரப் பிரதேசத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள நாகயலங்கா பகுதியில் புதிய எறிகணை சோதனைத் தளத்தினை நிறுவப் பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது நாட்டிலுள்ள பாதுகாப்பு துறை ஆய்வாளர்கள் அதிக எண்ணிக்கையிலான உத்தி சார் பயன்பாட்டு எறிகணை அமைப்புகளை சோதிக்க வழி வகுக்கும்.
- இந்தப் புதிய தளமானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கீழ் நிலம் விட்டு வான் நோக்கி ஏவப்படும் எறிகணைகள், பீரங்கி எதிர்ப்பு எறிகணைகள் மற்றும் பிற ஆயுத அமைப்புகளின் சோதனைகளை மேற்கொள்ள உதவும்.





## SARTHI அமைப்பு

- கலப்பு வகைக் கட்டுப்பாடுகள் கொண்ட மற்றும் நுண்ணறிவு (SARTHI) அமைப்புடன் கூடிய சூரிய உதவியில் இயங்கும் குளிர்பதனக் கொள்கலன் போக்குவரத்து அமைப்பு ஆனது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது குண்ட்லியில் உள்ள தேசிய உணவுத் தொழில்நுட்ப தொழில்முனைவு மற்றும் மேலாண்மை கல்வி நிறுவனத்தினால் (NIFTEM-K) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- கெட்டுப் போகக்கூடிய உணவுப் பொருட்களின் போக்குவரத்தில், அறுவடைக்குப் பின்னதாக ஏற்படும் இழப்புகளைக் குறைக்க இது மிகவும் ஒரு புதுமையான தீர்வாக அமையும்.
- இது பழங்கள் மற்றும் காய்கறிகளை அவற்றின் தனிப்பட்ட சேமிப்புத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வெவ்வேறு வெப்ப நிலையில் சேமிப்பதற்காக என்று நன்கு வடிவமைக்கப் பட்ட இரட்டை பெட்டிகளைக் கொண்டுள்ளது.
- இந்த வடிவமைப்பு ஆனது, உணவுப் பொருட்களின் சேமிப்புக் காலத்தினை நீட்டிக்க உதவுகிறது என்பதோடு குளிரால் ஏற்படும் அழுகல் அல்லது ஈரப்பதம் இழப்பினால் ஏற்படும் இழப்புகளையும் இது குறைக்கிறது.

## கர்தார்பூர் வழித்தட ஒப்பந்தம்

- கர்தார்பூர் சாஹிப் வழித்தட ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலத்தினை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அரசுமுறை வழிமுறைகள் மூலம் ஒப்புக்கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று ஐந்தாண்டு காலத்திற்குச் செல்லுபடியாகும் வகையில் கையெழுத்தானது.
- இது இந்தியாவிலிருந்து செல்லும் யாத்ரீகர்கள் கர்தார்பூர் சாஹிப் நடைபாதை வழியாக பாகிஸ்தானின் நரோவல் என்ற இடத்தில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப் கர்தார்பூருக்குப் பயணம் மேற்கொள்வதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலத்தின் நீட்டிப்பு ஆனது, பாகிஸ்தானில் உள்ள புனித குருத்வாராவைப் பார்வையிடுவதற்காக என்று இந்தியாவிலிருந்துச் செல்லும் யாத்ரீகர்களின் பயன்பாட்டிற்காக இந்த வழித்தடமானது தடையின்றி செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்யும்.




## பாரத் கடலைப் பருப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம்

- மத்திய அரசானது, 'பாரத்' தயாரிப்புப் பெயரின் கீழ் முழு கடலைப் பருப்பு மற்றும் மசூர் (சிவப்பு பயிறு) பருப்பை அறிமுகப்படுத்தி அதன் மானிய விலையிலான பருப்பு விநியோகத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.
- இது பொதுமக்களுக்கு மலிவு விலையில் பருப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் விதமாக கூட்டுறவு வலையமைப்புகள் மூலம் இந்தப் பருப்பு வகைகளை தள்ளுபடி விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாரத் என்ற தயாரிப்புப் பெயரின் கீழ் அரிசி, மாவு மற்றும் பருப்பு போன்ற முக்கியப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.
- நடுத்தர வர்க்கத்தின் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை மிகவும் மலிவு விலையில் வழங்குவதற்கான அரசாங்கத்தின் மிக பரந்த நோக்கத்தின் ஒரு பகுதியாக இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதல் கட்டமானது 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப் பட்டது என்ற நிலையில் இதன் இரண்டாம் கட்டம் ஆனது இந்த மாதத் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டது.




## மாற்றுத் திறனாளி நபர்களின் உரிமைகள் தொடர்பான விதிகள் 2024 (திருத்தம்)




- மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் (RPwD) தொடர்பான விதிகளில் பல்வேறு புதியத் திருத்தங்களை அரசாங்கம் அமல்படுத்தியுள்ளது.
- மாற்றுத் திறனாளிச் சான்றிதழ்கள் மற்றும் தனிப்பட்ட மாற்றுத் திறனாளி அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பச் செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அணுகல் தன்மையை மேம்படுத்தச் செய்வதோடு மாற்றுத் திறனாளிகளுக்கு என்று சேவைகளைத் திறம்பட வழங்கும்.
- இனி, குறிப்பிட்ட குறைபாடு உடைய மாற்றுத் திறனாளி நபர்கள் UDID இணைய தளம் மூலம் மாற்றுத் திறனாளி சான்றிதழ்கள் மற்றும் UDID அட்டைகளுக்கு என்று இதில் விண்ணப்பிக்கலாம்.

- குறைபாடுகளின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் வண்ணக் குறியிடப்பட்ட UDID அட்டைகளையும் இந்தத் திருத்தங்கள் அறிமுகப்படுத்துகின்றன:
  - 40 சதவீதத்திற்கும் குறைவான குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வெள்ளை நிற அட்டை,
  - 40-79 சதவீதம் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு மஞ்சள் நிற அட்டை மற்றும்
  - 80 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுடையவர்களுக்கு நீலநிற அட்டை.
- மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைகளில் 4% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- ஆனால் தலாசீமியா, இரத்தம் உறையாமை நோய் (ஹீமோபிலியா) மற்றும் அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் போன்ற இரத்தக் கோளாறுகள் உள்ளவர்கள் PwD பிரிவின் கீழ் வேலை வாய்ப்பு இட ஒதுக்கீடுகளைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்.

## Bhu - ஆதார்




- Bhu-ஆதார் அல்லது ULPIN ஆனது, 2021 ஆம் ஆண்டில் நிலப் பதிவேடுகள் நவீன மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.
- நாட்டில் உள்ள சுமார் 30 சதவீத கிராமப்புற நிலப் பரப்புகளுக்கு தனித்துவ நிலப் பகுதி அடையாள எண் (ULPIN) அல்லது Bhu-ஆதார் வழங்கப்பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு நிலப் பரப்பிற்கும் 14 இலக்க எண்ணெழுத்து அடையாளத்தை வழங்கச் செய்வதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- ULPIN ஆனது 2021 ஆம் ஆணடில் மத்திய அரசின் எண்ணிம இந்தியா நிலப் பதிவுகள் நவீன மயமாக்கல் திட்டத்தின் (DILRMP) ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.
- நிலப் பகுதிகளுக்குத் தனித்துவ அடையாள எண்களை வழங்குவதில் மாநிலங்கள் பின்பற்றும் செயல்முறையை நன்கு சீரமைத்து ஒத்திசைவு தன்மையைக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குஜராத், கோவா, மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை மேற்கொண்டுள்ளன.
- 1.2 கோடிக்கும் அதிகமான நிலப் பரப்புகளைக் கொண்ட குஜராத் மாநிலத்தில், 1.19 கோடி நிலப் பகுதிகளுக்கு ULPIN உருவாக்கப்பட்டுள்ளது என்று தரவுகள் குறிப்பிடச் செய்கின்றன.

## முதலாவது பணியிடை பயிற்சித் திட்டம்

- தேசிய நல்லாட்சி மையம் (NCGG) ஆனது, BIMSTEC நாடுகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கான தனது முதல் பணியிடைப் பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இரண்டு வார அளவிலான இந்தத்திட்டத்தில் இலங்கை, மியான்மர், நேபாளம் மற்றும் பூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த துணை ஆணையர்கள், நிர்வாக உதவிச் செயலாளர்கள், ஆணையர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் உட்பட 36 மூத்த அதிகாரிகள் முக்கிய அமைச்சகங்களின் சார்பாகப் பங்கேற்றனர்.
- இந்தத் திட்டமானது, பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பதையும், நிர்வாகத் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

## PM-YASASVI திட்டம்




- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது, துடிப்புமிக்க இந்தியாவினை உருவாக்குவதற்கான (PM-YASASVI) பிரதான் மந்திரி இளம் சாதனையாளர்கள் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது.
- இந்த விரிவான முதன்மைத் திட்டம் ஆனது, இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC), பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினர் (EBC) மற்றும் சீர் மரபினர் (DNT) சமூக மாணவர்களுக்கு, அவர்களின் ஆரம்பக் கட்ட வளர்ச்சி ஆண்டுகளில் மிகவும் தரமான கல்விக்கான அணுகலை வழங்கி அவர்களை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- EBC பிரிவினர்களுக்கான பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகான டாக்டர் அம்பேத்கர் ஊக்கத் தொகை திட்டம் மற்றும் DNT பிரிவினர்களுக்கான டாக்டர் அம்பேத்கர் பத்தாம் வகுப்புத் தேர்ச்சிக்கு முந்தைய மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகான ஊக்கத் தொகை திட்டம் உட்பட முன்னதாக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை இந்த திட்டம் ஒருங்கிணைத்து மேம்படுத்துகிறது.

- இந்தத் திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய மாணவர்களின் கல்வித் தேவைகளை ஆதரிப்பதில் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அணுகுமுறையை இது உறுதி செய்கிறது.

## வட்டார வானிலை முன்னறிவிப்பு

- ஒவ்வொரு மணி நேரமும் புதுப்பிக்கப்படும், ஐந்து நாட்களுக்கு முன்கூட்டிய வானிலை முன்னறிவிப்புகள் ஆனது, தற்போது கிராமப் பஞ்சாயத்துகள் மட்டத்திலும் கிடைக்கப் பெறுகின்றன.
- இது நாடு முழுவதும் வட்டார அளவிலான சில முன்னறிவிப்புகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதல் முக்கிய படிநிலையாகும்.
- இது "கிராமப்புற சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பதையும், அடிமட்ட அமைப்புகளில் பேரிடர் தயார்நிலையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது என்பதோடு இது நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்குப் பயனளிக்கும்.
- e-GramSwaraj மற்றும் கிராம் மஞ்சித்ரா இணையதளங்கள் மற்றும் மேரி பஞ்சாயத்து செயலி ஆகியவற்றில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறை என்று வழங்கப்படும் முன்னறிவிப்புகள் கிடைக்கப் பெறும்.
- e-GramSwaraj ஆனது ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது.




## கருணைக் கொலையைப் பற்றிய புதிய வரைவு வழிகாட்டுதல்கள்

- மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது, மறைமுகக் கருணைக் கொலை குறித்த புதிய வரைவு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- நோயாளி அல்லது அவர்களது உறவினர்களால் ஆவணப்படுத்தப்பட்ட தகவலறிந்த மறுப்பு உட்பட சில நிபந்தனைகளின் அடிப்படையில், தீவிர நோய்வாய்ப்பட்ட நோயாளிகளுக்கு உயிர் வாழ்வதற்கான மருத்துவச் சாதனங்களின் இணைப்பினைத் துண்டிப்பது குறித்து மருத்துவர்களை "கலந்தாலோசித்த ஒரு முடிவை" மேற்கொள்ள

வேண்டும்.


❖ மறைமுகக் கருணைக் கொலைக்கு "நோயாளியின் நலன்களுக்கு ஏதுவான முடிவை மேற்கொள்வதற்கு, தற்போது உயிர் வாழ்வதற்கு உதவும் மருத்துவ சாதன உதவிகளை நிறுத்த அல்லது கை விடுவதற்கு நான்கு நிபந்தனைகளை இந்த வழிகாட்டுதல்கள் வகுத்துள்ளன.
   ○ ஒரு நபர் மூளைச்சாவு அடைந்ததாக அறிவிக்கப்பட்டால்,
   ○ மருத்துவ முன்கணிப்பு மற்றும் நோயாளியின் நோய் பாதிப்பு நிலை மோசமானது மற்றும் தீவிரமான சிகிச்சை முறைகளால் அது சிகிச்சையடைய வாய்ப்பில்லை என்று கருத்து முன்வைக்கப்பட்டால்,
   ○ மருத்துவ முன்கணிப்பு ஆலோசனையைத் தொடர்ந்து, ஒரு நோயாளிக்கான மருத்துவ ஆதரவைத் தொடர்வதற்கான ஒரு தகவலறிந்த மறுப்பை ஆவணப் படுத்தினால்,
   ○ உச்ச நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்குதல்.

❖ வரைவு வழிகாட்டுதல்களில் குணப்படுத்த முடியாத நோய் என்பது எதிர்காலத்தில் மரணம் தவிர்க்க முடியாதது என்ற மீளமுடியாத அல்லது குணப்படுத்த முடியாத நிலை என வரையறுக்கப்பட்டுள்ளது.

❖ 72 மணி நேரம் அல்லது அதற்கும் மேலான கால கட்டத்திற்குப் பிறகும் குணமடையாத கடுமையான நீடித்த மூளைக் காயமும் சேர்க்கப்பட்டுள்ளது.

❖ வாழ்வதற்கான திறன் இல்லாத ஒரு நோயாளிக்கு, மிகவும் குறைந்தபட்சம் மூன்று மருத்துவர்களைக் கொண்ட முதன்மை மருத்துவ (PMB) குழுவின் ஒருமித்த கருத்துடன், உயிர் வாழ்வதற்கான சாதன ஆதரவு நீக்க முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

❖ அந்த மாவட்டத்தின் தலைமை மருத்துவ அதிகாரியால் நியமிக்கப்பட்ட ஒருவரைக் கொண்ட மூன்று மருத்துவர்களைக் கொண்ட ஒரு இரண்டாம் நிலை மருத்துவக் குழுவானது PMB குழுவின் முடிவைச் சரி பார்க்க வேண்டும்.



# சர்வதேசச் செய்திகள்

## தன்பாலினத் திருமணம் – தாய்லாந்து

- ❖ தாய்லாந்து மன்னர் ஒரு முக்கிய திருமண சமத்துவ மசோதாவில் கையெழுத்திட்டு உள்ளார்.
- ❖ இது தென்கிழக்கு ஆசியாவில் தன்பாலினத் திருமணங்களை அங்கீகரித்த முதல் நாடாக அந்தப் பேரரசினை மாற்றியுள்ளது.
- ❖ LGBTQ+ தம்பதிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்ய இயலும்.




## எதிர்காலத்திற்கான ஒப்பந்தம்

- ❖ ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) ஆனது “Pact for the Future” எனப்படும் ஓர் இலட்சியமிக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.
- ❖ 21 ஆம் நூற்றாண்டில் உலக அரங்கில் இந்த முக்கியமான நிறுவனத்தை மிகவும் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ இது எதிர்காலச் சந்ததியினருக்கான உலகளாவிய அமைதி, நிலைத் தன்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றினை ஊக்குவிக்கும்.
- ❖ ரஷ்யா, ஈரான், வட கொரியா மற்றும் சிரியா போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்துள்ளன.



## கனிமப் பாதுகாப்பு நிதியளிப்பு வலையமைப்பு

- அமெரிக்கா தலைமையிலான கனிமப் பாதுகாப்பு நிதியளிப்பு வலையமைப்பில் இந்தியா இணைந்துள்ளது.
- இந்திய-பசிபிக் பிராந்தியம் மற்றும் ஐரோப்பியப் பகுதியில் இருந்து இந்த அமைப்பில் பங்கேற்கும் நிறுவனங்களிடையே "ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் தகவல் பரிமாற்றம் மற்றும் இணை நிதியுதவியை மேம்படுத்துதல்" ஆகியவற்றை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வலையமைப்பு ஆனது 2022 ஆம் ஆண்டில் அமெரிக்காவால் நிறுவப்பட்ட ஒரு கட்டமைப்பான கனிமப் பாதுகாப்பு கூட்டாண்மையின் (MSP) சமீபத்திய முன்னெடுப்பு ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தியா இந்தக் கூட்டாண்மையில் சேர்க்கப்பட்டது.
- இந்த MSP குழுவானது கோபால்ட், நிக்கல், லித்தியம் மற்றும் 17 "அருமண்" தாதுக்கள் போன்ற கனிமங்களின் விநியோகச் சங்கிலிகளில் கவனம் செலுத்துகிறது.




## GlobE Network அமைப்பிற்கான வழிநடத்தல் குழு

- GlobE Network எனப்படும் சர்வதேச ஊழல் எதிர்ப்பு அமைப்பின் 15 உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டுதல் குழுவில் இந்தியா ஓர் இடத்தைப் பெற்றுள்ளது.
- உள்துறை அமைச்சகம் ஆனது GlobE Network அமைப்பிற்கான இந்தியாவின் மத்திய ஆணையமாக செயல்படுகிறது.
- மத்தியப் புலனாய்வு பிரிவு (CBI) மற்றும் அமலாக்க இயக்குநரகம் (ED) ஆகியவை இதற்கான உறுப்பினர் ஆணையங்களாக செயல்படுகின்றன.
- GlobE Network என்ற அமைப்பானது 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஆதரவுடன் G-20 அமைப்பிலிருந்து ஒரு முன்னெடுப்பாக உருவானது.
- GlobE Network ஆனது அதிகாரப்பூர்வமாக 2021 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இந்த வலையமைப்பில் 121 உறுப்பினர் நாடுகள் மற்றும் 219 உறுப்பினர் ஆணையங்கள் உள்ளன.

## L.69 மற்றும் C-10 குழுக்களின் கூட்டு அமைச்சர் கூட்டம்

- ஐக்கிய நாடுகள் பொது சபையின் 79வது அமர்வின் போது, உறுப்பினர் நாடுகளின் L.69 மற்றும் C-10 குழுக்களின் முதல் கூட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது.
- பத்து நாடுகளின் குழு (C10) என்பது ஆப்பிரிக்க ஒன்றியத்தின் (AU) ஒரு பகுதியாக இருக்கும் ஆப்பிரிக்க நாடுகளின் குழு ஆகும்.
- இது கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மிக நன்கு மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- L69 குழுவில் ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் மற்றும் பசிபிக் (வளர்ந்து வரும் சிறிய தீவு நாடுகள்) 32 வளர்ந்து வரும் நாடுகள் (இந்தியா உட்பட) உள்ளன.
- இது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பினர் அந்தஸ்தின் விரிவாக்கத்தை இது குறிக்கிறது.
- இது 2007-08 ஆம் ஆண்டில் சமர்பிக்கப்பட்ட வரைவு ஆவண எண் "L.69" என்பதிலிருந்து அதன் பெயரைப் பெற்றது.
- இது அரசுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை (IGN) செயல்முறையைத் தொடங்க வழி வகுத்தது.

## DF-41 எறிகணை


- கண்டம் விட்டு கண்டம் பாயும் DF-41 எனும் எறிகணையினை பசிபிக் பெருங்கடலில், சீனா வெற்றிகரமாகச் சோதனை செய்தது.
- இது 12,000 முதல் 15,000 கிலோ மீட்டர் வரையிலான செயல்பாட்டு வரம்பைக் கொண்டு உள்ளது என்பதோடு இது அமெரிக்க நிலப்பகுதியை அடைந்து அதைத் தாக்கும் திறன் கொண்டது.
- ஒரு ICBM ஆனது பொதுவாக சுமார் 5,500 கிலோ மீட்டருக்கும் அதிகமான வரம்பைக் கொண்டது என்பதோடு மேலும் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- 1980 ஆம் ஆண்டு மே மாதத்தில், DF-5 எனப்படும் சீனாவின் முதல் ICBM எறிகணை என்பது 9,000 கிலோமீட்டர்களுக்கு மேலான வரம்பில் இயங்கியது.

## தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப்பெருக்க வளங்கள்


- தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்க (BBNJ) வளங்கள் ஒப்பந்தம் அல்லது "பெருங்கடல் ஒப்பந்தம்" என்ற சர்வதேச ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- எந்த ஒரு நாட்டுக்கும் சொந்தமில்லாத கடல் பகுதிகளில் காணப்படும் கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதே BBNJ ஒப்பந்தத்தின் குறிக்கோள் ஆகும்.
- இந்தப் பகுதிகள் ஆனது எந்தவொரு நாட்டின் கடற்கரையிலிருந்தும் 370 கிலோமீட்டர் தொலைவில் தொடங்கி உலகின் மூன்றில் இரண்டு பங்கு அளவில் பெருங்கடல்களை உள்ளடக்கியது.

## அமெரிக்க நாட்டின் புலம்பெயர்ந்தோருக்கான முன்னணி மூலங்கள்

- ❖ உலகின் சர்வதேச புலம்பெயர்ந்தோரில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினர் அமெரிக்க நாட்டினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ❖ அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டில் பிறந்த வந்த நபர்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 47.8 மில்லியனை எட்டியது என்பதோடு இது முந்தைய ஆண்டை விட 1.6 மில்லியன் அதிகரித்துள்ளது.
- ❖ மெக்ஸிகோ, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அமெரிக்காவில் வசிக்கும் புலம் பெயர்ந்தோரின் பிறப்பிடங்களில் முதன்மையானவையாகும்.
- ❖ அமெரிக்காவில் 10.6 மில்லியன் மெக்சிகன்கள் வாழ்வதுடன் மெக்சிகோ மிகப்பெரிய புலம் பெயர்ந்தோர் பிறப்பிட நாடாக உள்ளது என்பதோடு 6% இந்தியர்களும், அதைத் தொடர்ந்து 5% சீனர்களும் அங்கு வாழ்கின்றனர்.





## எரெபஸ் மலை



- எரெபஸ் மலையானது 12,448 அடி உயரத்தில் உள்ள, பூமியின் தெற்குப் பகுதியில் உள்ள செயல்படும் எரிமலை ஆகும்.
- இருப்பினும், வாயு, நீராவி மற்றும் உருகிய பாறைக் குழம்புகளைப் பெருமளவில் தொடர்ந்து வெளியிடுகின்ற புவியியல் அதிசயம் என்பதால் இது எரிமலை குண்டுகள் என்று அழைக்கப்படுகிறது.
- இந்த எரிமலை தொடர்ந்து நுண்ணிய தங்கப் படிகங்களையும் வெளியிடுகிறது.
- இந்த எரிமலையானது ஒவ்வொரு நாளும் சுமார் 6,000 டாலர் மதிப்பிலான சுமார் 80 கிராம் தங்கத்தை வெளியிடுகிறது.
- சர் ஜேம்ஸ் கிளார்க் ரோஸ் எனப்படும் ஒரு பிரிட்டிஷ் ஆய்வாளர், 1841 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவிற்கு மேற்கொண்ட தனது பயணத்தின் போது இந்த எரிமலையைக் கண்டறிந்தார்.

## நார்தர்ன் ஆரோஸ் நடவடிக்கை

- இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்புப் படைகள் (IDF) ஆனது, தெற்கு லெபனானில் ஹெஸ்பொல்லாவுக்கு எதிரான நார்தர்ன் ஆரோஸ் என்ற நடவடிக்கையின் கீழ் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட நிலம் சார் நடவடிக்கைகளைத் தொடங்கி உள்ளன.
- இஸ்ரேலிய நாட்டின் சிறு நகரங்கள் மற்றும் நகரங்களுக்கு ஹெஸ்புல்லா என்ற அமைப்பினால் ஏற்படும் சில உடனடி ஆபத்துகளை கடுமையாக எதிர் கொள்வதை IDF நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நடவடிக்கைகள் ஆனது காசா மற்றும் அதன் பிற பகுதிகளில் போர்களுக்கு இணையான வகையில் நடத்தப்படுகின்றன.




## சாகோஸ் தீவுப் பகுதி ஒப்படைப்பு

- ஐக்கியப் பேரரசு ஆனது உத்தி சார் முக்கியத்துவம் வாய்ந்த சாகோஸ் தீவுகளின் இறையாண்மையை மொரீஷியஸுக்கு வழங்கியுள்ளது.


- ஐக்கியப் பேரரசு ஆனது நீண்ட காலமாக சாகோஸ் தீவு மற்றும் அங்கு அமைந்துள்ள டியாகோ கார்சியா ராணுவ தளத்தை அமெரிக்காவுடன் இணைந்து கூட்டாக இயக்கி வருகிறது.
- 58 தீவுகளை உள்ளடக்கிய சாகோஸ் தீவுப் பகுதியானது, இந்தியப் பெருங்கடலில் மாலத் தீவுகள் தீவுக்கூட்டத்திற்கு தெற்கே சுமார் 500 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- 1814 ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டு அரசானது இந்தத் தீவுகளை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தது.
- 1965 ஆம் ஆண்டில், ஐக்கியப் பேரரசு ஆனது பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தினை (BIOT) அமைத்தது என்ற நிலையில் அதில் சாகோஸ் தீவுகள் ஒரு மையப் பகுதியாக இருந்தன.
- இதர பிற BIOT தீவுகள் பிரித்தானிய ஆட்சியிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பிறகு 1976 ஆம் ஆண்டில் செஷெல்சிடம் வழங்கப்பட்டன.
- இந்தியப் பெருங்கடலில் உள்ள மற்றொரு பிரிட்டிஷ் காலனியான மொரீஷியஸுடன் நிர்வாக நோக்கங்களுக்காக சாகோஸ் இணைக்கப்பட்டது.
- ஆனால் 1968 ஆம் ஆண்டில் மொரீஷியஸ் சுதந்திரம் பெற்ற போது, சாகோஸ் தீவு பிரிட்டனுடனேயே இருந்தது.




## சர்வதேச மருத்துவச் சாதன ஒழுங்குமுறை மன்றம்

- சர்வதேச மருத்துவச் சாதன ஒழுங்குமுறை மன்றத்தின் (IMDRF) இணை உறுப்பினராக இந்தியா மாறியுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட IMDRF ஆனது உலகளாவிய மருத்துவச் சாதன ஒழுங்கு முறை அமைப்புகளின் குழுவாகும்.
- சர்வதேச மருத்துவச் சாதன ஒழுங்குமுறை விதிகளின் மீதான இணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பை விரைவுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்த மன்றத்தின் உறுப்பினர்களில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஐக்கியப் பேரரசு, பிரேசில், ரஷ்யா, சீனா, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் தேசிய ஒழுங்குமுறை ஆணையங்களும் அடங்கும்.

## அல்பைன் எல்லைகள் மறு வரையறை





- சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஆனது பனிப்பாறைகள் உருகுவதன் காரணமாக கடந்த வாரம் ஆல்ப்ஸ் மலையினூடான தங்களது பகிரப்பட்ட எல்லையை மறு வரையறை செய்துள்ளன.
- 2023 ஆம் ஆண்டில், இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் பனிப்பாறைகள் மீதான பருவநிலைத் தாக்கங்கள் மற்றும் அவற்றினால் எல்லையில் ஏற்படும் பல விளைவுகளை ஆய்வு செய்வதற்காக ஓர் ஆணையத்தினை அமைத்தன.
- ரோசா பீடபூமி, கேரல் புகலிடம் மற்றும் கோபா டி ரோலின் ஆகியவற்றின் மீதான நில அடையாளங்களில் மாற்றங்களைச் செய்ய இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.
- சுவிட்சர்லாந்தின் செர்மாட் பகுதியானது இத்தாலியின் ஆவோஸ்டா பள்ளத்தாக்கைச் சந்திக்கும் இடம் இதுவாகும்.
- இப்பகுதியானது இரு நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பல பனிச்சறுக்கு சார்ந்த கேளிக்கை விடுதிகளைக் கொண்டுள்ளது.

## குரங்கம்மையினைக் கண்டறியும் முதல் சோதனை

- உலக சுகாதார அமைப்பானது அதன் அவசரகாலப் பயன்பாட்டிற்கான மருந்துகளின் பட்டியலில், குரங்கம்மையினைக் கண்டறியும் முதல் ஆய்வகச் சோதனை முறையினைப் பட்டியலிட்டுள்ளது.
- அலினிட்டி m MPXV மதிப்பீடு என்பது நிகழ்நேர PCR சோதனையாகும் என்பதோடு இது மனிதத் தோல் புண் மாதிரிகளில் இருந்து குரங்கம்மை வைரஸ் (வகை I/II) டிஎன்ஏவை கண்டறிய உதவுகிறது.
- தற்போது, இந்திய நாடு முழுவதிலும் சுமார் 35 ஆய்வகங்களில், சந்தேகத்திற்கிடமான குரங்கம்மை பாதிப்புகளைப் பரிசோதிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- 2024 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்கப் பிராந்தியம் முழுவதும் சுமார் 30,000க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.




## மார்பர்க் வைரஸ் – ருவாண்டா




- ருவாண்டாவில் இதுவரையில் அறியப்பட்ட மிக கொடிய நோய் கிருமிகளில் ஒன்றான மார்பர்க் வைரஸால் ஏற்பட்ட புதிய நோய் பாதிப்பு உச்ச நிலையினை அடைந்துள்ளது.
- மார்பர்க் வைரஸ் நோய் (MRV) என்ற பெயர் ஆனது முதலில் மேற்கத்திய நாடுகளில் தெரிவிக்கப்பட்டது.
- இது 1967 ஆம் ஆண்டில் ஜெர்மனி மற்றும் முன்னாள் யூகோஸ்லாவியாவில் இருந்த ஆய்வகங்களில் இந்த நோய்த்தொற்று கண்டறியப்பட்டது.
- மார்பர்க் வைரஸ் உடலில் மிக விரைவாக பரவி, இரத்தம், கல்லீரல் மற்றும் தோலில் உள்ள செல்களை பாதித்து அழிக்கும்.
- தற்போதைய புள்ளி விவரங்கள் ஆனது MRV நோயால் பாதிக்கப்பட்டவர்களிடையே 88% உயிரிழப்பு விகிதத்தைக் குறிப்பிடுகின்றன.
- மார்பர்க் வைரஸ் 'விலங்குவழித் தொற்றக் கூடிய வைரஸ்' ஆகும், அதாவது நீண்ட கால வெளிப்பாடு காரணமாக விலங்குகளிலிருந்து இது மனிதர்களுக்கு தொற்றக் கூடும்.

## குதிரைப் பந்தயத்திற்கு பிரியா விடை - சிங்கப்பூர்

- ❖ சிங்கப்பூர் நாடானது சமீபத்தில் 182 ஆண்டு காலப் பழமையான பிரிட்டிஷ் காலத்திய பாரம்பரியமான குதிரை பந்தயத்திற்கு பிரியா விடையளித்தது.
- ❖ சிங்கப்பூர் டர்ஃப் கிளப் (STC) 1842 ஆம் ஆண்டு முதல் குதிரைப் பந்தயத்தை நடத்தி வந்தது.
- ❖ குதிரைப் பந்தயம் ஆனது சிங்கப்பூரில் 182 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்காட்லாந்து நாட்டு வணிகர் வில்லியம் ஹென்றி மேக்லியோட் ரீட் என்பவரால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- ❖ அவர் சிங்கப்பூர் விளையாட்டுக் கழகத்தை நிறுவினார் என்ற நிலையில் பின்னர் அதற்கு 1924 ஆம் ஆண்டில் STC என மறுபெயரிடப்பட்டது.

## இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (BIT) 2024




- ❖ இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே கையெழுத்தான இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (BIT) இந்த ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி முதல் அமல்படுத்தப் பட்டு உள்ளது.
- ❖ இது இரு நாட்டு முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டுப் பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப் படும் என்பதை உறுதியளிக்கிறது.
- ❖ இந்தியாவில் பெறப்பட்ட மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் (FDI) சுமார் 3% பங்கைக் கொண்டு UAE ஏழாவது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கையெழுத்தான முந்தைய இருதரப்பு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (BIPPA) ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று காலாவதி ஆனது.


## சீனாவின் 'அனகோண்டா உத்தி'

- ❖ மக்கள் விடுதலை இராணுவம் (PLA) எனப்படும் சீன இராணுவம் ஆனது தைவான் தீவு தேசத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 'அனகோண்டா உத்தியைப்' பயன்படுத்துகிறது என்று தைவான் சமீபத்தில் கூறியது.
- ❖ சீனா "மெதுவாக, ஆனால் நிச்சயமாக" தைவானைச் சுற்றி தனது இராணுவ இருப்பை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

- 'அனகோண்டா உத்தி' என்பது அமெரிக்க உள்நாட்டுப் போரின் ஆரம்பக் கட்டங்களில் அமெரிக்க ஜெனரல் வின்ஃபீல்ட் ஸ்காட் என்பவரால் முன்மொழியப்பட்ட ஒரு ராணுவ உத்தியைக் குறிக்கிறது.
- இந்த உத்தியின் முதன்மை நோக்கம் ஆனது, ஓர் அனகோண்டா பாம்பு எப்படிச் சுழன்று அதன் இரையை பெருமளவு மூச்சுத் திணறச் செய்கிறதோ அது போலவே, ஒரு கூட்டமைப்பை பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மூச்சுத் திணறச் செய்வதாகும்.
- தைவானைச் சுற்றி சீனா இயக்கும் கப்பல்களின் எண்ணிக்கையில் மிக நிலையான அதிகரிப்பு உள்ளது என்ற நிலையிள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் 142 ஆக இருந்த இந்த எண்ணிக்கை ஆகஸ்ட் மாதத்தில் 282 ஆக இருந்தது.




**உலக சுகாதார அமைப்பின் 2025-2028 ஆம் ஆண்டிற்கான முக்கியத் திட்டம்**




- இந்தியாவானது தற்போது, 2025 முதல் 2028 ஆம் ஆண்டு வரை உலக சுகாதார அமைப்பின் முக்கிய நடவடிக்கைத் திட்டத்திற்கு சுமார் 300 மில்லியன் டாலருக்கும் அதிகமான தொகையை வழங்க உறுதியளித்துள்ளது.
- பாரம்பரிய மருத்துவத்திற்கான சிறப்பு மையத்திற்கு 250 மில்லியன் டாலர் செலவிடப் படும்.
- தென்கிழக்கு ஆசியாவில் இதுவரை அதிக அளவு நிதியை இந்தியா வழங்கியுள்ளது.

- சுமார் 7.1 பில்லியன் டாலர் நிதி இடைவெளியை நிரப்பும் நோக்கில் செயல்படும் உலக சுகாதார அமைப்பானது இதுவரை 2.2 பில்லியன் டாலருக்கும் அதிகமான பங்களிப்பு உறுதிமொழிகளைப் பெற்றுள்ளது.

## உலகளாவிய எண்ணிம ஒப்பந்தம்

- சமீபத்தில் நிறைவடைந்த ஐக்கிய நாடுகள் சபையின் 'எதிர்காலத்திற்கான உச்சி மாநாட்டில்' 'உலகளாவிய எண்ணிம ஒப்பந்தம்' (GDC) ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது ஒரு கட்டாயமான பிணைப்புச் சட்டம் இல்லையென்றாலும் அரசாங்கங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய பகிரப்பட்ட இலக்குகளின் தொகுப்பைக் கொண்ட ஒரு உத்திசார் செயற்கருவியாகும்.
- GDC என்பது நிலையான மேம்பாட்டினை முன்னேற்றும் வழிகளில் பல்வேறு தொழில் நுட்பங்களை அணுக வேண்டியது குறித்த மனிதக் கண்ணோட்டத்தினை உறுதி செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- எண்ணிம இடைவெளியினை நிவர்த்தி செய்வதற்காக, அனைவரும் அணுகும் வகையிலான மென்பொருள், அனைவரும் அணுகும் வகையிலான தரவு மற்றும் அனைவரும் அணுகும் வகையிலான செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் மற்றும் தனி உரிமை மற்றும் சிறந்த நடைமுறைகளை கடைபிடிப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய "எண்ணிமப் பொதுச் சொத்துகளை" GDC முன்மொழிகிறது.
- முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையானது இரண்டு ஒப்பந்தங்களை சோதனை முறையில் நடைமுறைப்படுத்தவும் சட்டப் பூர்வமாக்கவும் உதவியது.

## மனித உரிமைகள் சபையின் உறுப்பினர்கள்





- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2025-2027 ஆண்டின் பதவிக் காலத்திற்கான 47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் சபைக்கு 18 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- பெனின், பொலிவியா, கொலம்பியா, சைப்ரஸ், கத்தார், தாய்லாந்து உள்ளிட்ட 18 நாடுகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் நாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி தொடங்கி மூன்றாண்டு பதவிக் காலம் வரை பதவியில் இருக்கும்.
- ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் சபையானது ஐக்கிய நாடுகள் அமைப்புக்குள் உள்ள ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- உலகம் முழுவதும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமானப் பொறுப்பினை இது கொண்டுள்ளது.
- சவுதி அரேபியா இந்த வாக்கெடுப்பில் ஆறாவது இடத்தைப் பெற்று இந்த சபையில் அங்கத்துவத்தினைப் பெறத் தவறியது.

## குடியரசுத் தலைவர் முர்முவின் ஆப்பிரிக்கப் பயணம்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் அல்ஜீரியா, மொரிட்டானியா மற்றும் மலாவி ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.
- இந்த மூன்று ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திய நாட்டின் அரசத் தலைவர் பயணம் மேற் கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- அங்கிருந்த பல்கலைக்கழகங்களின் மையமான சிதி அப்தெல்லா அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்திற்கு அவர் பயணம் மேற்கொண்ட போது அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.
- அல்ஜீரியாவின் ஜார்டின் டி'ஸ்ஸாயில் உள்ள ஹம்மா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இந்தியா முனையினையும் அவர் திறந்து வைத்தார்.
- முர்முவின் வருகை என்பது இந்தியாவிற்கும் மலாவிக்கும் இடையிலான அரசுமுறை உறவுகளின் 60வது ஆண்டு நிறைவுடன் ஒன்றி வருகிறது.




## 44வது மற்றும் 45வது ஆசியான் உச்சி மாநாடுகள்




- ❖ 44வது மற்றும் 45வது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) மீதான உச்சி மாநாடுகள் மற்றும் அது தொடர்பான உச்சி மாநாடுகள் ஆகியன லாவோஸின் வியன்டியானே நகரில் துவங்கியது.
- ❖ மலேசியா 2025 ஆம் ஆண்டு முழுவதும் “Inclusivity and Sustainability” என்ற கருத்துருவின் கீழ் ASEAN அமைப்பிற்குத் தலைமை தாங்கியது.
- ❖ 27வது ASEAN-சீனா உச்சி மாநாடு ஆன 27வது ASEAN+3 உச்சி மாநாடு (ASEAN-சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரிய குடியரசு) மற்றும் 19வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு ஆகியவையும் நடைபெற்றன.
- ❖ முதல் ASEAN உச்சி மாநாடு ஆனது 1976 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்றது.

## பாலினத்திற்கு ஏற்றப் பருவநிலைக் கொள்கைகள்



- உலகளவில் பாலினத்திற்கு ஏற்ற பருவநிலை கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- பாரீஸ் உடன்படிக்கையின் 81 சதவீத ஒப்பந்தத் தரப்பினர் அவற்றின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளில் (NDC) பாலினம் சார்ந்த பல நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.
- இன்று வரை, 195 ஒப்பந்ததாரர்களின் மொத்த NDC பங்களிப்புகளின் எண்ணிக்கை 168 ஆக இருந்தது.
- 62.3 சதவீத நாடுகள் அனைத்துப் பருவநிலை நடவடிக்கைகளிலும் பாலினத்தினைக் கருத்தில் கொள்வதை நெறிப்படுத்துவதற்கான நிறுவனம் சார்ந்த வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை முன் வைத்துள்ளன.
- 11.5 சதவீத நாடுகள், தகவமைப்பு நடவடிக்கையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை ஆதரிப்பதில் ஈடுபட்டுள்ள பாலினச் சமச்சீர் குழுக்களை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட முன்னெடுப்புகளை முன் வைத்துள்ளன.
- சுமார் 55.7 சதவீத நாடுகள் பாலினச் சமத்துவத்திற்கான தங்கள் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளன.
- பிராந்தியத்தைப் பொறுத்து, வளர்ந்து வரும் நாடுகளின் ஒட்டு மொத்த உணவு உற்பத்தியில் பெண் விவசாயிகள் தற்போது 45-80 சதவீதப் பங்கினைக் கொண்டு உள்ளனர்.
- வளர்ந்து வரும் நாடுகளில் பெண் தொழிலாளர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் பல வேளாண் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.


## இந்தியா – கனடா இடையேயான அரசுமுறை நெருக்கடி




- இந்தியாவினால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்ட காலிஸ்தான் அமைப்பு ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் 2023 ஆம் ஆண்டில் கனடா பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இந்தச் சம்பவத்திற்கு இந்திய உளவுத்துறை மீது கனடா குற்றம் சாட்டியது.
- தற்போது நிலவி வரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் கனடா 41 தூதரக அதிகாரிகளை இந்தியாவில் இருந்து திரும்ப வரவழைத்தது.


- சமீபத்தில், உயர் ஆணையர் உள்ளிட்ட ஆறு இந்தியத் தூதர்களை வெளியேற்றுவதாக கனடா அறிவித்தது.
- இது டெல்லியில் உள்ள கனடா நாட்டின் ஆறு உயர் ஆணைய உறுப்பினர்களை வெளியேற்ற உள்ளதாக இந்தியா முடிவெடுப்பதற்கு வழி வகுத்தது.

## 2023 ஆம் ஆண்டில் உலகின் அதிகபட்ச சூரிய சக்தி உற்பத்தி




- 2023 ஆம் ஆண்டில், உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறன் 3.9 டெரா வாட்களை (TW) எட்டிய நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 3.86 TW ஆக இருந்தது.
- இருப்பினும், இது தற்போது தேவையான கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதமான 16.4 சதவீதத்தினை விட குறைவாக உள்ளது என்பதோடு தற்போதைய உற்பத்தி வேகம் நீடித்தால் 2030 ஆம் ஆண்டிற்குள் 1.5 TW இடைவெளியை ஏற்படுத்தும்.
- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் 473 ஜிகாவாட் (GW) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் உற்பத்தி செய்யப்பட்டது.
- சூரியசக்தி ஒளி மின்னழுத்தக் கட்டமைப்பு சார்ந்த மின் உற்பத்தி தொடர்ந்து அதிக அளவில் உள்ளது என்ற நிலையில் 2023 ஆம் ஆண்டில் 346.9 GW உற்பத்தி செய்யப் பட்டது என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 73% அதிகரிப்பைக் குறிக்கிறது.

## வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப வழங்கீட்டு நாடுகள்



**India Is Now Russia's No. 2 Supplier of Restricted Technology**

- Microchips, circuits, machine tools power Putin's war
- Officials say raising the issue has brought little response

- ரஷ்யாவிற்கு வரையறுக்கப்பட்ட (தடை செய்யப்பட்ட) முக்கிய தொழில்நுட்பங்களை வழங்கும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா முன்னேறியுள்ளது.
- நுண் சில்லுகள், மின் சுற்றுகள் மற்றும் இயந்திர கருவிகள் போன்ற முக்கியமான பொருட்களின் இந்திய ஏற்றுமதியானது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 60 மில்லியன் டாலரைத் தாண்டி ஜூலை மாதத்தில் 95 மில்லியன் டாலராக உயர்ந்தது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியங்களின் இதயன் மீதான கட்டுப்பாட்டு கொள்கைகளால், அத்தகையப் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலான இந்தியாவின் பங்கு மேலும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

## ஐக்கியப் பேரரரசின் நாகா மண்டை ஓடு ஏலம் தொடர்பான சர்ச்சை


- ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த ஏல நிறுவனம் ஒன்று, நேரடி இயங்கலை ஏலங்கள் பட்டியலிலிருந்து 'நாகா மனித மண்டை ஓட்டினை' நீக்கியுள்ளது.
- குறைந்தது 25 இதரப் பொருட்களுடன் சேர்த்து, பிரிட்டனில் ஏலத்திற்கென பட்டியலிடப் பட்ட சுமார் 200 ஆண்டுகள் பழமையான மண்டை ஓட்டையும் திரும்ப அளிக்குமாறு விமர்சகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
- விலங்குகளின் கொம்புகளைக் கொண்ட நாகா இன மனித மண்டை ஓடு ஆனது, குறிப்பாக மானுடவியல் மற்றும் பழங்குடிக் கலாச்சாரங்களில் மிகவும் ஆர்வமுள்ள கலைப் பொருட்கள் சேகரிப்பாளர்களை ஈர்க்கும் வகையில் உள்ளது.
- இதில் ஆரம்பக் கட்ட ஏலத் தொகை சுமார் 23 லட்சம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இதன் இறுதி விலை சுமார் 43 லட்சம் ரூபாய் வரை இருக்கும்.
- ஆக்ஸ்போர்டில் உள்ள பிட் ரிவர்ஸ் அருங்காட்சியகத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் சேகரிக்கப்பட்ட சுமார் 6,500 நாகா கலைப் பொருட்கள் உள்ளன.



## நைல் நதிப் படுகை கூட்டுறவு கட்டமைப்பு ஒப்பந்தம்

- நைல் நதியின் நீர்ப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தும் ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆனது எகிப்தின் கடும் எதிர்ப்பையும் மீறி அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- நைல் நதிப்படுகை முன்னெடுப்பு ஆனது, 10 நதிக் கரையோர நாடுகளின் கூட்டணி ஆகும் என்பதோடு இதன் தலைமையிடம் உகாண்டாவின் என்டெபே எனுமிடத்தில் அமைந்துள்ளது.
- நைல் நதியானது, 11 நாடுகளில் பரவி விரிந்து பாய்கிறது, ஆனால் இதில் ஐந்து நாடுகள் மட்டுமே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளன.

- எகிப்து மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இன்னும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை.
- அவை இரண்டும் கிராண்ட் எத்தியோப்பிய ரினையசன்ஸ் அணை (GERD) தொடர்பாக எத்தியோப்பியாவுடன் நீண்ட காலமாக சர்ச்சையில் சிக்கியுள்ளன.
- GERD என்பது ப்ளூ நைல் நதியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய நீர்மின் உற்பத்தி ஆலையாகும் என்பதோடு இது எத்தியோப்பியாவின் 120 மில்லியன் குடிமக்களுக்கு மின்சாரம் வழங்குகிறது.
- எகிப்து நாடானது இந்த அணையின் இருப்பினை அச்சுறுத்தலாகக் கருதுகிறது ஏன் எனில் நைல் நதியானது அந்நாட்டின் 97 சதவீத நீர் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- நைல் நதிப்படுகை முன்னெடுப்பில் புருண்டி, காங்கோ ஜனநாயகக் குடியரசு, எகிப்து, எத்தியோப்பியா, கென்யா, ருவாண்டா, தெற்கு சூடான், சூடான், தான்சானியா மற்றும் உகாண்டா ஆகியவை அடங்கும் என்ற நிலையில் எரித்திரியா இதில் பார்வையாளர் நாடாகப் பங்கேற்கிறது.




## SCO உச்சி மாநாடு 2024 – பாகிஸ்தான்

- 2024 ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சி மாநாடு ஆனது இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்றது.
- பிராந்தியப் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடுதல் போன்ற சில முக்கியமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை இந்த உச்சி மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் வெளிவிவகாரங்கள் துறை அமைச்சர், சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பெலாரஸ், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் ஈரானின் முதல் துணைத் தலைவர் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

- ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளில் இந்திய அதிகாரி ஒருவரால் பாகிஸ்தானுக்கு மேற் கொள்ளப்பட்ட முதல் உயர் நிலை அதிகாரியின் பயணம் இதுவாகும்.
- SCO என்பது சீனாவின் ஷாங்காய் நகரில் 2001 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான ஒரு நிரந்தர சர்வதேச அமைப்பாகும்.
- 2017 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்ததுடன் இந்த அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை ஒன்பது ஆக விரிவடைந்தது.





## மௌண்ட் ஆடம்ஸ் எரிமலை வெடிப்பு – அமெரிக்கா



- சுமார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பெரும்பாலும் செயலற்ற நிலையில் இருந்த வாஷிங்டனின் மிகப்பெரிய எரிமலையான மௌண்ட் ஆடம்ஸ் எரிமலையின் நில அதிர்வு நடவடிக்கைகளில் சமீபத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.
- கடந்த 12,000 ஆண்டுகளில் ஆடம்ஸ் எரிமலையானது நான்கு எரிமலைக் குழம்பு வெளியேற்றங்களை உருவாக்கியுள்ளது.
- பாறை, சாம்பல் மற்றும் பனிக்கட்டிகளால் ஆன எரிமலை சேற்றுப்பாய்வு (லஹார்ஸ்) ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு மிகப்பெரிய அபாயமாக உள்ளது.
- குறிப்பிடத்தக்க வகையில், ஆடம்ஸ் மலையிலிருந்து வெளிப்பட்ட முந்தைய எரிமலை சேற்றுப்பாய்வு நிகழ்வுகள் ஆனது சுமார் 6,000 மற்றும் 300 ஆண்டுகளுக்கு முன்பு மிக கணிசமான தொலைவுகளுக்குப் பரவின.
- இந்த சேற்றுப் பாய்வுகளின் சாத்தியமான அபாயங்கள் காரணமாக, மௌண்ட் ஆடம்ஸ் எரிமலை ஒரு "அதிக-அச்சுறுத்தல்" கொண்ட எரிமலையாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## உக்ரைனில் மேற்கு நைல் வைரஸ் பாதிப்பு




- உக்ரைன் நாட்டில் மேற்கு நைல் வைரசின் (WNV) பெருந்தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- WNV வைரசானது ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகள், வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஆசியா போன்ற பகுதிகளில் பொதுவாகப் பரவுகின்ற வைரசாகும்.
- இதன் பரவலானது மிகப் பொதுவாக ஜூன் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களுக்கு இடையேயான கோடை மற்றும் இலையுதிர் காலங்களில் அதிகமாக இருக்கும்.
- இந்த வைரஸ் ஆனது, பொதுவாக வலசை போகும் பறவைகள் அல்லது குதிரைகளிடம் இருந்து பரவிய வைரசினால் பாதிக்கப்பட்ட கொசு கடிப்பதன் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது.
- இந்த வைரஸ் ஆனது, முதன்முதலில் உகாண்டாவின் மேற்கு நைல் பகுதியில் 1937 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.
- தற்போது WNV வைரசிற்குக் குறிப்பிட்ட சிகிச்சையோ அல்லது தடுப்பூசியோ எதுவும் கண்டறியப்படவில்லை.

## FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியல் விதிகள்


- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு (FATF) ஆனது, சர்வதேச நிதி அமைப்புக்கு அதிக ஆபத்துகளை ஏற்படுத்தும் நாடுகளின் மீது கவனம் செலுத்துவதற்கான பல்வேறு அளவுருக்களில் (நிபந்தனைகளில்) பெரிய மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளது.
- FATF அமைப்பானது, பணமோசடி, தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளித்தல் மற்றும் ஆயுதப் பரவலுக்கு நிதியுதவி அளித்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான நாடுகளின் விதிமுறை கட்டமைப்பில் உத்தி சார் குறைபாடுகளுடன் கூடிய நாடுகளை அடையாளம் காட்டுகிறது.
- திருத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ், உலக நாடுகள் பரிந்துரை செய்யப்பட்ட பல்வேறு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் அவற்றின் தொடர் மதிப்பாய்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அவையாவன:
  - FATF அமைப்பின் உறுப்பினர் நாடு;
  - உலக வங்கியின் உயர் வருமானம் கொண்ட நாடுகளின் பட்டியலில் உள்ள நாடு (இரண்டு அல்லது அதற்கும் குறைவான வங்கிகளின் நிதித் துறையைத் தவிர்த்து); அல்லது
  - 10 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் (பரந்த பணத்தால் அளவிடப்படும்) நிதித் துறை சொத்துகளைக் கொண்ட நாடு.
- சுமார் 21 நாடுகள் ஆனது தற்போது FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியலில் உள்ளன.

| FATF GREY LIST | FATF BLACK LIST |
|---|---|
| - Named as "Jurisdictions Under Increased Monitoring"<br><br>- Countries having strategic deficiencies in their anti-money laundering (AML) and counter-terrorism financing (CTF) regimes but have committed to addressing these weaknesses<br><br>- Serves as a signal to the international community that a country is taking steps to improve its AML/CTF efforts but requires enhanced scrutiny and support<br><br>- Being grey-listed can have significant economic repercussions, including decreased investor confidence, higher transaction costs, and potential difficulties in accessing international financial markets. | - Named as "High-Risk Jurisdictions subject to a Call for Action"<br><br>- Countries with significant strategic deficiencies in their AML/CTF regimes that have failed to make sufficient progress in addressing these issues<br><br>- Aims to warn the global financial community about the risks associated with these jurisdictions and to encourage countries to take robust measures against them<br><br>- Countries on the Black List face severe economic sanctions, loss of international financial credibility, and potential isolation from the global financial system. |

## "ரத்து செய்ய சொடுக்குக" வசதி

- அமெரிக்காவின் மத்திய வர்த்தக ஆணையம் (FTC) ஆனது, விரைவில் "ரத்து செய்ய சொடுக்குக" வசதியை அமல்படுத்தவுள்ளது.
- இது நுகர்வோர் தங்கள் சந்தாக்கள் மற்றும் உறுப்பினர் நிலையை ரத்து செய்வதை எளிதாக்கும்.

- இதன் மூலம் பல தெரிவுகளைத் தேர்வு செய்வது அல்லது விருப்பத் தேர்வு அமைவுகளின் பல பிரிவுகளின் கீழ் ரத்து செய்வதற்கான வசதியினை மறைத்து வைப்பது தடுக்கப்படும்.
- இது மிக சிக்கலான ரத்து செய்தல் செயல்முறையை கொண்டிருந்தால் நிறுவனங்கள் உரிமையியல் தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று குறிப்பிடுகிறது.
- 2022 ஆம் ஆண்டு ஆராய்ச்சியில் 42% நுகர்வோர் தாங்கள் பயன்படுத்தாத பல்வேறு சேவைகளுக்குப் பணம் செலுத்தி வருவதை மறந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.
- இதனால் வாடிக்கையாளர்கள் தங்கள் சந்தாக்களின் மாதச் செலவினத்தினை மிகவும் சராசரியாக 133 டாலர் என்று குறைத்து மதிப்பிட்டுள்ளனர்.




## உலகின் சுதந்திரமானப் பொருளாதாரம் 2024


- ஃப்ரேசர் நிறுவனம் ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான “உலகின் பொருளாதாரச் சுதந்திர” அறிக்கையினைத் தொகுத்துள்ளது.
- சிங்கப்பூர் நாட்டினைப் பின்னுக்குத் தள்ளி உலகின் சுதந்திரமானப் பொருளாதாரம் என்றப் பட்டத்தை ஹாங்காங் மீண்டும் பெற்றுள்ளது.
- 3வது இடத்தில் சுவிட்சர்லாந்து நாடும் அதனைத் தொடர்ந்து நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- 3.02 மதிப்பெண்களுடன் வெனிசுலா கடைசி இடத்தை (165வது) பிடித்தது.
- மற்ற முக்கியப் பொருளாதாரங்களின் தர வரிசையில் ஜப்பான் 11வது இடத்திலும், பிரிட்டன் 12வது இடத்திலும், தைவான் 19வது இடத்திலும், இந்தியா 84வது இடத்திலும், சீனா 104வது இடத்திலும் இதில் உள்ளன.

## ரோம் பிரகடனம்

- FAO அமைப்பின் வருடாந்திர உலக உணவு மன்றத்தினை (WFF) ஒட்டி, நீர் தொடர்பான உயர் மட்ட ரோம் பேச்சுவார்த்தையானது ரோமில் உள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) தலைமையகத்தில் நடைபெற்றது.

- FAO அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் வேளாண்மையில் தண்ணீர்ப் பற்றாக்குறை குறித்த ஒரு உலகளாவியக் கட்டமைப்பின் (WASAG) பங்குதாரர்கள் வேளாண்மையில் தண்ணீர் பற்றாக்குறை குறித்த ரோம் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டனர்.
- பருவநிலை நெருக்கடியால், குறிப்பாக வேளாண் துறையில் மிகவும் அதிகரித்து வரும் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் மராகேஷ் எனுமிடத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாநாட்டில் தண்ணீர் பற்றாக்குறை சார்ந்த சில சவால்களை நன்கு எதிர் கொள்வதில் நாடுகளுக்கு ஆதரவளிப்பதற்காக வேண்டி WASAG முன்னெடுப்பு ஆனது, தொடங்கப் பட்டது.
- 2050 ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஆண்டிற்கு குறைந்தது ஒரு மாதமாவது மிக தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் வேளாண்மையில் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளாகும் அபாயம் உள்ள பகுதிகளில் வசிப்பார்கள்.

## 16வது BRICS உச்சி மாநாடு





- 16வது BRICS உச்சி மாநாடு ஆனது, ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்றது.
- 5 ஆண்டுகளுக்குப் பிறகு, BRICS உச்சி மாநாட்டையொட்டி, நடைபெற்ற அதிபர் ஜி ஜின்பிங் உடனான இருதரப்புச் சந்திப்பில் இந்தியா பங்கேற்றது.
- BRICSசின் மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸூம் கலந்து கொண்டார்.
- இந்த உச்சி மாநாடு கசான் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதுடன் முடிவடைந்தது.
- முதல் BRIC உச்சி மாநாடு ஆனது, 2009 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் யெகாடெரின்பர்க் நகரில் நடைபெற்றது.
- 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நியூயார்க் நகரில் நடைபெற்ற BRIC அயல் உறவு

அமைச்சர்கள் கூட்டத்தில் தென்னாப்பிரிக்கா அதன் முழு உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் மூலதனத்துடன் புதிய மேம்பாட்டு வங்கி (NDB) ஆனது நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில், எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய சில புதிய உறுப்பினர்களைச் சேர்த்ததன் மூலம் இந்த அமைப்பு மேலும் விரிவடைந்தது.
- இந்த அமைப்பின் விரிவாக்கத்தைத் தொடர்ந்து நடைபெறும் முதல் உச்சி மாநாடு இது ஆகும்.
- தற்போது, 30க்கும் மேற்பட்ட நாடுகள் BRICS அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்து உள்ளன.

## LAC தொடர்பான இந்தியா மற்றும் சீனா ஒப்பந்தம்




- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து, "ரோந்து ஏற்பாடுகள்" மற்றும் மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதியில் (LAC) இராணுவ நிலைகள் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்த ஓர் உடன்பாட்டை எட்டியுள்ளன.
- 17 சுற்று செயல்பாட்டு நெறிமுறைக் கூட்டங்கள் மற்றும் சுமார் 21 சுற்று இராணுவப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த விலக்கல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- டெப்சாங் மற்றும் டெம்சோக் ஆகியப் பகுதிகளில் உள்ள பழைய ரோந்துப் பகுதிகள் வரை இந்தியப் படைப் பிரிவுகள் மீண்டும் ரோந்துப் பணியைத் தொடங்க இந்தப் புதிய ஒப்பந்தம் உதவும்.
- கோக்ரா-ஹாட் ஸ்பிரிங்ஸ் (வெப்ப நீரூற்று), பாங்காங் ஏரி மற்றும் கால்வான் பள்ளத்தாக்கு ஆகியவற்றில் நிலவி வந்த சர்ச்சைகள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன.
- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் 3,488 கிலோ மீட்டர் நீள எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- அருணாச்சலப் பிரதேசம் உட்பட இந்தியாவின் நிலப்பரப்பில் சுமார் 90,000 சதுர கிலோ மீட்டர் பகுதிகளின் மீது சீனா உரிமை கோருகிறது.
- சர்ச்சைக்குரிய அக்சாய் சின் பகுதியில் உள்ள 38,000 சதுர கிலோ மீட்டர் அளவிலான நிலப் பரப்பு லடாக்கின் ஓர் அங்கம் என்று இந்தியா கோரி வருகிறது.


## Hand-in-Hand முன்னெடுப்பு

- உலக உணவு மன்றத்தின் போது 2024 ஆம் ஆண்டு Hand-in-Hand என்ற முன்னெடுப்பு முதலீட்டு மன்றம் ஆனது ரோம் நகரில் நடைபெற்றது.
- தற்போது 72 நாடுகள் Hand-in-Hand முன்னெடுப்பில் இணைந்துள்ளன.
- Hand-in-Hand முன்னெடுப்பானது இதுவரை சுமார் 3 பில்லியன் டாலருக்கும் மேலான முன்னுரிமை மிக்க வேளாண் முதலீடுகளை ஊக்குவித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட HIH முன்னெடுப்பானது உணவு மற்றும் வேளாண் அமைப்பின் முதன்மைத் திட்டம் மற்றும் அதன் மிகவும் முக்கிய முன்னுரிமை திட்டப் பகுதிகளில் ஒன்றாகும்.
- வறுமையை ஒழித்தல் (SDG1), பட்டினி நிலை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை (SDG2) முடிவிற்குக் கொண்டு வருதல் மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் (SDG10) குறைத்தல் ஆகியவற்றின் மூலம் பல்வேறு வேளாண் உணவு முறை மாற்றங்களை விரைவு படுத்துவதற்கான தேசிய அளவிலான மற்றும் இலட்சிய மிக்கத் திட்டங்களை செயல் படுத்துவதற்கான ஆதரவினை இது வழங்குகிறது.

## கசான் பிரகடனம்

- 16வது BRICS உச்சி மாநாடு ஆனது கசான் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் நிறைவு பெற்றது.
- இது கூட்டுறவு மேற்கொள்ளப் பட வேண்டிய முக்கியப் பிரிவுகள் மற்றும் உலகளாவிய பிரச்சினைகளில் இந்தக் குழுவின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டைக் குறிப்பிட்டுக் காட்டும் ஒரு விரிவான ஆவணமாகும்.
- இந்தப் பிரகடனத்தின் கருத்துரு, "Strengthening Multilateralism for Just Global Development and Security - உலகளாவிய மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்கான பலதரப்புவாதத்தை நன்கு வலுப்படுத்துதல்" என்பதாகும்.
- அரசு முறை உறவுகள் மூலம் பல்வேறு அமைதியான தீர்வுகளை உருவாக்குவதற்கான அவசியத்தை இந்தப் பிரகடனம் வலியுறுத்துகிறது.
- உலக நாடுகளின் முடிவெடுத்தல் செயல்முறையில் G20 அமைப்பின் மிகப்பெரும் முக்கியத்துவத்தை இந்த உச்சி மாநாடு குறிப்பிட்டுக் காட்டியது.
- மிகவும் விரைந்து செயல்படக்கூடிய, துரித நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையிலான மற்றும் பிரதிநிதித்துவ அடிப்படையில் பலதரப்பு அமைப்பை உருவாக்கப் போராடச் செய்வதன் மூலம் உலகளாவிய ஆளுகையினை மேம்படுத்துவதற்கான ஒரு உறுதிப் பாட்டினை BRICS நாடுகள் மீண்டும் வலியுறுத்தின.
- BRICS அமைப்பின் வங்கிகளுக்கு இடையேயான கூட்டுறவுச் செயல்முறை (ICM) ஆனது புதுமையான நிதி நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தப் பிரகடனமானது BRICS அமைப்பின் நிதிப் பரிவர்த்தனைகளில் உள்நாட்டு பண மதிப்புகளைப் பயன்படுத்துவதை ஆதரித்தது மற்றும் சுதந்திரமான பன்னாட்டு தீர்வு உள்கட்டமைப்பை ஆராய்வதை ஆதரித்தது.
- BRICS தானியப் பரிவர்த்தனை அமைப்பினை நிறுவுதல் மற்றும் BRICS பன்னாட்டுக் கட்டண முறைமை மற்றும் BRICS மறு காப்பீட்டு நிறுவனத்தின் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தல்.

- சர்வதேச பெரும்புலி இனங்கள் கூட்டணியை உருவாக்கும் இந்தியாவின் மிகப்பெரும் முன்னெடுப்பிற்கு இந்த அமைப்பில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று ள்ளது.
- மேலும் BRICS அமைப்பின் தடுப்பூசி ஆராய்ச்சி & மேம்பாட்டு மையத்தின் பல்வேறு முன்னெடுப்புகள், பெருமளவிலான தொற்று நோய் அபாயங்களைத் தடுப்பதற்காக BRICS ஒருங்கிணைந்த முன்னெச்சரிக்கை அமைப்பின் மேம்பாடு மற்றும் BRICS காச நோய் ஆராய்ச்சி வலையமைப்பின் செயல்பாடுகளை ஆதரிக்கிறது.


**Highlights of the declaration**

**ON UKRAINE**
'All states should act consistently with the Purposes and Principles of the UN Charter in their entirety and interrelation'


**ON WEST ASIA**
'We reiterate our grave concern at the deterioration of the situation and humanitarian crisis in the Occupied Palestinian Territory, in particular the unprecedented escalation of violence in the Gaza Strip and in West Bank as a result of the Israeli military offensive'

**ON WESTERN SANCTIONS**
'We are deeply concerned about the disruptive effect of unlawful unilateral coercive measures, including illegal sanctions, on the world economy, international trade, and the achievement of the sustainable development goals'

**ON G20**
'We recognise the importance of the continued and productive functioning of the G20, based on consensus with a focus on result-oriented outcomes'

## மரபணுத் தகவல் பயன்பாடு குறித்த உலகளாவிய ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகள் சபையின் 16வது பங்குதாரர்கள் (COP16) இயற்கை உச்சி மாநாட்டில், உறுப்பினர் நாடுகள் ஆனது, எண்ணிம மரபணு வரிசையாக்கத் தகவல் (DSI) என அறியப்படும் இயற்கையிலிருந்து பெறப்படும் மரபணு தகவல்களைப் பயன்படுத்தச் செய்வதற்கான ஒப்பந்தம் குறித்தப் பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள உள்ளன.
- DSI என்பது உயிரினங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில மரபணுக் குறியீடுகளின் எண்ணிம உருவமைப்பினைக் குறிக்கிறது.
- இந்த மரபணு வரிசையாக்கமுறைகள் ஆனது எண்ணிம மயமாக்கப்பட்டு, பொதுத் தரவுத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைத்து ஆய்வாளரும் பயன்படுத்தும் வகையில் அவை சேமிக்கப் படுகின்றன.
- COP16 நாடுகளின் பேச்சுவார்த்தைகள் ஆனது அசல் மாதிரிகள் மற்றும் மாதிரிகளைச் சேதப்படுத்தாமல், இந்த எண்ணிம தகவல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் கவனம் செலுத்துகிறது.
- DSI தகவலைப் பயன்படுத்தும் முக்கியத் துறைகளின் வருடாந்திர வருமானத்தில் 0.1% முதல் 1% வரையில் விதிக்கப்படும் கட்டணம் ஆனது ஆண்டிற்கு 1 பில்லியன் டாலர் முதல் 10 பில்லியன் டாலர் வரையிலான வருமானத்தினை ஈட்டும்.




# பொருளாதாரச் செய்திகள்

## தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்


- மாறுநிலை அகவிலைப் படியை திருத்தி அமைத்ததன் மூலம் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதிய விகிதங்களை ஒரு நாளைக்கு 1,035 ரூபாய் வரை உயர்த்துவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தத் திருத்தத்திற்குப் பிறகு, கட்டுமானம், பெருக்குதல், துப்புரவுப் பணி, சரக்கு ஏற்றுதல் & இறக்குதல் ஆகியவற்றில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு 'A' பிரிவில் வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் ஒரு நாளைக்கு 783 ரூபாய் (மாதம் 20,358 ரூபாய்) ஆக இருக்கும்.
- பகுதியளவு திறன் சார்ந்தத் தொழிலாளர்களுக்கு, குறைந்தபட்ச ஊதியம் என்பது ஒரு நாளைக்கு 868 (மாதத்திற்கு 22,568 ரூபாய்) ஆகும்.
- இதன்படி திறன் சார் தொழில், எழுத்தர் மற்றும் ஆயுதம் இல்லாத கண்காணிப்புப் பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு 954 ரூபாய் ஆகும் (மாதத்திற்கு 24,804 ரூபாய்).
- இதன்படி அதிகளவு திறன் சார்ந்த மற்றும் ஆயுதங்களைக் கொண்ட கண்காணிப்புப் பணியாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதிய விகிதம் ஒரு நாளைக்கு 1,035 ரூபாய் (மாதத்திற்கு 26,910 ரூபாய்) ஆகும்.
- இந்தப் புதிய ஊதிய விகிதங்கள் ஆனது 2024 அம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- கடைசியாக 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஊதிய திருத்தம் செய்யப்பட்டது.

**Increment in the Minimum Rate of Wages**
**the employees in Construction & Maintenance Sectors**

| Category Of Worker | Rate of wages Including Variable Dearness Allowance (V.D.A) per day (In Rupees) | | |
|---|---|---|---|
| | Area 'A' | Area 'B' | Area 'C' |
| Unskilled | 783 | 655 | 526 |
| Semi-Skilled/ Unskilled Supervisory | 868 | 739 | 614 |
| Skilled/Clerical | 954 | 868 | 739 |
| Highly Skilled | 1035 | 954 | 868 |

## 7வது வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS)

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) ஆனது, வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) 2023-24 முடிவுகளை வெளியிட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் இருந்ததைப் போலவே, 2023-24 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பின்மை விகிதம் 3.2% ஆக மாறாமல் இருந்தது.
- 2017-18 ஆம் ஆண்டு முதல், வேலைவாய்ப்பின்மை விகிதத்தில் வருடாந்திரச் சரிவு பதிவாகவில்லை.
- தேசிய அளவில் 2022-23 ஆம் ஆண்டில் 57.9% ஆக இருந்த தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 60.1% ஆக அதிகரித்துள்ளது.
- கிராமப்புற LFPR ஆனது 63.7% ஆகவும், நகர்ப்புற LFPR ஆனது 52% ஆகவும் உயர்ந்து உள்ளது.
- 2023-2024 ஆம் ஆண்டில் தொழிலாளர் மக்கள் தொகை விகிதத்தில் (WPR) பதிவான அதிகரிக்கும் போக்கு 58.2% ஆக இருந்தது.
- ஆண் மற்றும் பெண்கள் மத்தியில் இந்த விகிதம் முறையே 76.3% மற்றும் 40.3% ஆகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 2.4% ஆக இருந்த கிராமப்புறங்களில் பதிவான வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 2.5% ஆக உயர்ந்துள்ளது.
- ஆனால் 5.4% ஆக இருந்த நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 5.1% ஆக முன்னேறியுள்ளது .
- 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 2.9% ஆக இருந்த பெண்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 3.2% ஆக உயர்ந்துள்ளது.
- 3.3% ஆக இருந்த ஆண்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 3.2% ஆகக் குறைந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 57.3% ஆக இருந்த சிறு தொழில்கள் உள்ளிட்ட சுயதொழில்களில் ஈடுபடுபவர்களின் பங்கு 58.4% ஆக அதிகரித்துள்ளது.





## சீன அதிர்ச்சி 2.0


- சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மின்சார வாகனங்களுக்கு அமெரிக்கா 100 சதவீத வரி விதித்துள்ளது.
- அமெரிக்கக் கட்டண உயர்வுகளில் சூரிய மின்கலங்கள் மீது 50 சதவீதமும், எஃகு, அலுமினியம், மின்சார வாகனங்களுக்கான மின் கலங்கள் மற்றும் சில கனிமங்கள் மீது 25 சதவீதமும் வரி விதிக்கப்பட்டுள்ளது.
- "சீன அதிர்ச்சி 2.0" ஏற்படக் கூடும் என்ற ஒரு அச்சத்தைத் தூண்டும் வகையில், பலவீனமான உள்நாட்டுத் தேவைகளுக்கு மத்தியில் ஏற்றுமதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொழில்துறைக் கொள்கைகளிலிருந்து சீனாவின் அதீத உற்பத்திகள் உருவாகின்றன.
- சீனாவில் இருந்து இந்தியா மேற்கொள்ளும் இறக்குமதி வீதம் உலகின் பிற நாடுகளை விட மிக வேகமாக வளர்ந்துள்ளது.
- 2005-06 ஆம் ஆண்டில் 10.87 பில்லியன் டாலர்களாக இருந்த சீனப் பொருட்களின் இறக்குமதியானது 2015-16 ஆம் ஆண்டில் 61.71 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- சீன வணிகங்களுக்குப் பல பொருளாதாரக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் என்ற சாதனை அளவினைத் தாண்டியது.
- பெருந்தொற்றிற்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடச் செய்கையில், கோவிட் பெருந் தொற்றிற்குப் பிந்தைய காலத்தில் சீனாவின் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்துள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் கணக்கீடுகளின் படி, உலகளாவிய ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 1.5 சதவீதப் புள்ளிகள் அதிகரித்துள்ளது.
- அன்றைய அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன், உலக வர்த்தக அமைப்பில் சீனா இணைவதற்கு ஆதரவு அளித்தார்.
- இது ஏராளமான தொழிலாளர் வளத்தின் ஆதரவுடன், உலகளாவியச் சந்தைகளை ஆதிக்கம் செலுத்திய, மிக மலிவான சீனப் பொருட்களின் உற்பத்திக்கு வழி வகுத்தது,

என்பதோடு இதன் விளைவாக சர்வதேச அளவில் உற்பத்தி சார்ந்த வேலை வாய்ப்பு இழப்பு ஏற்பட்டது.

❖ எனவே, உலக வர்த்தக அமைப்பில் சீனாவின் நுழைவு "சீன அதிர்ச்சி" என்று அறியப் பட்டது.




## சரக்கு மற்றும் சேவை இழப்பீட்டு வீதவரி





❖ சரக்கு மற்றும் சேவை வரி (GST) சபையானது, நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி தலைமையில் 10 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

❖ 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இழப்பீட்டு வீதவரி (தீர்வை வரி) முடிவடைந்தவுடன், வெகு ஆடம்பர, பாதகம் விளைவிக்கும் பொருட்கள் மற்றும் விற்பனை குறைக்கப்பட வேண்டிய பொருட்கள் மீதான வரி விதிப்பு குறித்து முடிவு செய்ய இந்தக் குழுவிற்கு பணிக்கப் பட்டுள்ளது.

- GST வரி வரம்பில், 28% வரிக்கு மேல் ஆடம்பர, பாதகம் விளைவிக்கும் பொருட்கள் மற்றும் குறைபாடுள்ளப் பொருட்களுக்கு பல்வேறு விகிதங்களில் இழப்பீட்டு வீதவரி விதிக்கப்படுகிறது.
- வீதவரி மூலம் கிடைக்கும் வருமானம் ஆனது முதலில் GST நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு அல்லது 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஐந்து ஆண்டுகளுக்கு திட்டமிடப் பட்டது.
- GST அறிமுகப் படுத்தப்பட்ட பிறகு மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய இந்த வீதவரி பயன்படுத்தப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், இந்த தீர்வை வரியை 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்க சபை முடிவு செய்தது.
- தற்போது, GST என்பது 5, 12, 18 மற்றும் 28% ஆகிய சில அடுக்குகளைக் கொண்ட நான்கு அடுக்கு வரி அமைப்பாகும்.
- GST சட்டத்தின்படி, சரக்கு மற்றும் சேவைகளுக்கு 40% வரை வரி விதிக்கப்படலாம்.


## இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு

- 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 45ZB பிரிவின் படி இந்திய ரிசர்வ் வங்கியானது நாணயக் கொள்கைக் குழுவை (MPC) மறுசீரமைத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் விதிகளின்படி, இந்தக் குழுவானது இந்திய ரிசர்வ் வங்கியினைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசால் நியமிக்கப் படும் மூன்று உறுப்பினர்கள் என ஆறு உறுப்பினர்களைக் கொண்டது
- மத்திய அரசால் நியமிக்கப்பட்ட இந்த 3 உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் வரையில் இப் பதவியில் இருப்பர்.



## 2,000 ரூபாய் பணத் தாள்களை திரும்பப் பெறல்


- 2,000 ரூபாய் மதிப்பிலான பணத் தாள்கள் 98 சதவீதம் வரை திரும்பப் பெறப்பட்டு உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதியன்று 3.56 லட்சம் கோடி ரூபாயாக இருந்த 2000 ரூபாய் மதிப்பிலான தாள்களின் மொத்த மதிப்பு 7,117 கோடி ரூபாயாகக் குறைந்து உள்ளது.
- 2023 அம் ஆண்டு மே 19 ஆம் தேதி வரை புழக்கத்தில் இருந்த 2000 ரூபாய் மதிப்பிலான தாள்களின் 98 சதவீதம் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதியன்று, இந்திய ரிசர்வ் வங்கி 2,000 ரூபாய் மதிப்பிலான பணத் தாள்களை திரும்பப் பெறும் தனது திடீர் முடிவை அறிவித்தது.
- இது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதப் பணமதிப்பிழப்புக்குப் பிறகு அறிமுகப்படுத்தப் பட்ட பண மதிப்பு ஆகும்.





## 700 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அந்நிய செலாவணி கையிருப்பு

- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்புகள் முதன்முறையாக 700 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது.
- இந்த அதிகளவின் மூலம், 700 பில்லியன் டாலர்களை தாண்டிய சீனா, ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய உலக நாடுகளின் வரிசையில் நான்காவது நாடாக இந்தியா இணைந்துள்ளது.
- 12.6 பில்லியன் டாலர் அதிகரிப்பு ஆனது 2023 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் தேதிக்குப் பிறகு பதிவான மிகப்பெரிய வாராந்திர கூடுதலாகும்.

- இந்தியாவின் கையிருப்பு மதிப்பு ஆனது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முதன் முதலில் 100 பில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டியது என்ற நிலையில் அடுத்த 100 பில்லியன் டாலர் மதிப்பு உயர்வதற்கு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகியது.
- மூன்றாவது 100 பில்லியன் டாலர் உயர்வு ஆனது (200 பில்லியன் டாலரில் இருந்து 300 பில்லியன் டாலர் ஆக உயர்வு) ஓராண்டிற்குள் எட்டப்பட்டது என்பதோடு கையிருப்பு மதிப்பு ஆனது 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதியன்று 300 பில்லியன் டாலரைத் தாண்டியது.
- 200 பில்லியன் டாலராக இருந்த கையிருப்பு மதிப்பானது சுமார் பத்து மாதங்களில் 300 பில்லியன் டாலராக அதிகரித்தது.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 642 பில்லியன் டாலராக உயர்ந்த பிறகு, மறு மதிப்பீட்டு இழப்புகளின் காரணமாக, அடுத்த ஆண்டிற்குள் கையிருப்பு மதிப்பு 525 பில்லியன் டாலராகக் குறைந்தது.





## 2022-23 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர தொழில்துறைக் கணக்கெடுப்பு




- 2021-22 ஆம் ஆண்டில் உற்பத்தித் தொழில் துறையில் 1.72 கோடியாக இருந்த மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 7.5 சதவீதம் அதிகரித்து 1.84 கோடியாக அதிகரித்துள்ளது.

- கடந்த 12 ஆண்டுகளில் உற்பத்தித் தொழில்துறைகளில் பதிவான வேலைவாய்ப்பு அதிகரிப்பின் அதிகபட்ச விகிதம் இதுவாகும்.
- உணவுப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகளில் அதிக வேலைவாய்ப்பு பதிவாகி உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து ஜவுளி, மூல உலோகங்கள், அணிகலன்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள், டிரெய்லர்கள் (இழுவைகள்) மற்றும் பகுதியளவு இழுவை வகையிலான வாகனங்கள் உற்பத்தி தொழில் துறைகளில் அதிக அளவில் வேலைவாய்ப்பு பதிவாகியுள்ளன.
- 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 2.49 லட்சமாக இருந்த மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கையானது 2022-23 ஆம் ஆண்டில் 2.53 லட்சமாக அதிகரித்துள்ளது.
- 2015-16 ஆம் ஆண்டில் முறை சாராத தொழில் துறைகளில் சுமார் 11.13 கோடியாக இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 16.45 லட்சம் அல்லது 1.5 சதவீதம் குறைந்து 10.96 கோடியாக இருந்தது.
- மொத்த மதிப்புக் கூட்டலின் அடிப்படையில் (GVA), 2022-23 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா முதலிடத்தைப் பிடித்தது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை இடம் பெற்றன.

## இந்தியாவின் வேலைவாய்ப்பு வளர்ச்சி (2016-2023)




- இந்தியாவில் வேலைவாய்ப்பு ஆனது 2016-17 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 36 சதவீதம் (17 மில்லியன் வேலை வாய்ப்புகள்) அதிகரித்துள்ளது.
- அதே காலக் கட்டத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆனது சராசரியாக 6.5 சதவீதத்திற்கு மேல் வளர்ச்சியடைந்தது.
- 2017 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான PLFS தரவுகளின் படி தொழிலாளர் மற்றும் மக்கள்தொகை விகிதம் (WPR) ஆனது இந்தக் காலக் கட்டத்தில் 9 சதவீதப் புள்ளிகள் அல்லது சுமார் 26 சதவீதம் அதிகரித்துள்ளது.

## இந்தியாவின் முதல் கடல் சார் திட்டங்களுக்கான கடன்

- சர்வதேச நிதிக் கழகம் (IFC) ஆனது இந்தியாவில் பசுமை நிதியளிப்பினை நன்கு மேம்படுத்துவது மற்றும் கடல் சார் சந்தையினை உருவாக்குவதற்காக என்று ஆக்சிஸ் வங்கியுடன் இணைந்து 500 மில்லியன் டாலர் கடனை வழங்க உள்ளது.
- இது நாட்டில் IFC நிறுவனத்தின் முதல் கடல் சார் திட்டங்களுக்கான முதலீடு மற்றும் இந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மிகப்பெரியதொரு பசுமை நிதியுதவியைக் குறிக்கிறது.
- நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை, பெருங்கடல்களில் நெகிழிக் குறைப்பு, நீடித்த வகையிலான சுற்றுலா, மற்றும் கடலோர புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி போன்ற பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்காக கடல் சார் கடன்கள் வழங்கப் படுகின்றன.




## UPI 123 & UPI Lite ஆகியவற்றில் வரம்புகள்




- இந்திய ரிசர்வ் வங்கியானது UPI123 மற்றும் UPI Lite ஆகியவற்றின் மீதான பரிவர்த்தனை வரம்புகளை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.
- தற்போது, UPI123Pay இடைமுகத்தில் ஒரு பரிவர்த்தனைக்கான வரம்பு 5,000 ரூபாய் ஆக உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ஒரு பரிவர்த்தனைக்கான வரம்பை 10,000 ரூபாயாக உயர்த்த முடிவு செய்துள்ளது.

- தற்போது, UPI Lite இடைமுகமானது, ஒரு பரிவர்த்தனைக்கு 500 மற்றும் ஒட்டு மொத்த UPI Lite பணக்கோப்பு (வாலெட்) வசதிக்கு 2,000 ரூபாய் என்ற வரம்பைக் கொண்டுள்ளது.
- இது ஒரு பரிவர்த்தனைக்கான வரம்பினை 1,000 ரூபாயாகவும், மொத்த பணக்கோப்பு வரம்பினை 5,000 ரூபாயாகவும் உயர்த்தியுள்ளது.

## அகில இந்திய கிராமப்புற நிதி உள்ளடக்க கணக்கெடுப்பு 2021-22

**AVERAGE MONTHLY HOUSEHOLD INCOME***
**BY SOURCE OF INCOME IN THE AGRICULTURAL YEAR 2021-22 (₹)**

| | Agricultural Households | Non-Agricultural Households | All Households |
|---|---|---|---|
| All Sources Combined | 13,661 (100) | 11,438 (100) | 12,698 (100) |
| Cultivation | 4,476 (33) | -39 (0) | 2,521 (20) |
| Livestock Rearing | 1,677 (12) | -8 (0) | 947 (7) |
| Other Enterprises | 2,010 (15) | 1,809 (16) | 1,923 (15) |
| Wage Labour | 2,238 (16) | 2,927 (26) | 2,536 (20) |
| Govt./ Pvt. Service | 3,150 (23) | 6,599 (57) | 4,643 (37) |
| Other Sources | 110 (1) | 150 (1) | 127 (1) |

- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (NABARD) சமீபத்திய இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2016-17 ஆம் ஆண்டு முதல் NABARD வங்கி மேற்கொண்ட இரண்டாவது கணக்கெடுப்பு இதுவாகும்.
- 2016-17 ஆம் ஆண்டில் 1.08 ஹெக்டேராக இருந்த விவசாயிகளின் சராசரி நிலப் பரப்பு ஆனது 2021-22 ஆம் ஆண்டில் வெறும் 0.74 ஹெக்டேராகக் குறைந்துள்ளது.
- இது மூன்றில் ஒரு பங்கு (31 சதவீதம்) குறைவைக் குறிக்கிறது.
- 2016-17 ஆம் ஆண்டில் 8,059 ரூபாயாக இருந்த விவசாயிகளின் சராசரி மாத வருமானம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 12,698 ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இது 57.6 சதவீத உயர்வைக் குறிக்கிறது.
- கிராமப்புறக் குடும்பங்கள் 2016-17 ஆம் ஆண்டில் சராசரியாக மாதம் 6,646 ரூபாய் செலவழித்த நிலையில், தற்போது 11,262 ரூபாய் செலவிடுகின்றன.
- இது 2016-17 ஆம் ஆண்டில் இருந்த மாதாந்திர செலவுகளில் இருந்து சுமார் 69.4 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.

- கிராமப்புறங்களில் கடன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையானது சுமார் 47.4 சதவீதத்தில் இருந்து 52 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- சுமார் 23.5 சதவீதக் குடும்பங்களில் குறைந்தபட்சம் ஒரு உறுப்பினராவது ஓய்வூதியம் பெறுகின்றனர் என்ற நிலையில் இது முன்னதாக 18.9 சதவீதமாக இருந்தது.
- 2016-17 ஆம் ஆண்டில் இருந்த 25.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், சுமார் 80.3 சதவீதக் குடும்பங்கள் தற்போது குறைந்தபட்சம் ஒரு காப்பீடு கொண்ட உறுப்பினரையாவது கொண்டிருக்கின்றன.
- சுமார் 51.3 சதவீதக் குடும்பங்கள் சிறந்த நிதி தகவலைப் பெற்றுள்ளதாக பதிவு செய்து உள்ள நிலையில் இது முன்னதாக 33.9 சதவீதமாக இருந்தது.
- சுமார் 9,104 ரூபாயாக இருந்த கிராமப்புறக் குடும்பங்களின் நிதிச் சேமிப்பு ஆனது தற்போது 13,209 ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 66 சதவீத கிராமப்புறக் குடும்பங்கள் சேமிப்புகளை மேற் கொண்டுள்ள நிலையில் இது 2016-17 ஆம் ஆண்டில் 50.6 சதவீதமாக இருந்தது.

## வருடாந்திர மாதிரிக் கணக்கெடுப்பு






Fig. 1: Percentage of persons able to read and write short simple statements in their everyday life with understanding and also able to perform simple arithmetic calculations

- புள்ளிவிவர அமைச்சகம் ஆனது, ஒரு விரிவான வருடாந்திர மாதிரிக் கணக்கெடுப்பை வெளியிட்டுள்ளது (ஜூலை 2022-ஜூன் 2023).
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் கடந்த 365 நாட்களில் மருத்துவமனையில் ஒரு குடும்பமானது அவர்களின் சொந்தப் பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட சராசரி மருத்துவச் செலவு 4,129 ரூபாய் மற்றும் 5,290 ரூபாய் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- கடைசி 30 நாட்களில் மருத்துவமனை சாராதச் சிகிச்சைகளுக்காக ஒரு குடும்பத்தின் சராசரி மருத்துவச் செலவினமானது கிராமப்புறங்களில் 539 ரூபாயாகவும், நகர்ப் புறங்களில் 606 ரூபாயாகவும் இருந்தது.
- 15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களில் சுமார் 96.9% பேர் எளிய கூற்றுக்களைப் படிக்கவும் மற்றும் எழுதவும் முடிந்தவர்களாகவும் எளிய எண்கணித கணக்கீடுகளைச் செய்யக் கூடியவர்களாகவும் உள்ளனர்.
- அதே வயதினரில், இந்த எண்ணிக்கையானது ஆண்களில் 97.8% ஆகவும், பெண்களில் 95.9% ஆகவும் இருந்தது.

- 15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களில் சுமார் 23.3% பேர் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது பயிற்சியினைப் பெறவில்லை.
- 95.1% வீடுகளில் தொலைபேசி அல்லது கைபேசி இணைப்பு இருந்தது என்பதோடு 9.9% வீடுகளில் கணினிகள் இருந்தன.
- கிராமப்புறங்களில் 15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களில், 95.7% பேர் கைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர் என்ற நிலையில் இது நகர்ப்புறங்களில் 97% ஆக இருந்தது.


## தொழில்துறை உற்பத்தி வீழ்ச்சி




- தொழில்துறை உற்பத்திக் குறியீட்டின் மூலம் (IIP) அளவிடப்படுகின்ற, இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தியானது, 21 மாத இடைவெளிக்குப் பிறகு முதல் முறையாக ஆகஸ்ட் மாதத்தில் 0.1 சதவிகிதம் குறைந்துள்ளது.
- இந்தத் தரவு ஆனது தேசிய புள்ளியியல் அலுவலகத்தினால் (NSO) வெளியிடப் பட்டு உள்ளது.
- ஒட்டு மொத்தத் தொழில்துறை உற்பத்தியானது ஜூலை மாதத்தில் 4.7 சதவீதமாகவும், 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 10.9 சதவீதமாகவும் வளர்ந்துள்ளது.
- சுரங்க உற்பத்தியானது ஆகஸ்ட் மாதத்தில் 4.3 சதவீதமாகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது ஜூலை மாதத்தில் 3.8 சதவீதமாக இருந்தது மற்றும் முந்தைய ஆண்டில் 12.3 சதவீதமாக இருந்தது.
- ஜூலை மாதத்தில் 7.9 சதவீதமாக இருந்த மின் உற்பத்தியும், அதற்கு முந்தைய ஆண்டு பதிவான 15.3 சதவீதத்துடன் ஒப்பிடச் செய்யும் போது, ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 3.7 சதவீதமாக அது குறைந்துள்ளது.
- IIP தரவுகளின்படி, துறை ரீதியாக 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 23 உற்பத்தி துறைகளுள் 11 துறைகளின் உற்பத்தியில் குறைவு பதிவாகியுள்ளது.

## 2025 ஆம் ஆண்டில் சம்பள உயர்வு


- இந்தியாவில் சராசரி சம்பள உயர்வு 2025 ஆம் ஆண்டில் 9.5 சதவிகிதம் வரை உயரும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில் 2024 ஆம் ஆண்டில் பதிவான ஒரு உண்மையான சம்பள உயர்வு 9.5% ஆகும்.
- இந்தியாவின் சம்பள உயர்வு ஆனது அந்தப் பிராந்தியத்தில் தொடர்ந்து மிகவும் அதிக பட்சமாக இருந்து வருகிறது.
- வியட்நாம் (7.6%), இந்தோனேசியா (6.5%), பிலிப்பைன்ஸ் (5.6%), சீனா (5%) மற்றும் தாய்லாந்து (5%) போன்ற நாடுகளும் அடுத்த ஆண்டில் அதிக அளவில் சம்பள உயர்வை நிர்ணயிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சுமார் 28% நிறுவனங்கள் அடுத்த 12 மாதங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.
- சுமார் 68% நிறுவனங்கள் முந்தைய ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் தங்கள் எண்ணிக்கையை மாற்றாமல் தொடர உள்ளன.
- இந்தியாவில் 2023 ஆம் ஆண்டில் 11% ஆக இருந்த தன்னார்வப் பணித் துறப்பு விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 10.8% ஆகக் குறைந்துள்ளது.




## FTSE ரஸ்ஸல் EMGB குறியீடு

- முழுமையாக அணுகக்கூடிய வசதி (வெளிநாடு வாழ் இந்தியர்களை இந்திய அரசின் நிறைவு தேதியிடப்பட்டப் பத்திரங்களில் முதலீடு செய்ய உதவும் வசதி (FAR)) தகுதி பெற்ற இந்திய அரசாங்கப் பத்திரங்கள் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் FTSE நிறுவனத்தின் வளர்ந்து வரும் சந்தை அரசாங்கப் பத்திரக் குறியீட்டில் (EMGBI) சேர்க்கப்படும்.
- மேலும், இந்தியப் பத்திரங்களானது பிராந்திய ரீதியிலான FTSE ஆசிய அரசாங்கப் பத்திரக் குறியீடு (AGBI) மற்றும் FTSE ஆசிய-பசிபிக் அரசாங்கப் பத்திரக் குறியீடு (APGBI) ஆகிய சிலவற்றில் சேர்க்கப்படும்.
- JP மோர்கன் சேஸ் & கோ மற்றும் ப்ளூம்பெர்க் ஆகியவற்றிற்குப் பிறகு இந்தியப் பத்திரங்களை உள்ளடக்கிய மூன்றாவது உலகளாவியப் பத்திரக் குறியீடு இதுவாகும்.

- FAR வசதியின் கீழ் தகுதி பெற்ற மற்றும் பிற குறியீட்டுச் சேர்க்கை விதிகளைப் பூர்த்தி செய்யும் அனைத்து இந்திய அரசு பத்திரங்களும் இந்தக் குறியீட்டில் சேர்க்கப்படும்.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் தேதிக்கு முன் வழங்கப்பட்ட 14 ஆண்டுகள் மற்றும் 30 ஆண்டுகள் அசல் தவணைக்காலம் கொண்ட பத்திரங்கள் இதில் அடங்கும்.




## இந்தியாவின் நேர்முக வரி வசூல் – 2023/24 ஆம் நிதியாண்டு

- தற்காலிக புள்ளி விவரங்களின் படி நிகர வசூல் 19.58 லட்சம் கோடி ரூபாயாக பதிவாகி உள்ள நிலையில் 2023-24 ஆம் நிதியாண்டில் (FY) நேர்முக வரி வசூலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- இது 2022-23 ஆம் நிதியாண்டில் வசூலான 16.64 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 17.70% அதிகமாகும்.
- மத்திய நிதிநிலை அறிக்கையில் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான நேர்முக வரி வருவாய் 18.23 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டிருந்தது.
- இருப்பினும், இது பின்னர் 19.45 லட்சம் கோடி ரூபாயாக மறுமதிப்பிடப்பட்டது.
- தற்காலிக நேர்முக வரி வசூலானது இந்தத் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 0.67% அதிகமாகவும், நிதிநிலை அறிக்கையில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீடுகளை விட 7.40% அதிகமாகவும் இருந்தது.
- வரிப் பணத் திருப்பிச் செலுத்துதல் தொகைகளை ஈடுசெய்வதற்கு முன்னதாக, 2023-24 ஆம் நிதியாண்டிற்கான மொத்த நேர்முக வரி வசூல் 23.37 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் நிதியாண்டில் வசூலான 19.72 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 18.48% அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- 2023-24 ஆம் நிதியாண்டிற்கான மொத்தத் தனிநபர் வருமான வரி வசூல் (STT உட்பட) 12.01 லட்சம் கோடி ரூபாயாகும்.
- இது முந்தைய ஆண்டின் 9.67 லட்சம் கோடி ரூபாயை விட 24.26% அதிகமாகும்.

| Fiscal year | Direct tax to GDP ratio | | Cost of direct tax collection | |
|---|---|---|---|---|
| | Tax-GDP ratio (in %) | Collection (in Rs cr) | Expenditure (in Rs cr) | Cost of collection (in %) |
| 2014-15 | 5.55% | 6,95,792 | 4,101 | 0.59% |
| 2015-16 | 5.47% | 7,41,945 | 4,593 | 0.61% |
| 2016-17 | 5.53% | 8,49,713 | 5,578 | 0.66% |
| 2017-18 | 5.86% | 10,02,738 | 6,087 | 0.61% |
| 2018-19 | 6.02% | 11,37,718 | 7,074 | 0.62% |
| 2019-20 | 5.23% | 10,50,681 | 6,952 | 0.66% |
| 2020-21 | 4.78% | 9,47,176 | 7,223 | 0.76% |
| 2021-22 | 5.97% | 14,12,422 | 7,479 | 0.53% |
| 2022-23 | 6.11% | 16,63,686 | 8,452 | 0.51% |
| 2023-24 | 6.64% | 19,60,166 | 8,634 | 0.44% |

## இந்திய ரூபாய் மதிப்பிலான வரம்பு நிர்ணயிக்கப்பட்ட கடன் வசதி




- இந்திய அரசானது, மொரீஷியஸ் நாட்டு அரசுக்கு 487.60 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய வரம்பு நிர்ணயிக்கப்பட்ட கடன் வசதியை பெறுவதற்கான ஒரு அனுமதியினை வழங்கியுள்ளது.
- எந்தவொரு நாட்டிற்கும் இந்தியாவினால் வழங்கப்பட்ட முதல் ரூபாய் மதிப்பிலான வரம்பு நிர்ணயிக்கப்பட்ட கடன் வசதி இதுவாகும்.
- இது இந்திய மேம்பாட்டு மற்றும் பொருளாதார உதவித் திட்டத்தின் (IDEAS) கீழ் திட்ட நிதியுதவிக்காக வழங்கப்படுகிறது.
- IDEAS என்ற முன்னெடுப்பானது, சலுகைக் கடன்கள் மூலம் பங்குதார நாடுகளில் மேற் கொள்ளப் படும் மேம்பாட்டுத் திட்டங்களை ஆதரிக்கிறது.
- இந்தத் திட்டத்திற்கு பாரத் ஸ்டேட் வங்கி சலுகை அடிப்படையில் நிதியளிக்கும்.

### கடற்பாசி இறக்குமதிக்கான வழிகாட்டுதல்கள்



- மத்திய அரசானது, 'இந்தியாவில் கடற்பாசிகளை இறக்குமதி செய்வதற்கான சில வழி காட்டுதல்களை' அறிவித்துள்ளது.
- கடலோர சமூகங்கள் சிறந்த வாழ்வாதார வாய்ப்புகளைக் கண்டறிய உதவுவதற்காக என்று உயர்தரக் கடற்பாசி விதைகள் அல்லது மூலவுயிர் முதலுருக்களை இறக்குமதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போதைய இப்புதிய வழிகாட்டுதல்களின் படி கடற்பாசிகளை இறக்குமதி செய்ய இறக்குமதியாளர்கள் மீன்வளத் துறையிடம் விரிவான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- இதனை வெளிநாட்டு நீர்வாழ் உயிரினங்களை இந்தியப் பெருங்கடல்களில் அறிமுகப் படுத்துவதற்கான தேசியக் குழு மதிப்பாய்வு செய்யும்.
- இந்த ஒப்புதலின் பேரில், உயர்தரக் கடற்பாசி மூலவுயிர் முதலுருக்களை இறக்குமதி செய்வதற்கு வசதியாக என்று, நான்கு வாரங்களுக்குள் இறக்குமதி அனுமதியை துறை வழங்கும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### IISc - நியூரோமார்பிக் கம்ப்யூட்டிங்

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் தரவுச் செயலாக்க முறைகளை மாற்றியமைக்கக் கூடிய ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளனர்.
- வழக்கமான சிலிக்கான் அடிப்படையிலான தொழில்நுட்பத்திற்குப் பதிலாக உலோக-கரிமப் படலத்தைப் பயன்படுத்தி மெம்ரிஸ்டர் எனப்படும் ஒரு வகை குறைக்கடத்தி சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- இந்த படலம் ஆனது உடலில் உள்ள மூளை நியூரான்கள் மற்றும் நரம்பிணைப்பு வலை அமைப்புகளைப் பயன்படுத்தி தகவலைச் செயலாக்கும் விதத்தைப் பெருமளவில் பிரதிபலிப்பதற்காக மெமரிஸ்டருக்கு உதவுகிறது.

- மெமரிஸ்டர், ஒரு வழக்கமான எண்ணிமக் கணினியுடன் ஒருங்கிணைக்கப்படும் போது, அதன் ஆற்றல் மற்றும் வேகச் செயல்திறனை நூற்றுக்கணக்கான மடங்கு அதிகரிக்கிறது.
- நியூரோமார்பிக் கம்ப்யூட்டிங் (நரம்பியல் மண்டல அமைப்பினை ஒத்த) என்பது மனித மூளையின் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கணினிகள் வடிவமைக்கப்பட்டு, அதன் மாதிரியில் உருவாக்கப்படும் ஒரு துறை ஆகும்.

## ஷாஹேத்-136B ஆளில்லா விமானம்


- ஈரான் முதன்முறையாக ஷாஹெட்-136B ஆளில்லா விமானம் மற்றும் ஜிஹாத் உந்து விசை ஏவுகணையைக் காட்சிப்படுத்தியுள்ளது.
- ஷாஹெட்-136B என்பது புதிய ஒரு வழி தாக்குதல் வகையான ஆளில்லா விமானம் ஆகும் என்பதோடு இது 'காமிகேஸ்' ஆளில்லா விமானம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு புதிய அம்சத்துடன், இது 4,000 கிலோமீட்டர் (2,500 மைல்கள்)க்கும் அதிகமான செயல்பாட்டு வரம்பைக் கொண்டுள்ளது.
- "ஜிஹாத்" என்பது ஒற்றை நிலை திரவ-எரிபொருள் சார்ந்த அமைப்பு கொண்ட 1,000 கி.மீ. வரம்பில் அதிக எண்ணிக்கையில் வெடிகுண்டுகளை ஏவும் திறன் கொண்டது.




## வெள்ளிக் கோளிற்கான இந்தியாவின் முதல் பயணம்

- 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ள வெள்ளிக் கோளிற்கான இந்தியாவின் முதல் ஆய்வுப் பயணத்திற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட செவ்வாய் கிரக சுற்றுக் கல ஆய்வுக் கலத்திற்குப் பிறகு ஏவப்பட்டவுள்ள இந்திய நாட்டின் இரண்டாவது கிரகங்களுக்கு இடையிலான ஆய்வுக் கலம் இதுவாகும்.
- இது வெள்ளிக் கோளின் மேற்பரப்பு மற்றும் தரைப்பகுதி, அதன் வளிமண்டலம், அதன் அயனி மண்டலம் மற்றும் சூரியனுடனான அதன் தொடர்பு ஆகியவற்றை நன்கு ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிறை, அடர்த்தி மற்றும் அளவு ஆகியவற்றில் புவியை ஒத்துள்ளதால் வெள்ளிக் கோளானது பொதுவாக பூமியின் இரட்டைக் கோள் என்று அழைக்கப்படுகிறது.


- ❖ எனவே, வெள்ளிக் கோளை ஆய்வு செய்வது, பூமியின் பரிணாமத்தைப் பற்றிய பல தகவல்களை அறிவியலாளர்களுக்கு வழங்கும்.
- ❖ குறிப்பிடத்தக்க வகையில், வெள்ளிக் கோளின் வரலாற்றில் ஒரு கட்டத்தில் அங்கு தண்ணீர் இருந்ததாகக் கருதப்படுகிறது, ஆனால் அது தற்போது உலர்ந்த மற்றும் தூசி நிறைந்த கிரகமாக மாறியுள்ளது.
- ❖ இது 462 டிகிரி செல்சியஸ் மிக உயர்ந்த மேற்பரப்பு வெப்பநிலையைக் கொண்டுள்ளது, எனவே இது புதன் கோளைக் காட்டிலும் அதிக வெப்பமானது.
- ❖ வெள்ளிக் கோளின் வளிமண்டல அழுத்தம் பூமியை விட அதிகமாக உள்ளது.
- ❖ வெள்ளிக் கோளின் வளிமண்டலமானது 96.5% கார்பன் டை ஆக்சைடால் ஆனது மற்றும் இந்தக் கிரகத்தில் சல்ப்யூரிக் அமில மேகங்கள் உள்ளன.
- ❖ பூமியுடன் ஒப்பிடும்போது வெள்ளிக் கோள் அதன் அச்சில் மிக மெதுவாக சுழல்கிறது, எனவே வெள்ளிக் கோளின் ஒரு சுழற்சி 243 பூமி நாட்கள் நீடிக்கும்.




## புதிய மருந்து விநியோக முறை

- ❖ நிக்கோமைசின் நிரப்பப்பட்ட பலபடிச் சேர்ம நுண் துகள்களை உருவாக்குவதற்காக ஸ்டிரெப்டோமைசஸ் spp என்ற பாக்டீரியாவால் உற்பத்தி செய்யப்பட்ட நிக்கோமைசின் என்ற கைட்டின் பல்லுறுப்பு பூஞ்சைக் கொல்லியை அறிவியல் ஆய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.
- ❖ கைட்டின் என்பது பூஞ்சை செல் சுவர்களின் முக்கிய கூறாகும் என்ற நிலையில் இது மனித உடலில் காணப்படுவதில்லை.
- ❖ மருந்து நிரப்பப்பட்ட நுண் துகள்கள் அஸ்பெர்கில்லஸ் spp என்ற பாக்டீரியத்தின் வளர்ச்சியை சீர்குலைப்பதாக கண்டறியப்பட்டதோடு, அஸ்பெர்கில்லஸ் எனப்படும் பூஞ்சை தொற்றினை பயனுள்ள முறையில் தடுப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

- உருவாக்கப்பட்ட இந்த நுண் கட்டமைப்பு ஆனது சைட்டோடாக்ஸிக் (செல் நச்சியம்) மற்றும் ஹீமோலிடிக் (இரத்த செல் சிதைவு) விளைவுகள் இல்லாததாகவும் கண்டறியப் பட்டது.
- பலபடி சேர்ம நுண் துகள்களின் பயன்பாடு மருந்து விநியோகத்தில் மிகவும் மேம்பட்ட ஒரு செயல்முறையாகும்.




## சுருள் வடிவ அண்டம் - கால்டுவெல் 45




- நாசாவின் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியானது கால்டுவெல் 45 அல்லது NGC 5248 எனப்படும் சுருள் வடிவ அண்டத்தின் ஒளிப்படக் காட்சியினைப் பகிர்ந்துள்ளது.
- இந்த சுருள் அண்டம் ஆனது பூமியிலிருந்து 59 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது நட்சத்திரங்கள் வழக்கத்தை விட மிகவும் அதிக விகிதத்தில் உருவாகும் இடமான நட்சத்திர வெடிப்பு பகுதிகளின் மையமாகும்.

## MAPCIS பள்ளம்


- ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் பூமியின் புவியியல் வரலாற்றில் ஒரு மோதலால் உருவான மாபெரும் பள்ளத்திற்கான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டமைப்பிற்கு, MAPCIS (ப்ரீகேம்ப்ரியன்-கேம்ப்ரியன் காலத்தில் நிகழ்ந்த மோதல்களால் ஏற்பட்ட மாபெரும் ஆஸ்திரேலியக்

கட்டமைப்பு) என்று பெயரிடப்பட்டது.

- ❖ இது மத்திய ஆஸ்திரேலியாவில் 600 கிலோமீட்டர் தொலைவு வரை பரவியுள்ளது.
- ❖ சுமார் 538.8 மில்லியன் முதல் 1 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக, நியோப்ரோ-டெரோசோயிக் சகாப்தத்திற்குள், எடியாகாரன் காலத்தின் முடிவில் இந்த மோதல் ஏற்பட்டிருக்கலாம்.



## நியூட்ரினோ மூடுதிரள்





- ❖ LUX-ZEPLIN (LZ) சோதனையானது கரும்பொருள் கண்டறிதலின் பரவெல்லைகளை விரிவுபடுத்தும் போது, நியூட்ரினோ மூடுதிரள் என்ற பிரச்சினை மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.
- ❖ LUX-ZEPLIN (LZ) சோதனையானது அமெரிக்காவின் தெற்கு டகோட்டாவில் உள்ள ஒரு அதிநவீன கரும்பொருள் கண்டறிதல் அமைப்பாகும்.

- பெரும்பாலும் "மர்மத் துகள்கள்" என்று குறிப்பிடப்படுகின்ற நியூட்ரினோக்கள் ஆனது, சுமார் சுழி அளவு நிறை மற்றும் மின்னூட்டம் இல்லாத அணு சார் துகள்கள் ஆகும்.
- நியூட்ரினோ மூடுதிரள் என்பது கரும்பொருள் கண்டறிதல் மீதான சோதனைகளில் நியூட்ரினோக்களால் ஏற்படும் குறுக்கீடு ஆகும்.

## உயிரணுக்களில் புரதத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான புதிய வழிமுறை


- Wntless (WLS) எனும் புரதத்தை உள்ளடக்கிய புதிய செயல்முறையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- முதுகெலும்புகள் கொண்ட விலங்குகளின் (முதுகெலும்பிகள்) உறுப்புகளின் பெரும் வளர்ச்சிக்கு இது முக்கியமானது.
- செல்களுக்குள் புரதங்கள் எவ்வாறு நகர்கின்றன என்பதை நன்கு விளக்க இந்தக் கண்டுபிடிப்பு உதவுகிறது.
- WLS என்பது உயிரணு சவ்வுகளில் காணப்படும் ஒரு புரதம் என்பதோடு Wnt3a எனப் படும் மற்றொரு புரதத்தை வெளியிடுவதற்கு ஒரு முக்கியமான புரதமுமாகும்.
- Wnt3a உயிரின வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களுக்கு வழிகாட்டும் சமிக்ஞைகளுக்கு உதவுகிறது.
- புரதங்கள் செல்லில் சரியான இடங்களுக்குச் செல்வதை WLS உறுதி செய்து குடல், நுரையீரல், உள் காது மற்றும் கண்கள் போன்ற உறுப்புகள் சரியாக வளர்ச்சியடைய உதவுகிறது.




## பூமியின் எதிர்காலம்

- எதிர்காலத்தில் எட்டு பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர்காலப் பூமி எவ்வாறு இருக்கும் என்பதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- எட்டு பில்லியன் ஆண்டுகளில் நமது கிரகம் எப்படி இருக்கும் என்று வானியலாளர்கள் தனித்துவமான கண்ணோட்டத்தினைப் பெற்றுள்ளனர்.

- KMT-2020-BLG-0414 என அழைக்கப்படும் இந்த கிரகம் ஆனது, ஒரு நட்சத்திரத்தின் பற்றி எரியும் வெள்ளை நிறக் குள்ளக் கோளினைச் சுற்றி வருகின்ற பூமியிலிருந்து 4,000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஒரு பாறைகள் நிறைந்த உலகமாகும்.
- சுமார் 5 பில்லியன் ஆண்டுகளில், நமது சூரியனும் ஒரு வெள்ளைநிறக் குள்ளக் கோளாக மாறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ஆனால் அதற்கு முன், புதன், வெள்ளி மற்றும் பூமி மற்றும் செவ்வாய் கோள்களும் கூட, ஒரு செந்நிற இராட்சத அமைப்பாக, வெளிப்புறமாக சுழல்கின்ற நமது சூரியனால் உள்ளிழுக்கப்படும்.
- சூரியன் ஒரு செந்நிற இராட்சத அமைப்பாக மாறுவதால், நீர் நிறைந்த உலகங்களாக மாற உள்ள பனிக்கட்டி நிறைந்த துணைக் கோளான யூரோப்பா மற்றும் என்செலடஸ் ஆகியவற்றிற்கு மனிதர்கள் இடம்பெயரலாம்.





## புதிய FAST தொகுப்பு ஆய்வகம்



- ஐந்நூறு மீட்டர் கொண்ட துணை கோள வடிவ தொலைநோக்கி (FAST) ஆனது, தென் மேற்கு சீனாவின் குய்சோவில் உள்ள கார்ஸ்ட் பகுதியில் அமைந்துள்ளது.
- தற்போது ஒவ்வொன்றும் 131 அடி (40 மீட்டர்) விட்டம் கொண்ட 24 புதிய நகரக் கூடிய ரேடியோ தொலைநோக்கிகள் இரண்டாவது கட்டமாக சேர்க்கப்பட உள்ளன.
- இந்த விரிவாக்கத்திற்கு FAST தொகுப்பு ஆய்வக அமைப்பு என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது தொலைநோக்கியைச் சுற்றி 3-மைல் (5 கிலோமீட்டர்) சுற்றளவில் இருக்கும் "ஒலி எழுப்பாத" மின்காந்த சூழலைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வளைய சூரிய கிரகணம் 2024




- செப்டம்பர் 17 ஆம் தேதியன்று ஏற்பட்ட பகுதியளவு சந்திர கிரகணத்தைத் தொடர்ந்து சமீபத்தில் ஒரு வளைய சூரிய கிரகணம் ஏற்பட்டது.
- ஈஸ்டர் தீவு மற்றும் சிலி மற்றும் அர்ஜென்டினாவின் தெற்கு முனைக்கு அருகிலுள்ள ஒரு சிறிய பகுதிகளில் மட்டுமே இந்த வளைய கிரகணத்தைக் காண முடிந்தது.
- சூரியனை முழுவதுமாக மறைக்க முடியாத அளவுக்கு சந்திரன் பூமியிலிருந்து வெகு தொலைவில் இருக்கும்போது வளைய கிரகணம் ஏற்படுகிறது.
- எனவே இது "நெருப்பு வளையம்" எனப்படும் பிரகாசமான ஒளி வளையத்தால் சூழப் பட்ட இருண்ட நிழலை உருவாக்குகிறது.
- இத்தகைய அடுத்த கிரகணம் ஆனது, 2025 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதியன்று ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் வடக்கு மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் புலப்படும்.
- இரண்டாவது, சூரிய கிரகணம் ஆனது செப்டம்பர் 21 ஆம் தேதியன்று ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகாவில் புலப்படும்.

## C/2023 A3 (சுச்சின்ஷன்–அட்லஸ்)

- C/2023 A3 (சுச்சின்ஷன்–அட்லஸ்) எனப்படும் ஒரு வால் நட்சத்திரம் ஆனது பெங்களூரு நகரின் வான் வெளியில் கடந்து சென்றது.
- C/2023 A3 வால் நட்சத்திரம் ஆனது முதன்முதலில் சீனாவின் பர்ப்பிள் மௌண்டைன் ஆய்வகத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது.
- C/2023 A3 என்பது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயணிக்கும் வால் நட்சத்திரம் அல்ல.
- அதாவது இந்த வால் நட்சத்திரம் ஆனது மீண்டும் எப்போது தோன்றும் என்பது குறித்த காலக்கெடு எதுவும் இல்லை.
- இந்த வால் நட்சத்திரம் ஆனது சுமார் 80,000 ஆண்டுகளுக்குப் பிறகு நமது சூரியக் குடும்பத்தினை மீண்டும் அடைந்துள்ளது.
- இது பூமியிலிருந்து சுமார் 129.6 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் பயணித்து

இருக்கும்.

- இது செக்ஸ்டன்ஸ் விண்மீன் திரளின் ஒரு பகுதியாகக் கூறப்படுகிறது.
- ஹாலி வால் நட்சத்திரம் என்பது 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் குறிப்பிட்ட காலஇடைவெளி முறைக்குட்பட்ட ஒரு வால் நட்சத்திரமாகும்.




## சூரியனின் சுழற்சி வரைபடம்

- இந்திய வானியலாளர்கள் முதன்முறையாக அதன் நில நடுக்கோட்டு ரேகையிலிருந்து அதன் துருவங்கள் வரையில் சூரியனின் சுழற்சி வேகத்தில் உள்ள ஒரு மாறுபாட்டை வரைபடமாக்கியுள்ளனர்.
- கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட 100 ஆண்டு காலத் தினசரி சூரியக் கண்காணிப்புகளைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் படைப்பு ஆனது சூரியனின் உள்ளக செயல்பாடுகளைப் பற்றிய ஒரு ஆழமான புரிதலை வழங்குகிறது என்பதோடு இது சூரியனின் செயல்பாடு மற்றும் அதனால் பூமியின் மீது ஏற்படும் தாக்கத்தைக் கணிக்க முக்கியமானதாகும்.
- சூரியன் என்பது வேறுபட்ட சுழற்சியைக் கொண்டுள்ளது, அதாவது அதன் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு வேகத்தில் சுழல்கின்றன.
- அதன் நடுக்கோட்டு ரேகையானது சுமார் 25 நாட்களில் ஒரு முழு சுழற்சியை நிறைவு செய்கிறது அதே சமயம் துருவப் பகுதிகள் ஆனது முழு சூழற்சியினை நிறைவு செய்ய சுமார் 35 நாட்கள் ஆகும்.




## 'சரோன்' துணைக் கோளில் CO2 மற்றும் H2O2

- ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது புளூட்டோவின் மிகப்பெரிய ஒரு துணைக் கோளான சாரோனில் கார்பன் டை ஆக்சைடு மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- சாரோனின் மேற்பரப்புப் படிகமான உறைபனி, அம்மோனியா மற்றும் பிற கரிமப் பொருட்களைக் கொண்டுள்ளது.
- சாரோன் புளூட்டோவின் பாதி அளவில் தோராயமாக 1200 கிலோமீட்டர் விட்டம் கொண்டது.




## புவியின் கவச அடுக்கில் மறைந்து காணப்படும் ஆறாவது பெருங்கடல்




- பூமியின் மேற்பரப்பிற்கு அடியில் சுமார் 700 கிலோமீட்டர் தொலைவில் ஆறாவது பெருங்கடல் காணப்படுவதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பெருங்கடல் ஆனது மேற்பரப்பில் உள்ள அனைத்துப் பெருங்கடல்களும் ஒரு சேர்ந்த அளவினை விட மூன்று மடங்கு பெரியதாகும்.
- இந்த நீர் தேங்கிய அமைப்பானது ரிங்வுடைட் எனப்படுகின்ற நீல நிறப் பாறை கட்டமைப்பில் சிக்கி, பூமியின் கவச அடுக்குகளுள் ஆழ் பகுதியில் அமைந்துள்ளது.
- இருப்பினும், இந்த நீர்த் தேக்க அமைப்பு ஆனது வழக்கத்தில் ஒரு பெருங்கடல் வடிவம் கொண்டதல்ல.


- மாறாக, அவை ரிங்வுடைட்டின் படிக அமைப்பில் சிக்கிய பல நீர் மூலக்கூறுகளின் தொகுதி ஆகும்.

## கையடக்கமான ஊடு கதிர் பாதுகாப்பு தடையமைப்பு

- ஒரு கையடக்கமான ஊடு கதிர் பாதுகாப்பு தடை மற்றும் பரிசோதனைப் பெட்டியை உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.
- இந்த உயிரி மருத்துவ சாதனமானது, நோய்களைக் கண்டறிய திசு மாதிரிகளின் ஊடு கதிர் அடிப்படையிலான திசு நோய் கூறு இயல் (ஹிஸ்டோபோதாலஜி) என்பதின் மீதான பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.
- கவசம் ஆனது சோதனைகளின் போது சில மில்லிஹெர்ட்ஸிலிருந்து மிகக் குறைவான மைக்ரோஹெர்ட்ஸ் அளவு வரை கதிர்வீச்சு அளவைக் குறைத்தது.





## மேம்படுத்தப் பட்ட PAP பேனா





- மேம்படுத்தப் பட்ட PAP (A-PAP) பேனாவைப் பயன்படுத்தி காகித அடிப்படையிலான சாதனங்களைத் தயாரிப்பதற்கான செலவு குறைந்த நுட்பத்தை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- கனரக உலோகம் மற்றும் நைட்ரைட் ஆகியவற்றின் இரசாயனக் கண்டறிதலுக்கான இரு பரிமாண (2D) காகித அடிப்படையிலான சில சாதனங்களை அவர்கள் உருவாக்கி உள்ளனர்.
- இந்தக் காகித அடிப்படையிலான சாதனங்கள் விரைவான, எளிமையான மற்றும் செலவு குறைந்த உருவாக்கம் மூலம் வேறுபடுகின்றன.

## ஒலி அலைகள் மூலம் புற்றுநோய் கண்டறிதல்




- இந்த முறையானது மீயொலி மூலம் நமது உடலின் திசுக்களின் ஒரு சிறிய பகுதியை இரத்தத்தில் வெளியிடப்படும் திவளைகளாக மாற்றுகிறது.
- இந்தக் குமிழ்களில் RNA, DNA மற்றும் புரதங்கள் போன்ற மூலக்கூறுகள் உள்ளன என்ற நிலையில் அவை அறிவியல் ஆய்வாளர்களுக்கு இந்த குறிப்பிட்ட வகை புற்றுநோயை அடையாளம் காண வழி வகுக்கின்றன.
- உயர் ஆற்றல் கொண்ட மீயொலி ஆனது புற்றுநோய் திசுக்களின் ஒரு சிறிய பகுதியை பல்வேறு திவளைகளாக உடைத்து, அவற்றின் உள்ளடக்கங்களை இரத்த ஓட்டத்தில் வெளியிடும்.
- இந்த வகை சோதனைக்கு நூறு மடங்கு குறைவாகவே, சுமார் 100 டாலர் (8,400 ரூபாய்) மட்டுமே செலவாகும்.

## உள்ளக மதிப்பீட்டுக் கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் அமைப்பு





- உள்ளக மதிப்பீட்டு கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் தொடர்புகளை அளவிடச் செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் உலகளாவிய தரநிலை சாத்தியமில்லை என்பதை அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.
- உள்ளக மதிப்பீட்டுக் கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் அமைப்பு என்பது ஒளியை விட வேகமாகத் தொடர்பு கொள்ள அனுமதிக்காத, தொலைதூர இயற்பியல் பொருட்களுக்கு இடையே உள்ள ஒரு விசித்திரமான தொடர்பை விவரிக்கிறது.

- இந்தப் புதிய ஆராய்ச்சி ஆனது உள்ளகக் கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் தொடர்புகளின் சாத்தியமானப் பயன்பாடுகளை விரிவுபடுத்துகிறது.
- இவை ஏற்கனவே பாதுகாப்பான தகவல் தொடர்பு, சீரற்ற எண் உருவாக்கம் மற்றும் குறியாக்க விசை உருவாக்கம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகின்றன.
- பாதுகாப்பான தகவல்தொடர்பு, சீரற்ற எண் வழங்கீடு மற்றும் இணைய சங்கேத (கிரிப்டோகிராஃபிக்) குறியீடு உருவாக்கத்திற்கான ஒரு முக்கிய ஆதாரமாக உள்ளக மதிப்பீட்டுக் கட்டமைப்புடன் இணங்காத குவாண்டம் அமைப்புகள் பயன்படுத்தப் படுகின்றன.


## PSLV-37 ஏவூர்தியின் மறு நுழைவு

- இஸ்ரோவின் துருவ செயற்கைக்கோள் ஏவூர்தி C-37 (PSLV C-37 ஏவூர்தி) வாகனத்தின் மேல் நிலையானது மிகவும் வெற்றிகரமாக பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்துள்ளது.
- PSLV C-37 ஏவூர்தியானது 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதியன்று கார்டோசாட்-2D செயற்கைக் கோளினையும், மேலும் 103 செயற்கைக்கோள்களையும் ஏந்தி விண்ணில் ஏவப்பட்டது.
- ஒரே ஏவூர்தியில் 104 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்திய முதல் திட்டம் என்ற வரலாற்றினை இஸ்ரோ படைத்தது.
- விண்ணில் ஏவப்பட்ட எட்டு ஆண்டுகளுக்குள் இந்த ஏவூர்தியின் பாகங்கள் வளி மண்டலத்தில் மீண்டும் நுழைவது என்பது சர்வதேச விண்வெளிக் குப்பைகளைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்களுடன் முழுமையாக இணங்குவதைக் குறிக்கிறது.
- பல்வேறு விண்வெளிக் குப்பைகள் தொடர்பான முகமைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவின் (IADC) வழிகாட்டுதல் ஆனது, புவி தாழ் மட்ட சுற்றுப் பாதையில் (LEO) செயலிழந்த கலத்தின் ஆய்வுப் பயணத்திற்குப் பிந்தைய சுற்றுப் பாதையில் அதன் செயல்பாட்டுக் காலத்தினை சுமார் 25 ஆண்டுகளாகக் குறைக்க பரிந்துரைக்கிறது.



## நிலவின் துருவ ஆய்வுக் கலம்

- விண்வெளி ஆய்வுப் பயணங்களைத் தீர்மானிக்கும் உச்ச நிலை அமைப்பான தேசிய விண்வெளி ஆணையம் ஆனது, ஐந்தாவது நிலவு ஆய்வுப் பயணத்திற்கு - நிலவின் துருவ ஆய்வுப் பணி அல்லது Lupex - அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த ஆய்வுப் பயணத்தினை இந்தியா மற்றும் ஜப்பான் இணைந்து செயல்படுத்த உள்ளன.
- இது இந்தியாவின் ஓர் இந்தியனை நிலவுக்கு அனுப்பி அவரை மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட நிலவு ஆய்வுத் திட்டத் தொடரின் ஒரு பகுதியாகும்.
- சந்திரயான்-4 மற்றும் Lupex ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று இணையாக மேற் கொள்ளப்படும்.



## MACE திட்டம்


- இந்தியா, லடாக்கின் ஹான்லேயில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய வரைபடமாக்க செரென்கோவ் தொலைநோக்கியை திறந்து வைத்துள்ளது.
- இது சுமார் 4,300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- முக்கிய வளிமண்டல செரென்கோவ் சோதனை (MACE) தொலைநோக்கி உலகின் மிக உயரமான தொலைநோக்கி ஆகும்.
- வளிமண்டலம் ஆனது காமா கதிர்களை உறிஞ்சுவதால் அவை பூமியின் மேற்பரப்பை அடையாது.
- இருப்பினும், அவை வளிமண்டலத்தில் ஒளியை விட வேகமாகப் பயணிப்பதால், ஒலி முழக்கம் (sonic boom) போன்ற செரென்கோவ் கதிர்வீச்சை வெளியிடும் உயர் ஆற்றல் துகள்களை உருவாக்குகின்றன.
- MACE தொலைநோக்கியின் கண்ணாடிகள் மற்றும் ஒளிப்படக் கருவிகள் இந்தக் கதிர்வீச்சைப் பற்றிக் கொள்கின்றன என்பத்டு பின்னர் அது மீண்டும் அதன் அண்ட மூலத்திற்குத் திரும்புகிறது.

## ஆர்க்டிக் கடலை 'மீண்டும் உறையச் செய்தல்'




- பனிக்கட்டி அளவினை "அதிகரித்தல்" மற்றும் ஆர்க்டிக் கடலை "மீண்டும் உறைய வைப்பதற்கு" உதவுகின்ற ஒரு புதுமையான வழியினை அறிவியலாளர்கள் உருவாக்கி வருகின்றனர்.
- கடல் நீரைப் பனிக்கட்டியின் மீது பரவச் செய்வதற்கு பொறியாளர்கள் நீரேற்றிகளைப் பயன்படுத்த உள்ளனர், இதனால் இந்நீர் குளிர் காலத்தில் உறைந்து, பனி அடுக்கு தடிமனாகும் என எதிர்பார்க்கப்படும்.
- இது கோடை காலத்தில் பனி நீண்ட காலம் நீடிப்பதை உறுதி செய்யும்.
- இந்த நடைமுறை ஹைட்ரஜன் உதவியுடன் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ஒவ்வொரு தசாப்தத்திலும், ஆர்க்டிக் பெருங்கடலானது அதன் பனியில் சுமார் 13 சதவீதத்தை இழந்து வருகிறது.

## மலையாக்க குவார்ட்ஸ் இழைகளில் தங்கக் கட்டிகள்



Supergene Au nugget from quartz vein
Crystalline Au overgrowths in sediments

- நில அதிர்வு அழுத்தத்தின் கீழ் உள்ள குவார்ட்ஸ் பாறைகளின் அழுத்த மின் விளைவு ஆனது குவார்ட்ஸ் இழைகளில் தங்கம் குவிவதற்குக் காரணமாகிறது என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கண்டத்தட்டு இயக்கங்களின் மோதல் போன்ற பெரிய அளவிலான புவியியல் செயல் முறைகள் நிகழ்ந்த மலைப் பகுதிகளில் பொதுவாக மலையாக்கத்தினால் உருவான தங்க அமைப்புகள் காணப்படுகின்றன.
- பெரும் மலைகளை உருவாக்கும் கண்டத்தட்டு செயல்முறைகளின் போது உருவாகும் மலையாக்கக் குவார்ட்ஸ் இழைகளில் பெரிய தங்கக் கட்டிகள் பெரும்பாலும் காணப் படுகின்றன.
- நிலநடுக்கங்களின் போது, குவார்ட்ஸ் படிகங்களின் மீது ஏற்படும் அழுத்தம், அவற்றின் மேற்பரப்பில் தங்கத்தைப் படிய வைப்பதற்கான பெரும் எதிர்வினையை ஏற்படுத்துவதால் இந்த தங்கக் கட்டிகள் உருவாகின்றன.
- இந்தச் செயல்முறையானது மீண்டும் மீண்டும் நிகழ்வதால், இது தங்கக் கட்டிகள் குவிவதற்கு வழி வகுக்கிறது.

## மூளையின் முதல் முழுமையான வரைபடம்

- நடக்கும் மற்றும் பார்க்கும் திறன் கொண்ட ஒரு விலங்கான, நன்கு வளர்ச்சியடைந்த ஈயின் மூளையில் உள்ள அனைத்து 139,255 நியூரான்களின் முதல் முழுமையான பிணைப்புகளின் வரைபடத்தினை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டனர்.
- முந்தைய ஆய்வுகள் ஆனது 3,016 நியூரான்களுடன் கூடிய பழ ஈ லார்வா அல்லது 302 நியூரான்களைக் கொண்ட நூற்புழு புழு போன்றவற்றின் சிறிய மூளை அமைப்புகளை வரைபடமாக்கியுள்ளன.
- பழ ஈக்களில் சுமார் 140,000 நியூரான்கள் உள்ளன என்ற ஒரு நிலையில் இது மனித மூளையில் உள்ள 86 பில்லியனுடன் ஒப்பிடும் போது ஒரு சிறிய எண்ணிக்கையாகும்.




## ஆர்ட்டிமிஸ் திட்டம் 2035


- 2035 ஆம் ஆண்டிற்குள் நமது புவிக்கு அருகில் உள்ள வேற்றுக் கிரக அண்டை கோளான செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.
- செவ்வாய்க் கிரகத்திற்கான பயணத்திற்கு 6 முதல் 7 மாதங்கள் வரை ஆகும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு இது சுமார் 402 மில்லியன் கிலோமீட்டர் தூரம் வரையிலான

பயணமாகவும் இருக்கும்.

- செவ்வாய்க் கிரகம் ஆனது 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவான அதே காலக் கட்டத்தில் தான் நமது சூரியக் குடும்பம் தோன்றியது.
- இதில் ஏராளமான திரவ வடிவ நீர் மற்றும் அடர்த்தியான வளிமண்டலம் இருந்ததால் இந்த செந்நிறக் கோள் ஆனது பூமியைப் போன்றே இருந்தது.




## TDP1 நொதிகள்




- கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் மேம்பாட்டு சங்கத்தின் (IACS) அறிவியல் ஆய்வாளர்கள், டைரோசில்-DNA பாஸ்போடையீஸ்ட்டிரேஸ் 1 (TDP1) எனப்படும் டிஎன்ஏ மறுசீரமைப்பு நொதியைத் தூண்டுவிப்பதன் மூலம் ஒரு புதிய சிகிச்சை முறையினை அடையாளம் கண்டுள்ளனர்.
- தற்போது பயன்பாட்டில் உள்ள புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளான கேம்ப்டோதெசின், டோபோடேகன் மற்றும் இரினோடெகன் ஆகியவை டோபோயிசோமரேஸ் 1 (Top1) என்ற நொதியைத் தடுப்பதில் கவனம் செலுத்துகின்றன.

- புற்றுநோய் செல்கள் ஆனது பெரும்பாலும் இந்த மருந்துகளுக்கு பெரும் எதிர்ப்பை உருவாக்குவதால், முன்னணி ஆராய்ச்சியாளர்கள் சில மாற்று சிகிச்சை உத்திகளைக் கண்டறிய இது வழி வகுக்கிறது.
- TDP1 நொதியினைத் தூண்டுவதன் மூலமான Top1 நொதியை இலக்காகக் கொண்ட கீமோதெரபி சிகிச்சையில் இருந்து தப்பும் புற்றுநோய் செல்கள் உயிரணுப் பிரிகையின் போது சேதமடைந்த டிஎன்ஏவை சரி செய்ய உதவும் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த செயல்முறையானது புற்றுநோய் செல்கள் கீமோதெரபி சிகிச்சையின் சில விளைவுகளை எதிர்க்கவும், தொடர்ந்து பெருகவும் வழி வகுக்கிறது.

## டிராகன் ஆளில்லா வான்வழி விமானங்கள்


- ரஷ்யா-உக்ரைன் போரில் ஒரு கொடிய புதிய ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- டிராகன் ஆளில்லா விமானங்கள் ஆனது அலுமினியம் மற்றும் இரும்பு ஆக்சைடு கலவையான தெர்மைட் என்ற பொருளை வீசின.
- தெர்மைட் பற்ற வைக்கப்படும் போது, அதனை அணைப்பதற்கு மிகவும் கடினமான ஒரு தானாக நீடிக்கின்ற வினையை (எரிதலை) தூண்டுகிறது.
- இது உடைகள் மற்றும் மரங்கள் முதல் இராணுவ தர வாகனங்கள் வரை சகல அனைத்தையும் எரித்து அழிக்கக் கூடியது என்பதோடு நீருக்கடியில் உள்ளவற்றை கூட எரிக்கக் கூடியது.
- முதலாம் உலகப் போரின் போது, ஜெர்மனி நாட்டின் செப்பெலின்ஸ் என்பது தெர்மைட் நிறைந்த குண்டுகளை வீசியது.
- இரண்டாம் உலகப் போரின் போது நேச நாடுகள் ஜெர்மனி மீது 4-பவுண்டு எடையுள்ள 30 மில்லியன் தெர்மைட் குண்டுகளையும், ஜப்பான் மீது 10 மில்லியன் குண்டுகளையும் வீசின.
- போர்களில் தெர்மைட் பயன்படுத்துவது சர்வதேசச் சட்டத்தின் கீழ் இன்னமும் தடை செய்யப்பட வில்லை.





## THAAD எறிகணை பாதுகாப்பு அமைப்பு


- அமெரிக்காவானது THAAD எனப்படுகின்ற தனது மேம்பட்ட எறிகணைப் பாதுகாப்பு அமைப்பினையும், அதனை இயக்கத் தேவையான பிரிவினரையும் சேர்த்து இஸ்ரேல் நாட்டிற்கு அனுப்பியுள்ளது.
- THAAD என்பது உயர் பகுதிகளில் இயக்கக் கூடிய இறுதிக் கட்ட பாதுகாப்பு அமைப்பு ஆகும்.
- இது எதிரி நாட்டு எறிகணைகளை இடைமறித்து அழிக்கப் பயன்படுகிறது.
- ஒரு THAAD அமைப்பானது 95 வீரர்கள், வாகனத்தில் ஏற்றப்பட்ட ஆறு ஏவு அமைப்புகள், 48 இடைமறி கணைகள் (ஒரு ஏவு அமைப்பிற்கு எட்டு), ரேடார் கண்காணிப்பு மற்றும் ரேடார் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இது குறுகிய தூரம் (1,000 கிலோ மீட்டர் வரை), நடுத்தர தூரம் (1,000-3,000 கிலோ மீட்டர்) ஆகிய வரம்புகளில் விரைவாக நிலைப்படுத்தும் திறன் கொண்டது.
- இது அவற்றின் இறுதி (முனைய) கட்டத்தின் போது வளிமண்டலத்திற்கு உள்ளே அல்லது வெளியே வரையறுக்கப்பட்ட இடைநிலை-வரம்பு (3,000-5,000 கிமீ) உந்துவிசை எறிகணை அச்சுறுத்தல்களை மறிக்கும் திறனைக் கொண்டுள்ளது.





## மர்மமான பழுப்பு நிறக் குறு விண்மீன்கள்

- 1995 ஆம் ஆண்டில், பூமியிலிருந்து சுமார் 19 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ள கிலியீஸ் 229 எனப்படும் ஒரு செந்நிறக் குள்ள நட்சத்திரத்தினை (குறு விண்மீன்) சுற்றி வரும் பழுப்பு நிறக் குள்ளக் கோளினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- கிலியீஸ் 229B எனப்படுகின்ற இந்தப் பழுப்பு நிறக் குள்ள நட்சத்திரமானது அதிக நிறை மிக்கதாக இருந்தாலும் மங்கலாக தென்பட்டது.
- அதன் நிறையானது சுமார் 70 வியாழன் கோளின் நிறைக்குச் சமமாகும் என்பதோடு தொலைநோக்கி மூலம் பதிவு செய்யப்பட்டதை விட அது பிரகாசமாக இருந்திருக்க வேண்டும்.

- கிலியீஸ் 229B ஆனது ஒரு இரட்டை விண்மீனாக இருக்கலாம் என அறிவியலாளர்கள் சந்தேகிக்கித்தனர்.
- மிகச் சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகள் கிலியீஸ் 229B ஆனது வியாழனின் நிறையில் 38 மற்றும் 34 மடங்கு நிறை கொண்ட இரண்டு பழுப்பு நிறக் குள்ள நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது (கிலியீஸ் 229 Ba மற்றும் கிலியீஸ் 229 Bb).
- அவை 12 நாட்கள் மற்றும் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தை விட 16 மடங்கு இடைவெளியுடன் ஒன்றையொன்று சுற்றி வருகின்றன.
- பதிவு செய்யப்பட்ட இப்பிரகாச அளவுகள் ஆனது, இந்த நிறை அளவு வரம்பில் உள்ள இரண்டு சிறிய பழுப்பு நிறக் குள்ளக் கோள்களுக்கான எதிர்பார்க்கப்படும் பிரகாச அளவுகளுடன் பொருந்துகின்றன.




## மூன்லைட் திட்டம்





- சர்வதேச விண்வெளி மாநாட்டில் ஐரோப்பிய விண்வெளி முகமையானது (ESA), அதன் மூன்லைட் சந்திர தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து சேவை (LCNS) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அடுத்த 20 ஆண்டுகளில் விண்வெளி முகமைகள் மற்றும் தனியார் நிறுவனங்களால்

திட்டமிடப்பட்ட 400க்கும் மேற்பட்ட நிலவு ஆய்வுப் பயணங்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இத்திட்டமானது துல்லியமான சுயக் கட்டுப்பாட்டுடன் கூடிய தரையிறக்கம், அதிவேக தகவல் தொடர்பு மற்றும் மேற்பரப்பு இயக்கம் ஆகியவற்றிற்கு வழி வகுக்கும் சுமார் ஐந்து நிலவு ஆய்வு செயற்கைக்கோள்களின் தொகுப்பைக் கொண்டிருக்கும்.
- இந்த செயற்கைக்கோள்கள் பூமிக்கும் நிலவிற்கும் இடையே 2,50,000 மைல்கள் அல்லது 4,00,000 கிலோமீட்டர்களுக்கு மேலான பகுதிகளில் தரவு பரிமாற்றத்தை நன்கு செயல் படுத்தும் என்று கூறப்படுகிறது.
- ஐரோப்பா, தனது ஆர்கோனாட் விண்கலத்தினை 2031 ஆம் ஆண்டில் நிலவில் தரை இறக்கத் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## புதிய ஒளிவழி வேதிவினையூக்கி

- சல்ஃபாமெத்தோக்சசோலில் சிதைவுறக்கக் கூடிய மிகவும் திறம் மிக்க ஒளி வழி வேதி வினையூக்கியை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது அபாயகரமான இரசாயனங்களைக் குறைவாகக் கொண்ட மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் மாசுபாட்டுடன் நன்கு தொடர்புடைய சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்கக் கூடிய ஒரு பரந்த அளவிலான பயன்பாடு கொண்ட ஒரு நுண்ணுயிர் எதிர்ப்பி ஆகும்.
- நுண்ணுயிர் எதிர்ப்பி மாசுபாடு ஆனது நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் எதிர்ப்புத் திறன், சூழலியல் பாதிப்பு, மனித உடல்நலம் சார்ந்த பிரச்சினைகள் போன்ற பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.
- அறிவியலாளர்கள் தாமிர துத்தநாக வெள்ளீய சல்பைட் $Cu_2ZnSnS_4$ (CZTS) நுண் துகள்கள் (NPs) மற்றும் தாமிரத் துத்தநாக வெள்ளீய சல்பைட் - டங்ஸ்டன் டைசல்பைட் CZTS-$WS_2$ கலவையை ஒருங்கிணைத்துள்ளனர்.
- சல்ஃபாமெதோக்சசோல் (SMX) போன்ற மிகப் பரந்த பயன்பாடு கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பிகள் நீண்ட காலமாக சிறுநீர் மற்றும் சுவாசக்குழாய் நோய்த்தொற்றுகள் போன்ற மனித நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.
- இருப்பினும், சுமார் 54%க்கும் அதிகமான SMX ஆனது, நோயாளிகளின் மலம் மற்றும் சிறுநீருடன் கலந்து சுற்றுச்சூழலில் வெளியிடப்படுகிறது.



## வயநாட்டில் X-அலைவரிசை ரேடார்




- மத்தியப் புவி அறிவியல் அமைச்சகம் ஆனது கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் X-அலை வரிசையிலான ரேடாரை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சாதனமானது, அதனைச் சுற்றியுள்ளப் பொருட்களின் தூரம், வேகம் மற்றும் இயற்பியல் பண்புகளைத் தீர்மானிக்க ரேடியோ அலைகளைப் பயன்படுத்துகிறது.
- டாப்ளர் ரேடார் கருவியானது, கதிர்வீச்சின் அலைநீளத்தை விட சிதறல் அலைநீளம் மிகவும் சிறியதாக இருக்கும் ரெய்லே சிதறலைச் சார்ந்துள்ளது.
- X-அலைவரிசை ரேடார் என்பது மின்காந்த நிறமாலையின் X-அலைவரிசையில் கதிர் வீச்சை வெளியிடும் ரேடார் கருவியாகும் என்பதோடு இது சுமார் 8-12 ஜிகாஹெர்ட்ஸ் அளவில் சுமார் 2 முதல் 4 சென்டி மீட்டர் அலைநீளங்களுடன் தொடர்புடையது.
- சிறிய அலைநீளங்கள் என்பவை ரேடார் கருவியினை அதிக தெளிவுத்திறன் கொண்ட படங்களை உருவாக்க உதவுகின்றன.
- X-அலைவரிசை ரேடார்கள் ஒப்பீட்டளவில் குறுகிய வரம்பைக் கொண்டுள்ளன.
- புதிய ரேடார் கருவியானது, நிலச்சரிவு எச்சரிக்கைகளைத் தெரிவிப்பதற்காக, மண் போன்ற துகள்களின் இயக்கங்களைக் கண்காணிக்க முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட X-அலைவரிசை சார்ந்த புயல் கண்டறிதல் ரேடார் கருவியானது 1970 ஆம் ஆண்டில் புது டெல்லியில் நிறுவப் பட்டது.

## SPADEX இணைப்புத் திட்டம்


- அடுத்து எதிர் காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள SPADEX – விண்வெளி கல இணைப்பு சோதனை எனப்படும் முக்கிய திட்டத்தின் ஒரு பகுதியாக 400கிலோ கிராம் எடையுள்ள இரண்டு செயற்கைக் கோள்களை இஸ்ரோ பெற்றுள்ளது.
- இந்த செயற்கைக்கோள்கள் மணிக்கு சுமார் 28,000 கிலோ மீட்டர் வேகத்தில் நன்கு பயணித்து, ஒரு 'விண்வெளி இணைவு' மற்றும் ஒற்றைச் சுற்று கல அமைப்பினை உருவாக்கக் கூடிய வகையில் துல்லியமாக அவற்றை இணைத்துக் கொள்ளும்.
- அனந்த் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (ATL) என்ற ஒரு நிறுவனமானது, இஸ்ரோ நிறுவனத்திற்காக சுமார் 400 கிலோ எடை கொண்ட இரண்டு செயற்கைக்கோள்களை இணைக்கும் செயல்முறையினை தயார் செய்துள்ளது.

- இஸ்ரோ தனது செயற்கைக்கோள்களை ஓர் இந்திய தனியார் துறை நிறுவனத்தினால் முழுமையாக ஒருங்கு சேர்த்து, ஒருங்கிணைத்து, ஒரு தனியார் சோதனைத் தளத்தில் சோதனை செய்வது இதுவே முதல் முறையாகும்.




## அதிகபட்ச சூரியச் செயல்பாட்டு நிலை 2024

- தற்போதைய சூரிய சுழற்சியில் சூரியன் அதன் "மிகவும் அதிகபட்சச் செயல்பாட்டுக் காலக் கட்டத்திற்குள்" நுழைந்துள்ளது.
- அதிகபட்ச சூரிய ஒளி என்பது சூரியக் கரும்புள்ளிகள் மற்றும் சூரிய நிகழ்வுகளின் குறிப்பிடத் தக்க அதிகரிப்பினைக் கொண்டு வகைப்படுத்தப்படும் ஒரு செயல்பாட்டு நிலையாகும்.
- சூரிய சுழற்சியானது மிக குறைந்த மற்றும் அதிகபட்ச செயல்பாட்டுக் காலங்களுக்கு இடையிலான சூரியனின் மிகவும் இயற்கையான ஏற்ற இறக்கச் செயல்பாடுகளைக் குறிக்கிறது.
- ஏறக்குறைய 11 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் சூரியனின் இந்த உச்சகட்ட செயல் பாட்டின் போது - பூமியின் உள்ள வடக்கு மற்றும் தென் துருவங்கள் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இடமாற்றம் செய்யப்படுவது போலவே - சூரியனின் காந்தத் துருவங்கள் இடம் மாறுகின்றன.
- அதிகபட்சச் செயல்பாட்டுக் கட்டத்தில், சூரியன் ஆனது ஒளி, ஆற்றல் மற்றும் சூரிய கதிர்வீச்சு ஆகியவற்றின் மாபெரும் வெடிப்புகளை உருவாக்கும் திறன் கொண்டது.
- சூரிய உமிழ்வுகள் பூமியின் காந்தப்புலத்துடன் தொடர்பு கொள்வதன் விளைவாக புவி காந்தப் புயல்கள் உருவாகின்றன.



## நீரிழிவு நோய்க்கான திறன் மிகு இன்சுலின்


- அறிவியலாளர்கள், ஒருவரின் இரத்த சர்க்கரை அளவின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப செயலாற்றுகின்ற ஒரு "திறன் மிகு" இன்சுலினை "அரிய" நீரிழிவு சிகிச்சைக்கு வேண்டி உருவாக்கியுள்ளனர்.
- புதிதாக உருவாக்கப்பட்ட NNC2215 ஆனது எலிகள் மற்றும் பன்றிகளில், இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவினை நன்கு குறைப்பதில் மனித இன்சுலினைப் போலவே செயல்படுகிறது.
- இந்த இன்சுலின் செயலாற்றுவதற்கு என்று குறிப்பிடத்தக்க குளுக்கோஸ் தூண்டுதல் தேவைப் படுகிறது என்பதோடு அது செயல்படுத்தப் பட்டவுடன், இன்சுலின் அளவு திடீரென உயர்கிறது.
- பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில் தொடங்கும் முதல் வகை நீரிழிவு நோய் ஆனது, கணையம் இன்சுலின் (அல்லது போதுமான இன்சுலின்) உற்பத்தி செய்யாத போது ஏற்படுகிறது.
- இரண்டாம் வகை நீரிழிவு நோயில், உடலின் செல்கள் இன்சுலின் எதிர்ப்பை வளர்த்துக் கொள்கிறது, அதாவது கணையத்தால் உற்பத்தி செய்யப்படுவதை விட அதிக அளவு தேவைப் படுகிறது.




## அல்கேன்கள் - கைரல் ப்ரான்ஸ்டெட் அமிலங்கள்

- மிக நன்கு வரையறுக்கப்பட்ட கைரல் ப்ரான்ஸ்டெட் அமிலங்களைப் பயன்படுத்தி அல்கேன்களைச் செயல்படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது வேதிவினைகளின் செயல்திறனையும் தேர்ந்தெடுக்கும் திறனையும் கணிசமாக மேம்படுத்துகிறது.

- அல்கேன்கள் ஆனது முற்றிலும் ஒற்றை இணைவு கார்பன் மற்றும் ஹைட்ரஜன் அணுக்களைக் கொண்டிருக்கின்ற மற்றும் வேறு எந்தச் செயல்பாட்டுக் குழுவையும் கொண்டிருக்காத கரிம சேர்மங்கள் ஆகும்.
- அவை உயிரியல் ரீதியாக ஒப்பீட்டளவில் செயலற்றவை என்பதோடு மேலும் அவை பெரும்பாலும் உயிரினங்களின் வேதியியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை.
- அல்கேன்கள், பொருத்தமானச் சூழ்நிலையில் ஆக்சிஜன், ஹாலஜன்கள் மற்றும் வேறு சில கூறுகளுடன் வினை புரிகின்றன.
- அல்கேன் எரிபொருளாகப் பயன்படுத்தப் படும் போது எந்திரம் அல்லது உலைகளில் எரிதல் செயல்முறையின் போது ஆக்ஸிஜனுடனான வினை ஏற்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## தட்டைப்புழுவின் புதிய அயலக இனங்கள்

- ஒரு தட்டைப்புழுவின் புதியதொரு அயலக இனமானது அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவின் பல பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளது.
- அமாகா சூடோபாமா என்று பெயரிடப்பட்ட இந்த இனமானது, ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் 2020 ஆம் ஆண்டில் வட கரோலினாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட இனமாக கருதப்படுகிறது.
- பின்னர் இந்தத் தட்டைப்புழு இனம் ஆனது முற்றிலும் ஒரு வேறுபட்ட இனம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- இந்த நிலப்பரப்பு வாழ் தட்டைப்புழுக்கள் மற்ற முதுகெலும்பில்லாத உயிரினங்களை, குறிப்பாக பிற உள்நாட்டுப் புழு இனங்கள், நத்தைகள் மற்றும் அட்டைப் பூச்சிகளைக் கொல்லும் என்று அறியப்படுகிறது.

## தெத்சி ஈ

- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) புதிய பதிவின் படி, 34 ஆப்பிரிக்க நாடுகளில் தெத்சி ஈக்கள் (குருதி உறிஞ்சும் ஈக்கள்) உள்ளன.
- தெத்சி ஈக்கள் (குலோசினா பேரினம்) டிரைபனோசோம்களை கடத்துகின்றன.

- டிரைபனோசோம்கள் ஒற்றை உயிரணு கொண்ட ஒட்டுண்ணிகள் ஆகும் என்பதோடு அவை மனிதர்களில் உறக்க நோயை ஏற்படுத்துகின்றன.
- இந்த ஒட்டுண்ணிகள் ஆப்பிரிக்காவில் உள்ள கால்நடைகளில் மிகவும் ஒரு குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.




## புதிய பேய் சுறா இனம்

- ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு அருகில் உள்ள ஆழ்கடல் நீரில் வாழும் புதிய வகை பேய் சுறா மீன் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துளனர்.
- ஆஸ்திரேலியாவின் குறுகிய மூக்கு கொண்ட ஸ்பூக்ஃபிஷ் அல்லது ஹாரியோட்டா ஏவியா சுறாக்கள் திருக்கை மீன்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பைக் கொண்டு உள்ளன.
- இது போன்ற பேய் சுறாக்கள் பெரும்பாலும் கடல் பகுதியின் அடிவாரத்தில் - 2,600 மீ (8,530 அடி) ஆழத்தில் மட்டுமே வாழ்கின்றன.




## மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பறவை இனம்

- காசோவரி (தீக்கோழிகள்) பறவைகள் ஆனது வடக்கு ஆஸ்திரேலியா, நியூ கினியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் காணப்படுகின்றன.
- அதிகரித்துள்ள வேட்டையாடுதல் மற்றும் விரைவான வாழ்விட இழப்பு ஆகியவற்றால் இந்த இனம் தற்போது அழியும் அபாயத்தில் உள்ளது.
- ஆஸ்திரேலியாவின் காடுகளில் சுமார் 5,000க்கும் குறைவான எண்ணிக்கையிலான

பறவைகளே எஞ்சியுள்ளன.

- உலகிலேயே மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பறவையாக இது கருதப்படுகிறது.
- காசுவாரிடே குடும்பம் ஆனது, உயிருடன் காணப்படும் மூன்று காசோவரி இனங்களை – அதாவது காசுவேரியஸ் இனத்தினைச் சேர்ந்த அனைத்தையும் - உள்ளடக்கியதாகும்.
- மிகப்பெரிய காசுவேரியஸ் இனமானது ஆறு அடி உயரம் மற்றும் 160 பவுண்டுகள் வரை எடையுள்ளதாக இருக்கும்.
- இந்தப் பெரிய பறவைகளால் பறக்க முடியாது ஆனாலும் அவற்றின் மிகவும் சக்தி வாய்ந்த கால்களால் அவை அதிக வேகத்தில் (31m/Hr) ஓடக் கூடியவை.
- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 26 ஆம் தேதியன்று உலக நெருப்புக்கோழிகள் தினம் அனுசரிக்கப் படுகிறது.




## இந்தியக் காட்டு கழுதை - குர்


- லிட்டில் ரான் ஆஃப் கட்ச் என்ற பகுதியில், உள்ளூரில் குர் என்று அழைக்கப்படுகின்ற இந்தியக் காட்டு கழுதைகளின் (ஈக்வஸ் ஹெமியோனஸ் குர்) எஞ்சியிருக்கும் ஒரே வாழ்விடமான காட்டுக் கழுதை சரணாலயம் உள்ளது.
- இந்தப் பகுதியில் சுமார் 6,000 மணல் மற்றும் பழுப்பு நிறக் கழுதைகள் வாழ்கின்றன.
- 1850 ஆம் ஆண்டுகளில் இந்தப் பகுதியில் கடைசியாகக் காணப்பட்ட சிவிங்கிப் புலி மற்றும் சிங்கம் போன்ற வேட்டையாடும் விலங்குகளையும் தாண்டி இது வாழ்கிறது .
- பல நோய்களின் காரணமாக குர் இனமானது சமீபத்தில் அழிந்து வரும் நிலையினை எட்டும் சூழலை அடைந்துள்ளது.
- வைரஸ் ஆப்பிரிக்கக் குதிரை நோய் மற்றும் சுர்ரா (புரோட்டோசோவா ஒட்டு உண்ணியான டிரிபனோசோமா எவன்சியால் ஏற்பட்டு பூச்சிகள் கடிப்பதால் அதிகம் பரவுகிறது) ஆகிய நோய்கள் அதிக எண்ணிக்கையிலான கழுதைகளை அழித்தது.
- 1960 ஆம் ஆண்டுகளில் சில நூறு கழுதைகள் மட்டுமே இந்த நோயில் இருந்து உயிர் பிழைத்தன.

## பொன்னிறக் குள்ளநரி இனங்களில் எரித்ரிசம்

- நீலகிரியில் உள்ள கேனிஸ் ஆரியஸ் என்ற சில பொன்னிறமான குள்ளநரிகளில் எரித்ரிசத்தின் (அசாதாரண சிகப்பு நிறமிகள்) முதல் வெளிப்பாட்டை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- இது சிவப்பு நிற தோல் நிறமியின் அசாதாரண பிறவிக் கோளாறு ஆகும்.
- பொன்னிறக் குள்ளநரியின் ஒட்டு மொத்த வாழ்விட வரம்பில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய முதல் பதிவு இதுவாகும்.
- எரித்ரிசம் என்ற நிலையானது ஏராளமான சிவப்பு நிறமிகளுடன் கூடிய மெலனின் பற்றாக்குறை கொண்ட நிலையாக வகைப்படுத்தப்படுகிறது.
- இது சாதாரணப் புறத்தோற்றத்துடன் ஒப்பிடும்போது ஒரு வெளிர்ந்த மற்றும் சிவப்பு தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

## பிரஸ்பா ஏரி

- ஐரோப்பாவின் பழமையான ஏரிகளில் ஒன்றான பிரஸ்பா ஏரி மெதுவாக அழிந்துக் கொண்டிருக்கிறது.
- சிறிய லேக் ப்ரெஸ்பா என்றும் அழைக்கப்படும் லிட்டில் ப்ரெஸ்பா ஏரியின் பெரும் பகுதியானது கிரேக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ளது என்ற நிலையில் அதன் தெற்கு முனை அல்பேனியா வரை நீள்கிறது.
- இது வடக்கே உள்ள பெரிய பிரெஸ்பா ஏரியின் சிறிய சார்பு எரியாகும்.
- அல்பேனியாவில் உள்ள லிட்டில் பிரஸ்பா ஏரியின் 450 ஹெக்டேர்களில், குறைந்தது 430 ஹெக்டேர் சதுப்பு நிலங்களாக உள்ளன அல்லது வறண்டு விட்டன.




## இந்தியாவில் தேன்வளைக்கரடி

- ❖ உத்தரகாண்ட் மாநிலத்தின் தெராய் கிழக்கு வனப் பிரிவில் (TEFD) முதல் முறையாக ராடெல் எனப்படும் தேன்வளைக்கரடி ஒளிப்படக் கருவியில் படம்பிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ தேன்வளைக்கரடிகள் வீசல் (மர நாய்) குடும்பத்தைச் சேர்ந்த அனைத்துண்ணி வகை பாலூட்டிகள் ஆகும்.
- ❖ சிறிய விலங்குகள், பழங்கள் மற்றும் தேன் ஆகியவற்றை உண்ணும் இந்த இரவு வாழ் உயிரினங்களின் உணவு முறை வேறுபட்டதாகும்.
- ❖ IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இந்த இனமானது "தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்" என்று பட்டியலிட்டுள்ளது.



## NBSAP கண்காணிப்பு அமைப்பு

- ❖ இயற்கைக்கான உலக வனவிலங்கு நிதியமானது (WWF) தேசியப் பல்லுயிர்ப்பெருக்க உத்தி மற்றும் செயல் திட்டங்கள் கண்காணிப்பு (NBSAP) எனப்படும் ஒரு புதிய செயற் கருவியினை உருவாக்கியுள்ளது.
- ❖ உலகளாவியப் பல்லுயிர் பெருக்கக் கட்டமைப்பின் (GBF) இலக்குகளுடன் நன்கு ஒன்றி போகும் தங்கள் NBSAP அமைப்புகளை மேம்படுத்துவதில் அந்த நாடுகளின் மீதான முன்னேற்றத்தை இது கண்காணித்து வருகிறது.
- ❖ உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்கக் கட்டமைப்பை ஏற்பது என்பது 196 நாடுகளின் முக்கியமான உறுதிப்பாடாகும்.
- ❖ 10 சதவீத நாடுகள் மட்டுமே பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான சில உறுதி மொழிகளை நிறைவேற்றியுள்ளன.
- ❖ தற்போது, 15வது பங்குதாரர்கள் மாநாட்டிலிருந்து (COP15) 20 நாடுகள் மட்டுமே தங்கள் NBSAPகளை முழுமையாகத் திருத்தியமைத்துள்ளன.
- ❖ 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திய நிலவரப்படி, ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒன்பது நாடுகள் மட்டுமே இந்த மேம்படுத்தப்பட்ட திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளன.
- ❖ இதன் மூலம் இந்தியா உட்பட 186 நாடுகள் இன்னமும் தனது திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.
- ❖ குன்மிங்-மாண்ட்ரியல் உலகப் பல்லுயிர்ப் பெருக்கக் கட்டமைப்பு (GBF) ஆனது 2022 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## இந்தியாவில் யானைகளின் நிலை 2022-23

- சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது, 'இந்தியாவில் யானைகளின் நிலை 2022-23' என்ற தலைப்பிலான அதன் யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை நிலுவையில் வைத்து உள்ளது.
- இந்த வெளியிடப்படாத அறிக்கையின் தரவுகள் ஆனது கிழக்கு-மத்திய மற்றும் தெற்கு நிலப்பரப்புகளில் காணப்படும் யானைகளின் எண்ணிக்கையில் மிக அதிகப்படியான வீழ்ச்சியைக் காட்டுகின்றன.
- தெற்கு மேற்கு வங்காளம் (84%), ஜார்க்கண்ட் (64%), ஒடிசா (54%) மற்றும் கேரளாவில் (51%) யானைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவு அளவானது குறிபிடத்தக்க அளவில் அதிகமாக உள்ளது.
- 2002 ஆம் ஆண்டு வரை, இந்தியாவில் யானைகள் எண்ணிக்கை கணக்கெடுப்பு ஆனது "மொத்த நேரடி எண்ணிக்கை" முறையில் கணக்கிடப்பட்டன.
- 2002 ஆம் ஆண்டில் தென் மாநிலங்களில் "மறைமுக சாணக் கணக்கெடுப்பு முறை" அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் ஒரு தொகுதி அடிப்படையிலான கணக்கெடுப்பு மற்றும் சாணக் கணக்கெடுப்பு ஆகிய முறைகளை இணைத்து ஒரு கணக்கெடுப்பு நெறிமுறையைப் பயன்படுத்தின.

**ELEPHANT NUMBERS IN INDIA (2012-2023)**


| States | 2012 | 2017 | 2022-23 | Change |
|---|---|---|---|---|
| Tamil Nadu | 4015 | 2761 | 3136 | 13.6% |
| Karnataka | 6068 | 6049 | 6013 | -0.6% |
| Kerala | 6117 | 5706* | 2785 | -51.2% |
| Maha (W Ghat) | 4 | 6 | 27 | 350% |
| Western Ghats | 16204 | 14522 | 11961 | -17.6% |

## நீக்ரோ நதி நீர்மட்டம்




- அமேசான் ஆற்றின் முக்கிய துணை நதிகளில் ஒன்றான நீக்ரோ நதியின் நீர்மட்டம் ஆனது இதுவரை பதிவு செய்யப்படாத அளவிற்கு மிகவும் குறைந்துள்ளது.
- மனௌஸ் என்ற துறைமுகத்தில் நீக்ரோ ஆற்றின் நதியின் நீர்மட்டம் சமீபத்தில் 12.66 மீட்டராக இருந்தது.
- இதன் சாதாரண நீர் மட்டம் சுமார் 21 மீட்டர் ஆகும்.
- சுமார் 122 ஆண்டுகளுக்கு முன்பு அளவீடுகள் தொடங்கியதிலிருந்து பதிவான மிகக் குறைவான பதிவு இதுவாகும்.
- நீக்ரோ நதி அமேசான் படுகையின் 10 சதவீதப் பகுதிகளுக்கு நீர் வழங்குகிறது, மேலும் நீர் கொள்ளளவின் அடிப்படையில் இது உலகின் ஆறாவது பெரிய நதியாகும்.
- 2250 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த நதி கொலம்பியா, வெனிசுலா மற்றும் பிரேசில் வழியாகச் செல்கிறது.

## என்விஸ்டாட்ஸ் இந்தியா 2024: சுற்றுச்சூழல் மதிப்பீடுகள்




- புள்ளியியல் அமைச்சகம் (MoSPI) ஆனது 7வது தொடர் “EnviStats India 2024: Environment Accounts” அறிக்கையினைத் தொகுத்து வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் சூரிய சக்தியின் நிறுவப்பட்ட திறன் ஆனது 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2.82 ஜிகா வாட்டிலிருந்து 25 மடங்குக்கு மேல் அதிகரித்து 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 73.32 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது.

- உலகின் ஆவணப்படுத்தப்பட்ட உயிரினங்களில் சுமார் 8% கொண்ட உலகின் 17 அதிக பன்முகத் தன்மை கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட 36 பல்லுயிர்ப் பெருக்க மையங்களில் 4 இடங்களை இந்தியா கொண்டுள்ளது.
- 2000 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் மொத்தப் பாதுகாக்கப் பட்ட பகுதிகளின் எண்ணிக்கையில் சுமார் 72 சதவீதமும் மற்றும் பரப்பளவில் 16 சதவீதமும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- கடல் சார் சுற்றுச்சூழலின் முக்கியமான துணைச் சுற்றுச்சூழல் அமைப்பான சதுப்பு நிலங்களின் பரவல் 2013 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலங்களில் சுமார் 8% அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் உள்ள பெரும்பாலான IUCN செந்நிறப் பட்டியலில் இடம் பெற்ற இனங்கள் ஆனது 'தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்' என்ற வகையின் கீழ் உள்ளன.

## ஒடிசாவில் அரிய வகை கருஞ்சிறுத்தை




- ஒடிசா மாநிலத்தின் சுந்தர்கர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் கருஞ்சிறுத்தை ஒன்று கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த மாவட்டத்தின் ஹேமகிரி வனச் சரகத்தில் உள்ள டகோரா வனப்பிரிவில் இந்தக் கருஞ்சிறுத்தை தென்பட்டது.
- இதுவரை, ஒடிசாவின் சிமிலிபால் புலிகள் வளங்காப்பகம் (STR) ஆனது கரு நிறமி அதிகம் கொண்ட வங்காளப் புலிகள் (RBT) கொண்ட நாட்டின் ஒரே வாழ்விடமாக அறியப் படுகிறது.

## புதிய குயவக் குளவி இனங்கள்


- கிழக்கு இமயமலையில் உள்ள அருணாச்சலப் பிரதேசத்தில் புதிய வகை குயவக் குளவி இனத்தை பூச்சியியல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சூமெனிஸ் சியாங்கென்சிஸ் எனப்படும் இந்தப் புதிய இனமானது, மேல் மட்ட சியாங் பகுதியில் காணப்பட்டது.
- இந்தப் புதிய இனங்கள் ஆனது குறிப்பிட்ட உருவவியல் அம்சங்கள் மற்றும் வண்ண வடிவங்களைக் கொண்டிருப்பதால் மற்றவற்றிலிருந்து வேறுபடுகின்றன.
- இந்த இனங்களில், 205 பேரினங்களில் சுமார் 3,795 இனங்கள் காணப்படுவதாக குறிப்பிடப்

பட்டுள்ளன.



## காட்டுக் கழுதை கணக்கெடுப்பு 2024

- கடந்த ஐந்தாண்டுகளில் குஜராத்தில் காணப்படும் இந்தியக் காட்டுக் கழுதைகளின் எண்ணிக்கை 26 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட 6,082 எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது காட்டுக் கழுதையின் மொத்த எண்ணிக்கை 7,672 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- முன்னதாக அவை வடமேற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து மத்திய ஆசியாவின் வறண்ட பகுதிகள் வரையிலான நிலப்பரப்புகளில் காணப்பட்டன.
- ஆனால், தற்போது முதன்மையாக லிட்டில் ரான் ஆஃப் கட்ச் மற்றும் கிரேட் ரான் ஆஃப் கட்ச் பாலைவனங்களில் இவை காணப்படுகின்றன.
- 1976 ஆம் ஆண்டில், அவற்றின் எண்ணிக்கை 720 ஆக இருந்தது என்ற நிலையில் இது 1990 ஆம் ஆண்டில் 2,072 ஆகவும், 2014 ஆம் ஆண்டில் 4,451 ஆகவும் உயர்ந்தது.
- அவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.



## சஹாரா பாலைவனத்தில் பெருமழை

- உலகின் மிகவும் வறண்ட மற்றும் மித வறண்டப் பகுதிகளில் ஒன்றான சஹாரா பாலைவனத்தில் அரிதான பெருமழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது.
- வட ஆப்பிரிக்கப் பாலைவனத்தின் தென்கிழக்கு மொராக்கோ பகுதியில் இரண்டு நாட்கள் தொடர்ந்து பெய்த மழைக்குப் பிறகு இந்த அரிய தீவிர வானிலை ஏற்பட்டது.
- இந்த நிகழ்வின் இறுதித் தாக்கமானது இரிகுயி ஏரியை நிரப்பியதாகும்.
- இந்த ஏரியானது 1925 ஆம் ஆண்டிலிருந்து 50 ஆண்டுகளாக வறண்டு இருந்தது.
- 9 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட சஹாரா பாலைவனம் ஆனது புவி வெப்பமடைதலுடன் தொடர்புடைய தீவிர வானிலை காரணமாக அதிக ஆபத்தில் உள்ளது.



## இந்தியாவில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை நிலவரம்




- உலக வனவிலங்கு நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு லிவிங் பிளானட் அறிக்கை, வெறும் 50 ஆண்டுகளில் வனவிலங்குகளின் சராசரி எண்ணிக்கையில் சுமார் 73 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுகிறது.
- 1992 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், வெண்ணிறக் கழுகு மற்றும் இந்தியக் கழுகுகளின் எண்ணிக்கை முறையே சுமார் 98 சதவீதம் மற்றும் 93 சதவீதம் குறைந்துள்ளது.

- இருபது ஆண்டுகளாக 22 நாடுகளில் புல்வெளி வாழ் வண்ணத்துப் பூச்சி இனங்களில் 33 சதவீதம் குறைவு பதிவாகியுள்ளது.
- ஒடிசாவில், உள்ளூர் தேனீக்களின் எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டு முதல் 80% குறைந்து உள்ளது.
- நீலகண்டப் பறவை அல்லது இந்தியப் பனங்காடைகளின் எண்ணிக்கையில் 35% சரிவு காணப் படுகிறது.


## 610 பறவை இனங்களின் அழிவு

- 1,30,000 ஆண்டுகளில் 610 பறவை இனங்கள் அழிந்துவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் ஆவணப் படுத்தியுள்ளனர்.
- இது உலகம் முழுவதுமான ஹோமோ சேபியன்களின் பரவலுடன் ஒத்துப் போகிறது.
- டோடோ எனப்படும் பறக்க முடியாத பறவையானது 1598 ஆம் ஆண்டில் நெதர்லாந்து (டச்சு) மாலுமிகளால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்பதோடு இது 1681 ஆம் ஆண்டில் அழிந்து போனது.
- மொரிஷியஸ் தீவின் தனித்த சூழல் இந்தப் பறவைகளுக்கு பயன்பட்டது.
- 610 பறவை இனங்களில், சுமார் 90% ஆனது மனிதர்களின் நடவடிக்கை காரணமாக ஓரளவுக்கு அழிந்து விட்டன.
- 610 இனங்கள் ஒரு சேர சுமார் 3 பில்லியன் ஆண்டுகளின் தனித்துவமான பரிணாம வரலாற்றைக் குறிக்கின்றன.
- சுமார் 11,000 பறவை இனங்கள் தற்போது உள்ளன, அவை சுற்றுச்சூழலின் வியத்தகுப் பிரிவுகளை ஆக்கிரமித்துள்ளன.
- ஆராய்ச்சியாளர்கள் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட உயிரினங்கள் அழியும் என்று கணித்துள்ளனர்.

## டார்வின் பறவையினங்கள்


- கேலபோகஸ் தீவுகளில் ஏற்படும் ஆறு தொடர்ச்சியான வறட்சிகள் ஒரு புதிய வகை பறவையினங்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கும் என்று அறிவியல் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.
- இந்தத் தீவிர நிகழ்வுகளால் பறவைகளில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள் சில புதிய பறவை இனங்கள் உருவாவதற்கான "பாதையை வழங்குகிறது".
- ஈக்வடார் (நில நடுக்கோட்டு) நாட்டு மாகாணமான கேலபோகஸ், ஒட்டு மொத்தமாக டார்வின்ஸ் ஃபிஞ்சுகள் என்று அழைக்கப்படுகின்ற அதன் பலதரப்பட்டப் பறவை இனங்களுக்குப் புகழ்பெற்றது.
- பிரிட்டிஷ் இயற்கை ஆர்வலர் சார்லஸ் டார்வினுக்கு இயற்கைத் தேர்வின் விளைவான பரிணாமத்தைப் புரிந்து கொள்ள உதவுவதில் இவற்றின் பங்கின் காரணமாக இவை இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.
- டார்வின்ஸ் ஃபிஞ்சுகள், தோராயமாக 18 வெவ்வேறு பாசரைன் பறவை இனங்களை உள்ளடக்கிய ஒரு குழுவாகும்.

- அவை அவற்றின் அலகுகளின் அளவு மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் உள்ள சில குறிப்பிடத் தக்க மாறுபாட்டிற்காக தனித்துவமாகக் குறிப்பிடப்படுகின்றன.




## ஹேபர்-போஷ் செயல்முறை

- நூறு மில்லியன் டன் நைட்ரஜன் தற்போது வளிமண்டலத்தில் இருந்து அகற்றப்பட்டு, ஹேபர்-போஷ் செயல்முறை மூலம் உரமாக மாற்றப்பட்டுள்ளது.
- இது 165 மில்லியன் டன்கள் எதிர்வினை கொண்ட நைட்ரஜனை மண்ணில் சேர்க்கிறது.
- உயிரியல் செயல்முறைகள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் 100-140 மில்லியன் டன்கள் வரையிலான எதிர்வினை நைட்ரஜனை மண்ணில் நிரப்புகின்றன.
- BASF நிறுவனத்தின் கார்ல் போஷ் என்பவரின் பொறியியல் ஆனது, ஹேபரின் அமைப்பை, உரத்தை உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழில்துறை செயல்முறையாக மாற்றியது.
- ஹேபர் அமைப்பு உருவாக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, BASF நிறுவனம் அதன் முதல் அம்மோனியா தொழிற்சாலையை 1913 ஆம் ஆண்டில் திறந்தது.
- ஹேபர்-போஷ் செயல்முறையானது தொழில்துறைகள் மிகவும் மலிவான செயற்கை உரங்களை உருவாக்க வழிவகுத்தது.
- 20 ஆம் நூற்றாண்டில் உலகின் உணவு விநியோகத்தின் ஏழு மடங்கு உயர்விற்கு இது ஒரு முக்கிய அங்கமாக இருந்தது.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, சுமார் 19 ஆண்டுகளாக இருந்த ஓர் இந்தியரின் சராசரி ஆயுட்காலம் இன்று 67+ ஆண்டுகள் ஆக மாறியுள்ளது.




## செம்பழுப்பு நிற வால் கொண்ட பாறை பூங்குருவி




- கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயத்தில் செம்பழுப்பு நிற வால் கொண்ட பாறை பூங்குருவி (மான்டிகோலா சாக்சடிலிஸ்) தென்பட்டுள்ளது.
- இப்பறவையானது தமிழ்நாட்டில் தென்படுவது இது முதல் முறையாகும்.
- இதற்கு முன்னதாக, இந்தப் பறவையானது கேரளாவில் சில முறையும், பெரும்பாலும் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளிலும் அவற்றின் வலசை போதல் நிகழ்வின் போது தென்பட்டது.
- இவை தெற்கு ஐரோப்பாவிலும் மத்திய ஆசியா முதல் வடக்கு சீனா வரையிலான சில பகுதிகளிலும் இனப்பெருக்கம் செய்கின்றன.
- இனப்பெருக்கம் செய்யாதப் பருவங்களில் அவை ஆப்பிரிக்காவிற்கு பெரும் வலசை போகின்றன.

## கள்ளக் கடல் அலைகள்

- இந்தியத் தேசிய கடல்சார் தகவல் வழங்கீட்டு சேவை மையம் ஆனது, கேரளா, தென் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி மற்றும் இலட்சத்தீவு ஆகியப் பகுதிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.
- ஸ்வெல் அலைகள் (கள்ளக் கடல் அலைகள்) ஆனது, அவை தோன்றிய இடத்திலிருந்து வெகு தூரம் பயணிக்கின்ற, நீண்ட அலைநீளம் கொண்ட கடல் அலைகள் ஆகும்.
- அவை பொதுவாக சூறாவளிகள் அல்லது பிற வானிலை நிகழ்வுகளால் உருவாக்கப் படுகின்றன.

- கடல் அலைகள் பொதுவாக தலக்காற்றின் காரணமாக உருவாகின்றன.
- சூறாவளிகள் மற்றும் பிற சக்தி வாய்ந்த காற்றோட்ட அமைப்புகள் காற்றில் இருந்து தண்ணீருக்கு ஆற்றலை மாற்றுவதால், கள்ளக் கடல் அலைகளைத் தலக் காற்றினால் உருவாக்கப்படும் அலைகளை விட அதிக சக்தி வாய்ந்ததாக மாற்றுகிறது.
- அவற்றின் அதிக ஆற்றல் காரணமாக, கள்ளக் கடல் அலைகள் அதிக தூரம் பயணித்து, கணிசமான அளவு அதிக ஆற்றலுடன் கடற்கரைகளைத் தாக்குகின்றன.
- ஸ்வெல் அலைகள் என்பவை இந்தியாவில் கள்ளக் கடல் அலைகள் என்றும் அழைக்கப் படுகின்றன என்பதோடு இது கேரள மீனவர்களால் பயன்படுத்தப் படும் ஒரு பேச்சு வழக்கு சொல்லாகும்.
- யுனெஸ்கோ அமைப்பானது இந்த சொல்லினை அறிவியல் ரீதியாகப் பயன்படுத்தச் செய்வதற்கு தற்போது அங்கீகரித்துள்ளது.





## நான்காவது உலகளாவிய பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு

- நான்காவது உலகளாவிய பவளப்பாறை வெளிர்தல் (GCBE4) நிகழ்வு ஆனது 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கியது.
- இது தற்போது மிகவும் பெரும் பரவலாக காணப்படுகின்றதாகவும், 2014-2017 ஆகிய ஆண்டுகளில் இருந்த பவளப்பாறை வெளிர்தல் நிலைகளை விட 11 சதவீதத்திற்கும் அதிகமாக விஞ்சியதாகவும் உள்ளது.
- இந்தக் கடுமையான மற்றும் தீவிரமான உலகளாவியப் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு முந்தைய நிகழ்வை விட கிட்டத்தட்ட பாதி நேரத்தில் நிகழ்ந்ததாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- GCBE4 நிகழ்வின் ஒரு பெரும் பகுதியாக 20 மாதங்களில் குறைந்தபட்சம் 77 சதவீத உலகளாவியப் பவளப்பாறைப் பகுதிகள் வெளிர்தல் அளவிலானப் பெரும் வெப்பத் தாக்கத்தினை எதிர்கொண்டுள்ளன.
- அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள பவளப்பாறைப் பகுதிகளில் சுமார் 99.9 சதவீதப் பகுதிகள் ஆனது இந்த நிகழ்வின் போது வெளிர்தல் அளவிலான பெரும் வெப்பத் தாக்கத்தினை எதிர்கொண்டுள்ளன.




NOAA and ICRI Confirm Fourth
Global Coral Bleaching Event

## கடல் வெப்ப அலைகள்




- கடல் வெப்ப அலைகள் (MHWs) ஆனது கடல் நீரின் அசாதாரண வெப்பமயமாதல் நிகழ்வுகளைக் கொண்டு வரையறுக்கப்படுகின்றன.
- சமீபத்திய ஆண்டுகளில், புவி வெப்பமடைதல் கடல் வெப்ப அலைகளை அடிக்கடி ஏற்படக் கூடியதாகவும், தீவிரமானதாகவும் ஆக்கியுள்ளது.
- MHW அலைகள் ஆனது, பொதுவாக கடல் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலையைக் கண்காணிப்பதன் மூலம் அளவிடப்படுகின்றன.
- பெருங்கடல்களின் ஆழமான பகுதிகளில் உள்ள MHW அலைகள், "குறிப்பிடத்தக்க வகையில் பதிவு செய்யபடாதவையாக" இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நன்கு கண்டறிந்துள்ளனர்.
- சுழல் நீரோட்டங்களின் பெரிய சுழல்கள், சில நேரங்களில் நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் பகுதிகளில் 1,000 மீட்டருக்கு மேலான ஆழம் வரை அடையும்.

## முக்கியப் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளில் வெப்பநிலை உயர்வு




- வெப்பமண்டலக் காடுகளில் உள்ள 66 சதவீதம் வரையிலான முக்கியப் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகள் (KBAs) சமீபத்தில் சராசரி வருடாந்திர வெப்பநிலை வரம்பினை எட்டியுள்ளன.
- இந்த KBA பகுதிகள் நிலப்பரப்பு, நன்னீர் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்தின் உலகளாவிய நிலைத் தன்மைக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கும் தளங்கள் ஆகும்.
- புதிய வெப்பநிலை வரம்புகள் கொண்ட KBA பகுதிகளின் விகிதம் ஆப்பிரிக்காவில் 72 சதவீதமாகவும், இலத்தீன் அமெரிக்காவில் சுமார் 59 சதவீதமாகவும், ஆசியா மற்றும் ஓசியானியாவில் 49 சதவீதமாகவும் இருந்தது.
- இலத்தீன் அமெரிக்காவில் உள்ள சுமார் 2.9 சதவீத KBA பகுதிகளும், ஆசியா மற்றும் ஓசியானியாவில் உள்ள 4.9 சதவீதப் பகுதிகளும் சமீபத்தில் முற்றிலும் புதிய வெப்ப நிலை வரம்புகளை எட்டியுள்ளன.
- ஆசியா மற்றும் ஓசியானியா ஆகிய பகுதிகளில் 0.02 சதவீத KBA பகுதிகள் மட்டுமே கிட்டத்தட்ட நிலையான வெப்பநிலை வரம்பில் இருந்தன.
- 34 சதவீத வெப்பமண்டலக் காடுகளில் உள்ள KBA பகுதிகள் இன்றும் புதிய வெப்ப நிலை வரம்புகளை எட்டவில்லை.


## கோவாலா - அழியும் நிலையினை எட்டும் ஆபத்து

- ஒரு காலக்கட்டத்தில், தைல மரத்தில் நன்கு ஏறும் விலங்கினமான கோவாலாக்கள் (மரமேறிப் பைம்மான் – கோலாக் கரடி) இலட்சக்கணக்கில் காணப் பட்டன.
- தற்போது ஆஸ்திரேலியாவில் சுமார் 95000 முதல் 524000 வரையிலான கோவாலாக்களே எஞ்சியுள்ளன.
- அரசாங்கம் ஆனது 2022 ஆம் ஆண்டில் கிழக்குக் கடற்கரை கோவாலாக்களை 'அருகி வரும்' இனம் என்று அதிகாரப்பூர்வமாகப் பட்டியலிட்டது.

- கிளமிடியா என்பது கிளமிடியா டிராக்கோமாடிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படும் பொதுவான பாலியல் ரீதியாகப் பரவும் தொற்று (STI) ஆகும்.
- இது முதன்முதலில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கோவாலாக்களில் கண்டறியப் பட்டது.
- அடுத்தடுத்த காலங்களில் அது முழு உள்ளூர் இனங்களையும் அழித்து விட்டது.
- இதனால் அவற்றின் எண்ணிக்கை 95,000 முதல் 524,000 வரை குறைந்துள்ளது.
- தற்போது, ஆஸ்திரேலியா உலகின் 'இன அழிவு தலைநகராக' மாறிவிட்டது.
- உலகிலேயே பாலூட்டிகள் அதிக எண்ணிக்கையில் அழியும் விகிதம் கொண்ட நாடாக இந்த தீவு நாடு திகழ்கிறது.
- கடந்த 123 ஆண்டுகளில் நாட்டின் மிக தனித்துவமான பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களில் சுமார் 100 இனங்கள் அழிந்துவிட்டன.



## இந்தியாவின் இரண்டாவது பன்மய வண்ணத்துப் பூச்சி மையம்




- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள நாம்தாபா தேசியப் பூங்காவிற்கு அடுத்தபடியாக, அசாம் மாநிலத்தின் காசிரங்கா தேசியப் பூங்காவானது இந்தியாவின் இரண்டாவது பன்மய வண்ணத்துப் பூச்சி மையமாக விளங்குகிறது.

- வண்ணத்துப் பூச்சிகளின் பெரும் பாதுகாப்பு நிலையை அறிவதற்காக இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த வகையிலான முதலாவது வண்ணத்துப்பூச்சி வளங்காப்பு கூட்டம் நடத்தப்பட்டது.
- இந்தப் பூங்காவில் 446க்கும் மேற்பட்ட வண்ணத்துப்பூச்சி இனங்கள் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் உள்ள 446 வண்ணத்துப் பூச்சி இனங்களில் 18 புதிய இனங்களாகும்.
- இந்தத் தேசியப் பூங்காவானது அசாமில் கோலாகாட், சோனித்பூர், பிஸ்வநாத் மற்றும் நாகோன் மாவட்டங்களில் பரவியுள்ளது.
- இந்தப் பூங்காவில் உலகின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையிலான இந்தியக் காண்டாமிருகங்கள் உள்ளன என்பதோடு இந்தப் பூங்கா யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய தளமாக கருதப்படுகிறது.

## நீலகிரி வரி வண்ணத்துப்பூச்சி



- நீலகிரி வரி வண்ணத்துப்பூச்சி ஆனது (ஹிப்போலைசீனா நீல்கிரிக்கா) ஒரு பெரிய நிலப்பரப்பு ஆர்க்கிட் தாவரத்தை அதன் ஓம்புயிரியாகப் பயன்படுத்துகிறது.
- இந்தியாவில் ஒரு வண்ணத்துப்பூச்சி என்பது இந்த குறிப்பிட்ட வகை தாவரங்களை ஓம்புயிரியாகப் பயன்படுத்தியதாக பதிவான முதல் பதிவு இதுவாகும்.
- 1884 ஆம் ஆண்டு நீலகிரியில் உள்ள குன்னூரில் முதன் முதலில் மிக விவரிக்கப்பட்ட நீலகிரி வரி வண்ணத்துப் பூச்சியானது, அதன் பிறகு இலங்கையில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- யூலோபியா எபிடென்ட்ரேயா என்ற ஒரு லார்வா ஓம்புயிரித் தாவரத்தின் மஞ்சரியில் (முழுமையாக மலர்ந்த பகுதி) நீலகிரி வரி வண்ணத்துப் பூச்சி முட்டையிடுவது என்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.
- இந்த நிலப்பரப்பு ஆர்க்கிட் தாவரம் ஆனது ஈரப்பதமான பகுதிகளில் உள்ள பாறைப் சரிவுப் பகுதிகளில் காணப்பட்டது.

## உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கையின் 16வது பங்குதாரர்கள் மாநாடு

- உயிரியல் பன்முகத்தன்மைக்கான உடன்படிக்கையின் (CBD) 16வது பங்குதாரர்கள் மாநாடு (COP16) ஆனது கொலம்பியாவில் உள்ள காலி என்னுமிடத்தில் நடைபெற்று வருகிறது.

- இந்த நிகழ்வின் போது, பங்குதார நாடுகள் ஆனது Closing Window of Opportunity: Mapping Threats from Oil, Gas and Mining to Important Areas for Conservation in the Pantropics என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டன.
- உலகின் மிகவும் சிறந்த மற்றும் மிக முக்கியமானச் சுற்றுச்சூழல் அமைப்புகள் ஆனது எண்ணெய் பிரித்தெடுப்பு செயல்முறை சார்ந்த தொழிற்சாலைகளால் ஏற்படும் ஒரு அச்சுறுத்தலை எதிர்கொள்வதை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- முக்கியப் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகள், மனித இடையீடு எதும் இல்லாத வன நிலப் பரப்புகள், பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் ஆகியவை இதில் அடங்கும்.
- இந்தத் தரவானது மொத்தப் பகுதிகளில் 18 சதவீதப் பங்கினைக் கொண்ட 518 முக்கிய பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளில் (KBA) செயலில் உள்ள மற்றும் மிகவும் சாத்தியமான எண்ணெய் மற்றும் எரிவாயு பிரித்தெடுக்கும் வசதிகளைக் குறிப்பிட்டுள்ளது.
- அமேசான் மற்றும் காங்கோ வடிநிலப் பகுதிகள் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள 180 மில்லியன் ஹெக்டேர் அளவுக்கு மனித இடையீடு இல்லாத வனப் பகுதிகள் அபாயத்தில் உள்ளன.





## கானமயில் - செயற்கை கருவூட்டல்



- செயற்கைக் கருவூட்டல் மூலமாக முதல் கானமயில் குஞ்சு பொரிக்கப்பட்டுள்ளது.
- ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள தேசிய வளங்காப்பு இனப்பெருக்க மையத்தின் அறிவியலாளர்கள் இந்தச் செயல்முறையை மேற்கொண்டனர்.
- கானமயில் என்பது ராஜஸ்தானின் தார் பகுதியில் காணப் படும் மிகவும் அருகி வரும் பறவை இனமாகும்.

- தற்போது, 173 பறவைகள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் அவற்றில் 128 பறவைகள் மட்டும் காடுகளில் காணப் படுவதோடு மற்றவை காப்பகங்களில் கூண்டுகளில் வளர்க்கப் படுகின்றன.

## கார்பன் பிடிப்பிற்கு சுரங்கத் துகள் பயன்பாடு




- டார்ஜிலிங்கில் அமைந்துள்ள ஆல்ட் கார்பன் நிறுவனம் ஆனது, சுரங்கத் துகள்களைப் பருவநிலைக்கு உகந்த தீர்வாக மாற்றியமைத்துள்ளது.
- இது வளிமண்டலக் கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) எதிர்கொள்ள மேம்படுத்தப்பட்டப் பாறை உடைப்பு எனப்படும் புவி-வேதியியல் செயல்முறையைப் பயன்படுத்துகிறது.
- ஒரு கரிம உரமாக இருப்பதால், பசால்டிக் (தூசி) துகள் ஆனது மண்ணை வளப்படுத்தச் செய்வதோடு, கார்பன் பிடிப்புகளைத் துரிதப்படுத்துகிறது.
- இரண்டு முதல் நான்கு ஆண்டுகளில், ஒரு டன் வளிமண்டலக் கார்பனைப் பிடிப்பதற்கு சுமார் 3-4 டன் பசால்ட் தூசுகள் தேவைப்படுகிறது.
- கார்பன் பிடிப்பு என்பது வளிமண்டல $CO_2$ வாயுவினை பற்றி சேமிக்கும் செயல்முறை ஆகும்.
- பெருங்கடல்கள் முக்கிய கார்பன் பிடிப்புப் பகுதிகள் ஆகும் என்ற நிலையில் அவை மனித நடவடிக்கைகளில் இருந்து வெளியேறும் 30% அளவிலான $CO_2$ வாயுவினைப் பற்றுகின்றன.

## புவி வெப்பமடைதலுக்கு வைரத் துகள்கள் பயன்பாடு

- வளிமண்டலத்தில் வைர தூசியைச் செலுத்துவது கிரகத்தைக் குளிர்விக்க ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.
- வைரத்தூள் ஆனது இரசாயன ரீதியாக செயலற்றத் தன்மை கொண்டது.
- ஆண்டுதோறும் சுமார் 5 மில்லியன் டன் செயற்கை வைரத் தூளை வளிமண்டலத்தில் செலுத்துவது 45 ஆண்டுகளில் பூமியை 1.6 டிகிரி செல்சியஸ் வரை குளிர்விக்கும்.
- இருப்பினும், இந்தத் தீர்வைச் செயல்படுத்ததுவதற்கு மதிப்பிடப்பட்ட முதலீடானது 200 டிரில்லியன் டாலர் ஆகும்.





## பூஞ்சை வளங்காப்பிற்கான உறுதிப்பாடு

- சிலி மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய அரசாங்கங்கள் 'பூஞ்சை வளங்காப்பிற்கான ஒரு உறுதிப்பாட்டினை' தயாரித்துள்ளன.
- காளான்கள், பூஞ்சை, ஈஸ்ட், லிச்சென் மற்றும் பூஞ்சைக் காளான்கள் ஆகியவற்றின் வளங்காப்பிற்காக விலங்குகள் மற்றும் தாவரங்களுடன் சேர்த்து வகைப் பிரித்தலில் 'பூஞ்சை' எனப்படும் அவற்றின் சொந்தப் பிரிவினைப் பெற உள்ளன.
- கொலம்பியாவின் கலி என்னுமிடத்தில் நடைபெற்ற 16வது பங்குதாரர்கள் மாநாட்டின் (COP16) போது ஐக்கிய நாடுகள் சபையின் உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கை (CBD) அமைப்பிற்கு இதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப் பட்டது.
- இது அவற்றின் வளங்காப்பினை நன்கு முன்னெடுத்துச் செல்வதையும், சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் மக்களுக்கும் அவற்றின் நன்மைகளைப் பேண அனுமதிக்கும் சில உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மொத்தமுள்ள 2.2 மற்றும் 3.8 மில்லியன் வகை பூஞ்சைகளில் எட்டு சதவிகிதம் மட்டுமே அறிவியல் ரீதியாக அறியப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 2,000 புதிய உயிர் இனங்கள் கண்டுபிடிக்கப் படுகின்றன.



## குறைந்த ஒளியில் உள்ள பவளப்பாறை சுற்றுச்சூழல் அமைப்புகள்

- கிழக்குப் பசிபிக் பகுதியில் மிகவும் ஆழமான பகுதிகளில் உள்ள பவளப் பாறையின் சுற்றுச் சூழல் அமைப்புகள் 21 ஆம் நூற்றாண்டில் இரு முனை அச்சுறுத்தலை எதிர் கொள்ளக் கூடும் என்பதை புதிய ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.
- அவை மேற்பரப்பிலிருந்து மிதவெப்ப நீரினாலும், கீழே இருந்து குளிர்ந்த நீரினாலும் பவளப் பாறை வெளிர்தலை எதிர்கொண்டுள்ளன.
- வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் 100 மற்றும் 490 அடிகளுக்கு இடைப்பட்ட ஆழத்தில் மிகவும் குறைந்த ஒளியில் உள்ள (மீசோபோடிக்) பவளப்பாறை சுற்றுச்சூழல் அமைப்புகள் காணப்படுகின்றன.




## இராட்சத சால்மன் கெண்டை மீன்- மெகாங் நதி



- 2005 ஆம் ஆண்டு கடைசியாக தென்பட்டதாக உறுதி செய்யப்பட்டதற்குப் பிறகு, இந்த வகை மீன்கள் மெகாங் பகுதியில் பல தசாப்தங்களாக மறைந்து விட்டதாகத் கருதப் பட்டது.
- 2020 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மூன்று இராட்சத சால்மன் கெண்டை மீன்கள் மெகாங் நதி மற்றும் கம்போடியாவில் உள்ள ஒரு துணை நதியில் தென்பட்டுள்ளன.
- இந்த இனத்தின் "பேய் மீன்" என்ற ஒரு புனைப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.
- இது கிழக்கு ஆசியாவில், குறிப்பாக அமுர் நதிப் படுகை போன்றப் பகுதிகளில் உள்ள நன்னீர் வாழ்விடங்களைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு கண்கவர் இனமாகும்.

### ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய்


- அறிவியலாளர்கள் சமீபத்தில் மேற்கு இமயமலையில் ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய் எனப்படும் ஒரு புதிய பாம்பு இனத்தை வகைப்படுத்தியுள்ளனர்.
- பருவநிலை மாற்றம் மற்றும் வனவிலங்கு வளங்காப்புப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில், மிகப்பெரும் நடிகரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான லியோனார்டோ டிகாப்ரியோவின் முன்னெடுப்புகளுக்காக இந்த இனத்திற்கு இந்தப் பெயர் அளிக்கப் பட்டு கௌரவிக்கப்படுகிறது.
- ஆங்கிகுலஸ் டிகாப்ரியோய் என்பது கோலுபிரிடே குடும்பத்தைச் சேர்ந்தது என்ற வகையில் இது பல்வேறு இனங்கள் மற்றும் குழுக்களைக் கொண்ட பாம்புகளின் மிக விரிவான வகைப்பாடு ஆகும்.
- "ஆங்கிகுலஸ்" என்ற சொல்லுக்கு இலத்தீன் மொழியில் "சிறிய பாம்பு" என்று பொருள் படும்.



## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலக திறமைகள் தரவரிசை 2024

- சர்வதேச மேலாண்மை மேம்பாட்டு நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு உலக திறமைகள் தர வரிசையில் கடந்த ஆண்டு 56வது இடத்தில் இருந்த இந்தியாவின் தரவரிசையானது 58 இடத்திற்கு சரிந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியா 52வது இடத்தில் இருந்தது.
- இந்தப் பதினோராவது பதிப்பில் இடம் பெற்றுள்ள 67 நாட்டுப் பொருளாதாரங்களில் சுவிட்சர்லாந்து முதலிடத்தையும், சிங்கப்பூர் இரண்டாவது இடத்தையும், லக்ஸம்பர்க் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.
- 2014 ஆம் ஆண்டு இந்தத் தரவரிசைப் பட்டியல் தொடங்கப்பட்டதற்குப் பிறகு முதல் முறையாக சிங்கப்பூர் நிலையான அளவில் முன்னேறியுள்ளது.




## ஹுருன் இந்தியா அமைப்பின் 35 வயதுக்குட்பட்ட தொழில்முனைவோர் பட்டியல் 2024



- இஷா அம்பானி மற்றும் டாடில் நிறுவனத்தின் இணை நிறுவனர் பரிதா பரேக் ஆகியோர் 2024 ஆம் ஆண்டிற்கான ஹுருன் இந்தியா அமைப்பின் 35 வயதுக்குட்பட்ட தொழில்முனைவோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளம் பெண்கள் ஆவர்.
- இந்தப் பட்டியலில் 35 வயதுக்குட்பட்ட 150 இந்திய தொழில்முனைவோர் இடம் பெற்று உள்ளனர்.
- ஆகாஷ் அம்பானி மற்றும் மாமா எர்த் நிறுவனத்தின் கஜல் அலக் ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- பிசிக்ஸ் வாலா நிறுவனத்தின் நிறுவனர் அலக் பாண்டே மற்றும் அஞ்சலி மெர்ச்சன்ட் ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- ஷேர்சாட் இணை நிறுவனர் அங்குஷ் சச்தேவா இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளம் நபர் ஆவார்.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மொத்தத் தொழில்முனைவோரில் சுமார் 82 சதவீதம் பேர் முதல் தலைமுறையினை சேர்ந்த வணிகத் தலைவர்கள் ஆவர்.
- பெங்களூரு மற்றும் மும்பை ஆகியவை முறையே இந்தப் பட்டியலில் 29 மற்றும் 26 வணிகத் தலைவர்களைக் கொண்டு மிகவும் அதிக எண்ணிக்கையிலான தொழில் முனைவோரைக் கொண்ட நகரங்களாக உள்ளன.

## உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு 2024

- ஜெனீவா நகரில் உள்ள உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு ஆனது இந்த முக்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு உலகப் புத்தாக்கக் குறியீட்டில் (GII) இந்தியா 39 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியா தற்போது 38 குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுள் முதல் இடத்தில் உள்ளது.
- சுமார் 133 உலக நாடுகளின் புத்தாக்க செயல்திறனை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.
- 2015 ஆம் ஆண்டில் இந்தியா 81வது இடத்தில் இருந்தது.
- உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (S&T) தொகுப்பு தரவரிசையில் இந்தியா 4வது இடத்தையும் பெற்றுள்ளது.
- இதில் சீனா 11வது இடத்தைப் பெற்று, முதல் 30 இடங்களுக்குள் இடம் பெற்ற ஒரே நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதாரமாக உள்ளது.
- சுவிட்சர்லாந்து, சுவீடன், அமெரிக்கா, சிங்கப்பூர், ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் முதலிடத்தில் உள்ளன.




## உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2024-26

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஏதோவொரு வகையான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தின் கீழ் உள்ளனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.
- "உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2024–26: பருவநிலை நடவடிக்கை மற்றும் ஒரு முறையான மாற்றத்திற்கான உலகளாவிய சமூகப் பாதுகாப்பு" என்ற ஒரு தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடபட்டுள்ளது.
- உலக மக்கள்தொகையில் 52.4 சதவீதம் பேர் தற்போது குறைந்தபட்சம் ஒரு சமூகப் பாதுகாப்புப் பலனையாவது பெற்றுள்ளனர் என்ற நிலையில் இது 2015 ஆம் ஆண்டில் 42.8 சதவீதமாக இருந்தது.
- பருவநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப் படக் கூடிய நிலையில் உள்ள 20 நாடுகளில், 91.3 சதவீத மக்கள் (364 மில்லியன்) எந்த விதமான சமூகப் பாதுகாப்பையும் கொண்டு இருக்க வில்லை.


❖ உலகளவில், 54.6 சதவீத ஆண்களுடன் ஒப்பிடச் செய்கையில், 50.1 சதவீதப் பெண்கள் குறைந்த பட்சம் ஒரு சமூகப் பாதுகாப்புப் பலனையாவதுப் பெற்றுள்ளனர்.

❖ 0 முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் சுமார் 28.2 சதவீதம் பேர் மட்டுமே குழந்தை அல்லது குடும்பப் பணப் பலன்களை (நிதி சார் பலன்கள்) பெறுகின்றனர்.


❖ இதனால் 1.4 பில்லியன் குழந்தைகள் சமூகப் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர்.

❖ அதிக வருமானம் கொண்ட நாடுகள் சமூகப் பாதுகாப்பிற்காக (சுகாதாரம் தவிர்த்து) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக சும்மார் 16.2 சதவீதத் தொகையினை செலவிடுகின்றன.

❖ ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் வெறும் 0.8 சதவீதத்தையே சமூகப் பாதுகாப்பிற்காகச் செலவிடுகின்றன.





## ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான துணை அறிக்கை



- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- '2024-26 ஆம் ஆண்டிற்கான உலகச் சமூகப் பாதுகாப்பு அறிக்கையின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான துணை அறிக்கை: பருவநிலை நடவடிக்கைக்கான ஒரு உலகளாவியச் சமூகப் பாதுகாப்பு மற்றும் ஒரு சரியான மாற்றம்' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- சுமார் 2.1 பில்லியன் மக்கள் பல்வேறு வாழ்க்கைச் சுழற்சி மற்றும் சமூகப் பொருளாதார அபாயங்களில் இருந்து இன்னும் பாதுகாப்பு பெறாத நிலையிலேயே உள்ளனர்.
- 2015 ஆம் ஆண்டு முதல் தெற்காசியாவில் சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன் பரவல் விகிதம் 16.7 சதவீத புள்ளிகள் (18.7 முதல் 35.4%) ஆகும்.
- வங்காளதேசம், சீனா, இந்தியா, இந்தோனேஷியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய ஐந்து அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் முறையே 22%, 75.6%, 48.4%, 54.3% மற்றும் 20.2% என்ற பரவல் விகிதங்களைக் கொண்டுள்ளன.
- வேலை வாய்ப்பின்மை காப்பீட்டுத் திட்டங்கள் இந்தியாவிலும் ஈரானிலும் வழங்கப் படுகின்றன, ஆனால் அவற்றின் பரவல் குறைவாகவே உள்ளது.
- இந்தியாவில், வேலைவாய்ப்பின்மை காப்பீடு ஆனது உழைக்கும் வயதுடைய மக்கள் தொகையில் 11.5% பேருக்கு மட்டுமே சட்டப் பூர்வமாக கிடைக்கப் பெற்றுள்ளது.


## சிந்திப்பதற்கான உரிமை 2024 - வருடாந்திர அறிக்கை




- ஸ்காலர்ஸ் அட் ரிஸ்க் (SAR) என்ற அமைப்பின் கல்விச் சுதந்திரக் கண்காணிப்புத் திட்டத்தினால் இந்த வருடாந்திர அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜூலை 01 முதல் 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை 51 நாடுகளில் உயர்கல்விச் சமூகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட 391 தாக்குதல்களை இந்த அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் கல்விச் சுதந்திரம் 2013 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 0.6 புள்ளிகளில் இருந்து 0.2 புள்ளிகளாக சரிந்தது.
- இந்தியா தற்போது "முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்ட நாடு" என்ற தரநிலையில் உள்ளது, என்ற நிலையில் 1940 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இருந்து, இந்தியா பெற்ற மிக குறைந்த மதிப்பெண் இதுவாகும்.

## உலகளாவிய நீர்வள அறிக்கை 2023


- இந்தப் புதியதொரு அறிக்கையானது உலக வானிலை அமைப்பினால் (WMO) நன்கு ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டானது பனிப்பாறைகள் உள்ள உலகின் அனைத்துப் பகுதிகளும் பனி இழப்பு பதிவான இரண்டாவது ஆண்டாகும்.
- 33 ஆண்டுகளில் 2023 ஆம் ஆண்டானது உலக நதிகளுக்கான மிகவும் வறண்ட ஆண்டு ஆகும்.
- பனிப்பாறைகள் ஆனது கடந்த 50 ஆண்டுகளில் மிகப்பெரிய இழப்பை எதிர்கொண்டு உள்ளன.
- தற்போது, சுமார் 3.6 பில்லியன் மக்கள் ஆண்டிற்கு குறைந்தது ஒரு மாதமாவது போதிய தண்ணீர் கிடைக்காத சூழலை எதிர்கொள்கிறார்கள்.
- இது 2050 ஆம் ஆண்டில் 5 பில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## லிவிங் பிளானட் அறிக்கை 2024

- லிவிங் பிளானட் அறிக்கை (2024) என்பது உலக வனவிலங்கு நிதியம் (WWF) என்ற பாதுகாப்பு அமைப்பினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மதிப்பீடாகும்.
- 1970 ஆம் ஆண்டிலிருந்து கண்காணிக்கப்படும் வனவிலங்குகளின் சராசரி எண்ணிக்கை 73 சதவிகிதம் குறைந்துள்ளது என்று அறிக்கை தெரிவித்துள்ளது.
- சுமார் 35,000 வனவிலங்குகளின் எண்ணிக்கை மற்றும் 5,495 வகையான நீர் நில வாழ்விகள், பறவைகள், மீன்கள், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன இனங்கள் ஆகியவை கணிசமாகக் குறைந்துள்ளன.
- 1970 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 85 சதவீதம் சரிவுடன் நன்னீர் வாழ் இனங்கள் தான் மிகவும் பாதிக்கப்பட்ட இனங்களாக உள்ளன.

- அதைத் தொடர்ந்து நிலவாழ் இனங்களில் 69 சதவீத சரிவும், கடல் வாழ் இனங்களின் எண்ணிக்கையில் 56 சதவீத சரிவும் பதிவாகியுள்ளது.
- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் ஆகிய பகுதிகளில் உயிரினங்களின் எண்ணிக்கை 95 சதவீதம் குறைந்துள்ளது, அதைத் தொடர்ந்து ஆப்பிரிக்காவில் 76 சதவீதம் சரிவானது பதிவாகியுள்ளது.
- ஆசியா-பசிபிக் பிராந்தியங்களில் ஒரு சேர 60 சதவீத சரிவானது பதிவாகியுள்ளது.
- 1950 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் சினூக் சால்மன் மீன்களின் எண்ணிக்கை 88 சதவீதம் குறைந்துள்ளது.




## உலகப் பட்டினிக் குறியீடு 2024

- இது 'கன்சர்ன் வேர்ல்டுவைட்' மற்றும் 'வெல்த்ஹங்கர்ஹைல்ஃப்' ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான 19வது உலகப் பட்டினிக் குறியீடு (GHI) அறிக்கையில் மதிப்பிடப் பட்ட 127 நாடுகளில் இந்தியா 105வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இது இந்தியாவை 'தீவிர' பட்டினி நிலைப் பிரச்சனைகள் உள்ள நாடுகளுள் ஒன்றாக வகைப்படுத்துகிறது.
- இந்தியா அதன் அண்டை நாடுகளான இலங்கை, நேபாளம், மியான்மர் மற்றும் வங்காள தேசத்தை விட பின்தங்கியுள்ளது, அதே நேரத்தில் இது பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானை விட சற்று மேல் நிலையில் உள்ளது.
- முறைமை மற்றும் திருத்தப்பட்ட தரவுகளின் மாற்றம் காரணமாக 2024 ஆம் ஆண்டு அறிக்கையை 2023 ஆம் ஆண்டு அறிக்கையுடன் நேரடியாக ஒப்பிட முடியாது.
- இருப்பினும், இது 2000, 2008, 2016 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டுத் தரவை வழங்குகிறது.
- உலக அளவில் அதிக குழந்தை வளர்ச்சி குறைபாடு விகிதத்துடன் (18.7%) குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துக் குறைபாட்டில் இந்தியா தொடர்ந்து கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது.
- இந்தியாவில் குழந்தை வளர்ச்சியின்மை விகிதம் 35.5% ஆகவும், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயரிழப்பு விகிதம் 2.9% ஆகவும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு 13.7%

ஆகவும் உள்ளது.

❖ உலகளவில், போதிய அளவு உணவு கிடைக்காததால் ஒவ்வொரு நாளும் சுமார் 733 மில்லியன் மக்கள் பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர்.

❖ மேலும், சுமார் 2.8 பில்லியன் மக்களால் ஆரோக்கியமான உணவை வாங்க முடியாத நிலை உள்ளது.

❖ தெற்கு சூடான், புருண்டி, சோமாலியா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலின் கடைசி இடங்களில் இடம் பெற்றுள்ள மூன்று நாடுகளாகும்.

| Rank in 2024 ↑ | Country | 2000 | 2008 | 2016 | 2024 |
|---|---|---|---|---|---|
| 1-22[1] | Belarus | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Bosnia & Herzegovina | 9.4 | 6.4 | <5 | <5 |
| 1-22[1] | Chile | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | China | 13.4 | 7.2 | <5 | <5 |
| 1-22[1] | Costa Rica | 6.6 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Croatia | 5.5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Estonia | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Georgia | 12.0 | 6.6 | 5.4 | <5 |
| 1-22[1] | Hungary | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Kuwait | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Latvia | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Lithuania | <5 | <5 | <5 | <5 |
| 1-22[1] | Montenegro | — | 5.7 | <5 | <5 |
| 1-22[1] | North Macedonia | 7.6 | 5.3 | 5.1 | <5 |
| 1-22[1] | Romania | 7.9 | 5.7 | 5.0 | <5 |
| 1-22[1] | Russian Federation | 10.4 | 5.9 | 5.4 | <5 |
| 1-22[1] | Serbia | — | 5.9 | <5 | <5 |

## ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் அறிக்கை 2024

❖ சமூக மேம்பாட்டில் மகளிரின் பங்கு பற்றிய உலகளாவியக் கணக்கெடுப்பு அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

❖ இது "பாலின சமத்துவம், நெகிழ்திறன் மற்றும் மாற்றத்திற்காக சமூகப் பாதுகாப்பைப் பயன்படுத்துதல்" என்ற கருத்துருவில் கவனம் செலுத்துகிறது.

❖ இந்த ஆய்வறிக்கையானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பொருளாதார மற்றும் நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.


❖ உலகளவில் 63 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் இன்றும் மகப்பேறு சலுகைகள் கிடைக்காமலேயே குழந்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

❖ ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் இந்த விகிதம் 94 சதவீதமாக உயர்ந்து உள்ளது.


❖ 25 முதல் 34 வரையிலான வயதுடைய பெண்கள் அதே வயதுடைய ஆண்களை விட 25 சதவீதம் அதிகமாக வறுமையை எதிர்கொள்ளும் குடும்பங்களில் வாழ்கின்றனர்.

❖ 171 நாடுகளில் உள்ள அரசாங்கங்களால் சுமார் 1,000 சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

❖ ஆனால் இதில் சுமார் 18 சதவீத நடவடிக்கைகள் மட்டுமே பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பில் கவனம் செலுத்தின.




## உலகளாவியப் பல்பரிமாண வறுமைக் குறியீடு 2024





- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு அமைப்பினால் சமீபத்திய உலகளாவியப் பல் பரிமாண வறுமைக் குறியீட்டு (MPI) அறிக்கையானது வெளியிடப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி, 1.1 பில்லியன் மக்கள் உலகளவில் மிக கடுமையான வறுமை நிலையில் வாழ்கின்ற நிலையில் இவர்களில் மிகவும் பாதிக்கும் மேற்பட்டோர் சிறார்கள் ஆவர்.
- இந்தியாவில் 234 மில்லியன் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர் என்பதோடு இது நடுத்தர மனித மேம்பாட்டுக் குறியீடு நிலை ஆகும்.
- உலகளவில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வறுமையில் வாடும் நிலையில் உள்ள ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.

- மற்ற நான்கு நாடுகள் பாகிஸ்தான் (93 மில்லியன்), எத்தியோப்பியா (86 மில்லியன்), நைஜீரியா (74 மில்லியன்) மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு (66 மில்லியன்) ஆகியனவாகும் என்பதோடு இவை அனைத்தும் மிக குறைவான மனித மேம்பாட்டுக் குறியீடு கொண்ட நாடுகள் ஆகும்.
- உலகிலுள்ள ஏழைகளில் 48.1% பேர் இந்த ஐந்து நாடுகளில் வாழ்கின்றனர்.
- 1.1 பில்லியன் ஏழைகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் (584 மில்லியன்) என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- உலகளவில், 27.9 சதவீதக் குழந்தைகள் வறுமையில் வாழ்கின்றனர் என்பதோடு இளம் பருவத்தினர் மத்தியில் இது 13.5 சதவீதமாக உள்ளது.
- தெற்காசியாவில் ஏழ்மை நிலையில் உள்ள 272 மில்லியன் குறைந்த பட்சம் ஒரு ஊட்டச் சத்து குறைபாடுள்ள நபர் கொண்ட வீடுகளிலும், ஏழ்மை நிலையில் உள்ள சுமார் 256 மில்லியன் மக்கள் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளிலும் வாழ்கின்றனர்.
- ஏழ்மை நிலையில் உள்ள சுமார் 83.7 சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.

## உலக ஆற்றல் கண்ணோட்ட அறிக்கை 2024

- சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்பட்ட இந்த ஒரு அறிக்கையானது முக்கிய ஆற்றல் போக்குகள் மற்றும் கணிப்புகளை வழங்குகிறது.
- 2023 ஆம் ஆண்டில் மட்டும், உலகளவில் 560 ஜிகாவாட் (GW) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க ஆற்றலானது நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றினை விஞ்சி, மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்கான பெரும் முன்னணி மூல ஆதாரமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதிய கார் விற்பனையில் மின்சார வாகனங்கள் 50% பங்கினை வகிக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு, மேலும் உலகளாவிய மின்சார வாகன (EV) சந்தை வேகமாகவும் விரிவடைந்து வருகிறது.
- இந்தியா 2028 ஆம் ஆண்டிற்குள் உலகின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதாரமாக மாறும் பாதையில் சரியாக செயலாற்றி வருகிறது.
- 2035 ஆம் ஆண்டில் இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி சுமார் 70% வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதனால் சிமெண்ட் உற்பத்தி சுமார் 55% உயரும்.
- காற்றுப் பதனாக்கிகளின் (AC) உற்பத்தி சுமார் 4.5 மடங்குக்கு மேல் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2035 ஆம் ஆண்டில் மெக்சிகோ நாட்டில் எதிர்பார்க்கப்படும் மின் நுகர்வை விட, இந்தியாவின் காற்றுப் பதனாக்கிகளுக்கான மின்சாரத் தேவை அதிகரிக்க உள்ளது.
- இந்தியாவின் மொத்த எரிசக்தித் தேவையானது 2035 ஆம் ஆண்டிற்குள் சுமார் 35% அளவு அதிகரிக்கும்.
- அதன் மின் உற்பத்தி திறன் ஆனது 1400 ஜிகாவாட் என்ற ஒரு அளவிற்கு சுமார் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.




## ஒழுங்கற்றப் பருவநிலை அறிக்கை 2024

- உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) பொருளாதார நிபுணர், "ஒழுங்கற்றப் பருவ நிலை. கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள், பெண்கள் மற்றும் இளையோர்கள் மீதான பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களை அளவிடுதல்" எனும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.
- இந்தியாவில் உள்ள கிராமப்புற ஏழைகளின் வேளாண் வருமான மூலங்கள் ஆனது பருவநிலை நெருக்கடியின் வகையைப் பொறுத்து வெவ்வேறு வழிகளில் பாதிக்கப் பட்டுள்ளன.





- ஒரு சராசரி ஆண்டில் உலகளவில் ஏழைக் குடும்பங்கள் ஆனது ஒப்பீட்டளவில் மிக மேம்பட்ட நிலையில் உள்ள குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், அவர்களின் மொத்த வருமானத்தில் சுமார் 5 சதவீதத்தினை வெப்பத் தாக்கத்தின் காரணமாகவும், 4.4 சதவீதத்தினை வெள்ளம் காரணமாகவும் இழக்கின்றன.

- வெள்ளம் ஆனது, உலகளவில், கிராமப்புறங்களில் உள்ள ஏழ்மை நிலையில் உள்ள மற்றும் ஏழ்மை நிலையில் அல்லாத குடும்பங்களுக்கு இடையேயான வருமான இடை வெளியை ஆண்டிற்கு சுமார் 21 பில்லியன் டாலர் அளவுக்கு விரிவுபடுத்துகிறது.
- வெப்பத் தாக்கம் ஆனது ஆண்டிற்கு 20 பில்லியன் டாலருக்கும் அதிகமான அளவிற்கு இந்த இடைவெளிகளை விரிவுபடுத்துகிறது.
- சராசரி நீண்ட கால வெப்பநிலையில் ஏற்படும் சுமார் 1° C அதிகரிப்பு ஆனது ஏழைக் குடும்பங்களின் வேளாண் வருமானம் 53% அளவு அதிகரிப்பதற்கும் ஏழ்மை நிலையில் அல்லாத குடும்பங்களைக் காட்டிலும் அவர்களது வேளாண் சாராத வருமானம் 33% குறைவதற்கும் வழி வகுக்கிறது.

## உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவர அறிக்கை 2024 - WTO

- உலக வர்த்தக அமைப்பானது உலக வணிகப் பொருட்களின் வர்த்தக வளர்ச்சியானது 3.3 சதவீதமாக இருக்கும் என்ற அதன் முந்தைய மதிப்பீட்டினை 2025 ஆம் ஆண்டில் 3 சதவீதமாக இருக்கும் என்று குறைத்துக் கணித்து கூறியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், 2.6 சதவீதமாக கூறப்பட்ட வணிகப் பொருட்களின் வர்த்தக வளர்ச்சிக்கான முன் கணிப்பினை 2.7 சதவீதமாக WTO அமைப்பு உயர்த்தியது.
- 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வருடாந்திர 2.3 சதவீத அதிகரிப்பு பதிவாகி உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய வணிகப் பொருட்களின் வர்த்தகத்தில் ஐரோப்பா தொடர்ந்து அதிக மதிப்பினைக் கொண்டுள்ளது.
- சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தியா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பிற ஆசியப் பொருளாதாரங்கள் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.




## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2024

- சர்வதேச நாணய நிதியமானது சமீபத்திய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகின் மிகப்பெரியப் பொருளாதாரமான அமெரிக்கப் பொருளாதாரம் ஆனது இந்த ஆண்டு 2.8 சதவிகிதம் விரிவடையும் என்று IMF கணித்துள்ளது.

- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 2.9 சதவீதத்திலிருந்து சற்று குறைந்துள்ளது ஆனால் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அது கணித்த 2.6 சதவீதத்தினை விட இது அதிகம் ஆகும்.
- யூரோ பண மதிப்பினைப் பகிர்ந்து கொள்ளும் 20 ஐரோப்பிய நாடுகள் கூட்டாக இந்த ஆண்டு 0.8 சதவீத வளர்ச்சியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஜெர்மனி நாட்டின் பொருளாதாரமானது, இந்த ஆண்டு வளர்ச்சி அடையாது என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில் 6.7 சதவீதமாக இருந்த உலகளாவியப் பணவீக்கம் ஆனது இந்த ஆண்டு 5.8 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 4.3 சதவீதமாகவும் குறையும் என இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்தியாவின் பொருளாதாரம் ஆனது இந்த ஆண்டு சுமார் 7 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

| | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|
| World Output | 3.3 | 3.2 | 3.2 |
| Emerging Market and Developing Economies | 4.4 | 4.2 | 4.2 |
| Emerging and Developing Asia | 5.7 | 5.3 | 5.0 |
| China | 5.2 | 4.8 | 4.5 |
| India | 8.2 | 7.0 | 6.5 |
| Emerging and Developing Europe | 3.3 | 3.2 | 2.2 |
| Russia | 3.6 | 3.6 | 1.3 |
| Latin America and the Caribbean | 2.2 | 2.1 | 2.5 |
| Brazil | 2.9 | 3.0 | 2.2 |
| Mexico | 3.2 | 1.5 | 1.3 |
| Middle East and Central Asia | 2.1 | 2.4 | 3.9 |

## சமத்துவமின்மை குறியீட்டைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு 2024

- இது ஆக்ஸ்பாம் மற்றும் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் இன்டர்நேஷனல் அமைப்பு மூலம் வெளியிடப்பட்டது.
- சமத்துவமின்மையை எதிர்த்து போராடுவதற்காக வேண்டி சுமார் 164 நாடுகள் மற்றும் பிராந்தியங்களின் உறுதிப்பாட்டினை இது மதிப்பிட்டது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 127வது இடத்தில் உள்ளது.
- மற்ற தெற்காசிய நாடுகளான நேபாளம் (115) மற்றும் இலங்கை (118) இந்தியாவை விட சிறப்பான செயல்திறனைக் கொண்டுள்ளன.


- ❖ நார்வே, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய சில நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளன.
- ❖ தெற்கு சூடான் மற்றும் நைஜீரியா போன்ற நாடுகள் இந்தப் பட்டியலின் தரவரிசையில் கடைசி இடங்களில் உள்ளன.

TABLE 1 TOP AND BOTTOM 10 COUNTRIES IN THE CRI 2024 INDEX

| Top and bottom ten countries in the CRI 2024 Index | | | |
|---|---|---|---|
| Top ten | | Bottom ten | |
| Rank | Country | Rank | Country |
| 1 | Norway | 164 | South Sudan |
| 2 | Canada | 163 | Nigeria |
| 3 | Australia | 162 | Vanuatu |
| 4 | Germany | 161 | Haiti |
| 5 | Finland | 160 | Zimbabwe |
| 6 | Denmark | 159 | Uganda |
| 7 | Austria | 158 | Central African Republic |
| 8 | Japan | 157 | Liberia |
| 9 | Slovenia | 156 | Sierra Leone |
| 10 | France | 155 | Burundi |

## உலக நாடுகளின் பொருளாதாரச் சுதந்திரம் 2024

- ❖ கனடாவில் உள்ள சுதந்திரவாதச் சிந்தனைக் குழுமமான ஃப்ரேசர் நிறுவனம் ஆனது பகுப்பாய்வு அறிக்கையினைத் தயாரித்துள்ளது.
- ❖ இந்த வருடாந்திர அறிக்கையானது ஹாங்காங் நாட்டினைச் சுதந்திரமான உலகப் பொருளாதாரமாக தரவரிசைப்படுத்தியுள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ இந்தியா 84வது இடத்திலும், அதன் அண்டை நாடான நேபாளம் 86வது இடத்திலும், பூடான் 98வது இடத்திலும், சீனா 104வது இடத்திலும் உள்ளன.



## உமிழ்வு இடைவெளி அறிக்கை 2024


| | Total GHG emissions in 2023 | Change in total GHG emissions, 2022-2023 | Per capita GHG emissions in 2023 | Historical $CO_2$ emissions, 1850-2022 |
|---|---|---|---|---|
| | $MtCO_2e$ (% of total) | % | $tCO_2e$/capita | $GtCO_2$ (% of total) |
| China | 16,000 (30) | +5.2 | 11 | 300 (12) |
| United States of America | 5,970 (11) | -1.4 | 18 | 527 (20) |
| India | 4,140 (8) | +6.1 | 2.9 | 83 (3) |
| European Union (27 countries) | 3,230 (6) | -7.5 | 7.3 | 301 (12) |
| Russian Federation | 2,660 (5) | +2 | 19 | 180 (7) |
| Brazil | 1,300 (2) | +0.1 | 6.0 | 119 (5) |
| African Union (55 countries) | 3,190 (6) | +0.7 | 2.2 | 174 (7) |
| Least developed countries (47 countries) | 1,730 (3) | +1.2 | 1.5 | 115 (4) |
| G20 (excl. African Union) | 40,900 (77) | +1.8 | 8.3 | 1,990 (77) |

- ❖ உமிழ்வு இடைவெளி அறிக்கை என்பது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் அமைப்புத் திட்டத்தின் வருடாந்திர வெளியீடாகும்.
- ❖ மிகவும் அதிகளவில் பசுமை இல்ல வாயுவினை வெளியிடும் ஆறு நாடுகள் ஆனது உலகளாவிய GHG உமிழ்வுகளில் 63% பங்கினை கொண்டுள்ளன.
- ❖ குறைந்த அளவு வளர்ச்சியடைந்த நாடுகளின் பங்கு 3% மட்டுமேயாகும்.
- ❖ சீனா மற்றும் அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது 4,140 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான ($MtCO_2e$) உமிழ்வுடன் மொத்த GHG உமிழ்வில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியாவின் முந்தைய (1850-2022) $CO_2$ உமிழ்வுப் பதிவுகள் ஆனது சீனா (300 Gt $CO_2$ ஜிகா டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான) மற்றும் அமெரிக்கா (527 Gt $CO_2$) ஆகிய நாடுகளை விட மிகக் குறைவு ஆகும் (83 Gt $CO_2$).
- ❖ பசுமை இல்ல வாயு உமிழ்வு ஆனது, 2023 ஆம் ஆண்டில் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான 57 ஜிகாடன்கள் (Gt) என்ற புதிய உச்ச அளவிற்கு உயர்ந்துள்ளது (2022 ஆம் ஆண்டில் இருந்த அளவில் இருந்து 1.3% அதிகரிப்பு).
- ❖ அடுத்த தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட உறுதிப்பாடுகளில், 2030 ஆம் ஆண்டில் 42% மற்றும் 2035 ஆம் ஆண்டில் 57% என்ற அளவில் வருடாந்திர பசுமை இல்ல வாயு உமிழ்வு குறைக்க உலக நாடுகள் கூட்டாக உறுதியளிக்க வேண்டும்.


## வறுமை, செழிப்பு மற்றும் கோள் அறிக்கை 2024

- ❖ உலக வங்கியானது, சமீபத்தில் 'வறுமை, செல்வச் செழிப்பு மற்றும் கோள்: பல்வேறு நெருக்கடியிலிருந்து வெளி வருவதற்கான பல வழிமுறைகள்' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு ள்ளது.
- ❖ உலக மக்கள்தொகையில் சுமார் பாதி பேர் (44%) - சுமார் 3.5 பில்லியன் மக்கள் – தற்போது ஒரு நாளைக்கு 6.85 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்கின்றனர்.

- உலக மக்கள்தொகையில் 8.5% பேர் (சுமார் 700 மில்லியன் மக்கள்) தற்போது ஒரு நாளுக்கு சுமார் 2.15 டாலருக்கும் குறைவான வருமானத்தில் கடுமையான வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- உலக வங்கியின் கூற்றுப் படி, கடுமையான வறுமையில் உள்ளவர்கள் என்போர் ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்பவர்கள் ஆவர்.
- 2024 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியானது உலக மக்கள் தொகையில் சுமார் 16% பங்கினைக் கொண்டிருந்தாலும், அதில் 67% பேர் கடுமையான வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- 1990 ஆம் ஆண்டில் 431 மில்லியனாக இருந்த கடுமையான வறுமை நிலையில் வாடும் இந்தியர்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 29 மில்லியன் ஆக உள்ளது.
- சுமார் 622 மில்லியன் மக்கள் (உலக மக்கள்தொகையில் 7.3%) 2030 ஆம் ஆண்டில் கடுமையான வறுமை நிலையில் வாழ்வார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.




## உலகளாவிய இயற்கை வளங்காப்புக் குறியீடு (NCI) 2024




- இந்த அறிக்கையானது, நில மேலாண்மை, பல்லுயிர்ப் பெருக்கம் மீதான பல்வேறு அச்சுறுத்தல்கள், திறன் மற்றும் ஆளுகை மற்றும் எதிர்கால போக்குகள் ஆகிய நான்கு குறிப்பான்களைப் பயன்படுத்தி வளங்காப்பு முயற்சிகளை மதிப்பீடு செய்கிறது.

- 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய இயற்கை வளங்காப்புக் குறியீட்டில் இந்தியா 176வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் 180 நாடுகளின் தரவரிசையில் கிரிபாட்டி (180), துருக்கி (179), ஈராக் (178), மற்றும் மைக்ரோனேஷியா (177) ஆகியவற்றுடன் ஐந்து மோசமான செயல்திறன் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இடம் உள்ளது.
- இந்தக் குறியீடு ஆனது இந்தியாவில் பூச்சிக் கொல்லிகளின் அதிகமான பயன்பாட்டை நன்கு வெளிப்படுத்துகிறது என்பதோடு மண் மாசுபாட்டிற்கு எதிரான நடவடிக்கை குறித்தும் எச்சரிக்கிறது.
- 15வது இடத்தினைப் பெற்று முதல் 50 இடங்களில் உள்ள இடம் பெற்ற ஒரே தெற்காசிய நாடாக பூடான் திகழ்கிறது.
- இதில் நேபாளம் 60வது இடத்தில் உள்ளது என்பதோடு இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகியவை முறையே 90 மற்றும் 151வது இடங்களைப் பெற்று இந்தியாவை விட செயல் திறனில் முன்னணியில் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## அருணாச்சலப் பிரதேசத்தில் ஏறப்படாத சிகரம்

- தேசிய மலையேறுதல் மற்றும் சாகச விளையாட்டுக் கழகத்தின் (NIMAS) 15 பேர் கொண்ட குழுவானது அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங்-மேற்கு கமெங் பகுதியில் இதுவரை ஏறப்படாத சிகரத்தில் ஏறியுள்ளது.
- 6வது தலாய் லாமாவின் நினைவாக அதற்கு 'சங்யாங் கியாட்சோ சிகரம்' என்று பெயரிட்டுள்ளனர்.
- இந்தச் சிகரமானது, அருணாச்சலப் பிரதேச இமயமலையின் கோரிசென் மலைத் தொடரில் கடல் மட்டத்திலிருந்து 6,383 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- ஆறாவது தலாய் லாமாவான சாங்யாங் கியாட்சோ, 1682 ஆம் ஆண்டில் அருணாச்சலப் பிரதேசத்தின் மோன் தவாங் எனுமிடத்தில் பிறந்தார்.
- அவர் 1697 ஆம் ஆண்டில் தனது 14 வயதில் ஆறாவது தலாய் லாமாவாக பொறுப்பினை ஏற்றார்.
- 1706 ஆம் ஆண்டில், அவர் சீனாவுக்கு அழைக்கப்பட்டு, அங்கு செல்லும் வழியில் உயிர் இழந்தார்.
- சீனா அரசானது அருணாச்சலப் பிரதேசத்தை ஜங்னான் என்று அழைக்கிறது.
- மேலும், சீனா தனது உரிமைக் கோரல்களை உறுதிப்படுத்துவதற்காக அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இடங்களின் பெயரை 2017 ஆம் ஆண்டு முதல் மாற்றி வருகிறது.

## கஸ்தூரிரங்கன் குழு அறிக்கை – கர்நாடகா




- 2014 ஆம் ஆண்டு கஸ்தூரிரங்கன் குழு அறிக்கையினை கர்நாடக அரசு நிராகரித்து உள்ளது.
- பலவீனமான மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை சுற்றுச்சூழல் சீர்கேட்டிலிருந்து பாதுகாப்பதற்கான பரிந்துரையை அது வழங்கியது.
- சுமார் 60,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் மொத்தப் பரப்பளவில் அதிகப் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய 37 சதவீதத்தைச் சுற்றுச் சூழல் உணர்திறன் கொண்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை முன்மொழிகிறது.
- இதில் 20,668 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு ஆனது கர்நாடகாவில் 1,500க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியது.
- மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மாநில அளவிலான பல நிபுணர் குழு கூட்டங்களை நடத்தி 2015 ஆம் ஆண்டில் இக்குழு இந்த அறிக்கையினை தயாரித்தது.
- இந்தக் குழுவானது சுமார் 153 (1,553 கிராமங்களுக்கு மாறாக) கிராமங்கள் மட்டுமே சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு அதிகம் உள்ளாகக் கூடிய பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

## இந்தியாவில் நகர்ப்புற ஆளுமைக் குறியீடு

- நகர்ப்புற ஆளுமைக் குறியீட்டில் (UGI) கேரளா முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- 55.10 புள்ளிகளுடன் ஒடிசா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- நிதி அதிகாரமளிப்பில், கேரளா 30க்கு 23.22 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது என்ற நிலையில் மகாராஷ்டிரா 21.15 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

- நான்கு மாநிலங்கள் மட்டுமே (சத்தீஸ்கர், கேரளா, மிசோரம் மற்றும் ஒடிசா) ஒவ்வொரு மன்ற உறுப்பினரும் (கவுன்சிலரும்) குறைந்தபட்சம் ஒரு விவாதக் குழுவிலாவது அங்கம் வகிக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளன.

**BEST PERFORMER**

- Odisha ranked first for **'citizen's empowerment'** under **2024 Urban Governance Index** with a score of 21 out of 25, followed by **Telangana** (19) and **Madhya Pradesh** (17)
- In the **accessible open data portal category**, Odisha scored 7.75 out of 8.75
- In right to elect **mayor** and recall **elected city representatives**, Odisha scored 2 out of 5
- In **formal and active citizens' consultative mechanism**, state scored 5 out of 5
- In **active grievance redressal mechanism**, it secured 6.25 out of 6.25

## சரிபார்க்கப்பட்ட சுகாதார மையங்கள்

**HEALTH FACILITY VERIFICATION** — Verified facilities according to

| Top 5 | HFR | NHRR 2018 | Saturation rate (%) |
|---|---|---|---|
| Karnataka | 60,711* | 49,337 | 100.00 |
| Tripura | 2,495 | 3,073 | 81.20 |
| Chhattisgarh | 10,403 | 15,048 | 69.10 |
| Rajasthan | 33,228 | 54,083 | 61.40 |
| Himachal Pradesh | 3,989 | 7,069 | 56.40 |

| Bottom 5 | HFR | NHRR 2018 | Saturation rate (%) |
|---|---|---|---|
| Odisha | 6 | 16,867 | 0.03 |
| Tamil Nadu | 1,694 | 73,941 | 2.30 |
| Delhi | 1,590 | 37,228 | 4.30 |
| Maharashtra | 21,964 | 149,572 | 14.70 |
| Haryana | 4,659 | 26,474 | 17.60 |

Note: HFR refers to Health Facility Registry; NHRR refers to National Health Resource Repository; * Karnataka has verified more facilities than those in NHRR data

Source: ABDM Dashboard, as of 5 pm, October 2, 2024

- கர்நாடகா, உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை சுகாதார மையங்கள் பதிவேட்டில் (HFR) சரிபார்க்கப்பட்ட சுகாதார மையங்களின் ஒரு முழுமையான எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள மாநிலங்களாகும்.
- தேசிய சுகாதார வளக் களஞ்சிய (NHRR) தரவு ஆனது 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள அனைத்து பொது மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களின் தகவல்களை சேகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- HFR என்பது பொது மற்றும் தனியார் சுகாதார மையங்களுக்கான தேசிய எண்ணிம சுகாதாரப் பதிவேட்டை உருவாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்ட, சுகாதார மையங்களின் களஞ்சியமாகும்.
- அதிநவீன மற்றும் வெகுவான பாரம்பரிய மருத்துவ முறைகளின் அடிப்படையிலான மருத்துவமனைகள், சிறிய மருத்துவமனைகள், நோயறிதல் ஆய்வகங்கள், ஆய்வு மையங்கள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

- நாட்டிலேயே சுமார் 60,711 சரிபார்க்கப்பட்ட மையங்களைக் கொண்ட ஒரே மாநிலம் கர்நாடகா ஆகும்.
- அதைத் தொடர்ந்து முறையே 81.2 சதவீதம் மற்றும் 69.1 சதவீதம் மைய நிறுவல் விகிதங்களைக் கொண்டுள்ள திரிபுரா மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன.
- குறைந்த அளவிலான ஒரு மைய நிறுவல் விகிதத்துடன் இந்தப் பட்டியலின் கடைசி இடங்களில் ஒடிசா, தமிழ்நாடு மற்றும் டெல்லி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## அசாமின் பாரம்பரியத் தயாரிப்புகள் – புவிசார் குறியீடு



- பாரம்பரிய உணவுப் பொருட்கள் மற்றும் பல தனித்துவமான அரிசித் தேறல் உட்பட அசாம் பகுதியினைச் சேர்ந்த பின்வரும் எட்டு தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப் படுகிறது.
- முதலாவது தயாரிப்பு ஆனது அரிசித் தேறல் வகையான 'போடோ ஜூ க்வ்ரான்' என்ற பொருளில் அதிக சதவீத ஆல்கஹால் (சுமார் 16.11%) உள்ளது.
- இரண்டாவது வகையானது 'மைப்ரா ஜூ பித்வி' ஆகும் என்ற நிலைமையில் இது உள் நாட்டில் 'மைப்ரா ஜ்வு பித்வி' அல்லது 'மைப்ரா ஸ்வு பித்வி' என்று அழைக்கப்படுகிறது.
- 'போடோ ஜூ கிஷி' எனப்படும் மூன்றாவது வகையும் மிகவும் பாரம்பரியமாக புளிக்க வைக்கப் பட்ட அரிசியிலிருந்து பெறப்படும் மதுபானமாகும்.
- முக்கியமான மற்றும் விரும்பத்தகு உணவான 'போடோ நாபம்' எனப்படும் புளித்த மீன் உணவு வகைக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- 'போடோ ஒன்ட்லா' எனப்படும் மற்றொரு உணவு வகையானது, பூண்டு, இஞ்சி, உப்பு மற்றும் காரத்துடன் கூடிய அரிசித் தூள் மணமுடன் கூடிய ஒரு குழம்பு வகையாகும்.
- 'போடோ குவ்கா' உணவு வகையும் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- சணல் இலைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பகுதியளவு புளித்த உணவான 'போடோ நர்சி' என்ற உணவு வகையும் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- 'போடோ அரோனை' என்ற சிறிய, அழகான துணியும் புவி சார் குறியீட்டினைப் பெற்று உள்ளது.

## 25வது இருவாச்சி திருவிழா

- நாகாலாந்து மாநிலத்தின் முக்கியத் திருவிழாவான 25வது இருவாச்சி திருவிழா ஆனது அல்லது "பண்டிகைகளின் பண்டிகை" ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.
- இனம், பன்முகத்தன்மை மற்றும் மகத்துவம் என அதன் அனைத்து வகை அம்சத்திலும் நாகாலாந்தின் வளமான மற்றும் மரபார்ந்த கலாச்சாரப் பாரம்பரியத்தை இந்த 10 நாட்கள் அளவிலான நிகழ்வு காட்சிப்படுத்துகிறது.
- மகத்துவம் மற்றும் எச்சரிக்கை குணங்களுக்கு பெயர் பெற்ற இப்பறவைக்கு இவ்விழா கௌரவமளிக்கிறது.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் இந்தப் பறவையின் பாதுகாப்பு நிலை என்பது அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம் ஆகும்.

## இணை மாவட்டம் – அசாம்

- இணை மாவட்டங்கள் என்பது தற்போதுள்ள மாவட்டங்களுக்குள் உருவாக்கப்பட்ட அசாம் மாநில அரசாங்கத்தின் முன்னோடி மிக்க ஒரு முன்னெடுப்பாகும்.
- அம்மாநில அரசானது முதல் கட்டமாக 39 இணை மாவட்டங்களை உருவாக்கியது.
- அடிமட்ட அமைப்புகளுக்கு நிர்வாகத்தை கொண்டு செல்வதன் மூலம் அத்தியாவசிய அரசுச் சேவைகளை மிகவும் சரியான நேரத்தில் அணுகுவதை உறுதி செய்வதையும் குடிமக்களை மையப்படுத்திய சேவைகளை நெறிப்படுத்துவதையும் இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த 'இணை மாவட்டங்கள்' ஆனது உதவி மாவட்ட ஆணையர் பதவியில் உள்ள அதிகாரி தலைமையில் மாவட்டங்களுக்குக் கீழே உள்ள சிறிய நிர்வாக அலகுகளாக செயல்படும்.




## மனாஸ் தேசியப் பூங்காவில் பிக்மி பன்றிகள்

- மேற்கு அசாமின் மனாஸ் தேசியப் பூங்காவில் கூண்டுகளில் பாதுகாத்து வைக்கப்பட்ட ஒன்பது பிக்மி பன்றிகள் விடுவிக்கப்பட்டன.
- 2020 ஆம் ஆண்டு முதல் பிக்மி பன்றிகள் வளங்காப்புத் திட்டம் (PHCP) மூலம் மேற் கொள்ளப் பட்ட ஐந்தாவது நடவடிக்கை இதுவாகும்.

- பிக்மி ஹாக் (போர்குலா சால்வேனியா) என்பது அழிவின் விளிம்பை எட்டும் நிலையில் உள்ள உலகின் மிகச்சிறிய மற்றும் அரிதான காட்டுப் பன்றி இனமாகும்.



## பீகாரின் குடியா பறவை

- மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி-2024 ஹாக்கி போட்டியை இந்தியா நடத்த உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிக்களுக்கான ஒரு சின்னமாக 'குடியா' பறவை பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த சின்னத்தில், பீகாரின் ஆன்மீக பாரம்பரியத்துடன் ஆழ்ந்த தொடர்புடைய போதி மரம் ஆனது அதன் வடிவமைப்பின் ஒரு மையச் சின்னமாக உள்ளது.

## பஞ்சாரா விராசத் அருங்காட்சியகம் - மகாராஷ்டிரா

- பஞ்சாரா சமூகத்தின் மிகவும் வளமான பாரம்பரியத்தைக் கொண்டாடும் வகையில் மகாராஷ்டிராவில் உள்ள வாஷிமில் போஹராதேவியில் பஞ்சாரா விராசத் என்ற ஒரு அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.
- பஞ்சாரா சமூகம் என்பது இராஜஸ்தானைச் சேர்ந்த நாடோடி பழங்குடியினரின் குழு ஆகும் என்பதோடு அக்குழுவினர் தற்போது கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் குடியேறியுள்ளனர்.
- போஹராதேவி என்ற பகுதியானது இச் சமூகத்தினரால் மிகப் புனிதமான இடமாகக் கருதப் படுவதோடு அவர்கள் அந்தப் பகுதியினை "பஞ்சாரா சமூகத்தின் காசி" என்று குறிப்பிடுகிறார்கள்.
- பஞ்சாரா சமூகத்தினர் வரலாற்று ரீதியாக இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பவர்கள், வணிகர்கள், கால்நடை இனப்பெருக்குனர்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வோர் என்ற ரீதியில் காணப்படுகின்றனர்.


## உத்தரப் பிரதேசத்தின் கிராமப்புற மகளிர் இயக்கம்

- BC சகி எனப் படுகின்ற தொழில்முனைவு மிக்க பெண் வணிகத் தொழில் உதவியாளர்கள் உத்தரப் பிரதேச மாநிலத்தில் 27,000 கோடி ரூபாய் மதிப்பிலான பரிவர்த்தனைகளை மேற்கொண்டு உள்ளனர்.
- நாடு தழுவிய அளவிலான பெண்கள் அதிகாரமளிக்கும் திட்டத்தின் கீழ் BC சகி என்போர் நியமிக்கப் பட்டனர்.

- அவர்கள் கிராமப்புறங்களில் வங்கி மற்றும் நிதிச் சேவைகளை வழங்குவதற்காக பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற சுய உதவிக் குழுக்களின் (SHGs) உறுப்பினர்களாக உள்ளனர்.
- BC சகிக்களின் எண்ணிக்கையில் உத்தரப் பிரதேசம் இந்தியாவில் முன்னணியில் உள்ள நிலையில் மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை முறையே சுமார் 19,000 மற்றும் 10,000 உதவியாளர்களைக் கொண்டுள்ளன.

## ஹரியானா மற்றும் ஜம்மு & காஷ்மீர் தேர்தல்

- ஜம்மு & காஷ்மீர் சட்டமன்றத் தேர்தலில் தேசிய மாநாட்டுக் கட்சி (NC) மற்றும் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.
- 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஓர் ஒன்றியப் பிரதேசமாகவும், 370வது சரத்து நீக்கப்பட்ட பிறகும் நடைபெறும் முதல் சட்டமன்றத் தேர்தல் இதுவாகும்.
- ஹரியானாவில் பாஜக தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்து வரலாறு படைத்துள்ளது.
- அங்கு பாஜக 48 இடங்களிலும், காங்கிரஸ் 37 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.
- ஜம்மு & காஷ்மீரின் 90 இடங்களில், NC கட்சி மற்றும் காங்கிரஸ் 49 இடங்களிலும், பா.ஜ.க 29 இடங்களிலும், மக்கள் ஜனநாயக கட்சி (PDP) 3 இடங்களிலும் வெற்றி பெற்று உள்ளன.




## வட துருவ மின்னொளி - லே

- கடுமையான புவி காந்தப் புயல் பூமியைத் தாக்கியதால், இந்தியாவின் லே பகுதியின் வானத்தில் துருவ மின்னொளி தோன்றியது.
- இந்த நிகழ்வு ஆனது பூமியை அடைந்த சூரியனில் இருந்து வெளி வந்த ஒரு சக்தி வாய்ந்த சூரிய வெப்ப உமிழ்வு (CME) காரணமாக தூண்டப்பட்டது.
- CME ஆனது X1.8 சூரியச் சுடரில் இருந்து உருவானது என்பதோடு மேலும் அது மணிக்கு 1.5 மில்லியன் மைல்களுக்கு மேலான வேகத்தில் பயணித்தது.
- தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு (NOAA) ஆனது இந்தப் புவி காந்தப் புயலை G4 என வகைப்படுத்தியது.
- மின் கட்டமைப்புகள் மற்றும் செயற்கைக் கோள் செயல்பாடுகளைச் சீர்குலைக்கும் கடுமையான நிலைமைகளை இது குறிக்கிறது.

- சூரியச் செயல்பாடு ஆனது ஒரு சுழற்சிக்கு ஒரு முறை சூரிய சக்தியின் உச்சத்தை அடைகின்ற 11 ஆண்டுகால சுழற்சியில் உச்சத்தை அடைகிறது என்ற நிலையில் இது 2025 ஆம் ஆண்டில் நிகழ உள்ளது என்பதோடு மேலும் இதன் விளைவுகள் 2026 ஆம் ஆண்டு வரை உணரப்படும்.

## ஜம்மு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீக்கம்

- ஜம்மு காஷ்மீரில் முதல்வர் நியமிக்கப்படுவதற்கு முன்னதாக குடியரசுத் தலைவர் ஆட்சி ரத்து செய்யப் பட்டுள்ளது.
- ஜம்மு காஷ்மீர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு ஒன்றியப் பிரதேசங்களாக பிரிக்கப்பட்ட போது அங்கு மத்திய அரசின் ஆட்சி தொடங்கியது.
- 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஜம்மு காஷ்மீரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் இல்லாமல் இருந்தது.
- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று, அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியலமைப்பின் 356வது சரத்தின் கீழ் ஜம்மு & காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அறிவித்தார்.
- தற்போது, புதிய முதலமைச்சருடனான புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு இந்த ரத்து வழி வகுத்துள்ளது.
- எனினும் துணை நிலை ஆளுநரானவர் - காவல்துறை, பொது ஒழுங்கு மற்றும் நில மேலாண்மை உள்ளிட்ட முக்கியமானப் பகுதிகள் மீதான நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பார்.

## உயிரி பலபடிச் சேர்மங்களுக்கான செயல்விளக்க வசதி




- உயிரி பலபடிச் சேர்மங்களுக்கான இந்தியாவின் முதல் செயல்விளக்க மையமானது புனேவில் உள்ள ஜெஜூரியில் திறக்கப்பட்டுள்ளது.
- பாலிலாக்டிக் அமில (PLA) உயிரி நெகிழிகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் இந்த மையம் கவனம் செலுத்துகிறது.
- உயிரி பலபடிச் சேர்மங்கள் என்பது கொழுப்புகள், தாவர எண்ணெய்கள் மற்றும் சர்க்கரைகள் போன்ற உயிரியல் மூலங்களிலிருந்துத் தயாரிக்கப்படுகின்றன.


- அவை செயற்கையான பலபடிச் சேர்மங்களை விட மக்கும் தன்மை உட்பட, மண்ணில் உள்ள பாக்டீரியாவால் எளிதில் சிதைக்கப்படுதல் போன்ற பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளன.
- அவற்றின் சிதைவின் போது வெளியிடப்பட்ட $CO_2$ மாற்றுப் பயிர்களால் மீண்டும் உட்கிரகிக்கப் படலாம் என்பதால், அவை கார்பன் நடுநிலையையும் வழங்குகின்றன.

## உத்தரகாண்டின் ரூப்குண்ட் ஏரி




- உத்தரகாண்டின் மலையேற்றத் தலமாக விளங்கும் ரூப்குண்ட் ஏரி, திரிசூல் மலையின் அடிவாரத்தில் கடல் மட்டத்திலிருந்து 16,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- 9 அடி ஆழம் கொண்ட இந்த ஏரியின் பரவல் தோராயமாக இரண்டு ஏக்கர் ஆகும்.
- நூற்றுக்கணக்கான மனித எலும்புக் கூடுகளைக் கொண்டுள்ள பெரும் பனிப்பாறை மிக்க இந்தப் பகுதியானது "எலும்புக்கூடுகளின் ஏரி" என்று அழைக்கப்படுகிறது.
- இந்த ஏரியானது தற்போது அகலம் மற்றும் ஆழம் ஆகிய இரண்டிலும் ஆண்டுதோறும் சுமார் 0.1% முதல் 0.5% வரை சுருங்கி வருகிறது.

## தலித் உள் ஒதுக்கீடு முறை – அரியானா




- சமீபத்தில் ஹரியானா மாநிலப் பட்டியலிடப்பட்ட சாதியினர் ஆணையமானது தலித் சமூகங்களை பின்வரும் இரண்டு வகைகளாகப் பிரிக்க பரிந்துரைத்தது.

- பால்மிகி, தனக், மஜாபி சீக்கியர்கள் மற்றும் காடிக் போன்ற 36 குழுக்களை உள்ளடக்கிய தாழ்த்தப்பட்ட பட்டியலிடப்பட்ட சாதிகள் (DSC), மற்றும்
- சமர், ஜாதியா சமர், ரெஹ்கர், ராய்கர், ராம்தாசி, ரவிதாசி மற்றும் ஜாதவ் போன்ற சாதிகளை உள்ளடக்கிய இதரப் பட்டியலிடப்பட்ட சாதிகள் (OSC).

❖ புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமைச்சரவையின் முதல் கூட்டத்தின் போது இந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

❖ தற்போது ஒவ்வொரு துணைக் குழுவும் அரசு வேலைவாய்ப்புகளில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு வழங்கப்படும் 20% ஒதுக்கீட்டில் 50% இட ஒதுக்கீட்டினைப் பெறுகிறது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான 24வது தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான 24வது தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் கர்நாடகாவினைச் சேர்ந்த பங்கேற்புக் குழு அதிகப் பட்டங்களை வென்று இதில் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.

❖ மகாராஷ்டிரா இரண்டாவது இடத்தையும், இராஜஸ்தான் மூன்றாவது இடத்தையும் இதில் பிடித்தன.

❖ இப்போட்டியில் 28 மாநிலங்களில் இருந்து 518 நீச்சல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

❖ தனி நபர் பிரிவில் கேரளாவின் முகமது ஆசிம் ஆடவருக்கான மூத்தோர் பிரிவில் சாம்பியன் பட்டம் பெற்றார்.

❖ 50 மீட்டர் பின்னோக்கி நீந்துதலின் ஆடவர் S6 பிரிவில் ஜெய செல்வன் (தமிழ்நாடு) தங்கப் பதக்கத்தினை வென்றார்.

❖ பெல்காம் நீச்சல் குழுமத்தினைச் சேர்ந்த சிம்ரன் கவுண்டல்கர் 50 மீட்டர், 100 மீட்டர் பின்னோக்கி நீந்தும் நீச்சல் போட்டி மற்றும் 200 மீட்டர் தனிநபர் கலப்புப் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளில் தேசிய சாதனைகளைப் படைத்தார்.

## பீகார் - முதல் உலர் துறைமுகம்

❖ மாநிலத் தலைநகர் பாட்னாவுக்கு அருகிலுள்ள பிஹ்தா எனுமிடத்தில் பீகாரின் முதல் உலர் துறைமுகம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.

❖ ஒரு துறைமுகம் அல்லது விமான நிலையத்திலிருந்து தொலைவில் அமைக்கப்படும் ஓர் உலர் துறைமுகம் அல்லது உள்நாட்டு கொள்கலன் துறைமுகமானது (ICD), சரக்குப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளைக் கையாளுதல், சேமிப்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிற்கான ஒரு தளவாட வசதி ஆகியவற்றை வழங்குகிறது.

❖ இது கடல்/விமானத் துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டுப் பகுதிகளுக்கு இடையே ஒரு இணைப்புப் பகுதியாகச் செயல்பட்டு, சரக்குகளின் திறம் மிக்கப் போக்குவரத்தினை எளிதாக்குகிறது.

❖ இது பொது-தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் இயக்கப்படுகிறது.

❖ பீகார் மாநிலமானது உருளைக் கிழங்கு, தக்காளி, வாழைப்பழம், லிச்சி மற்றும் மக்கானா (தாமரை விதைகள்) போன்ற பழங்கள் மற்றும் காய்கறிகளின் ஒரு முக்கிய உற்பத்தியாளராக உள்ளது.

❖ 2022-23 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தில் 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பதிவானது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிறந்தச் சுற்றுலா கிராமங்கள் போட்டி - 2024

- உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலா அமைச்சகம் ஆனது 2024 ஆம் ஆண்டின் சிறந்தச் சுற்றுலா கிராமங்கள் போட்டியின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இந்தியாவின் மிகவும் கருவமாக விளங்கும் கிராமங்களில் (இந்தியாவின் கிராமங்கள்) சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, சிறந்த சுற்றுலா கிராமங்கள் போட்டியானது 2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதில் 8 பிரிவுகளில் மொத்தம் 36 கிராமங்கள் வெற்றியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளன.
- பாரம்பரியப் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த கீழடி முதலிடம் பிடித்தது.
- ஆன்மிகம் மற்றும் ஆரோக்கியம் என்ற பிரிவில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மேல்கலிங்கம் பட்டி விருது பெற்றுள்ளது.


## அமெரிக்க சமயப் பரப்பாளர் ஆலிஸ் பிரெளர்

- அமெரிக்க சமயப் பரப்பாளர் ஆலிஸ் பிரெளர் சமீபத்தில் காலமானார்.
- இவர் ஆம்பூரில், 60 ஆண்டுகளுக்கும் மேலாக தொழுநோய், காசநோய், போலியோ ஒழிப்புக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்.
- 60 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த அவரது மிகப்பெரும் சேவையில், அவரது பணி 60 கிராமங்களுக்கு மேல் சென்றடைந்து, உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கையை நன்கு மேம்படுத்தியது.
- இவர் "மிஸ்சியம்மா" என்ற பெயரில் அறியப் படுகிறார்.

## MIDORI பரிசு 2024

- கஜகஸ்தானைச் சேர்ந்த வேரா வோரோனோவா மற்றும் பெருவைச் சேர்ந்த யசபெல் அகஸ்டினா கால்டெரோன் கார்லோஸ் ஆகியோர் 2024 ஆம் ஆண்டிற்கான பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான MIDORI பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- வளங்காப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான அவர்களின் சிறந்த பங்களிப்புகளுக்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளது.
- அனைத்து நிலைகளிலும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதில் மிகவும் சிறந்தப் பங்களிப்பை ஆற்றுபவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த MIDORI பரிசு வழங்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான வெற்றியாளர்களுடன், MIDORI பரிசு பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை ஆனது 17 வெவ்வேறு நாடுகளில் இருந்து 19 நபர்களை எட்டியுள்ளது.


## மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2024




- அறிவியலாளர்கள் விக்டர் அம்ப்ரோஸ் மற்றும் கேரி ருவ்குன் ஆகியோர் 2024 ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசை பெற்றுள்ளனர்.
- மரபணுச் சீரமைப்பில் முக்கியப் பங்கு வகிக்கும் சிறிய ஆர்என்ஏ மூலக்கூறுகளின் புதிய வகுப்பான நுண் RNAவினை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது மனிதர்கள் உட்பட பல செல் உயிரினங்களுக்கு இன்றியமையாததாக மாறிய முற்றிலும் புதிய மரபணு சீரமைப்புக் கட்டமைப்பினை வெளிப்படுத்தியது.
- ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண் RNAக்களுக்கான மனித மரபணுக் குறியீடுகள் இதன் மூலம் தற்போது அறியப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு காடலின் கரிகோ மற்றும் ட்ரூ வெய்ஸ்மேன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு 2024

- இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜான் ஹாப்ஃபீல்டு மற்றும் ஜெஃப்ரி ஹிண்டன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இன்றைய சக்தி வாய்ந்த இயந்திரக் கற்றலின் அடிப்படையை உருவாக்கும் பல்வேறு முறைகளை உருவாக்குவதற்காக அவர்கள் இயற்பியல் கருவிகளைப் பயன்படுத்தி உள்ளனர்.
- ஜான் ஹாப்ஃபீல்ட் ஓர் இணை நினைவு தொடர்புறு நினைவகத்தை உருவாக்கினார், இதனால் தரவுகளில் உள்ள படங்கள் மற்றும் பிற வடிவங்களைச் சேமித்து அதனை மறு கட்டமைக்க முடியும்.
- ஜெஃப்ரி ஹிண்டன், தரவுகளில் உள்ள பண்புகளைத் தானாகவே கண்டறியும் ஒரு முறையைக் கண்டுபிடித்துள்ளார் என்ற நிலையில், இது படங்களில் உள்ள குறிப்பிட்ட கூறுகளை அடையாளம் காண வழி வகுக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான பரிசு ஆனது எலக்ட்ரான்கள் கொண்டு அவர்கள் ஆற்றியப் படைப்பிற்காக இயற்பியலாளர்களான ஆன் எல்'ஹுல்லியர், பியர் அகோஸ்டினி மற்றும் ஃபெரென்க் க்ராஸ்ஸுக்கு வழங்கப்பட்டது.




## ரத்தன் டாடா





- இந்திய நிறுவனமான டாடா சன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா சமீபத்தில் காலமானார்.
- டாடா அவர்கள் 2000 ஆம் ஆண்டில் இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற உயரிய குடிமை விருதுகளில் ஒன்றான பத்ம பூஷன் விருதினையும் மற்றும் 2008 ஆம் ஆண்டில் "பத்ம விபூஷன்" விருதினையும் பெற்றுள்ளார்.
- டாடா குழுமம் என்பது நாட்டின் மிகப்பெரிய வாகன உற்பத்தியாளர் மற்றும் மிகப் பெரிய தனியார் எஃகு நிறுவனம் உட்பட சுமார் 100 நிறுவனங்களின் ஒரு பரந்த தொகுப்பாகும்.
- 1932 ஆம் ஆண்டில் தொடங்கிய விமான சேவை நிறுவனமான டாடா நிறுவனம் ஆனது, இந்தியாவில் வணிக விமானப் போக்குவரத்திற்கு மிகவும் முன்னோடியாக திகழ்ந்தது என்பதோடு பின்னர் அது ஏர் இந்தியா நிறுவனமாக மாறியது.

## வேதியியலுக்கான நோபல் பரிசு 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு டேவிட் பேக்கர், டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் M ஜம்பர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பேக்கர் "கணக்கீட்டுப் புரத வடிவமைப்பிற்காக" என்று இந்த விருதினைப் பெற்று உள்ளார் என்ற நிலையில் அமெரிக்கரான ஜம்பர் மற்றும் பிரிட்டன் நாட்டவரான டெமிஸ் ஆகியோருக்கு "புரத அமைப்பின் முன்கணிப்பிற்காக" வேண்டி இந்த விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.

- முற்றிலும் புதிய புரதங்களை வடிவமைக்கும் அசாதாரண சாதனைக்காக பேக்கருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜான் ஜம்பர் ஆகியோர் இணைந்து புரதங்களின் மிகவும் சிக்கலான முப்பரிமாணக் கட்டமைப்புகளைக் கணித்தல் எனும் 50 ஆண்டுகாலச் சவாலைத் தீர்ப்பதற்கான ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியை உருவாக்கி உள்ளனர்.





## WAZA விருதுகள் 2024

- முதன்முறையாக, இந்தியாவில் உள்ள ஒரு மிருகக்காட்சிசாலையின் வளங்காப்பு -இனப் பெருக்கத் திட்டம் ஆனது, உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் நீர்வாழிடச் சங்கத்தின் (WAZA) 2024 ஆம் ஆண்டு வளங்காப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை விருதுகளுக்கான இறுதிப் பட்டியலில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அது பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவின் சிகப்பு நிறப் பாண்டா வளங் காப்பு இனப்பெருக்கம் மற்றும் எண்ணிக்கை அதிகரிப்புத் திட்டம் ஆகும்.
- 1990 ஆம் ஆண்டு டார்ஜிலிங் மிருகக் காட்சிசாலையில் நான்கு சிகப்புப் பாண்டாக்கள் கொண்டு செல்லப்பட்டு இந்த இனப்பெருக்கத் திட்டம் தொடங்கப் பட்டது.




## இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசானது தென் கொரிய எழுத்தாளர் ஹான் காங் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இது அவரது "வரலாற்று அதிர்ச்சி நிகழ்வுகளை எதிர்கொள்ளும் வகையிலான மற்றும் மனித வாழ்க்கையின் பலவீனத்தை வெளிப்படுத்தும் வகையிலான உணர்ச்சி மிக்க கவிதை வழி உரைநடைக்காக" வழங்கப்பட்டுள்ளது.
- அவரது மற்றொரு குறிப்பிடத்தக்க படைப்பான "Human Acts" (2014) இலக்கியத்திற்கான அவரது அணுகுமுறையை எடுத்துரைக்கிறது.
- இந்தப் புதினம் என்பது 1980 ஆம் ஆண்டின் குவாங்ஜு எழுச்சியின் மீதான உண்மை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது.
- ஹானின் சிறுகதையான "Europa" (2012) மேலும் அவரது இலக்கியத் திறனை வெளிப் படுத்துகிறது.
- அவரது "The Vegetarian" (2007) புத்தகமானது 2016 ஆம் ஆண்டில் மேன் புக்கர் சர்வதேசப் பரிசை வென்றது.
- 1901 முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆனது 116 முறை 120 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.





## அமைதிக்கான நோபல் பரிசு 2024



- ஜப்பானிய அமைப்பான நிஹோன் ஹிடான்கிவிற்கு அணு ஆயுதங்கள் இல்லாத உலகத்தை அடைவதற்கான பெரு முயற்சிகளுக்காக வேண்டி 2024 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பு ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு வீச்சுகளில் இருந்து தப்பியவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- 1956 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நிஹான் ஹிடாங்கியோ ஜப்பானில் அணு குண்டுகளில் இருந்து தப்பியவர்களின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க அமைப்பாகும்.
- கடந்த ஆண்டு, 2023 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு ஆனது, தற்போது சிறையில் இருக்கும் ஈரானிய ஆர்வலர் நர்கீஸ் முகமதிக்கு வழங்கப்பட்டது.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 2024




- பொருளாதாரத்திற்கான நோபல் நினைவு பரிசு ஆனது, பல்வேறு நாடுகளுக்கு இடையேயான செழுமையின் வேறுபாடுகள் குறித்த பெரும் ஆராய்ச்சிக்காக டேரன் அசெமோக்லு, சைமன் ஜான்சன் மற்றும் ஜேம்ஸ் A ராபின்சன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு நாட்டின் செழுமைக்குச் சமூக நிறுவனங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தினை அவர்கள் நிரூபித்துள்ளனர்.
- மோசமான சட்ட ஆட்சியைக் கொண்ட சமூகங்கள் மற்றும் மக்களைச் சுரண்டும் கட்டமைப்புகள் வளர்ச்சியையோ அல்லது மிகவும் நல்ல மாற்றத்தையோ உருவாக்கச் செய்வது இதில்லை.
- அசெமோக்லு மற்றும் ஜான்சன் ஆகியோர் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பணிபுரிகின்ற நிலையில் ராபின்சன் சிகாகோ பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார்.
- பொருளாதாரத்திற்கான இந்தப் பரிசு ஆனது தொழில்நுட்ப ரீதியாக நோபல் பரிசாகக் கருதப் படாவிட்டாலும், இந்த விருதானது எப்போதும் மற்ற நோபல் பரிசு விருதுகள் அறிவிப்புடன் சேர்த்தே வழங்கப்படுகிறது.

## ஐந்தாவது தேசிய நீர் விருதுகள் 2023

- ஐந்தாவது தேசிய நீர் விருதுகளின் (2023) வெற்றியாளராக ஒடிசா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தையும், குஜராத் மற்றும் புதுச்சேரி இணைந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- இந்த விருதானது இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ள நீர்ப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான மிகவும் சிறந்தப் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் ஒன்பது பிரிவுகளை உள்ளடக்கியது.
- சிறந்த முறையில் நீரைப் பயன்படுத்தும் சங்கம் பிரிவில், புதுக்கோட்டையில் உள்ள பரம்பூர் ஏரி நீர் பயன்பாட்டுச் சங்கம் மூன்றாம் பரிசைப் பெற்றது.
- கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமானது, மிகவும் சிறந்த நிறுவனம் (பள்ளி/கல்லூரி தவிர) பிரிவில் முதல் பரிசைப் பெற்றது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆனது சிறந்த நிறுவனம் (பள்ளி/கல்லூரி தவிர) பிரிவில் மூன்றாம் பரிசை வென்றது.
- சிறந்த தொழில் துறைப் பிரிவில் காஞ்சிபுரம் மாவட்ட அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட் (ADL) நிறுவனம் 2வது பரிசை வென்றது.





## இந்தியக் கைபேசி மாநாடு 2024

- எட்டாவது இந்தியக் கைபேசி மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, 'The Future is Now' என்பதாகும்.
- இதில் 120 நாடுகள் பங்கேற்றன.
- இந்த நிகழ்வின் போது சர்வதேசத் தொலைத் தொடர்பு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட 2024 ஆம் ஆண்டு உலகத் தொலைத் தொடர்பு தர நிர்ணயச் சபையின் (WTSA) தொடக்க விழாவிற்கான எண்ணிம கல்வெட்டு வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் கைபேசி தரவானது (டேட்டா) ஒரு ஜிகாபைட்டுக்கு 12 சென்ட்கள் ஆகும்.
- மற்ற நாடுகளில், ஒரு ஜிகா பைட் டேட்டா பத்து மடங்கு விலை அதிகமாகும்.
- இந்தியர்கள் ஒவ்வொரு மாதமும் சராசரியாக சுமார் 30 ஜிகா பைட் டேட்டாவைப் பயன்படுத்துகின்றனர்.

- தற்போது, இந்தியாவில் 200 திறன் பேசி உற்பத்தி அலகுகள் உள்ளன.
- உலகத் தொலைத் தொடர்பு தர நிர்ணயச் சபையும் இந்த நிகழ்ச்சியுடன் தொடங்கப் பட்டது.
- இது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.




## வணிகத்தில் மிகவும் அதிகாரம் வாய்ந்த 100 பெண்களின் பட்டியல் 2024




- ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மேரி பார்ரா, 27 வது வருடாந்திர மிகவும் அதிகாரம் வாய்ந்த பெண்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- அவரைத் தொடர்ந்து CVS ஹெல்த் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கரேன் லிஞ்ச் மற்றும் சிட்டிகுரூப் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜேன் ஃப்ரேசர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- இதில் சீனா, இந்தியா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற 11 ஆசிய-பசிபிக் நாடுகளைச் சேர்ந்த நிர்வாகிகள் இடம்பெற்றுள்ளனர்.
- இந்தப் பட்டியலில் உள்ள இடம் பெற்றுள்ள இந்தியப் பெண் வணிகத் தலைவர்கள்: இஷா அம்பானி, ரோஷ்னி நாடார், மெட்டா இந்தியா நிறுவனத்தின் சந்தியா தேவ நாதன், அருந்ததி பட்டாச்சார்யா, ஃபால்குனி நாயர் மற்றும் சிலர்.

## UNHCR நான்சென் அகதி விருது 2024

- ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையம் அதன் வருடாந்திர நான்சென் விருதை 5 பேருக்கு வழங்க உள்ளது.
- இந்த ஆண்டில் விருது பெற்றவர்கள்
  - ஜின் தாவோட் -இளம் சமூகத் தொழில்முனைவோர்.
  - சிஸ்டர் ரோசிட்டா மிலேசி (பிரேசில்) - கன்னியாஸ்திரி, வழக்கறிஞர் மற்றும் சமூக சேவகர்.
  - மைமூனா பா (ஆப்பிரிக்கா) -புர்கினா பாசோவைச் சேர்ந்த ஆர்வலர்.
  - நடா ஃபடொல் (மத்தியக் கிழக்கு & வட ஆப்பிரிக்கா) - சூடான் நாட்டினைச் சேர்ந்த அகதி.
  - தீப்தி குருங் (ஆசிய-பசிபிக்) – நேபாள நாட்டின் குடியுரிமைச் சட்டங்களைச் சீர் திருத்துவதற்காக போராடியவர்.
- நான்சென் விருது ஆனது நார்வே நாட்டினைச் சேர்ந்த புரவலர், விஞ்ஞானி, ஆய்வாளர் மற்றும் அரசுமுறை அதிகாரியான ஃபிரிட்ஜோஃப் நான்சனின் நினைவாக 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## அர்ஜுன் எரிகைசி


- கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகைசி, பெரும் புகழ்பெற்ற 2800 எலோ தரக் குறியைத் தாண்டிய இளம் இந்தியர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு தற்போது இத்தகையச் சாதனையினைப் படைத்த இரண்டாவது இந்தியர் இவரே ஆவார்.
- 2024 ஆம் ஆண்டு ஐரோப்பிய சதுரங்க கிளப் கோப்பை போட்டியில் அவர் பெற்ற இந்த வெற்றியானது, நேரடி மதிப்பீட்டுப் பட்டியலில் உள்ள உலகின் மூன்றாவது முன்னணி சதுரங்க வீரர் என்ற பெருமையினைப் பெற அவருக்கு உதவியது.
- அர்ஜுன் 2800 மதிப்பீட்டுக் குறியைத் தாண்டிய 16வது சதுரங்க வீரர் ஆவார்.
- ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மேக்னஸ் கார்ல்சன் இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.




## இராணி சென்னமாவின் 200வது பிறந்தநாள்

- கித்தூரின் இராணி சென்னம்மா 1778 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதியன்று, கர்நாடகாவின் பெலகாவி மாவட்டத்தில் உள்ள ககாதி எனுமிடத்தில் பிறந்தார்.

- தனது கணவர் இறந்த பிறகு, அவர் கித்தூரின் அரியணைக்கு வாரிசாக வேண்டும் என்ற நோக்கத்தில் சிவலிங்கப்பாவை தத்தெடுத்தார்.
- ஆங்கிலேயர்கள் சிவலிங்கப்பாவை 'வாரிசிழப்புக் கோட்பாட்டின்' கீழ் ஒரு வாரிசாக அங்கீகரிக்க மறுத்ததால் அது கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.
- 1824 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் போரில் ஆங்கிலேயர்கள் தோல்வியடைந்தாலும், பின்னர் சென்னம்மா 1829 ஆம் ஆண்டில் சிறை பிடிக்கப்பட்டு சாகும் வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.




# விளையாட்டுச் செய்திகள்

## ரஃபேல் நடால் ஓய்வு


- ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த டென்னிஸ் வீரர் ரஃபேல் நடால் தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- ரஃபேல் நடால் 22 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தையும், 14 பிரெஞ்ச் ஓபன் பட்டங்களையும் வென்று சாதனை படைத்துள்ளார்.
- 2005 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 17 ஆண்டுகளாக ATP-இன் முதல் 10 இடங்களில் ஐந்து முறை ஆண்டு இறுதியில் உலகின் முன்னணி இடத்தில் இருந்தவர் என்ற பெருமையினைக் கொண்டுள்ளார்.
- டென்னிஸ் போட்டிகளில் அவரது அதிகபட்ச சாதனை ஆண்டுகளில், அவர் 209 வாரங்கள் உலகின் தலைசிறந்த வீரராகத் திகழ்ந்தார்.
- அவர் 2004 முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ஒரு பட்டத்தையாவது வென்றுள்ளார்.




# முக்கிய தினங்கள்


## சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01

- சமூகத்திற்கு முதியோர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதும் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் முதியோருக்கான கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப் பட்டதை ஒட்டி இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இது முதியோர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை நிவர்த்தி செய்வதற்கான ஒரு கட்டமைப்பை அமைத்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதியன்று இந்த நாளை நிறுவியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Ageing with Dignity: The Importance of Strengthening Care and Support Systems for Older Persons Worldwide" என்பதாகும்.




## சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02

- இந்தத் தினமானது M.K. காந்தி அவர்களின் பிறந்தநாளில் அனுசரிக்கப் படுகிறது என்பதோடு மேலும் சமூக மற்றும் அரசியல் மாற்றத்திற்கான ஒரு வழிமுறையாக அகிம்சையின் மீதான அவரது தத்துவம் மற்றும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.
- அவரது போராட்டங்கள் ஆனது அகிம்சை மற்றும் ஆயுதமற்ற முறையில் வழி நடத்தப் பட்டன.
- அகிம்சை முறையிலான ஒரு எதிர்ப்புக் கொள்கையானது சமூக அல்லது அரசியல் மாற்றத்தை அடைவதற்காக வேண்டி நேரடியான வன்முறையைப் பயன்படுத்துவதை நிராகரிக்கிறது.
- 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளை ஒரு மனதாக அறிவித்தது.



## உலக விலங்குகள் நல தினம் - அக்டோபர் 04

- இது புவிக் கிரகம் முழுவதும் விலங்கு உரிமைகள் மற்றும் அவற்றின் நலனைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புவியில் உள்ள இனங்களின் பன்முகத்தன்மை, அவற்றை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் மீட்பது மற்றும் விலங்கு நலனில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவது பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது.
- உலக விலங்குகள் தினம் ஆனது முதன் முதலில் 1925 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி அன்று நினைவு கூரப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "The world is their home too" என்பதாகும்.




## உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 04/10

- இது விண்வெளி ஆய்வின் பல நன்மைகளை முன்னிலைப்படுத்துவதோடு விண்வெளி நடவடிக்கைகளில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.
- இது பின்வரும் இரண்டு குறிப்பிடத்தக்க மைல்கற்களை நினைவு கூரும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்டது:
  - 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் தேதியன்று ஸ்புட்னிக் 1 செயற்கைக் கோள் ஏவப்பட்ட நிகழ்வு மற்றும்
  - 1967 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதியன்று விண்வெளி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- அக்டோபர் 04 ஆம் தேதியன்று சோவியத் ஒன்றியத்தினால் ஸ்புட்னிக் 1 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டது என்பதோடு இதுவே சுற்றுப்பாதையில் மனிதகுலம் உருவாக்கிய முதல் செயற்கையான செயற்கைக் கோள் நிலை நிறுத்தப் பட்டதைக் குறித்தது.
- விண்வெளி ஒப்பந்தம் ஆனது சர்வதேச விண்வெளி சட்டத்திற்கான ஒரு கட்டமைப்பை நிறுவுவதோடு, விண்வெளியில் அமைதியான பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்குவிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Space and Climate Change" என்பதாகும்.

## உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05

- சமுதாயத்தில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பினால் இத்தினம் நிறுவப்பட்டது.

- ஆசிரியர்களின் நிலை குறித்த 1966 யுனெஸ்கோ/ILO என்ற பரிந்துரையின் ஆண்டு நிறைவை இந்த நாள் குறிக்கிறது.
- இத்தினமானது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- நமது வாழ்க்கையை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் ஒரு இன்றியமையாத பங்கை கௌரவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆண்டு "Valuing teacher voices: towards a new social contract for education" என்பதன் மீது கவனம் செலுத்துகிறது.

## 92வது இந்திய விமானப்படை தினம் - அக்டோபர் 05

- 'பாரதிய வாயு சேனா' என்றும் அழைக்கப்படும், இந்திய விமானப் படையானது 1932 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆ தேதியன்று பிரிட்டிஷ் பேரரசால் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.
- விமானப்படையானது ஐந்து நடவடிக்கை சார் மற்றும் இரண்டு செயல்பாட்டு சார் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்திய விமானப் படையானது உலகின் நான்காவது பெரிய செயல்பாட்டு விமானப் படையாக உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Bhartiya Vayu Sena – Saksham, Sashakt, Atmanirbhar" என்பதாகும்.
- இந்திய விமானப்படை (IAF) ஆனது இந்தத் தினத்தை நன்கு நினைவு கூறும் வகையில் அக்டோபர் 06 ஆம் தேதியன்று சென்னை மெரினா கடற்கரையில் மாபெரும் வானூர்தி சாகச நிகழ்ச்சியை நடத்தியது.
- இந்த நிகழ்வில் 15 லட்சம் மக்கள் கலந்து கொண்டதுடன், விமான சாகச நிகழ்வில் அதிக அளவில் கலந்து கொண்டதற்காக இது லிம்கா சாதனை என்ற புத்தகத்தில் இடம் பிடித்தது.
- இதற்கு முன்னதாக 21 ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய நிகழ்ச்சி சிறிய அளவில் சென்னையில் நடைபெற்றது.


## உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 09

- இந்த நாளானது 1874 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் தலைநகரான பெர்ன் நகரில் உலகளாவிய தபால் ஒன்றியம் நிறுவப்பட்டதன் ஆண்டு நிறைவாகும்.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய தபால் ஒன்றியம் (UPU) ஆனது அதன் 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "150 years of enabling communication and empowering peoples across nations" என்பதாகும்.

## உலக பெருமூளை வாத நோய் தினம் - அக்டோபர் 06

- இது பெருமூளை வாத (CP) பாதிப்புடன் வாழும் தனிநபர்களின் உரிமைகளுக்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் போராடுவதற்கான தினமாகும்.

- இந்த நாள் இந்த நிலைமையினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நினைவூட்டுவதாகவும், இந்தச் சமூகத்தில் அவர்களுக்கான ஆதரவு மற்றும் ஏற்பின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- பெருமூளை வாதம் என்பது இயக்கம் மற்றும் தோற்றத்தில் ஏற்படும் மாற்ற நிலை ஆகும்.
- இந்த பெருமூளை வாத நோயில், மூளையானது வெவ்வேறு குழந்தைகளில் வெவ்வேறு விதமாக வளர்ச்சியடைகிறது.
- உலகளவில், சுமார் 1.7 கோடி பேர் ஏதேனும் ஒரு வகை பெருமூளை வாத பாதிப்பினைக் கொண்டுள்ளனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Uniquely CP" என்பதாகும்.




## உலக வாழ்விட தினம் - அக்டோபர் 06

- 1985 ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று இந்நாளைக் கொண்டாடுவதாக அறிவித்தது.
- இந்த நாள் ஒவ்வொருவரும் ஒரு சரியான மற்றும் பாதுகாப்பான இடத்தில் வாழ உரிமை உண்டு என்பதன் ஒரு சக்தி வாய்ந்த நினைவூட்டலாக செயல்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Engaging youth to create a better urban future" என்பதாகும்.

## நீலகிரி வரையாடு தினம் - அக்டோபர் 07

- தமிழ்நாடு அரசானது முதன்முதல் 'நீலகிரி வரையாடு தினத்தை' 2023 ஆம் ஆண்டில் கொண்டாடியது.
- E.R.C. டேவிடர் அவர்களை நன்கு கௌரவிக்கும் வகையில் அக்டோபர் 07 ஆம் தேதியை நீலகிரி வரையாடு தினமாக அரசு தேர்வு செய்துள்ளது.
- அவர் 1960 ஆம் ஆண்டுகளில் தென்னிந்தியாவின் இந்த குளம்புக்காலிகள் பற்றிய ஆய்வுகளுக்கு முன்னோடியாக இருந்த ஒரு வனவிலங்கு வளங்காப்பாளர் ஆவார்.

- 1963 ஆம் ஆண்டு நீலகிரி நிலப்பரப்பில் நீலகிரி வரையாடுகளின் மீதான முதல் கணக்கெடுப்பை மேற்கொண்டு, நீலகிரியில் சுமார் 400 வரையாடுகள் இருப்பதாக அவர் அறிக்கை அளித்தார்.




## உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07

- பருத்தியின் மிகவும் மகத்தான பல்துறைத் திறனை வெளிப்படுத்துவதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- ஜவுளித் தொழில் துறையில் பருத்தி பிரதானமாக உள்ளது.
- கால்நடைத் தீவனம், மருத்துவப் பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய் உற்பத்தி ஆகியவற்றிலும் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இந்த நாள் ஆனது நான்கு பருத்தி நாடுகளான புர்கினா பாசோ, பெனின், சாட் மற்றும் மாலி மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள மற்ற பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் உருவானது.
- முதல் உலகப் பருத்தி தினமானது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 07 ஆம் தேதியன்று ஜெனீவாவில் தொடங்கப்பட்டு அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு "Megatrends Shaping Cotton Textile Value Chain" என்பதாகும்.

## தேசிய அஞ்சல் வாரம் - அக்டோபர் 09 முதல் 15 வரை

- இது அஞ்சல் அமைப்பின் ஒருங்கிணைந்த சேவையை கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மக்களை இணைப்பதிலும், வணிகங்களை ஆதரிப்பதிலும், உலகளாவிய தகவல் தொடர்புக்குப் பங்களிப்பதிலும் அஞ்சல் சேவைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்த வாரம் கொண்டாடப்படுகிறது.
- அக்டோபர் 10 ஆம் தேதியானது தேசிய அஞ்சல் தினமாக கொண்டாடப்படுகிறது.

- முறையாக கட்டமைக்கப்பட்ட தபால் சேவையானது 1854 ஆம் ஆண்டில் டல்ஹௌசி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1852 ஆம் ஆண்டில், "சிண்டே டாக்" என்று அழைக்கப்பட்ட இந்தியாவின் முதல் தபால் தலை வெளியானது.
- இந்தியாவில் 23 அஞ்சல் வட்டங்கள் மற்றும் இராணுவ தபால் அலுவலகம் உட்பட 9 அஞ்சல் மண்டலங்கள் உள்ளன.
- இந்தியாவில் உள்ள தபால் நிலையங்கள் 6 இலக்க PIN குறியீடு என்ற முறையைப் பின்பற்றுகின்றன என்ற நிலையில் இது 1972 ஆம் ஆண்டில் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்த வாரக் கொண்டாட்டத்திற்கான கருத்துரு, "Connecting India: The Role of Postal Services in Nation Building" என்பதாகும்.

## உலக மனநல தினம் - அக்டோபர் 10

- மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், கல்வியை ஊக்குவிக்கச் செய்வதற்கும், மன ஆரோக்கியம் குறித்த தவறான கருத்துக்களுக்கு எதிராக வாதிடச் செய்வதற்கும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலக மனநல தினம் ஆனது முதன் முதலில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Mental Health at Work' என்பதாகும்.




## சர்வதேசப் பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11



- இது 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப் பட்டது.
- உலகளவில் பெண்கள் எதிர்கொள்ளும் சில தனித்துவமான சவால்கள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் அதிகாரத்தை மேம்படுத்தவும் வேண்டி இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- பாலின சமத்துவமின்மை, குழந்தைத் திருமணம் மற்றும் கல்வி மற்றும் சுகாதாரத்தில் அவர்களுக்கு உள்ள வரையறுக்கப்பட்ட அணுகல் போன்றப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Girls' vision for the future" என்பதாகும்.
- யுனெஸ்கோ அமைப்பானது 1979 ஆம் ஆண்டினைச் சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்தது.

## பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சர்வதேச தினம் - அக்டோபர் 13

- உயிரினங்கள் மீது பேரிடர்களின் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனுசரிக்கப்பட்டது.
- பேரிடர் அபாயக் குறைப்பிற்கான சென்டாய் கட்டமைப்பு ஆனது, 2015-30 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான 3வது ஐக்கிய நாடுகள் சபையின் உலக மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது அனைத்து மட்டங்களிலும் மற்றும் அனைத்துத் துறைகளிலுமான மேம்பாட்டுத் திட்டங்களில் பேரிடர் அபாயத்திற்கான பல இடர் மேலாண்மைக்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஹியோகோ நடவடிக்கைக்கான கட்டமைப்பு (HFA) 2005-2015 என்பதின் துணைச் செயற்கருவியாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Role of education in protecting and empowering youth for a disaster-free future" என்பதாகும்.



## உலக வலசை போகும் பறவைகள் தினம் - அக்டோபர் 12

- இத்தினமானது மே மற்றும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் கொண்டாடப்படுகிறது.
- இரண்டு நாட்களில் அனுசரிக்கப் படும் இத்தினமானது பறவைகளின் வலசை போதல் நிகழ்வின் சுழற்சித் தன்மையையும், வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளங்களில் வெவ்வேறு உச்சநிலை வலசை போகும் காலங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு இந்தத் தினமானது மே 11 மற்றும் அக்டோபர் 12 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப் படுகிறது.
- வலசை போகும் பறவைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பின் பெரும் அவசியத்தை எடுத்துக்காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "Protect Insects, Protect Birds" என்பது ஆகும்.

## உலக நல்வாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு பராமரிப்பு தினம் - அக்டோபர் 12

- அக்டோபர் மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையன்றும் நோய்த் தடுப்பு சிகிச்சைத் தேவைகளுடன் (PLWPCNs) வாழும் மக்களுக்காகப் போராடுவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பின் நோய்த்தடுப்புச் சிகிச்சைக்கான ஒரே தனித் தீர்மானத்தின் 10 ஆண்டு கால நிறைவினைக் குறிக்கிறது.
- இது "வாழ்வு முழுவதிலுமான விரிவான சிகிச்சையின் ஓர் அங்கமாக நோய்த்தடுப்பு சிகிச்சை முறையினை வலுப்படுத்த வேண்டும் என்பதை அனைத்து நாடுகளுக்கும் வலியுறுத்துகிறது.
- 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை, 7 மில்லியன் நோயாளிகளுக்கான சேவையுடன் நோய்த் தடுப்புச் சிகிச்சை சேவைகளின் எண்ணிக்கை 16000-லிருந்து 25,000 ஆக உயர்ந்துள்ளது.
- ஆனால் இன்றும் தேவையுள்ள சுமார் 12 சதவீதத்தினரின் தேவை மட்டுமே பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Ten Years Since the Resolution: How are we doing?" என்பதாகும்.



## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் - அக்டோபர் 01 முதல் 31 வரை

- உலகளவில் பெண்களை அதிகம் தாக்கும் புற்றுநோய்களில் ஒன்றான மார்பகப் புற்று நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த மாத அளவிலான அனுசரிப்பானது பொதுமக்களுக்கு இது குறித்து கல்வியினை வழங்குவதற்கும், அதனை முன்கூட்டியே கண்டறிவதை ஊக்குவிப்பதற்கும், மார்பகப் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைக்கான நிதி திரட்டலை ஊக்குவிப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.
- மார்பகத்தில் உள்ள செல்கள் கட்டுப்பாடில்லாமல் வளர்ந்து கட்டியை உருவாக்கும் போது மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது.
- 100,000 பெண்களில் சுமார் 25.8 பேர் பாதிக்கப்படுகின்றனர் (வயதிற்கேற்ப சமன் செய்யப் பட்ட விகிதம்) மற்றும் இதனால் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் சுமார் 100,000 பெண்களுக்கு 12.7 ஆக உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் புதிய பாதிப்புகளுடன் (அனைத்து புற்றுநோய்களில் 11.7%) இது உலகளாவியப் புற்றுநோய் பாதிப்புகளுக்கான முன்னணி காரணமாக இது உள்ளது.
- 1965 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் மார்பகப் புற்று நோயின் பாதிப்பு சுமார் 50% அதிகரித்துள்ளது.
- மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 13 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: “No-one should face breast cancer alone” என்பதாகும்.




## உலக முட்டை தினம் - அக்டோபர் 11

- இது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள உணவுகளில் முட்டையின் ஊட்டச்சத்து நன்மைகள், பல்துறைப் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றை இத்தினம் எடுத்துரைக்கிறது.

- உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு முட்டை எவ்வாறு அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் மலிவு விலையிலான புரதத்தை வழங்கச் செய்கிறது என்பதை இந்த நாள் மிக நன்கு வலியுறுத்துகிறது.
- இத்தினம் ஆனது வியன்னாவில் 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "United by Eggs" என்பதாகும்.

## உலகத் தரநிலை தினம் - அக்டோபர் 14

- இந்தத் தினமானது தர நிர்ணயத்தின் பெரும் முக்கியத்துவத்தைப் பற்றிய புரிதலை அதிகரிப்பதற்கான வாய்ப்பினை அளிக்கிறது.
- இந்தத் தேதியானது தர நிர்ணயத்தில் முயற்சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு சர்வதேச அமைப்பை நிறுவுவதற்காக 1946 ஆம் ஆண்டில் இலண்டனில் நடத்தப்பட்ட முதல் கூட்டத்தை நினைவு கூறுகிறது.
- முதல் உலகத் தர நிர்ணய தினம் ஆனது 1970 ஆம் ஆண்டில் தான் கொண்டாடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: “Achieving industry, innovation and infrastructure through AI” என்பதாகும்.


## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15

- குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்களில் கிராமப்புறப் பெண்களின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அங்கீகரிப்பது இதன் நோக்கமாகும்.
- இது பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்து, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Rural Women Cultivating Good Food for All" என்பதாகும்.
- வேளாண்மையில் கூலி வேலையில் ஈடுபடும் பெண்கள், ஆண்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு டாலருக்கும் 82 சென்ட்கள் மட்டுமே ஈட்டுகின்றனர்.
- 2016 ஆம் ஆண்டு முதல், இந்திய நாடும் அக்டோபர் 15 ஆம் தேதியை இராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸாக அனுசரிக்கிறது.

## கருச்சிதைவு மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பு நினைவு தினம் - அக்டோபர் 15

- கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல் அல்லது பச்சிளம் குழந்தை இறப்பு ஆகிய பலவற்றினால் உயிரிழந்தக் குழந்தைகளின் நினைவைப் போற்றும் வகையில் இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- கர்ப்பக் கால மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பினால் பாதிக்கப்படுபவர்கள் எதிர் கொள்ளும் உணர்ச்சி மற்றும் பல மனரீதியானச் சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாள் குறிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 லட்சம் குழந்தைகள் இறந்து பிறக்கின்றன என்பதோடு இவற்றில் பல இறப்புகள் தவிர்க்கப் படக் கூடியவை.

- 20 முதல் 30 வயதுடைய பெண்களில் 20 வார கரு வளர்ச்சிக்கு முன்னதாக கருச்சிதைவு ஏற்படுவதற்கான நிகழ்தகவு 8.9% ஆகும்.
- இது 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு 74.7% ஆக அதிகரிக்கிறது.




## உலகளாவிய கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15

- நோய்களைத் தடுப்பதிலும் உயிர்களைக் காப்பதிலும் கை கழுவுதலானது வகிக்கும் ஒரு முக்கியப் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2008 ஆம் ஆண்டில் உலகளாவியக் கை கழுவுதல் கூட்டாண்மை (GHP) மூலம் தொடங்கப்பட்டது.
- வயிற்றுப்போக்கு மற்றும் சுவாச நோய்த்தொற்றுகள் போன்ற பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கு, குறிப்பாக குழந்தைகள் மத்தியில் சோப்பு கொண்டு கைகளைக் கழுவும் பழக்கம் மிகவும் பயனுள்ள வழிகளில் ஒன்றாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Why are clean hands still important?" என்பது ஆகும்.




## உலகப் பார்வையற்றோர் கைத்தடி (வெண்பிரம்பு) தினம் - அக்டோபர் 15




- ❖ பார்வையற்றவர்கள் அல்லது பார்வைக் குறைபாடுள்ள நபர்களுக்கான கருவியாக வெண் பிரம்புகள் விளங்குவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது இதன் நோக்கம் ஆகும்.
- ❖ வெண்பிரம்பானது தங்கள் சுற்றுப்புறங்களில் மிக பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் அவர்கள் செல்ல அனுமதிக்கிறது.
- ❖ குடியரசுத் தலைவர் லிண்டன் B. ஜான்சன் இந்த நிகழ்வை அனுசரித்ததன் மூலம் இந்த நாள் முதன்முதலில் 1964 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## உலக உணவு தினம் - அக்டோபர் 16





- ❖ இது பட்டினி நிலையை முடிவுக்கு கொண்டு வருவதையும், ஒவ்வொரு தனிநபருக்கும் சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆனது 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.

- பசிக்கு எதிரான ஒரு போராட்டத்தைத் தொடங்குவதற்கும், ஆரோக்கியமான உணவு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிரான மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காகவும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆனது இந்த நாளைத் தொடங்கியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Right to Food for a Better Life and a Better Future" என்பதாகும்.

## உலக மயக்க மருந்து தினம் - அக்டோபர் 16

- இந்த நாள் மயக்க மருந்தின் முதல் வெற்றிகரமான பயன்பாட்டினைக் கௌரவித்து இந்த மைல்கல்லை நினைவுகூரும் விதமாகக் கொண்டாடப்படுகிறது.
- மயக்க மருந்து என்பது அறுவை சிகிச்சை, திசு மாதிரி அகற்றுதல், பல் மருத்துவம் சார்ந்த வேலைகள், சில ஆய்வுகள் மற்றும் சில நோயறிதல் சோதனைகள் போன்ற சிகிச்சைகளின் போது நோயாளிகள் வலியை உணராமல் அதைத் தடுப்பதற்கான ஒரு மருத்துவ முறையாகும்.
- 1846 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதியன்று, அமெரிக்கப் பல் மருத்துவரும் நோய் சார் மருத்துவருமான வில்லியம் தாமஸ் கிரீன் மோர்டன் முதன்முதலில் டைஎத்தில் ஈதர் மயக்க மருந்துப் பரிசோதனையை மேற்கொண்டார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Workforce Well Being" ஆகும்.





## உலக முதுகெலும்பு தினம் - அக்டோபர் 16

- முதுகெலும்பு ஆரோக்கியம் மற்றும் முதுகுத்தண்டு கோளாறுகளைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டு எலும்பு மற்றும் மூட்டுகளுக்கான பத்து ஆண்டுகளின் ஒரு பகுதியாகக் கொண்டாடப்பட்டது.
- உடலின் முதுகெலும்பு மற்றும் மைய ஆதரவு அமைப்பான முதுகெலும்பு என்பது அமர, நிற்க, நடக்க, உடலை முறுக்குதல் மற்றும் வளைத்தல் போன்ற பல்வேறு அடிப்படை

செயல்பாடுகளை மேற்கொள்ள உதவும் அமைப்பாக உள்ளது.


- உலகளவில் சுமார் 100 கோடி பேர் முதுகுவலி மற்றும் முதுகுத் தண்டு தொடர்பானப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Support Your Spine" என்பதாகும்.




## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் - அக்டோபர் 17

- அரசாங்கங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் வறுமை பற்றிய பேச்சு வார்த்தை மற்றும் புரிதலை ஊக்குவிக்க இந்த நாள் முயற்சிக்கிறது.
- 1987 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், வறுமை, பசி, வன்முறை மற்றும் அச்சத்தால் பாதிக்கப்பட்டவர்களை நன்கு நினைவு கூரும் வகையில் சுமார் 100,000க்கும் மேற்பட்ட மக்கள் பாரீஸ் நகரில் உள்ள ட்ரோகாடெரோ எனுமிடத்தில் கூடினர்.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) இந்த நாளை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Ending Social and Institutional Maltreatment Acting together for just, peaceful and inclusive societies" என்பதாகும்.


## காவல்துறை நினைவு தினம் - அக்டோபர் 21



- 1959 ஆம் ஆண்டில் நடைபெற்ற சீனத் தாக்குதலில் உயிர் தியாகம் 10 மத்திய சேமக் காவல் படை வீரர்களின் தியாகத்தினை நன்கு நினைவு கூரும் விதமாக இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- லடாக் அருகே உள்ள ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் பதுங்கியிருந்த சீனப் படையினரால் மத்திய சேமக் காவல் படை வீரர்கள் மற்றும் இந்தியத் திபெத்திய எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் அடங்கிய காவல் குழுவினர் கொல்லப்பட்டனர்.
- லடாக்கில் அக்சாய் சின் பகுதியில் உள்ள ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியானது, இந்திய-திபெத் எல்லையில் கடல் மட்டத்திலிருந்து 15,000 முதல் 16,000 அடி உயரத்தில் அமைந்து உள்ளது.

## மோல் தினம் - அக்டோபர் 23


- அவகாட்ரோ எண்ணின் நினைவாக காலை 6:02 மணி முதல் மாலை 6:02 மணி வரை இந்த நாள் நினைவு கூரப் படுகிறது.
- அவகாட்ரோ எண் ஆனது, எந்த ஒரு பொருளின் ஒரு மோலில் இருக்கும் துகள்களின் எண்ணிக்கையை வரையறுப்பதற்கு $6.02 \times 10^{23}$ என குறிப்பிடப்படுகிறது.
- இந்த எண் - அல்லது ஒரு மோல் என்பது 18 ஆம் நூற்றாண்டின் இத்தாலிய நாட்டு அறிவியல் ஆய்வாளரான அமிதியோ அவகாட்ரோ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளுக்கான அடிப்படை அளவீட்டு அலகு ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, EncantMole என்பதாகும்.




## ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24


- இந்த நாள் ஆனது, 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக் கொள்ளப் பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, 1945 ஆம் ஆண்டில் 51 நாடுகள் உலக அமைதி மற்றும் பாதுகாப்பைக் காக்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபையை நிறுவின.

- 'ஐக்கிய நாடுகள்' என்ற பெயரை அமெரிக்க அதிபர் பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் உருவாக்கினார்.
- இது தற்போது 193 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பினர் நாடுகளில் ஒவ்வொன்றும் பொதுச் சபையில் அங்கம் வகிக்கின்றன.
- இந்த நாள் என்பது முதன் முதலில் 1948 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.





## மரணத் தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10

- இத்தினமானது மரணத் தண்டனைக்கு எதிரான உலகளாவிய இயக்கத்தின் அரசியல் மற்றும் பொது விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது மற்றும் ஒருங்கிணைக்கிறது.
- இந்த வருடாந்திரக் கொண்டாட்டமானது இந்த மரணத் தண்டனையால் மக்களையும் சமூகத்தையும் பாதுகாப்பானதாக மாற்ற முடியும் என்ற தவறான கருத்தை எதிர்க்கும் விதமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 112 நாடுகள் ஆனது அனைத்து குற்றங்களுக்கும் மரண தண்டனையை ரத்து செய்து உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் உலகில் அதிக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட 5 நாடுகள் : சீனா, ஈரான், சவுதி அரேபியா, சோமாலியா மற்றும் அமெரிக்கா ஆகியனவாகும்.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உலகம் முழுவதும் குறைந்தது 27,687 நபர்கள் மரண தண்டனையினைப் பெற்றுள்ளதாக அறியப் படுகிறது.




## உலக எலும்புப் புரை தினம் - அக்டோபர் 20





- எலும்புப் புரை மற்றும் வளர்சிதை மாற்றம் தொடர்பான எலும்பு நோயைத் தடுப்பது, அதைக் கண்டறிதல் மற்றும் அதற்கு சிகிச்சை செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எலும்புப் புரை என்பது ஒரு வளர்சிதை மாற்றம் தொடர்பான ஒரு எலும்பு நோயாகும் என்பதோடு இதில் நமது உடலின் புதிய எலும்பு உருவாக்கம் ஆனது பழைய எலும்பின் இழப்பைத் ஈடு செய்யும் வகையில் இருக்காது.
- இந்தியாவில் சுமார் 23 சதவீதக் குழந்தைகள் எலும்புப் புரை நோயால் பாதிக்கப் பட்டு உள்ளனர்.
- முதியவர்களில் சுமார் 37 சதவீதம் பேருக்கு எலும்புப் புரை இருப்பது கண்டறியப் பட்டு உள்ள அதே சமயம் இளம் வயதினரில் 18 சதவீதம் பேருக்கு எலும்புப் புரை பாதிப்பு உள்ளது.


## உலக அயோடின் குறைபாடு தினம் - அக்டோபர் 21

- அயோடின் உட்கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் ஆனது உலக அயோடின் குறைபாடு நோய் தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது 130 நாடுகளில் குறிப்பிடத் தக்க உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது மற்றும் 74 கோடி மக்களை பாதிக்கிறது.
- உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் (33%) அயோடின் குறைபாடு கோளாறால் பாதிக்கபடும் (IDD) நிலையில் உள்ளனர்.

- இந்தியாவில், 6.1 கோடிக்கும் அதிகமானோர் கழுத்துக் கழலை நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர் மற்றும் 88 லட்சம் பேர் மன/உடல் குறைபாடுகளால் பாதிக்கப் பட்டு உள்ளனர்.





## உலக கண் பார்வை தினம் 2024 - அக்டோபர் 10




- இது அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இது நமது கண்கள் மற்றும் பார்வையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்து உரைப்பது, பார்வைக் குறைபாடு மற்றும் பார்வையிழப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் கண் மற்றும் பார்வை நலப் பராமரிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Children, love your eyes" என்பதாகும்.
- கண் பார்வை இழப்பின் அனைத்து வகைகளிலும் அவை ஆரம்பத்திலேயே மிக நன்கு கண்டறியப் பட்டால், அவற்றில் 90% பாதிப்புகள் தவிர்க்கப்படக் கூடியது அல்லது சிகிச்சையளிக்கக் கூடியது ஆகும்.
- உலகளவில், சுமார் 220 கோடி நபர்கள் கண் பார்வைக் குறைபாடுடையவர்கள் ஆவர்.
- 10 கோடி மக்கள் தவிர்க்கப் பட்டிருக்கக் கூடிய அல்லது இன்னும் கவனிக்கப்படாமல் உள்ள கண் பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் குறித்த கல்வியறிவு வாரம் - அக்டோபர் 24 முதல் 31 வரை




- இது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதையும், ஊடகம் மற்றும் தகவல் தொடர்பான கல்வியறிவை அனைவருக்கும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஊடகம் மற்றும் தகவல் தொடர்பான கல்வியறிவின் (MIL) முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த யுனெஸ்கோ அமைப்பினால் ஆண்டுதோறும் அனுசரிக்கப் படும் நிகழ்வாகும்.
- அனைவருக்குமான MIL கல்வியறிவு என்ற இலக்கினை அடையச் செய்வதில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் இது கொண்டாடுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "The new digital frontiers of information: Media and Information Literacy for public-interest information" என்பதாகும்.

## ஆயுதக் குறைப்பு வாரம் - அக்டோபர் 24 முதல் 30 வரை



- ஆயுதக் குறைப்பு தொடர்பான சிக்கல்கள் மற்றும் அவற்றின் பல்வேறு துறை சார்ந்த முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் சிறந்த புரிதலையும் மேம்படுத்துவதற்கு இது முயல்கிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதன் ஆண்டு தினமான அக்டோபர் 24 ஆம் தேதியன்று தொடங்குகிறது.
- இந்த ஆண்டு ஆனது ஒட்டாவா ஒப்பந்தம் அல்லது இராணுவ எதிர்ப்பு கண்ணிவெடித் தடை உடன்படிக்கையின் 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (NPT) ஆனது 1970 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- விரிவான அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் (CTBT) ஆனது 1996 ஆம் ஆண்டில் உலக நாடுகளால் கையொப்பத்திற்கு முன் வைக்கப்பட்டது.
- பொக்ரான் சோதனைக்குப் பிறகு 1974 ஆம் ஆண்டில் அணு ஆயுத விநியோகக் குழு (NSG) நிறுவப் பட்டது.
- ஆஸ்திரேலியக் குழு (AG) ஆனது 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- எறிகணைத் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அமைப்பு (MTCR) ஆனது 1987 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## சர்வதேசப் பனிச் சிறுத்தை தினம் - அக்டோபர் 23




- பிஷ்கெக் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டில் இந்த தினமானது அனுசரிக்கப்படத் தொடங்கியது.
- பனிச்சிறுத்தையானது (பாந்தெரா யுனிசியா) கடுமையான, உயரமான சூழல்களில் வளர்கிறது.
- இவை மத்திய ஆசியா மற்றும் தெற்காசியாவின் மலைப் பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்டவை.
- இவை பொதுவாக மலைத் தொடர்களில் 9,800 முதல் 17,000 அடி உயரத்தில் காணப் படுகின்றன.
- பனிச் சிறுத்தையானது உலகின் மிகவும் மலைப் பாங்கான 12 நாடுகளில் மட்டும் வாழ்கின்றன.


- அவை ஆப்கானிஸ்தான், பூடான், சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இந்தியா, மங்கோலியா, நேபாளம், ரஷ்யா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியனவாகும்.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

## உலக மேம்பாட்டுத் தகவல் தினம் - அக்டோபர் 24


- இது கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார மேம்பாடு போன்றப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு தளமாகும்.
- உலகளாவிய மேம்பாட்டுச் சிக்கல்கள் மற்றும் அந்தச் சவால்களை எதிர்கொள்வதில் தகவலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மிக நன்கு மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தத் தேதியானது ஐக்கிய நாடுகள் தினத்துடன் ஒன்றி வருகிறது.

## சர்வதேச அரசுமுறை அதிகாரிகள் தினம் - அக்டோபர் 24

- சர்வதேச உறவுகளைப் பேணுவதிலும், அமைதியை வளர்ப்பதிலும், நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தையினை ஊக்குவிக்கச் செய்வபதிலும் அரசு முறை ரீதியில் இருக்கும் அதிகாரிகள் வகிக்கும் விலைமதிப்பற்ற பங்கை இது கௌரவிக்கிறது.
- இது இந்திய அரசுமுறை அதிகாரியான அபய் குமார் என்பவரால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இந்த நாள் முதன்முதலில் பிரேசிலின் பிரேசிலியா நகரில் நினைவு கூரப் பட்டதோடு பல நாடுகளைச் சேர்ந்த அரசு முறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.
- சர்வதேச பன்முகத் தன்மை மற்றும் அமைதிக்கான அரசு முறை உறவு தினம் ஆனது ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.



## உலக போலியோ தினம் - அக்டோபர் 24




- ஜோனாஸ் சால் என்பவரின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பானது இந்தத் தினத்தினை நிறுவியது.
- ஜோனாஸ் சால்க் என்பவர் 1950 ஆம் ஆண்டுகளில் போலியோ நோய்க்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கிய முதல் குழுவிற்குத் தலைமை வகித்தவர் ஆவார்.
- 1955 ஆம் ஆண்டில், செயலிழப்பு செய்யப்பட்ட போலியோ வைரஸ் தடுப்பூசியை அவர் உருவாக்கினார்.
- 1962 ஆம் ஆண்டில், ஆல்பர்ட் சபின் என்பவர் வாய்வழி ரீதி போலியோ தடுப்பூசியை உருவாக்கினார்.
- 1978 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் பிரத்தியேக வாய்வழி போலியோ சொட்டு மருந்து பயன்படுத்த ப்படுகிறது.
- 1988 ஆம் ஆண்டில், போலியோ வைரஸை ஒழிப்போம் என்று உலக சுகாதார அமைப்பு உறுதியளித்தது என்ற நிலையில் அந்த நேரத்தில், உலகம் முழுவதும் சுமார் 3,50,000 போலியோ பாதிப்புகள் பதிவாகியிருந்தன.

## இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையின் 63வது ஸ்தாபன தினம் - அக்டோபர் 24

- இந்தோ -திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP) என்பது இந்தியாவின் ஐந்து மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஒன்றாகும்.
- இது 1962 ஆம் ஆண்டு சீன-இந்தியப் போருக்குப் பின் உருவாக்கப்பட்டது.
- ITBP ஆனது 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக நிறுவப் பட்டது.
- இமயமலையில் இந்தியா-சீனா எல்லைப் பாதுகாப்பிற்காக என்று இந்தப் படைப்பிரிவு நிறுவப் பட்டது.
- சீனாவுடனான 3,488 கிலோ மீட்டர் நீளமான மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளை (LAC) இந்தப் படைப் பிரிவுப் பாதுகாக்கிறது.

## சர்வதேச கிப்பன் குரங்கு தினம் - அக்டோபர் 24

- கிப்பன் குரங்குகள் ஹைலோபாடிடே குடும்பத்தினைச் சேர்ந்த குரங்குகள் ஆகும்.
- 20 வெவ்வேறு வகையான கிப்பன் குரங்கினங்கள் உள்ளன என்ற நிலைமையில் அவை தெற்காசியாவின் வெப்ப மண்டல மற்றும் மித வெப்ப மண்டல மழைக் காடுகளில் காணப் படுகின்றன.
- இந்தியாவின் ஒரே (வாலில்லாக் குரங்கு) குரங்கு இனமான, வெஸ்டர்ன் ஹூலாக் கிப்பன் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகி வரும் நிலையில் உள்ள ஒரு இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- தற்போது இந்தியாவில் சுமார் 3,000க்கும் குறைவான கிப்பன் குரங்குகளே உள்ளன என்பதோடு அவை பொதுவாக வடகிழக்கு மாநிலங்களில் காணப்படுகின்றன.

## சர்வதேச குள்ளத்தன்மை விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 25

- குள்ளத் தன்மையை ஏற்படுத்தும் ஒரு எலும்பு வளர்ச்சிக் கோளாறான அகோண்ட்ரோ பிளாசியா பற்றிய விழிப்புணர்வையும் இந்த நாள் பரப்புகிறது.
- குள்ளத் தன்மை என்பது ஒரு மரபியல் அல்லது ஒரு மருத்துவ நிலையின் விளைவாக உருவாகும் உயரம் குறைந்த நிலையாகும்.
- இது பொதுவாக மிக இளம் வயதினர் 4 அடி 10 அங்குலத்திற்கும் (147 சென்டிமீட்டர்) குறைவான உயரம் கொண்டிருக்கும் நிலை என வரையறுக்கப்படுகிறது.
- அகோண்ட்ரோ பிளாசியா என்பது குள்ளத்தன்மையின் மிகவும் பொதுவான ஒரு வகை ஆகும் என்பதோடு இந்தச் சொல்லின் பொருள் ஆனது 'குருத்தெலும்பு உருவாக்கம் இல்லாமல் போகுதல்' ஆகும்.
- குள்ளத் தன்மை ஆனது 15,000 பேரில் ஒருவருக்கு என்ற வீதம் முதல் 40,000 பிறப்புகளில் ஒரு குழந்தைக்கு என்ற வீதம் வரை ஏற்படுகிறது.


## கேட்பொலி காட்சிப் பதிவுப் பாரம்பரியத்திற்கான உலக தினம் - அக்டோபர் 27

- இது எதிர்காலச் சந்ததியினருக்காக நமது கேட்பொலி காட்சிப் பதிவு கலாச்சாரப் பாரம்பரியத்தை நன்கு பாதுகாக்க உழைக்கும் தொழில் முறை வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களின் அர்ப்பணிப்பு முயற்சிகளை அங்கீகரிக்கிறது.
- இந்த நாள் ஆனது 2005 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் நிறுவப்பட்டது.
- திரைப்படங்கள், ஒலிப்பதிவுகள் மற்றும் ஒளிபரப்புகள் போன்ற கேட்பொலி காட்சிப் பதிவுப் பொருட்களைப் பாதுகாப்பதன் பெரும் முக்கியத்துவத்தை இந்த நாள் நன்கு வலியுறுத்துகிறது.

## உலக அதிர்ச்சி தினம் - அக்டோபர் 17


- இது அதிர்ச்சி மற்றும் தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் மீதான அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் அதிர்ச்சி, அதன் காரணங்கள் மற்றும் தகுந்த எதிர் நடவடிக்கைகளுக்கான, - குறிப்பாக அதிர்ச்சி குறித்த அறிவிக்கப்பட்ட கவனிப்புகள் மூலம் - அவசியத்தைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

- அதிர்ச்சி என்பது துன்பகரமான விபத்து அல்லது வாழ்க்கையை மாற்றச் செய்யும் நிகழ்வுகளுக்கான உணர்ச்சிப் பூர்வ வெளிப்பாட்டினைக் குறிக்கிறது.
- முதல் வருடாந்திர உலக அதிர்ச்சி தினம் ஆனது 2011 ஆம் ஆண்டில் இந்தியாவின் புது டெல்லியில் நிறுவப்பட்டது.




## இந்திய ராணுவ காலாட்படை தினம் - அக்டோபர் 27

- இந்திய ராணுவத்தின் மிகப்பெரிய போர்ப் படையின் பங்களிப்பை இந்த நாள் நன்கு அங்கீகரிக்கிறது.
- 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியில், ஜம்மு காஷ்மீரின் மகாராஜா ஹரி சிங், இந்தியாவுடன் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
- இதையடுத்து, 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதி, இந்திய இராணுவத்தின் முதல் துருப்புக்கள் ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தரையிறங்கிப் பாகிஸ்தானின் ஆதரவுடன் செயல்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டு பின்வாங்கும்படி செய்தது.




## சர்வதேச அசைவூட்டப் படத்திற்கான தினம் - அக்டோபர் 28


- யுனெஸ்கோ அமைப்பின் கிளையான சர்வதேச அசைவூட்டப் படம் சார் திரைப்படச் சங்கம் (ASIFA) நிறுவப்பட்ட 2002 ஆம் ஆண்டில் இத்தினம் நிறுவப்பட்டது.

- 1892 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் தேதியன்று பாரீஸ் நகரில் எமிலி ரெய்னாடின் அசைகின்ற நகரும் படத்திற்கான அமைப்பின் முதல் பொதுத் திரையிடல் நிகழ்ச்சி நடைபெற்றது.
- 1955 ஆம் ஆண்டில் மும்பையில் உள்ள திரைப்படப் பிரிவு வளாகத்தில் கேலிச்சித்திரப் படங்கள் பிரிவினை அரசாங்கம் அமைத்ததுடன் இந்திய அசைவூட்டப் பட துறையின் பயணம் தொடங்கியது.
- இந்தியாவின் முதல் முழு நீள அசைவூட்டப் பட திரைப்படம் ஆன "The Legend of Prince Rama" 1990 ஆம் ஆண்டுகளில் வெளியானது.

## சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம் - அக்டோபர் 29

- இது பராமரிப்பாளர்களின் பங்களிப்பை மதிக்கிறது என்பதோடு பராமரிப்பையும் ஆதரவையும் மேம்படுத்தும் சட்டங்கள் மற்றும் திட்டங்களை ஊக்குவிக்கிறது.
- உலகளாவிய அளவில் பராமரிப்பு பணியாளர்களாக 249 மில்லியன் பெண்கள் மற்றும் 132 மில்லியன் ஆண்கள் உள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டில், கவனிப்பு ஆதரவை பெறுபவர்களின் எண்ணிக்கை சுமார் 2.3 பில்லியனை எட்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ஊதியமில்லாத பராமரிப்புப் பணியின் மொத்த அளவில் 76.2 சதவீதத்தைப் பெண்கள் மேற்கொள்கின்றனர் என்ற நிலையில் இது ஆண்களை விட 3.2 மடங்கு அதிக நேரம் கொண்டதாகும்.

## தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 29




- இந்த நாள் தன்வந்திரி ஜெயந்தி அன்று கொண்டாடப் படுகிறது.
- இது ஆயுர்வேதக் கொள்கைகள், மருத்துவ மூலிகைகள் மற்றும் வாழ்க்கை முறை நடைமுறைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'Ayurveda Innovation for Global Health' என்பதாகும்.

## உலகச் சிக்கனத் தினம் - அக்டோபர் 30

- இது மக்களின் நிதி பாதுகாப்பு, சேமிப்பு மற்றும் சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1924 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று இத்தாலியின் மிலன் என்ற நகரில் நடைபெற்ற முதல் சர்வதேசச் சேமிப்பு வங்கி மாநாட்டின் போது உலகச் சேமிப்புத் தினம் நிறுவப்பட்டது.
- இத்தினத்திற்கான முன்மொழிவானது, இத்தாலியப் பேராசிரியரான பிலிப்போ ரவிசா என்பவரால் முன்மொழியப்பட்டது.




## தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 31

- இராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் அல்லது தேசிய ஒற்றுமை தினம் ஆனது சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- அவர் 1947 முதல் 1950 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் முதல் துணைப் பிரதமராகவும், இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும் இருந்தார்.
- பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு, அனைத்து 565 சுதேச அரசுகளையும் இந்தியாவுடன் இணையுமாறு வலியுறுத்தி அதனை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.
- சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 150வது பிறந்த நாளை 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான இரண்டு ஆண்டு கால அளவில் நாடு தழுவிய ஒரு திட்டத்தின் மூலமாக அரசாங்கம் கொண்டாட உள்ளது.

## உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31

- நிலையான, உள்ளடக்கிய நகர்ப்புற வாழிடங்களை உருவாக்கச் செய்வதற்கான ஒரு உலகளாவிய உந்துதலை இது அளிக்கிறது.
- 2013 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளை மிக அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Youth leading climate and local action for cities” என்பது ஆகும்.

# இதரச் செய்திகள்

## மத்தியப் பட்டு வாரியத்தின் 75வது ஆண்டு நிறைவு விழா

- மத்தியப் பட்டு வாரியம் (CSB) ஆனது அதன் 75வது (பவள விழா) ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டத்தை மேற்கொள்கிறது.
- CSBயானது பவள விழாவை முன்னிட்டு அதற்கான நினைவு நாணயம் வெளியிடப் பட்டது.
- மத்தியப் பட்டு வாரியம் என்பது மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- CSBயானது பயிற்சிகள், பயிலரங்கங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நிதி உதவிகள் மற்றும் மானியங்களை வழங்குவதன் மூலம் நாட்டில் உள்ள பட்டு வளர்ப்பு பங்கு தாரர்களுக்குப் பயனளித்து வருகிறது.
- நாட்டில் சுமார் 9.5 மில்லியன் மக்கள் பட்டுப்புழு வளர்ப்பை தங்கள் வாழ்வாதாரமாக கொண்டு அதனைச் சார்ந்துள்ளனர்.

## ஷாங்க் ஏர்




- ஷாங்க் ஏவியேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது, மத்திய பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் இருந்து தடையில்லாச் சான்றிதழை (NOC) பெற்று, அதன் செயல்பாட்டைத் தொடங்குவதற்கான அனுமதியினைப் பெற்றுள்ளது.
- இந்த NOC ஆனது மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.
- லக்னோ மற்றும் நொய்டாவில் மையங்களுடன் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இருந்து தொடங்கப் படும் முதல் திட்டமிடப்பட்ட விமான சேவை இதுவாகும்.

## நாஸ்கா வரைகோடுகள் – பெரு

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன், நாஸ்கா பாலைவனத்தில் செதுக்கப்பட்ட இதுவரையில் அறியப்படாத அளவில் 303 மாபெரும் சின்னங்களைக் கண்டறிந்துள்ளனர்.

- இந்தச் செதுக்கல்களில் பறவைகள், தாவரங்கள், சிலந்திகள், தலைக்கவசம் கொண்ட மனித உருவங்கள், துண்டிக்கப்பட்டத் தலைகள் மற்றும் கத்தியை ஏந்திய ஓர்கா என்ற திமிங்கலம் போன்றவை அடங்கும்.
- சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முந்தையக் கற்கள் அல்லது சரளைகளை நகர்த்தியதன் மூலம் இந்த மர்மமான கலைப்படைப்புகள் தரையில் உருவாக்கப் பட்டுள்ளன.



## விசாகப்பட்டினத்தில் கவசமிடப்பட்ட ஆயுத ஏவல் பெட்டக அமைப்பு

- விசாகப் பட்டின நகரத்தின் கடற்கரை மணற்பரப்பில் ஏற்பட்ட பருவமழை அரிப்பின் காரணமாக இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட கவசமிடப்பட்ட ஆயுத ஏவல் பெட்டக அமைப்பின் ஒரு பகுதி வெளிப்பட்டது.
- இவை, இரண்டாம் உலகப் போரின் உச்ச கட்ட செயல்பாடுகளின் போது கட்டமைக்கப் பட்டது.
- இதில் வீரர்கள் ஆயுதங்களை ஏவுவதற்கு ஏதுவாக துளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்து கொண்டு, எதிரிகள் மீது ஆயுதங்களை ஏவ வீரர்களுக்கு இது உதவியது.



## 250 ஆண்டுகள் பழமையான நினைவு கல் சிற்பம்

- ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தாலுக்காவில் 17 அல்லது 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கல் சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- ❖ எழுத்துக்கள் ஏதுமின்றி இந்தச் சிற்பம், சூரியன் மற்றும் சந்திரனின் உருவங்களுடன் கூடிய இணையர் உருவத்தினைக் கொண்டுள்ளது.
- ❖ இதில் விவரங்கள் ஏதும் இல்லாததால், இந்தக் கல் எதற்காக செதுக்கப்பட்டது என்பது பற்றிய சரியான விவரங்கள் தெரியவில்லை.



## IVC மற்றும் திராவிடம் இடையிலான தொடர்புகள்




- ❖ இந்த சிந்து சமவெளி நாகரிகம் ஆனது வெண்கலக் காலத்தில் (கி.மு. 3000-1500) இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 2,000 தளங்களில் பரவியிருந்தது.
- ❖ ஐராவதம் மகாதேவன் மற்றும் அஸ்கோ பர்போலா ஆகிய அறிஞர்கள் தமிழ் மொழியின் தொன்மை மற்றும் தமிழ் மொழிக்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் இடையிலான தொடர்பை ஆய்வு செய்தனர்.
- ❖ தமிழ் மொழியானது ப்ரோட்டோ-திராவிடத்தினைச் சேர்ந்ததாக (சார்பு திராவிடம்) கூறப்படுவதோடு கி.மு. 2600-1700 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களில் உள்ள ஆயிரக்கணக்கான சிறு உரைகளின் மொழியாக இது அடையாளம் காணப்படுகிறது.

- சமஸ்கிருதம் ஆனது 1500 மற்றும் 1300 BCE என்ற காலத்திற்கு இடையில் சிரியாவின் மிட்டானி பேரரசுடன் தொடர்புடைய சில பெயர்கள் மற்றும் சொற்களில் இணைக்கப் பட்ட புரோட்டோ-இந்தோ-ஆரியப் பிரிவினைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.
- இந்தோ-ஈரானிய மொழிகளின் முந்தைய வடிவங்கள் ஆனது, மத்திய ரஷ்யாவில் கி.மு. 2000 ஆம் ஆண்டில் பேசப்பட்ட ஃபின்னோ-உக்ரிக் போன்ற மொழிகளில் இருந்து வருவிக்கப் பட்ட சொற்களிலிருந்து மட்டுமே அறியப்பட்டது.
- ஆனால் இவற்றின் முற்காலத் தடயங்கள் எதுவுமே தமிழ் மொழிக்கான மூல வேர்களை விட பழமையானவையாக இல்லை.

## நீதிபதியின் சொத்து குறித்த தகவல் வெளிப்பாடு


| HC | Total judges at present | Assets in Public domain | For others what website states |
|---|---|---|---|
| Delhi High Court | 39 | 11 | "File not uploaded" |
| Punjab and Haryana | 55 | 31 | No mention |
| Himachal Pradesh | 12 | 10 | No mention |
| Chhattisgarh | 17 | 2 | No mention |
| Karnataka | 50 | 2 | No mention |
| Kerala | 39 | 37 | No mention |
| Madras | 62 | 5 | No mention |

- நாடு முழுவதும் உள்ள 25 உயர் நீதிமன்றங்களில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள 749 நீதிபதிகளில், 98 பேரின் சொத்துக்கள் மட்டுமே சுய அறிவிப்புகள் மூலம் பொதுத் தளத்தில் உள்ளன.
- மூன்று உயர் நீதிமன்றங்கள் இந்த சொத்து அறிவிப்புகளில் சுமார் 80 சதவீதத்திற்கும் மேலான பங்கினைக் கொண்டுள்ளன.
- கேரள உயர்நீதிமன்றம் அதன் இணையதளத்தில் உள்ள 39 நீதிபதிகளில் 37 பேரின் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளதுடன் முதலிடத்தில் உள்ளது.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் ஆனது சுமார் 55 நீதிபதிகளில் 31 பேரின் தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளது.
- மூன்றாவதாக சுமார் 39 நீதிபதிகளில் 11 பேரின் விவரங்களை டெல்லி உயர்நீதிமன்றம் பதிவேற்றியுள்ளது.
- தமிழ்நாட்டில் இருந்து சுமார் 62 பேரில் 5 நீதிபதிகளின் சொத்துத் தகவல்கள் மட்டுமே பதிவேற்றப் பட்டுள்ளது.

## விழித்திரை சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை


- சென்னையின் இந்தியத் தொழில்நுட்ப கல்வி கழகமானது, விழித்திரையில் கண்ணீர் வடிதல் மற்றும் நீரிழிவு நோய் காரணமாக ஏற்படும் விழித்திரை நோய் (ரெட்டினோபதி) ஆகியவற்றிற்கான சிகிச்சை முறையைக் கண்டறிந்துள்ளது.

- கண்ணின் விழித்திரையில் செலுத்தப்படும் மருந்துகளின் பரவலை நன்கு அதிகரிக்க அவர்கள் மிக லேசான சீர்வழிச் சீரொளிக் கற்றை மூலம் (லேசர்) தூண்டப்பட்ட குவி அமைப்புகளைப் பயன்படுத்தினர்.
- இந்தியாவில் சுமார் 11 மில்லியன் மக்கள் விழித்திரை கோளாறுகளுடன் உள்ளனர்.




## களைக்கொல்லி தாங்கு திறன் கொண்ட BT பருத்தி

- 'கிளைபோசேட்' எனப்படும் களைக்கொல்லியின் பயன்பாட்டைக் குறைப்பதற்காக, களைக்கொல்லித் தாங்கும் திறன் கொண்ட BT - மரபணு மாற்றப்பட்ட - (HTBT) பருத்தி வகையை அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது.
- 'கிளைபோசேட்' ஆனது அதனுடன் தொடர்பு கொள்ளும் அனைத்துத் தாவரங்களையும் அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதோடு இந்த இரசாயனத்தினால் பயிர் மற்றும் களைகளைச் சாதாரணமாக வேறுபடுத்த முடியாது.
- கிளைபோசேட்டின் பயன்பாடு ஆனது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உடல்நலக் கேடுகளையும் ஆபத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது.
- HTBt என்ற பருத்தி வகையானது மற்றொரு மாறுதலுடன், தாவரத்தை கிளைபோசேட் களைக்கொல்லியை எதிர்க்கும் திறன் கொண்டதாக மாற்றுகிறது.



## தொட்டலத்தூர் பெருங்கற்காலத் தளம் – கர்நாடகா



- சாமராஜநகர் மாவட்டம் ஹனூர் தாலுக்காவில் உள்ள தொட்டலத்தூர் பெருங்கற்கால புதைவிடப் பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடங்கியுள்ளன.
- கிராமத்தின் மேற்கில் ஒரு சிறிய குன்று மற்றும் அதை ஒட்டிய வயல்களில் இரும்புக் காலத்தை ஒத்த நூற்றுக்கணக்கான பெருங்கற்காலப் புதைவிடங்கள் உள்ளன.
- இந்தப் புதைவிடங்கள் பெரிய பாறைகளால் ஆன வட்டங்களைக் கொண்டிருப்பதால் இக்காலம் "பெருங்கற்காலம்" என்று அழைக்கப்படுகின்றது.
- இக்காலத்தில் இரும்புத் தொழில்நுட்பமானது பயன்பாட்டுக்கு வந்ததால் இது இரும்புக் காலம் என்றும் அழைக்கப்படுகிறது.
- தென்னிந்தியாவில், இந்த காலமானது கி.மு. 1200 முதல் கி.பி. 300 வரையிலான கால இடைவெளியில் பரவலாக காணப்பட்டது.

## வாழ்நாள் எதிர்பார்ப்புப் போக்குகள்




- ஒரு புதிய ஆராய்ச்சியின் படி, மனிதகுலத்தின் ஆயுட்காலம் ஆனது உச்ச வரம்பை எட்டியிருக்கலாம்.
- மருத்துவ முன்னேற்றங்கள் வெகுவாக இருந்த போதிலும், மரபணு ஆராய்ச்சியில் உள்ள பெரும் முன்னேற்றங்கள் மற்றும் 100 வயதை எட்டியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

- ஆனால் ஒட்டு மொத்த ஆயுட்காலம் கணிசமாக அதிகரிக்கவில்லை.
- ஆயுட்காலம் என்பது புதிதாகப் பிறந்த குழந்தையானது எவ்வளவு ஆண்டுகள் வாழும் என்பதற்கான சராசரி ஆண்டுகளின் எண்ணிக்கையை குறிக்கிறது.
- ஆண்களை விட பெண்கள் தொடர்ந்து நீண்ட காலம் வாழ்வதால் ஆயுட்காலம் மீதான முன்னேற்ற விகிதம் குறைந்துள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளில், சராசரி ஆயுட்காலம் ஆனது ஒரு தசாப்தத்திற்கு 2.5 ஆண்டுகள் உயர்ந்துள்ளது.
- 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், நீண்ட காலம் ஆயுட்காலம் கொண்டுள்ள நாடுகளில் ஆயுட்காலம் அதிகரிப்பு 6.5 ஆண்டுகள் மட்டுமேயாகும்.
- 2010 ஆம் ஆண்டுகளில், அந்த விகிதம் ஆனது ஒரு தசாப்தத்திற்கு 1.5 ஆண்டுகளாக குறைந்து விட்டது என்ற நிலையில் இது அமெரிக்காவில் கிட்டத்தட்ட சுழிய அளவில் உள்ளது.
- 100 வயது ஆயுட்காலத்தினை அடைவதற்கான பெரும் வாய்ப்புகள் இன்னும் மிகக் குறைவாகவே உள்ள நிலையில் இந்தப் பகுதிகளில் இந்த விகிதமானது பிறந்த பெண் குழந்தைகளில் 5.3% ஆகவும், ஆண் குழந்தைகளில் 1.8% ஆகவும் உள்ளது.

## மெகாசில்லா

- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் ஆனது, "மெகாசில்லா" என்ற புதுமையான கட்டமைப்பைப் பயன்படுத்தி தனது ஸ்டார்ஷிப் ஏவு கலத்தினைத் தரையிறக்கியுள்ளது.
- மிகப்பெரிய இயந்திர கட்டமைப்புகளுடன் கூடிய இந்த உயரமான அமைப்பு ஆனது, ஏவு கல மீட்பு முறைகளை மாற்றியமைத்துள்ளது.
- மெகாசில்லா என்பது அமெரிக்காவின் தெற்கு டெக்சாஸ் பகுதியில் உள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்பேஸ் தளத்தில் உள்ள மிகவும் பெரிய 400-அடி ஏவு கலப் பற்றுதலுக்கான கட்டமைப்பின் புனைப் பெயர் ஆகும்.
- இந்த இயந்திரப் பற்று அமைப்புகள், அதி எடை கொண்ட உந்துக் கருவிகள் பூமிக்குத் திரும்பும் போது நடுவானில் அவற்றை பற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- வழக்கமானத் தரையிறங்கும் நுட்பங்களுடன் ஒப்பிடச் செய்கையில் இந்தப் புதிய ஏவு கல மீட்பு முறையானது மிகவும் திறம் மிக்கதாகவும், மீண்டும் நன்கு பயன்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.




## வாலோங் போர்

- 1962 ஆம் ஆண்டு சீனாவுடனான போரின் போது நடைபெற்ற வாலோங் போரின் 62வது ஆண்டு நினைவு தினத்தை இந்திய இராணுவம் அனுசரித்தது.
- இது துணிச்சல் மிக்க வீரர்கள் மற்றும் வாலோங் பகுதியின் குடிமக்களின் மிகப்பெரும் தியாகங்களை கௌரவிக்கிறது.
- இந்தப் போர்கள் 3,000 முதல் 14,000 அடி உயரத்தில் நடைபெற்றன.
- ஒரு சிறிய இந்தியப் படைப்பிரிவு ஆனது, சவாலான நிலப்பரப்பான கிபித்து, வாலோங் மற்றும் நாம்தி மும்முனை சந்திப்பில் (புலி வாய் எனப்படும் பகுதி) 27 நாட்களுக்கு சீன இராணுவத்தின் முன்னேற்றத்தை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது.




## சால்மன் மீன் வளர்ப்பு

- வளர்க்கப்படும் வகையிலான சால்மன் மீன்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், கடலோர மக்கள் மிகவும் குறைந்த விலையில் மீன்களை வாங்க இயலாமல் பாதிக்கப் படுகின்றனர்.
- தற்போது உலகளவில் நுகரப்படும் சால்மன் வகை மீன்களில் சுமார் 70 சதவீதத்தினை வழங்குகின்ற சால்மன் மீன் வளர்ப்புப் பண்ணைகளின் மீது மீன் எண்ணெய்க்கான தேவை அதிகரிப்பும் திணிக்க ப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டில் பதிவான மீன் எண்ணெய் பயன்பாட்டில் 60 சதவிகிதம் ஆனது வளர்க்கப் பட்ட அட்லாண்டிக் சால்மன் மீனிலிருந்து மட்டுமே பெறப் படுகிறது.
- ஏழ்மை நிலையில் உள்ள கடலோரச் சமூகங்கள் உணவு மற்றும் வாழ்வாதாரம் ஆகிய இரண்டிற்கும் இந்தச் சிறு மீன்களையே சார்ந்துள்ளன.
- ஆனால் இந்த மீன்கள் உள்ளூர் நுகர்வுக்கு கிடைப்பதற்குப் பதிலாக சால்மன் போன்ற வளர்ப்பு மீன்களுக்கு உணவளிக்கப் பயன்படுத்தப்படுவதால், இந்த சமூகங்கள் மலிவு விலையில் புரதத்தை அணுகுவதில் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர்.




## நீதி தேவதையின் சிலை

- உச்சநீதிமன்றம் ஆனது, சமீபத்தில் கண்கள் கட்டப்படாத "நீதி தேவதை" சிலையை திறந்து வைத்துள்ளது.
- கண்ணைக் கட்டியிருந்த பழைய உருவமானது நீதியின் பாரபட்சமற்றத் தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக பரவலாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.
- இது ஒரு கையில் துலாக்கோலையும், தனது மறுகையில் வாளுக்குப் பதிலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினையும் கொண்டுள்ளது.
- கட்டப்படாத கண்களுடன் கூடிய இந்தப் புதிய சிலையானது "சட்டம் குருடானது அல்ல; அது அனைவரையும் சமமாக கருதுகிறது என்பதைக் குறிக்கிறது.
- டெல்லியில் உள்ள கலைக் கல்லூரியின் ஓவியரான வினோத் கோஸ்வாமி இதனை வடிவமைத்துள்ளார்.



- நீதி தேவதையின் உருவம் ஆனது, கிரேக்க மற்றும் ரோமானிய புராணங்களில் இருந்து பெறப்பட்டதாக அறியப்படுகிறது.

- முதல் ரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் (கி.மு. 27-கி.பி. 14), ஜஸ்டிடியா (அல்லது இயுஸ்டிடியா) என்றழைக்கப்படும் ஒரு தெய்வத்தின் வடிவத்தில் நீதி வழிபாட்டை அறிமுகப் படுத்தினார்.
- 1872 ஆம் ஆண்டில் கட்டமைக்கப் பட்ட கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில், அதன் கட்டிடத்தைத் தாங்கும் தூண்களில் நீதி தேவதையின் உருவங்கள் முதன்முதலில் செதுக்கப் பட்டன.

## இணையவெளி மோசடி வழக்குகள்




- 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ‘எண்ணிம ரீதியான குற்றப் பதிவு என்ற தவறான தகவல்’ மூலமான பண மோசடி நடவடிக்கைகள் மூலம் இந்தியர்கள் தோராயமாக 120.3 கோடி ரூபாயினை இழந்துள்ளனர்.
- மேலும் வர்த்தக மோசடியில் 1,420.48 கோடி ரூபாயும், முதலீட்டு மோசடியில் 222.58 கோடி ரூபாயும், காதல்/பொருத்தம் பார்த்தல் (டேட்டிங்) செயலிகள் சார்ந்ததொரு மோசடியில் 13.23 கோடி ரூபாயும் இழந்துள்ளனர்.
- தேசிய இணைய வெளிக் குற்ற அறிக்கையிடல் இணைய தளத்தில், இந்த ஆண்டு ஜனவரி 01 முதல் ஏப்ரல் 30 ஆம் தேதி வரை 0.74 மில்லியன் புகார்கள் பதிவாகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் புகார்கள் பதிவானது.
- இணைய மோசடி வழக்குகளில் தமிழ்நாடு 9% பங்கைக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★